
சுவாமி
சாரம்

சுவாமி நாராயணானந்தாவின்

# சமயங்களின் சாரம்

# Swami Narayanananda (The Gist of Religions)

This Book is published with the
Financial Assistance of
Tirumala - Tirupati Devasthanam
Under Their Scheme
'Aid to Publish Religious Books.'

தமிழாக்கம் — பிரசுரம்

சுவாமி நித்தியானந்தா

என். யூ. சரணாலயம்
வேடன்தாங்கல் (வழி)
அ. எண். 603 314

© N. U. Yoga trust
Gylling - Denmark
First Edition : May, 1993
Copies : 1000
pages IV + 286 = 290
Price : Rs. 40-00
Tamil Translation Right is
Vested With Swami Nithyananda
Translated and published by
Swami Nithyananda
N. U. Charanalayam
Vedanthangal (Via)
Pin : 603 314
Printed at : Alaigal Achagam, Madras - 600 024
Wrapper at: Ace graphics, Madras - 600 094
Binding : Umapathy binding works.
Madras - 600 014.

# சமர்ப்பணம்

நூற்றாண்டு விழாக் காணும்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
ஜகத்குரு
பரமாச்சாரிய சுவாமிகளின்
பொற்றாமரைப் பாதங்களுக்கு

# சுவாமி நாராயணானந்தாவின்
# பிற நூல்கள்

| | |
|---|---|
| மனக்கட்டுப்பாட்டின் இரகசியங்கள் | ரூ. 24-00 |
| சாந்தி-சக்தி-நீண்ட ஆயுள் | ரூ. 28-00 |
| ஆதார சக்தி | ரூ. 38-00 |
| குறிக்கோள் வாழ்வும் வீடுபேறும் | ரூ. 25-00 |
| தியான பிம்பம் | ரூ. 45-00 |
| அகண்டைக மதம் (5 - சிறுநூல்களின் தொகுப்பு) | ரூ. 25-00 |
| சமயங்களின் சாரம் ('கேள்வியும் பதிலும்' சிறுநூல் இணைப்பு) | ரூ. 50-00 |
| கடவுளும் மனிதனும் | (அச்சில்) |

**கிடைக்குமிடம் :**

சுவாமி நித்தியானந்தா
தமிழாக்க ஆசிரியர்
என். யூ. சரணாலயம்,
(வழி) வேடந்தாங்கல்.
அ. எண். 603 314

# முகவுரை

சமயம் பக்தியை வளர்ப்பதற்கென உண்டான அமைப்புகளில் ஒன்றாகும்.

பொதுவாக சமயமும் இறையுணர்வும் அன்பையே அடிப்படையாகக் கொண்டு வாழும் முறையைப் போதிக்கின்றன.

அன்பான வாழ்க்கையை அடியொற்றி நேர்மையும் உண்மையும் தவமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உலகில் பல மகான்களும் தவசீலர்களும் அவதரித்து கடவுள் நெறியை மக்களிடையே பரப்பிப் போதித்தனர்.

அவர்களில் ஒவ்வொருவரும் இடம் ,காலம், சூழ்நிலைக்கேற்ப இறையுணர்வைப் பரப்பினர்.

ஒவ்வொருவரும் ஒரு சமயத்தைத் தோற்றுவித்தனர்.

சமயங்கள் பலவானாலும் கடவுள் ஒருவரே என்பதில் எவ்விதக் கருத்து வேற்றுமையும் இல்லை.

அந்தந்தச் சமயத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் இன்று பல அநாகரிக மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

கடவுளின் அருகாமையை அடைய அன்பும் நீதியும் நேர்மையும் ஒழுக்கமும் உண்மையும் இன்றியமையாதவை.

இந்த உண்மையை எல்லாச் சமயத் தலைவர்களுமே உணர்ந்து செயல்படுகின்றனர்.

எனினும் ஒரு சில அரக்க சக்திகள் மானுடத்தில் புகுந்து தவறான முறையில் அவர்களை ஆட்டி வைக்கின்றன.

இந்தச் சமயத்தில் பல சமயங்களைப் பற்றி எடுத்துரைக்கும் 'சமயங்களின் சாரம் 'என்கிற சுவாமி நாராயணானந்தாவின் இந்தப் புத்தகம் வெளிவருவது நல்ல வழி காட்டியாக அமையும் என்பது திண்ணம்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் பல குரூர விளைவுகள் ஏற்பட்டன. இரத்தக் களறிக்கும் காரணமாயிற்று.

இந்துஸ்தான் — பாகிஸ்தான் பிரிவினையின் போது நடந்ததைத்தான் சொல்கிறோம்.

நாற்பது ஆண்டுகளில் உலகில் எவ்வளவோ மாற்றங்கள்! விஞ்ஞான முன்னேற்றம் அசுர வேகத்தில் வளர்ந்திருக்கிறது.

சமயத்தைப் பற்றிய சச்சரவுகள் மட்டும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இடைப்பட்ட காலத்தில் பாரத தேசத்தின் ஒரு பகுதியில் நாத்திகம் தழைத்தது.

ஆனால் மெல்ல மெல்ல ஆத்திகத்தின் ஆளுமை அதிக அளவில் பரவியுள்ளது.

விஞ்ஞானத்தை வெல்லக்கூடிய சக்தி படைத்தது மெய்ஞ்ஞானம் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தியானம், யோகம், வழிபாடு போன்றவற்றில் இளைஞர் முதல் பெரியோர்வரை ஆண், பெண் பேதமின்றி ஈடுபாடு கொண்டுள்ளனர்.

ஆன்மிக ஆர்வலர்களுக்கு இந்தப் புத்தகம் மிகவும் உதவியாக இருக்குமென நம்புகிறோம்.

இந்த புத்தகத்தின் கட்டுமானப் பொறுப்பையும் கலைஞன் பதிப்பக நந்தா அவர்களே ஏற்றுக் கொண்டு முடித்துத் தந்துள்ளார்.

அவருக்கு நன்றி தெரிவித்தால் அது சம்பிரதாயமாகிவிடும்.

உள்ளார்ந்த ஆர்வத்துடன் இந்த உதவியைச் செய்த அவருக்கு இறையருள் பெருக வேண்டுமென நிறைவுடன் இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

அவரைச் சார்ந்த புத்தகக் கட்டுமானக் கலைஞர்களாகிய அலைகள் அச்சகத்தார், ஏஸ் கிராபிக்ஸ், உமாபதி பைண்டிங் நிறுவனங்கள், எழுத்தாளர் சிவன் ஆகியோருக்கும் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

குருதேவரின் பரிபூரண அருள் இவர்களுக்கு ஏற்றத்தை அளிக்க வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

நல்லாதரவு தரும் சாதகர்களுக்கும், ஆன்மிக ஆர்வலர்களுக்கும், யோகிகளுக்கும், சித்தர்களுக்கும் இதைச் சமர்ப்பிக்கிறோம்.

— *சுவாமி நித்தியானந்தா*

# பொருளடக்கம்

## CONTENTS

பக்கம்

I சமயங்களின் சாரம்
(The gist of Religions)

- அறிமுகம் 9
- கடவுள் 13
- சாத்திரங்கள் 55
- இந்து மதம் 62
- ஜைன மதம் 82
- புத்த மதம் 88
- ஜோராஸ்டிரியானிசம் 103
- சீக்கிய மதம் 109
- தாயிசம் 115
- கன்பூஷியனிசம் 120
- ஷிண்டாயிசம் 126
- இஸ்லாம் 129
- சூபிஸம் 135
- ஜூடாயிசம் (யூத மதம்) 141
- கிறித்துவ மதம் 143
- நாம் கூறும் முடிவுகள் 149

II கேள்வியும் பதிலும் (தொகுதி - 25)
(Questions And Answers Vol – 25) 211

- ஆசிரியரும் அவர் பணியும் 273



50-வது வயதில் சுவாமி நாராயணானந்தா



1929-ம ஆண்டு செப்டம்பர் 5-ந் தேதி மைசூரில் துறவு நிலை ஏற்ற மறுநாள் சுவாமி நாராயணானந்தா.



1964-ல் ரிஷிகேஷ் ஆசிரம மாடியில் சுவாமி நாரா[illegible]ானந்தா.
பின்புறம் கங்கை ஆறு ஓடுவதைக் காணலாம்.



1976 ஜுலை 11-ம் தேதி டென்மார்க், ஜில்லிங்கில் நடைபெற்ற குரு பூர்ணிமை விழாவின்போது குரு குடீரில் சீடர்களுடன்.

# 1. அறிமுகம்

கடவுளை ஓர் உருவமாகவோ அல்லது உருவமற்றவராகவோ ஏற்பினும் ஒரு கடவுளின் தலைமையின்றி எந்தச் சமயமும் இருக்க முடியாது. இருப்பதும் இல்லை. கடவுளை அடைவதற்கோ அல்லது கடவுள் உணர்வு பெறுவதற்கோ தேவைப்படும் வழிவகைகளை வகுத்துத் தருவது சமயம். ஆகையினால் ஒரு சமயத்தை, தெய்வீக வாழ்க்கையை அடைய மேற்கொள்ளும் ஆய்வு என்று விளக்கலாம்.

மேலான பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது இல்லாதது. அதை ஒரு வட்டத்தின் மையத்திற்கு ஒப்பிடலாம். பல்வேறு ஆரங்கள் பொதுவான மையத்தில் வந்து சந்திப்பது பல்வேறு மதங்களைப் போன்றது. எல்லா மத நிறுவனர்களுமே இறையுணர்வு பெற்றவர்கள்தான். அவர்கள் சில குறிப்பிடத்தக்க வழிகளைப் பின்பற்றினார்கள். கடவுளைத் தரிக்கசில குறிப்பிட்ட முறைகளை வகுத்தளித்தார்கள். அவற்றைத் தங்கள் சீடர்களுக்கு போதித்தார்கள். ஒரு நபர் தன்னுடைய விருப்பத்திற்கும், சுபாவத்திற்கும், உளப்பாங்கிற்கும் ஏற்ப

இந்த ஆரங்களின் வழியில் ஏதாவதொன்றைப் பின் பற்றுவார். உண்மையுடனும், நம்பிக்கையுடனும், கடுஞ்சாதனையைச் செய்தாரானால் அவர் நிச்சய மாக இறையுணர்வை எய்த முடியும். வழிகள் மாறு படலாம். ஆனால் எல்லா மதங்களும் கடைசியாக வந்து கூடும் இடம் ஒன்றேதான். அதாவது கடவுளிடந்தான்! ஆனால் அதிசயமென்னவென் றால் உலகத்தில் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் இரத்தக்களறியே நடந்து கொண்டிருக் கிறது.

ுள்ள எல்லா உண்மையான மதங் களும் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட நன்னடத்தை, தெய்வ நம்பிக்கை, நெறிமுறை களின் திண்மையான அடித்தளத்தின் மீதே நிற் கின்றன. எல்லோருமே தங்கள் சீடர்களுக்கு, 'எல்லா சீவன்களையும் நேசியுங்கள். உண்மையாக இருங்கள். கருணை காட்டுங்கள். பெருந்தன்மை யுடனிருங்கள். கற்புடன் இருங்கள். உதவி செய் யுங்கள் போன்றவற்றையே போதிக்கின்றனர். ஆனால் இந்தப் போதனைகளைஒரு சிலரே பின்பற்று கிறார்கள். பல்வேறு சமயச் சீடர்கள்அவர்களுடைய மத நிறுவனர்கள் வகுத்த நன்னடத்தை தெய்வ நம்பிக்கை முறைகளைத் தவறாமல் பின்பற்றியிருந் தால் இந்த மண்ணுலகிலேயே நாம் உண்மையான சொர்க்கத்தைக் கண்டிருக்க முடியும். ஆனால் அந்தோ! மக்கள் அடிப்படையையே மறந்து

விட்டார்கள். பலதரப்பட்ட கொடிய பாபச் செயல்களைச் செய்கிறார்கள். இது அடிப்படையைச் சரியாகப் புரிந்து கொள்ளாததினால் ஏற்பட்ட விபத்து. இதன் பலன் உலகம் பூராவும் மதச்சண்டைகளாக மாறி நரகத்தைத் தோற்றுவிக்கிறது.

உண்மையான ஆன்மிக வளர்ச்சி மட்டுமே சமயத்தின் உட்கருத்தைப் புரிந்து கொள்ள வழிவகுக்கிறது. அதன் பிறகு வேறு மதக் கொள்கையினரிடம் சண்டையிட்டுக் கொள்வதற்கு எந்தவிதக்காரணமும் இருக்காது. பெரும்பாலானவர்களிடம் உண்மையான ஆன்மிக வளர்ச்சி இல்லை. அனேகருக்கு மற்ற சமயத்தவரின் போதனைகள் என்னவென்பதே புரிவதில்லை. அனேகர் தாங்கள் பின்பற்றும் மதம் எதைக் கற்பிக்கிறது என்பதையே புரிந்து கொள்ளமலிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. பெரும்பாலான மக்கள் சொந்த மத குருவினாலேயே தவறு செய்யத் தூண்டப்படுகிறார்கள். அவர்களே ஆன்மிகத்தில் முன்னேறாதவர்கள். அவரைப் பின்பற்றும் பெருங்கூட்டத்தினரின் அறியாமையையும், கண் மூடித்தனமான நம்பிக்கையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்கு மற்ற மதங்களைப் பற்றிப் பகையுணர்வு தரும் பொய் வதந்திகளைக் கூறி வெறியூட்டித் தூண்டிவிடுகிறார்கள். மத குருமார்களின் தந்திரம், குறுகிய நோக்கம், தன்னலம் அல்லது சூழ்ச்சியே கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் நடக்கும் எல்லாச் சண்டைகளுக்கும், இரத்தக்களறி

களுக்கும், படுகொலைகளுக்கும் அடிப்படைக் காரணம்.

இந்தப் புத்தகத்தின் நோக்கம் இதுவே: உலகிலுள்ள பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்களிடையே நட்புணர்வை உண்டாக்குவது; பலவகை சமயங்களின் அடிப்படை உண்மைகளை எடுத்து விளக்கி அதை அனைவரும் சரியான முறையில் புரிந்துகொள்ள வகை செய்வது!

# 2. கடவுள்

படைப்பு' என்றதும் ஒரு படைப்பாளி இருக்கிறான் என்பதைக் குறிக்கிறது. 'மரணம்' என்ற கருத்து எழும் போது 'பிறப்பு' என்ற நினைவு வருகிறது. நாம் உலகம் நிலையற்றது மாறிக் கொண்டே இருப்பது என்று சொல்லும்பொழுது, மாறாததும் நிலையானதுமான 'பரம்பொருள்' ஒன்று உண்டு என்பது தொக்கி நிற்கிறது இந்த நிலையானதும் மாறாததுமான பரம்பொருளையே 'கடவுள்' என்கிறோம்.

கராணமின்றிக் காரியமில்லை. ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்று உண்டாவதில்லை. அது ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அந்த ஒன்று என்பதிலிருந்து அகிலம் முழுவதும் பரிணமிப்பதே கடவுள். கடவுள் இன்றி உலகம் ஒரு கணங்கூட இருக்க முடியாது. தூல சக்தியும் தூலப் பொருளும் ஒன்றையொன்று இயக்கவும் முடியாது. உயிரும் அறிவுமுள்ளஉயிர்களை உண்டாக்கவும் முடியாது.

நவீன விஞ்ஞானம் சக்தியையும், தூலத்தையும் மின்னணுக்களாகவும், உந்துசக்தியாகவும், அணுக்களாகவும் பிரிக்கின்றன. நவீன விஞ்ஞானிகள்

புகை வண்டிகள், மோட்டார்கார்கள், ஆகாய விமானங்கள் போன்றவைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவை வெளி, வானவெளி இரண்டிலும் நெருப்பு, நீர், மின்சக்தி போன்றவற்றின் உதவியால் துரிதவேகத்தில் ஓடவும், பறக்கவும் செய்கின்றன. ஆனால் இயந்திரங்களும், இயக்கு சாதனங்களும் உயிரற்றவை. அவை தாமாகவே ஓடுவதில்லை. ஆனால் ஓர் உணர்வுள்ள உயிரும், மனிதனின் அறிவும் அவைகளை வேலை செய்யவும் ஓடவும் வைக்கின்றன.

ஒரு விஞ்ஞானி தமது அஞ்ஞானத்தால் கடவுள் ஒருவர் உண்டு என்பதை மறுக்கக் கூடும். ஆனால் அவன் தான் இருப்பதை மறுக்க முடியுமா? அதை நிரூபிக்க அவனுக்கு வேறொன்றும் தேவையில்லையல்லவா? அவன் அந்தரங்கக் குரல், அவனுள் உள்ள தூய உயிர்ச்சாரமுங்கூடக் கடவுள்தான்.

சூரியனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். சூரியக் கதிர்கள் அகிலத்தின் பல்வேறு திசைகளில் பரவி பரவெளி முழுவதையும் சூழ்ந்து கொள்கிறது. இதற்கு மூலகாரணம் சூரியனாக இருப்பினும், இந்தச் சூரியனே எண்ணற்ற கதிர்களின் உற்பத்தி இடமாக இருந்தாலும் ஒரு அறியாக் குழந்தை, சூரியனுடைய எண்ணற்ற கதிர்களையும் அவை பிரதிபலிக்கும் உருவங்களையும் தனித் தனியானவை என்று நம்புகிறது. அதே சமயத்தில் சூரியனே இதன் காரணகர்த்தா என்

பதை நம்புவதில்லை. சூரியனைக் கடவுளுக்கு ஒப்பிடலாம். இந்த அகிலத்திலுள்ள உயிர்ப் பொருள்களின் தனி உயிர்களை சூரியனுடைய எண்ணற்ற கதிர்களுக்கும் பிரதிபலிப்புகளுக்கும் ஒப்பிடலாம்.

இது இப்படியிருக்க ஒரு மனிதன் எப்படி கடவுளையும், உயிரையும் நம்பாமலிருக்க முடியும்? கடவுளை மறுப்பது தன் உயிரையே மறுப்பதாகும். இது அறிவுக்கு ஒவ்வாதது மட்டுமல்ல. முடியாததுங்கூட. இதே போல உடலில் எண்ணற்ற உயிர்க்கூடுகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் உடலுக்குள் லட்சோபலட்சம் வெள்ளை, சிகப்பு அணுக்கள் பிறக்கின்றன; மரிக்கின்றன.

ஆனால் எல்லா உயிர்க்கூடுகள் மட்டும் தனி மனித ஆன்மா, மனத்தின் ஆதாரத்தில் வாழ்கின்றன. ஒருவன் இறக்கும்போது இந்த லட்சோபலட்சம் உயிர்க்கூடுகள் அடியோடு அழிந்து போகின்றன. ஒரு தனி மனித உயிர் உடலுக்குள் எண்ணற்ற உயிர்க்கூடுகளுக்கு எப்படி ஆதாரமாக இருக்கிறதோ, அதே போல் கடவுள் அகிலம் முழுவதற்கும் அதில் உள்ள கணக்கற்ற உயிர்களுக்கும் ஆதாரமாக இருக்கிறார். இதனால் கடவுள் இல்லை என்று மறுப்பது ஒரு நபரின் வடிகட்டிய முட்டாள் தனத்தைக் காட்டுகிறது. கடவுள் இருக்கிறார். அவரைப் பார்க்க முடியும்; உணர முடியும். தூய வாழ்க்கையையும், மனங்களைத் தூய்மைப்படுத்தி சூக்கும மிக்க ஒருமைப்பாட்டினால் யாருமே அவரைக் காண முடியும்.

கடவுள் ஒரே ஒருவர். பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுபவர். அதாவது, கடவுள், பிரம்மம், மேலான உயிர்ப் பொருள், வாலறிவன், உயரிய ஆற்றல், மேலான சக்தி, பரமாத்மன் முடிவான பேருண்மை ஆகியவை பெயர்களால் வேறுபடலாம். ஆனால் பரம்பொருள் ஒன்றே. கடவுளுக்கு குறிப் பிட்ட பெயரோ உருவமோ இல்லை. அதே சமயம் அதற்குப் பல்வேறு பெயர்களும் உருவங்களும் உண்டு. கடவுளை அவன் என்றோ, அவள் என்றோ கூற முடியாது. அதே சமயம் கடவுளை அவன், அவள், அது என்று அழைக்கப்படுகிறார். கடவுள் அகிலத்தின் பிரபு. அவர் காரணங்களுக் கெல்லாம் மூலகாரணன். பொருள்களுக்கெல்லாம் மூலப்பொருள் அவர் மூப்பே அற்றவர். ஆதியும் அந்தமும் இல்லாதவர். எங்கும் வியாபித்துள்ளவர். அசைவற்றவர். வளர்ச்சியற்றவர். மரணமற்றவர். ஆண், பெண் பேதமற்றவர். அவரே படைப்பவர். காப்பவர். அகிலத்தை அழிப்பவர். படைத்தல், காத்தல், அழித்தல் கடவுளோடு இணைந்தே நடப்பன. இந்த முத்தொழிலும் நடக்காத காலமே இல்லை. இந்த முத்தொழிலும் நடக்காமல் நின்று விடும் என்ற காலமும் இல்லை.

கடவுள் எங்கும் பரவி இருப்பவர் என்று நாம் செல்லும்போது கடவுள் இன்றி எதுவுமே இல்லை என்ற உண்மை தானாகவே விளங்கும். ஒரே ஒரு உருவங்கூட கடவுளின்றி இருக்க முடியாது. கடவுளே இந்த அகிலத்தின் கர்த்தாவும், கார

னும் ஆவார். அகிலம் முழுவதுமே அதன் உயிர்களோடு கடவுளிடமிருந்து தோன்றுவன. கடவுளில் வாழ்கின்றன. முடிவில் கடவுளிடமே திரும்பிப் போய்ச் சேருகின்றன. மற்றெதையும்விடக் கடவுளே உண்மையானவர். அவர் ஒவ்வொன்றின் உள்ளும் பின்னணியிலும் இருக்கிறார். அவரே எல்லாவற்றின் மூலமாகவும், ஒவ்வொரு உயிரின் நிறை பொருளாகவும் உள்ளார். கடவுள் சிறியதினும் மிகச் சிறியவர். பெரியதினும் மிகப் பெரியவர். சிறியதினும் மிகச்சிறியதானதும், பெரியதினும் மிகப் பெரியதானதுமான ஒரு உருவம் மனிதமனத்தின் கற்பனைக்கு அப்பாற்பட்டது. அந்த நோக்கில் கடவுள் காண முடியாதவர். காண்டல் என்பது ஒளி உருவமாகப் பார்ப்பது. கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் மூலப்பொருளாவதால் அவரை உருவகிக்க முடியாது. வேறு வகையில் கடவுள் நாம் அறிந்ததைவிட மேலானவர். ஏனெனில் கடவுள் நம்முள் உள்ள சொந்த ஆன்மாவே ஆகும். ஆகையால் நாம் வாழ்கிறோம் என்பதற்கு நிரூபணம் தேவை இல்லை. ஒருவர் தான் உயிருடனிருக்கிறோம் என்பதை எவ்வாறு மறுக்க முடியும்?

கடவுளைப் பற்றிய மனித மனத்தின் மிக உயரிய கற்பிதம் சத்-சித்-ஆனந்தம் (உயிர்,அறிவு, பேரானந்தம்). இதற்குமேல்மனித மனம் கற்பனை செய்ய இயலாது. கடவுளே சத்-சித்-ஆனந்தம் என்ற கருத்து எல்லையற்றதை ஒரு எல்லைக்குள்

கொண்டுவருவதற் கொப்பாகும். ஆனால் இதைவிட வேறு வகையில் விளக்க இயலாது. கடவுளே சத்-சித் ஆனந்தம். அதைவிட மேலானவருங் கூட. அவர் யார் என்பதையும் அவர் யார் இல்லை என்பதையும் அவரே அறிவார்.

அழிவற்ற ஒரே உயிர்மேலான பிரம்மம் (கடவுள்) அவர் எல்லாம் வல்லவர். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். புராதன காலத்தவர். அனைத்தையும் ஆள்பவர். அணுவிலும் அணுவானவர். அனைத்தையும் காப்பவர். கற்பனைக்குள் கொண்டு வர இயலாத உருவத்தையும், சுயம் பிரகாசத்தையும், மாயையைக் கடந்த இருள் அல்லது அறியாமையையும் நிலைத்திருக்கச் செய்பவர். அவர் வரையறை அற்றவர். நீடித்து நிலைத்து நிற்பவர். மிகப்பெருங் குறிக்கோள் படைத்தவர். அவரிடமே எல்லா உயிரும் நிற்கின்றன. அவராலேயே அகிலம் முழுவதும் வியாபித்து நிற்கிறது. அவரே தந்தை, தாய், பாட்டனார். புனிதமாக்குபவர், அறியும் ஒரேபொருள், ஆதரவாளர், மகா பிரபு, சாட்சியாளர் அடைக்கலந்தருபவர், நண்பர், மூலகர்த்தா, பொருள் மிக்கவர். சேமிப்பு நிலையம், மகா பீசம், தன்னுள் தானான அழிவற்றவர். கடவுள் தன்னைத்தானே அறிந்து உணர்ந்தவர். அவர் பரம புருஷர். ஆதிமூலம். உயிர்களின் முதல் கர்த்தா. அவரே எல்லா உயிர்களிலும் உள்ள ஆன்மா. அவரே மரணத்தை விளைவிப்பவர். செல்வச் செழிப்பினரிடம் செல்வமாக உள்ளவர்.

அசையும், அசையா எந்த உயிர்ப் பொருளும் கடவுளின்றி இருக்க முடியாது. அவர் தனக்குள்ள ஒரு பகுதி ஆற்றலாலே இந்த அகிலம் முழுவதையும் தாங்கி நிற்கிறார். அவர் அகிலத்திற்கு அடைக்கலந்தருபவர். அழியா தர்மத்தின் (நெறிமுறைகளின்) நீடித்த பாதுகாவலர்.

கடவுள் உயிருள்ளவரோ, உயிரற்றவரோ அல்ல. அவர் புலன்கள் இயக்கத்தினால் வெளிப்படுபவர். ஆனால் புலன்களுக்குக் கட்டுப் படாதவர். அவர் முழுமையானவர்; ஆயினும் அனைத்தையும் காப்பவர். அவர் குணங்களற்றவர். ஆயினும் அவைகளை அனுபவிப்பவர். எல்லா உயிர்களுக்குள்ளும் இருப்பவர். உயிர்களினின்று தனித்து நிற்பவர். அவர் அசைபவர்; அசைவற்றவர் அவர் எட்ட முடியாதவர். நெருக்கமானவர். பிரிக்க முடியாதவர்.

ஆயினும் பிரிந்து காணப்படும் உயிர்களாக இருப்பவர். ஒளிகளுக்கெல்லாம் பேரொளியானவர். இருளுக்கும் அப்பாற்பட்டவர். அறிவுக்கு மேலானவர். அறிவதற்கான ஒரே பரம்பொருள். அனைத்து அறிவும் போய்ச்சேரும் இடமானவர். அவர் சுயம் பிரகாசமானவர். ஆள்பவர், படைப்பவர். படைப்பின் மூலம். எந்தக் கற்பனைக்கும் எட்டாதவர். காலத்தைப் படைப்பவரும், அழிப்பவரும் அவரே. (ஒருவர் நிர்விகல்ப சமாதியை எய்தியதும் காலம், காலத்தைப் பற்றிய விவரம் எல்லாமே மறைந்து

போகிறது). அவர் சுயம்புவானவர். உடல், சதை, பாபத்தின் கறை போன்றவை படியாத எங்கும் நிறைந்து ஒளிர்பவர். தூய்மையாளர். அனைத்தை யும் காண்பவர். எல்லாவற்றையும் அறிந்தவர். அனைத்தையும் உள்ளடக்கியவர். மனத்தினால் அவரைத் தன்னுள் கொண்டு வர இயலாது. ஆனால் மனத்தைப் பக்குவப்படுத்துவதே தெய்வம். மனிதர் களுக்குள் யார் அந்தப் பரம்பொருளை அறியமுடியா தவர், அறியக் கூடியவர் என்று அறிகிறாரோ அவரே உண்மையிலேயே அவரை அறிந்தவர். உள்ளபடி சொல்ல வேண்டுமாயின் கடவுள் தாதுப் பொருள்களில் உறங்குகிறார். காய்கறிகளில் கனவு காண்கிறார். விலங்கினங்களில் விழித்துக் கொள் கிறார். மனிதனில் முன்னும் பின்னும் பார்த்து ஆன்மாவை அறிகிறார். குழந்தை ஆன்மாக்கள் அவரை மரக்கட்டையிலும், கற்களிலும் காண் கின்றன. வளர்ந்தவர்கள் புனித நதிகளிலும், ஏரி களிலும், இயற்கைத் தத்துவத்திலும் காண்கிறார் கள். ஞானிகள் அவரை எங்கும் நிறைந்த பரம ஆன்மாவாகவும், தம்முள் உள்ள ஆன்மா (உயிர்) அவரே எனவும் அறிகின்றன.

# 3. பிரம்மம் (கடவுள்)—அகிலம்

ஓம் பூர்ணமதஹ பூர்ணமிதம்
பூர்ணத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமிதாய
பூர்ணமேவ வசிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மேற்கண்ட சாந்தி மந்திரம் ஈசாவாஸ்ய உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்டது. தசோப நிடதத்தில் இது முதலாவது ஈசாவாசயம். சுக்லயஜுர் வேதத்தின் கடைசிப் பகுதியாகும். இது மிகப் புராதனமான உபநிடதங்களில் ஒன்று. ஒவ் வொரு உபநிடதத்திலும் ஒரு சாந்தி மந்திரம் உண்டு. இதை உபநிடதப் பாராயணம் தொடங்கு வதற்குமுன்னரும் முடிவுற்ற பின்னரும் சொல்வார் கள். இந்த ஒரு மந்திரத்தை கூர்ந்துபடித்து ஆழ்ந்து சிந்தித்தால் வேதாந்த தத்துவத்தின் முழு சாரமும் விளங்கக் காணலாம். பிரம்மம் (கடவுள்) அகிலத் துடன் கொண்டுள்ள தொடர்பு அல்லது பிரம்மத் தின் சிறப்பு இதன் மூலம் நிலை நிறுத்தப் பட்டுள்ளது.

மேற்கூறிய மந்திரத்தின் பொருளாவது: ஓம்-பார்க்கமுடியாத பொருள். அந்தப் பார்க்க முடியாத பொருள் பிரம்மம். அது முழுமையாக (பூரணமாக) உள்ளது. வெளித்தோன்றிக் காணப்படும் எல்லாப் பொருள்களுமே (பரந்த அகிலமுமே) அந்த முழுமை யான (பூரணமான) பிரம்மமேயாகும். பரந்த வெளித்தோன்றிக் காணப்படும் அகிலம் பூர்ண பிரம்மத்திலிருந்து உண்டானதாயினும் அந்த மேலான உயிர் (பிரம்மம்) முழுமையாகவே (பூரண மாகவே) உள்ளது. ஒரே நிலையில் இருப்பது ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சாதாரணனுக்கு மேற்கூறிய மந்திரம் பொரு ளற்றதாகத் தெரியும். குழப்பத்தையும் தரக்கூடும். ஆகவே அதைச் சிறிதே விவரிப்போம். இந்த மந்திரம் 'ஓம்' என்கிற கூட்டெழுத்தில் ஆரம்பிக் கிறது. 'ஓம் சாந்தி' என்று மும்முறை உச்சரித்து முடிகிறது. இதன் தொடர்பாகப் பலர் இப்படி கேட்கக்கூடும். அதாவது ''ஓம்'' என்பதின் அர்த்தம் என்ன? இந்த சொல்லை நாம் எங்கிருந்து பெற்றோம்? இரண்டாவது கேள்வி பரந்த அகிலம் பரம் பொருளிலிருந்து (பிரம்மத்திலிருந்து) வந்தது எனின் அந்த பிரம்மம் எப்படி முழுமையாக (பூர்ண மாக) இருக்க முடியும்? மேலும் பிரம்மத்திலிருந்து வரும் பொருளையும் முழுமையானது (பூரண மானது) என்று எப்படிச் சொல்ல முடியும்? மூன்றாவது வினா' 'ஓம் சாந்தி' என்பதின் பொருள் என்ன? அதை ஏன் மும்முறை உச்சரிக்க வேண்டும்?

ஒருமுறை போதாதா? நாம் இந்த ஐயங்களை அடுத்து வரும் பக்கங்களில் தெளிவுபடுத்தலாம்.

'ஓம்' என்பது மேலான பிரம்மத்தைத் தெளிவு படுத்துவது. அதைச் சப்தப் பிரம்மம் (ஒலி வடிவான பிரம்மம்) என்றும் அழைப்பர். மகா பீசமந்திரம் (எல்லா மந்திரமகளுக்கும் மூலம்) எல்லா மந்திரங் களுக்கும் பெரும் காரணமானது என்றும் கூறுவர். அகிலம் முழுவதும் அல்லது படைப்பு 'ஓம்' என்பதி லிருந்தே பிறக்கிறது. 'ஓம்' என்பது வாழ்கிறது. 'ஓம' என்பதில் கரைகிறது. 'ஓம்' எல்லா ஒலி களுக்கும், சொற்களுக்கும் காரணமாக இருப்பது. இந்தக் கூட்டெழுத்து மூன்று எழுத்துக்களாலானது. அதாவது அ,உ,ம். அ குரல் வளையிலிருந்து பிறக்கும், ஒரு ஒலி அல்லது ஒரு சொல்லின் பிறப் பிடம். உ தொடங்குமிடத்திலிருந்து உருண்டுவந்து வாய் நுனியிலிருத்து முடிவது. 'ம்' வாயின் நுனி யிலிருந்து தொடங்கி உதடுகள், நாசியில் முடிவது. 'ஓம் அனைத்து ஒலிகளுக்கும் சொற்களுக்கும் ஆதாரமானது. உண்மையில் 'ஓம்' இன்றி எந்த வார்த்தையோ, ஒலியோ இல்லை. எல்லாச் சொற் களும், ஒலிகளும் 'ஓம்' என்பதிலிருந்து துவங்கி 'ஓம்' என்பதில் முடிகிறது.

இப்போது இந்த 'ஓம்' எனும் சொல் நமக்கு எங்கிருந்து வந்தது என்பதைப் பார்ப்போம். ஒரு யோகியின் மனத்திற்கு மட்டுமே கேட்கும் (ஒரு தூய சூக்கும நிலையிலான ஒருமுகப்பட்ட மனம்)

'பரா' ஒலியாகும். அதுவே பிரம்மசக்தி (கடவுள்). அதுவே மனம். தூலமாக வளர்ந்து நாம் காணும் அகிலமாகப் பரிணமிக்கிறது. பிரம்மம், அதன் சக்தி இரண்டும் ஒன்றே. அவை ஒரு நாணயத்தின் முன்புறம், பின்புறம் போன்றவை. பிரிக்க முடியா தவை. அவை சாரத்தில் ஒன்றே! ஒன்றே யாயினும் அவை பார்ப்பதற்கு ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்திருப்பதாகதோன்றும் படைப்பின் போது சேர்ந்திருப்பது பிரிந்து தோன்றும். இந்தச் சக்தி மூன்று குணங்கள் கொண்டது. அதாவது தத்துவம், இராஜசம், தாமசம் ஆகும். இந்த குணங்கள் பிரம்மசக்தியின் தன்மையும், சாரமும் ஆகும்.எல்லாப் படைப்புக்கும் காரணமும் ஆகும். இம்மூன்று குணங்கள் இல்லாத எந்த ஒரு படைப்பும் இல்லை. இந்தக் குணங்களே ஒரு மனிதனிலிருந்து மற்றொரு மனிதனைய்யும், ஒரு பெண்மணியிலிருந்து மற்றொரு பெண்மணியையும், ஒரு மகானிலிருந்து ஒரு பாபியையும் பிரித்து வேறுபடுத்திக் காட் டுவது. எப்போதும் அவை இயங்கிக் கொண்டே இருப்பவை. ஆகவே படைப்பே இல்லாத காலம் இருந்ததில்லை, படைப்பில்லாத காலம் இருக்கப் போவதுமில்லை. உலகங்கள், உலக உயிர் கள் ஆகியவற்றைப் படைத்தல், காத்தல், அழித்தல் எல்லையற்றதில் ஓங்வு ஒழிச்சலின்றித் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. இந்த மூன்றில் ஒன்று கடவுளோடு (பிரமம்மத்தோடு) கூடவே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆக

எப்போது படைப்பு ஆரம்பித்தது என்று கேட்பது கடவுள் அல்லது பிரம்மம் பிறந்தது எப்போது என்று கேட்பதைப் போன்ற அபத்தமான கேள்வி! உலகங்களும் உலக உயிர்களும் அதற்கான மூலத்தில் பிறந்து, சிலகாலம் நீடித்து பிறகு அவைகள் மீண்டும் பிரம்மத்தில் இணைவதற்குத் திரும்பிப் போகின்றன.

படைப்புத் தொழிலின்போது குணங்கள் சலனத்தை உண்டாக்குகின்றன. சலனம் நகர ஆரம்பிக்கிறது. அதனால் அவை மிக சூக்கும மானதொரு ஒலியை உண்டாக்குகின்றன. அதை ஒரு ஞானியின் மனம் மட்டுமே உணர முடியும். இந்த ஒலியே 'ஓம்' ஆகும். இந்த கூட்டெழுத்தான ஒரு சொல்லில் இருந்தே அர்த்தமுள்ள எழுத்துகள் சேர்ந்த சொற்களும், அர்த்தமற்ற எழுத்துக்களற்ற ஒலிகளும் உண்டாகின்றன. எலலா ஒலிகளும் ஆரம்பிக்கும் இடமே 'ஓம்'. இந்த ஒலியும், இதன் அர்த்தமுமே அகிலம் முழுவதையும் குறிக்கிறது. 'ஓம்' எனும் ஒலி அழிவற்றது. எப்போதும் மாறாமல் ஒரே மாதிரி இருப்பது. இது எல்லா காலங்களுக்கும், தேசங்களுக்கும் பொதுவாகவும், அனந்தமாகவும் இருப்பது. 'ஓம்' இன்றி எந்த ஒரு ஒலியோ, சொல்லோ கிடையாது.

'ஓம்' எனும் சொல் மும்மூர்த்திகளைக் குறிக்கிறது. அதாவது பிரம்மாவும் அவருடைய சக்தியும் (படைப்பாளியும், படைக்கும் சக்தியும்); விஷ்ணுவும்

அதன் சக்தியும் (காப்பவரும் அவருடைய காக்கும் சக்தியும்); சிவனும் அதன் சக்தியும் (அழிப்பவரும் அவருடைய அழிக்கும் சக்தியும்.) 'ஓம்' சத்-சித்-ஆனந்தம் (உயிர், அறிவு, பேரின்பம்) ஆகிய வற்றைக் குறிப்பது. அது காலம், வெளி, காரணத் தைக் காட்டுவது. கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தை விளக்குவது. பிறப்பு, வளர்ச்சி, இறப்பைக் காட்டுவது. உயிர், மனம், தூலம் மூன்றையும் குறிப்பது. விழிப்பு, கனவு, கனவற்ற உறக்க நிலையைக் காட்டுவது. மொத்தத்தில் அது நான்காவது நிலையை, அதாவது துரியத்தையும் (ஆழ்நிலைத் தன்மையை) குறிக்கும். 'ஓம்' உடல், மனம், சூக்கும தளங்களைக் குறிக்கிறது. அது மூன்று வேதங்களையும் (ரிக், யஜுர், சாமம்) குறிக்கும். 'ஓம்' மேலான பிரம்மத்தை விளக்கும் விஞ்ஞானக் குறியீடு. அது அந்த மேலான உயிரின் (கடவுளின் அல்லது பிரம்மத்தின்) சரியான பெயராகும். அகிலம் முழுவதற்குமான ஒரே ஒரு மந்திரம் இருக்குமெனில் அது 'ஓம்' எனும் மந்திரம். பல்வேறு ஆற்றல்களையும், செயல்களை யும் உள்ளடக்கிய ஒரே மந்திரம் ஓம். எண்ணற்ற மதங்கள், சித்தாந்தங்கள், கொள்கைகளைத் தன்னோடு இணைத்துச் செல்லும் ஒரே மந்திரம் இந்த 'ஓம்' எனும் மந்திரமே. 'ஓம்' எந்த ஒரு குறிப்பிட்ட தேவனையோ தேவியையோ குறிப்ப தல்ல. ஆனால், எல்லா தேவ தேவியரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு மேலான பரம் பொருளையே காட்டும் மந்திரமாகும்.

**பிரம்மம்**

முடிவான பேருண்மையே பிரம்மம். அது பூரணமானது (எப்போதும் நிறைவுடனிருப்பது—நிலையானது). அது இரண்டாவது அற்ற ஒன்று. அது பிறப்பற்றது, வளர்ச்சியற்றது, இறப்பற்றது, ஆண் பெண் பேதமற்றது. அதற்கு ஆரம்பமும் இல்லை; முடிவும் இல்லை. அது காலம், வெளி, காரணத்திற்கும் அப்பாற்பட்டது. அது காரணங்களுக்கெல்லாம் மூலகாரணம். அது சக்திகளுக்கெல்லாம் மூலசக்தி. ஒளிகளுக்கெல்லாம் பேரொளி. உயிர்களுக்கெல்லாம் உயிர். பொருள்களுக்கெல்லாம் மூலப்பொருள். அகிலத்தின் பிரபு. பிரம்மம் எல்லாம் வல்லவர். எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். அது இந்த அகிலத்தின் தோற்றமாகி சர்வ வல்லமையுடன் திகழ்வது. பெயர்களும் உருவங்களும் நிறைந்த இந்த அகிலம் பிரம்மம் இன்றி நிலைத்து நிற்க இயலாது. பிரம்மம் எங்கும் நிறைந்து நிற்பது எனவும், எப்போதும் நீடித்து இருப்பது என்றும், முடிவில்லாத ஒன்று எனவும் கூறும்போது பிரம்மம் இன்றி எந்த ஒரு பொருளுமே இருக்க முடியாது என்பது தெளிவு. எந்த ஒரு உருவமுங்கூட பிரம்மமின்றி வாழ முடியாது. ஆகவே, எல்லா உயிர்களும் பிரம்மத்தினிடமிருந்தே வந்து, பிரம்மத்தில் வாழ்ந்து, முடிவில் பிரம்மத்தின் இடத்திற்கே திரும்பிப் போய்ச் சேருகிறது. ஆக ''அகிலம் பொய்யானது. பிரம்மம் (கடவுள்) ஒன்றே உண்மையானது'' என்பதின் பொருள்

என்னவெனில் பெயர்களும் உருவங்களும் கொண்ட அகிலம் இடையறாது மாறிக்கொண்டே இருப்பது; மாறும் எதுவுமே நிலையாக இருக்க முடியாது. அது பொய்யே! ஆனால் இந்த எல்லா மாறும் பொருள்களுக்கும் பின்னணியில் மாறாத ஒன்று இருக்கிறது. இந்த மாறாத, மாற்ற முடியாததையே பிரம்மம் என்கிறோம். ஆக, நாம் இந்த அகிலத்தின் எல்லாப் பெயர்களையும் உருவங்களையும் அகற்றி விட்டுப் பார்ப்போமாயின் மீதம் நிற்பது பிரம்மம் மட்டுமேயாம்.

ஒரு எல்லைக்குள் இயங்கும் மனித மனத்தின் பிரம்மத்தைப் பற்றிய மிக உயரிய விளக்கம் 'சத்-சித்-ஆனந்தம்! (உயிர், அறிவு, பேரானந்தம்) ஆகும். இந்தக் கருத்துக்கு அப்பால் மனித மனம் பிரம்மத்தைப் பற்றியே எவ்விதமாகவும் விளக்க முடியாது. சத்-சித்-ஆனந்தம் பற்றிய இந்தக் கருத்து எல்லையில்லாததற்கு எல்லை வகுக்கிறது. இருப்பினும் வேறெந்தவித வழியும் இல்லை. பிரம்மம் சத்–சித்-ஆனந்தத்திற்கும் மேலானது. பிரம்மம் என்பது என்ன என்றும், எது பிரம்மம் இல்லை என்பதையும் பிரம்மம் மட்டுமே அறிவார். இருப்பினும் இந்த மேலான பரம்பொருளை இதைவிட அதிக அளவில் விளக்க வேறொரு வழியும் இருக்கிறது. அதாவது அதை 'தனக்கே தானான அல்லது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகா சமுத்திரம்' என்று கூறுவதேயாகும்.

பிரம்மம் மற்றெல்லாவற்றையும்விட மேலானது. மிக உண்மையானது. அது எல்லாவற்றின் உள்ளும், புறமும் இருக்கிறது. தனிப்பட்ட ஆன்மா ஒரு உயிருள்ள உடலில் வாழும் எண்ணற்ற சின்னஞ்சிறு உயிரணுக்களுக்கு எப்படியோ, அதே போல் பிரம்மம் கணக்கற்ற உலகங்களுக்கும் அவைகளில் வாழும் உயிர்களுக்கும் ஆகும். உடலைவிட்டு ஆன்மா நீங்கியதும் இந்த எண்ணற்ற உயிரணுக்கள் அடியோடு அழிகின்றன. அதேபோல பிரம்மம் இன்றேல் கோடானுகோடி உலகங்களும், இல்லாமல் ஆகிவிடும். பிரம்மமே எல்லா உயிர்களுக்கும் உயிர்ப்பாக இருப்பது. அதாவது எண்ணற்ற உலகங்களுக்கும், அவைகளில் வாழும் கணக்கிலடங்கா உயிர்களுக்கும் உயிர்ப்பாக இருப்பது. ஓர் அணுவுக்கும் மற்றோர் அணுவுக்கிடையேயும், ஒரு உயிருக்கும் மற்றோர் உயிருக்கும் இடையிலும், பிரம்மமே இணைக்கும் சங்கிலியாக இருக்கிறது. பிரம்மம் எண்ணற்ற உலகங்கள், உலகங்களின் உயிர்களின் பின்னணியில் உயிரூட்டும் சக்தியாக விளங்குகிறது.

முடிவற்றது ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும். ஏனெனில் 'முடிவற்றது' எனும் பெரும் பொருள் ஆரம்பம், மத்திமம்,முடிவு இல்லாத ஒன்று. 'முடிவற்றது' என்பவை இரண்டு எனில் அவை ஒன்றுக்கொன்று எல்லை வகுக்கும். அதனால் அதற்கு ஒரு எல்லை உண்டாகி விடுகிறது. முடிவற்றதை பகுக்க முடியாது. எல்லாச் சூழ்

நிலைகளிலும், கட்டுப்பாடுகளிலும் அது முடிவற்ற ஒன்றாகவே நீடிக்கிறது. ஆக, சர்வ வல்லமை படைத்ததும், எங்கும் நிறைந்திருப்பதும், எல்லாம் அறிந்ததும் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியும். ஒரு உயிர்ப் பொருள் எங்கும் நீக்கமற நிறைந்தும், எல்லாம் பகுத்தறிந்தும், சர்வ வல்லமை உள்ள தாயும் இருப்பின் நாம் வேறொன்றை இதே விளக்கத்துடன் விளக்க முடியாது. அப்படிச் சொல்ல முற்படுவோமாயின் ஒன்று மற்றொன்றுக்கு எல்லை வகுத்து, சொன்ன தலைப்புக்குப் பொருத்தமற்று பொருளற்றதாகிவிடும். ஆக, ஒரே ஒரு பிரம்மம் அல்லது கடவுள் மட்டுமே இருக்க முடியும். அப்படிப் பட்டவரை சத்-சித்-ஆனந்தம் எனவும் சர்வ வல்லமையாளன், வாலறிவாளன், எங்கும் நிறைந்தவன் என்றும், எல்லையற்ற பரம்பொருள் எனவும் கூறலாம். அது பிரம்ம சக்தி (ஆற்றல்). அதன் பல்வேறு சக்திக் கூறுகள் மனம், ஜடம், இந்த அகிலத்தின் எண்ணிலடங்கா பெயர்களும், உருவங்களுமாகப் பரிணமிக்கிறது. இதே மகாசக்திதான் உயிர்த்தத்துவமாக அகிலம் முழுவதும் நிரம்பியுள்ளது. பிரம்மமும் அதன் சக்தியும் வெவ்வேறானவை அல்ல. மிக சூக்குமமான ஆவி குளிர்ச்சியடைய அடைய தூலமாகி மேகம், மூடுபனி, மழை, கல்மழை அல்லது பனிக்கட்டி போன்று மாறிக் கொண்டே போகிறது. இதேபோல் பிரம்மத்தின் சக்தியும் நாம் காணும் அகிலத்தின் பெயர்களும், உருவங்களுமாகப் பரிணமிக்கிறது. பிரம்மமே இந்த அகிலத்தின் காரணன். இதேபோல் அதன் சக்தியே (ஆற்றலே) அகிலமாகப்

பரிணமிக்கிறது. மேலும் பிரம்ம சக்திதான் அகிலம் முழுவதையும் பரிணமித்து அதன் உயிர்த் தத்துவமாகவும், அதில் வாழும் உயிர்ப் பொருள் களின் பகுத்தறிவாகவும்,உயிர்ச்சாரமாகவும் ததும்பி நிற்கிறது. இதே பூரணத்திலிருந்து (பூரண பிரம்மத் திலிருந்து) இந்த அகிலம் (இதுவும் பூரணமானதே) தோன்றுகிறது. ஆயினும் பிரம்மம் பூரணமாகவே நீடிக்கிறது.

'ஓம் சாந்தி' மந்திரத்தை மூன்று முறை உச்சரிப்பது, கடவுள் அல்லது பிரம்மத்தை மன அமைதிக்காகப் பிரார்த்திப்பது, படிக்கும்போதும், தியானம் செய்யும்போதும் எவ்விதக் குறுக்கீடுகளும் எழாமலிருக்க வேண்டும் என்ற பிரார்த்தனைக்காக வும் ஆகும்.

'ஓம் சாந்தி'யை முதன் முறை உச்சரிப்பதின் பொருள் பின்வருமாறு: ''ஓ மகாப்பிரபுவே! தூல உடலில் சாந்தி நிலவட்டும். தூல உடலினால் எந்தவித தொல்லையும் தராமல் காத்தருளுங்கள்!''

'ஓம் சாந்தியை' இரண்டாவது முறை உச்சரிப் பதின் பொருள்: ''ஓ மகாப்பிரபுவே! சூக்கும உடலில் இருந்தும்,வெளிப்புற கணங்களிடமிருந்தும் எந்தவிதத் தொல்லையும் நேராமல் காத்தருள்க'' எனும் பிரார்த்தனையைக் குறிப்பதாகும்.

அதை மூன்றாவது முறை உச்சரிப்பதன் அர்த்த மாவது: ''ஓ மகாப் பிரபுவே! சலனமற்ற அமைதி நிலவ அருள் புரியுங்கள்! காரண உடலில் இருந்தும்,

பரவெளிக் கணங்களினாலும் எனக்கு எவ்விதத் தொந்தரவும் நேராமல் காத்தருளுங்கள்!'' என்பதாகும்.

## படைப்பு

அனேகர் அறியாமை காரணமாக படைப்பைக் குறித்து விதவிதமான வினாக்களைத் தொடுக்கின்றனர். அவைகளில் சில:

1. கடவுள் அல்லது பிரம்மம் தூய்மையும், நேர்மையும் ஆனவர் எனில், ஏன் அல்லது எதற்காக அவர் இதைப் போன்ற நேர்மை குறைந்த அகிலத்தைத் தோற்றுவித்தார்?

2. உண்மையில் இருப்பது பிரம்மம் ஒன்றுதான் எனில் அந்த ஒன்று எப்படிப் பலவாயிற்று?

3. பிரம்மம் உன்னதப் பேரொளி அல்லது வாலறிவன் எனில் இத்தகைய இருளும், அறியாமையும் எப்படி வந்தது?

இதுபோன்ற பல கேள்விகள் அறியாமையில் உழலும் மனிதனிடம் உண்டாகின்றன. இப்போது நாம் இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க முயல்போம்.

ஓர் அறியாமையுடையவனுக்கு பெயர்களும் உருவங்களும் கொண்ட இந்த உலகம் பெரிய உண்மையாகத் தோன்றுகிறது. அது மட்டுமின்றி அது ஒரு பெரும் புதிராகவும் இருக்கிறது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ரப்பரினால் மட்டுமே செய்யப்பட்ட பல்வேறு வண்ணங்

களையும் வடிவங்களையும் கொண்ட விளையாட்டு சாமான்களை வாங்கி வந்து விளையாடுவதற்குத் தருகிறார்கள். இந்த விளையாட்டு சாமான்களின் உண்மையையும் மதிப்பையும் அறியாத குழந்தைகள் அவற்றின் பெயர்கள், உருவங்கள, வண்ணங்களில் மனதைப் பறிகொடுத்து பற்று வைக்கின்றன. எதிர்பாராவிதமாக இந்த விளையாட்டுச் சாமான்களில் ஏதாவதொன்று தொலைந்து போயின் குழந்தை அழுது அலறித் துடிக்கிறது. இதே போன்றதொரு விளையாட்டுச் சாமானை வாங்கி வந்து தரும்வரைகுழந்தைசமாதானப் படுவதில்லை. குழந்தைகள் தங்கள் விளையாட்டுப் பொம்மைகளிடம் மிகவும் பிரியம் கொள்கிறது. அவை எத்தகைய பொருளைக் கொண்டு உருவாக்கப் பட்டன என்பதைப் பற்றிக் குழந்தை கவலைப்படுவதில்லை. விளையாட்டுச் சாமான்களின் வண்ணங்கள், உருவங்கள் பெயர்களினால் கவரப்பட்டு, அவை உண்மையானவை என நம்பி விடுகின்றன.

ஆனால் பெற்றோர், அந்தப் பொம்மைகளின் உண்மையான மதிப்பை அறிவர். அவை ரப்பரினால் செய்யப்பட்டது. அவற்றின் பெயர்களும். வண்ணங்களும் மாற்ற வல்லது, மாறக் கூடியது, நீடிக்காதது என்பதையும் அறிவர். ஆகவே குழந்தைகளைப் போல் அவர்கள் அந்த பொம்மைகளிடம் மதிப்பு வைப்பதில்லை.

குழந்தைகளைப் போலவே அறியாமை மிக்க மனிதன் இந்த உலகிலுள்ள உருவங்களையும்

பெயர்களையும் உண்மையென நினைத்து விடுகிறான். அவைகளைப் பற்றிக் கொள்கிறான். அவைகளிடம் அதீதப்பற்று வைக்கிறான். அதன் 'பேருண்மை சொருபத்தை' மறந்து விடுகிறான். அதாவது இந்த அகிலத்தின் தோற்றத்திற்கும் ஆற்றலுக்கும் அடிப்படைக் காரணமானதும் அதனுடைய எண்ணிலடங்கா பெயர்களுக்கும், உருவங்களுக்கும், வண்ணங்களுக்கும் காரணமானதும் பிரம்மமே என்பதாகும். ஒருவர் நிர்விகல்பசமாதி நிலையை எய்திய பிறகுதான், உபமானத்தில் சொல்லப்பட்ட பெற்றோரைப் போல் பெயர்களும் உருவங்களுங் கொண்ட அகிலத்திற்கு அப்பால் பிரம்மத்தை— பிரம்மத்தை மட்டுமே காண்கிறார். அவருக்கு மட்டுமே பிரம்மம் ஒன்றேதான் என்கிற உண்மை தெரிகிறது. அவருக்கு இந்த அகிலத்தின் எண்ணற்ற பெயர்களும் உருவங்களும் பொருளிழந்து தோன்றுகின்றன.

ஒரு சாதாரணன் ஒவ்வொரு நாளும் மூன்று நிலைகளை அனுபவிக்கிறான். அதாவது, விழிப்பு, கனவு, கனவற்ற உறக்க நிலைகள். பெயர்களும் உருவங்களும் கொண்ட இவ்வுலகம் விழிப்பு நிலையில் உண்மையெனத் தோன்றுகிறது.

ஆனால் அவனே கனவு நிலைக்குள் ஆழ்ந்திருக்கும்போது விழிப்பு நிலை உலகத்தை அடியோடு மறந்து விடுகிறான். அவனுடைய கனவு நிலைகளைப் பொறுத்து அவன் அழுகிறான், சிரிக்கிறான், மகிழ்கிறான், வேதனைப்படுகிறான்.

கனவுகளற்ற உறக்க நிலையில் அமிழும்போது விழிப்புநிலை உலகம், கனவுநிலை உலகம் இரண்டையுமே மறந்து விடுகிறான். இந்த மூவகை நிலைகளிலும் ஒரு சாதாரணன் தனக்குள்ள அறிவீனத்தால் ஏமாந்து விடுகிறான்.

சீவனின் இம் மூவகை நிலைகளைத் தவிர்த்து வேறொரு தனிப்பட்ட நிலையும் உண்டு. அதாவது துரிய நிலை— மனத்தின் ஆழ்நிலை— இந்த நிலையை தூய்மை, சுயக் கட்டுப்பாடு, மனக்கட்டுப் பாடு, கற்புநெறி போன்றவற்றைக் கடைப்பிடித்து நிர்விகல்பசமாதி நிலையை எய்திய மிக உன்னதப் பிறவிகளால் மட்டுமே அனுபவிக்க முடியும். துரிய நிலையில் ஒருவர் அகிலத்தின் அனைத்துப் பெயர் களுக்கும் உருவங்களுக்கும் அப்பால் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்கிறார்.

பிரம்மமே மற்றெதையும்விட மேலான பேருண்மை. உண்மையில் அது 'ஒன்றே' இரண் டாவது அற்றது. இந்த வாக்கியம் கூட்டல், கழித்தல் கணக்கிட்டு முடிவெடுக்கப் பட்டதன்று; அனுபவத்தின் மூலம் வெளிப்பட்டது. இந்த நிலையை ஒவ்வொருவரும் உணர்ந்து அனுபவிக்க முடியும். எப்படி? இதற்கான வழியைக் கடைப்பிடித் தால் உணர முடியும். நிர்விகல்பசமாதி நிலையில் பொருள், உருவம், விவரம் எல்லாமே ஒன்றா கிறது. முடிவில் இந்த ஒன்றே என்னும் கருத்து கூட மறைந்து விடுகிறது. ஏனெனில் ஒன்று என்பது

தோன்றின் அதைத் தொடர்ந்து இரண்டும் அதற்கும் மேல் என்று நீண்டு கொண்டே போகுமல்லவா? நிர்விகல்ப சமாதிநிலையில் எல்லா வேற்றுமை களும் மறைந்து விடுகிறது. மனம், உள்ளம், அகந்தை, சித்தம் (மனக்கோப்பு) புத்தி அனைத் துமே பரம்பொருளில் ஒன்றி விடுகின்றன. நிலைத்து நிற்கும் ஒரே பரம்பொருள் மட்டுமே தனக்குத் தானான அல்லது தன்னில் தானான உயிர்ச்சார மகா சமுத்திரத்தில் தோற்றமளிக்கிறது.

அந்த சமாதி நிலையில் 'மனம்' என்பதின் அறிகுறி அடியோடு அற்றுப் போவதால் அந்த நிலையில் இந்த அகிலத்தைப் பற்றிய கேள்வியே எழுவதற்கிடமில்லை. அந்த நிலையில் வீடுபேறு அல்லது பந்தம் பற்றிய கருத்து எதுவுமே கிடை யாது. அங்கே ஒன்றே ஒன்று மட்டும், அதாவது பிரம்மம் மட்டும் உறையும்போது தளைப்படவும், விடுதலை பெறவும் யார் இருக்கிறார்கள்? இத் தகைய கேள்விகளே அர்த்தமற்றவை. அபத்த மானவை. ஆக 'ஒரே பரம்பொருள் பலவானது எப்படி?' என்ற கேள்விக்கே அர்த்தமில்லை. ஏனெனில் முதலாவதாக ஒன்றே ஒன்றாக நிலைத்து நிற்கும் பூரணன் பல்வேறு நிலைபெற்ற பூரணன் களாக உருவெடுக்க முடியாது, பல்வேறு நிலைத்து நிற்கும் பூரணவடிவங்களெனில் அவற்றை ஒன் றாக்கி ஒருமித்துச் சேர்க்க முடியாது. உண்மையில் ஒரே பரம்பொருள் பலவாகாது. அது என்னவோ ஒன்றே ஒன்றுதான். ஆகவே 'முழுமை வடிவம்

பெறாத இவ்வுலகம் எப்படி ஒரே ஒரு நிலைத்து நிற்கும் பரம்பொருளிலிருந்து தோன்றியது?' என்னும் கேள்வி பொருளற்றுப் போகிறது.

உலகம் நல்லதுமல்ல, கெட்டதுமல்ல. நல்லது கெட்டது என்னும் கருத்துகள் அழுக்குற்ற மனம், அகந்தை போன்றவற்றால் உண்டாக்கப்பட்டவையே. இந்த அகிலத்தில் பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் போன்றவை— அதாவது அனைத்து எதிரெதிரான முரண்பாடுகளுமே நல்லன கெட்டன சேர்ந்த அபூர்வக் கலவை. முழுக்க முழுக்க 'இது நல்லது'— 'இது கெட்டது' என்று சொல்லக் கூடியது எதுவுமே இல்லை. நாம் கெட்டது என்று சொல்லும் பொருளுக்குள் எங்கோ ஒரு மூலையில் நல்லதும் ஒளிந்திருக்கும். 'இது நல்லதே' என்று சாதிக்கும் ஒன்றில் ஒரு துளி கெட்டதின் நிழலும் தென்படும்.

உன்னிப்பாகக் கவனித்த பிறகு இதை நாம் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்ளலாம். உலகம் ஒருவருடைய மனத்தின் படைப்பே தவிர வேறொன்றுமில்லை. மனம் தூய்மையாக இருந்தால் ஒருவர் பார்க்குமிடமெல்லாம் தூய்மையையும், நல்லதையுமே பார்க்கிறார். மாறாக, தூய்மையற்ற மனம் தூய்மை இழந்தவற்றையே பார்க்கிறது. தன்னைச் சுற்றிலும் கெட்டவற்றையே காண்கிறது. இதன்றி உலகில் எதிரெதிரான முரண்பாடுகள் இல்லையெனில் அறிவுப் பெருக்க-

மும், முன்னேற்றமும் இருக்காது. நல்லதை அறிய எங்காவது கெட்டதும் இருத்தல் வேண்டும். அது போலவே இது தீயது என்பதைத் தெரிந்து கொள்ள நல்லது எங்காவது ஓரிடத்தில் இருந்தாக வேண்டும். தீய ஆசைகள் எண்ணங்கள், செயல் களைப் போக்க ஒருவர் நல்லன செய்தல் வேண்டும். நேர்மையான ஆசைகள், எண்ணங்கள், செயல் களைக் கொண்டு பாபங்களைப் போக்க வேண்டும். அதனால் மனத்தூய்மையை எய்தி நல்லது கெட்டது என்ற கருத்துகளுக்கும் அப்பால் சென்று சமாதி நிலையை எய்த வேண்டும். உண்மையில் சமாதி நிலையை எய்தவும், வாழ்க்கைச் சுழலி லிருந்து மீளவும் ஒருவர் அனைத்து எதிரெதிர் முரண்பாட்டுக் கருத்துகளைக் கடந்து போக வேண்டும்.

பிரம்மம் மட்டுமே அங்கிங்கெனாதபடி எங்கும் இருப்பவர். நிர்விகல்பசமாதி நிலையை எய்திய பிறகு ஒருவர் நேருக்குநேர் இந்த நிலையை உணர்ந்து இந்த மாபெரும் உண்மையை புரிந்து கொள்ள இயலும். இல்லையெனில் ஒரு சாதா ரண மனிதனுக்கு இத்தகைய கருத்து அவனது அறிவைக் குழப்பிப் புரியாத நிலைக்கு ஆட் படுத்திவிடும். ஒரு சாதாரணன் அவன் எவ்வளவு பெரிய புத்திசாலியாக இருப்பினும், பெயர்களும் உருவங்களும் நிறைந்த இந்த உலகமே எப்பொழு தும் மற்றனைத்தையும் விட மிகையான உண்மை யெனத் தோன்றும். அவனிடம் இந்த உலகம்

நிலையற்றது எனவும் கடவுள் அல்லது பிரம்மம் ஒன்றே நிரந்தரமானது எனவும் கூறினால் அதைக் கேட்டு அவன் எள்ளி நகைப்பான். அவனுக்கு இந்த உலகம் மட்டுமே தோன்றுகிறது. கடவுள் அவன் பார்வையிலிருந்து மறைந்து விடுகிறார். ஒருவன் சமாதியை எய்தியதும் இந்தக் கதையே மாறி விடுகிறது. உலகம் மறைந்து போகிறது. பிரம்மம் மட்டுமே நிலைத்துநிற்கிறது. அப்படிப்பட்ட மனிதன் பிரம்மத்தை எங்கும் எப்பொருளிலும் காண்கிறான். ஒன்றானது எப்படி பலவாக காணப்படுகிறது என்னும் மாயத் தோற்றத்தைத் தெளிவு படுத்த வேதாந்தம் கயிறும் பாம்பும், கானல் நீர் உவமைகளைக் கூறி விளக்குகிறது புரியாத நிலையில் இருட்டில் ஒரு அறையின் மூலையில் வளைந்து வளைந்து கிடக்கும் கயிற்றை பாம்பு என நினைத்து விடுகிறான். பாம்புக்குப் பயந்து விளக்கை எடுத்து வந்து பார்க்கிறான். அது கயிறு! பாம்பு என்ற பயம் அப்பொழுது அவன் மனதிலிருந்து மறைந்து விடுகிறது. அதேபோல் தான் ஒரு சாதாரண மனிதன் இந்த உலகின் பெயர்களையும் உருவங்களையும் உண்மையென நினைக்கிறான். அதை இறுகப் பற்றி அதன் எண்ணற்ற உருவங்களில் பற்று வைத்து இந்த அகிலத்திற்கே ஆதாரமாகவும், மூலகாரணமாகவும் உள்ள கடவுள் அல்லது பிரம்மத்தை மறந்து விடுகிறான். ஆனால் அதே மனிதன் தன் மனதைத் தூய்மைப்படுத்தி நிர்விகல்ப சமாதியை எய்தியதும் தனது அறியாமையை எண்ணியும், தன்னை இதுவரை ஏமாற்றி வந்த

பேய்க் கனவை நினைத்தும் எள்ளி நகைத்துக் கொள்கிறான். அதன் பிறகே அவன் ஒவ்வொரு பொருளிலும், பொருளுக்கு அப்பாலும் பிரம்மத்தையே காண்கிறான். ஆக, தூய்மையற்ற மனமே பந்தத்திற்குக் காரணம். தூய்மை பெற்ற மனமே வீடு பேற்றுக்கு நிச்சயமான வழி. பந்தம், வீடுபேறு ஆகியவற்றின் கருத்து ஊறிய நிலை, ஒரு இடைப் பட்ட நிலையேயாகும். அது மனத்தின் சொந்தப் படைப்பு ஆகும். அதனாலேயே நிர்விகல்ப சமாதி நிலையை எய்திய ஒருவர் பற்றுக்கோ, வீடுபேற்றுக்கோ எந்தவித முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. இருப்பது ஒன்றே ஒன்றுதான் என்னும் போது, அதுவே தூய்மை யுடையது, நிலைத்து நீடிப்பது, பிறப்பற்றது, சுதந்திரமானது, எப்போதும் ஒரே நிலையிலிருப்பது என்னும் போது, பந்தத்திற்கோ வீடுபேறுக்கோ அர்த்தம் ஏது?

தாகமுள்ள ஒரு மனிதன் (பாலைவனத்தில்) கானல்நீரை முதன்முறையாகப் பார்க்கிறான். அதை உண்மையென நம்பி தண்ணீருக்காக ஓடுகிறான். நெடு நேரம் அவ்வாறு ஓடிப்பார்த்து தனது தவறை உணர்கிறான். அவன் பார்த்தது பொய்த் தோற்றம் என்று புரிந்து கொள்கிறான். ஆனால் இந்த ஞானோதயத்திற்குப் பிறகும் பாலை வனத்தில் கானலைப் பார்த்தாலுங்கூட அவனுடைய பார்வையின் கோணம் மாறுபடுகிறது. இந்த நிலையில் இன்னும் மேலே போனால் வேறொரு இடத்தில் பசுமையான வளம் நிறைந்த

நிலப்பகுதி இருப்பது தெரிகிறது. கானல் நீர் அதனுடைய பிரதிபலிப்பே என்பதும் புரிகிறது. அதே போல் நிர்விகல்ப சமாதி நிலையை எய்திய ஒருவர் உலகாயத உறவு நிலைக்குக் கீழிறங்கி வந்ததும் பெயர்களும் உருவங்களும் உடைய இந்த அகிலத்தைப் பார்க்கும் பார்வையின் கோணமே மாறுபடுகிறது. அவர் பல்வேறு பெயர்களுக்கும் உருவங்களுக்கும் அப்பால் எங்கும் வியாபித்து நிற்கும் பிரம்மத்தையே காண்கிறார். இந்தத் தத்துவத்தின் உண்மையைக் கண்டு அவர் ஏமாறுவதில்லை. அனைத்து எதிரெதிர் முரண்பாட்டு இயல்புகளைக் கண்டாலும் மனத்தில் எவ்வித சலனமும் இன்றி சமச்சீராக நோக்குகிறார். பின்னர் எதிரெதிர் முரண்பாடுகளின் கருத்துகளுக்கும், குணபேதங்களுக்கும் அப்பால் கடந்தவராகிறார்.

இந்த நீண்ட விளக்கத்திற்குப் பிறகுங்கூட, 'பிரம்மம் ஒன்றே எனினும் இந்த அகிலமாக உருவெடுக்கும் போது தன்னில் தானே எப்படி வேதனையையும் துன்பத்தையும் விளைவித்தது?' என்ற கேள்வி எழக் கூடும். இது சாதாரண ஜீவனின் மனத்தை அலைக்கழிக்கும் என்பது நிச்சயம். ஆனால் இந்தக் கேள்வியே விவாதத்திற்கு உரியதல்ல. நாம் ஏற்கனவே, 'ஒன்றேயாக இருப்பது பலவாகாது என்றும், பலவாக இருப்பது ஒன்றாகாது என்றும்' கூறியுள்ளோம். இது மலடி வயிற்றில் குழந்தையைப் பிறக்க வைப்பதைப்

போன்றது. மலட்டி, மலடி வயிற்றுக் குழந்தை என்று சொல்வது ஒன்றுக்கொன்று பொருத்த மற்றது. உண்மையில் ஒரு மலடி குழந்தைகளைப் பெறமுடியாது. அப்படிப் பிறந்தால் அவளை மலடி என்று அழைக்க முடியாது. சாதாரண ஜீவன்கள் மலடி குழந்தை பெறுவதாக தவறாக — எண்ணிவிடு கிறார்கள். பின்னர் எப்படி அந்தப் பெண்மணியை மலடி என்று சொல்ல முடியும்? மாறாக, நிர்விகல்ப சமாதி நிலை எய்திய மனிதர் அந்தப் பெண்ணிடம் உள்ள மலட்டுத் தன்மையை கண்டு கொள்கிறார். அவர் அவளிடம் குழந்தைகள் பிறக்காது என்பதை யும் அறிந்து கொள்கிறார்.

அதே கோணத்தில்தான் அறியாமையுள்ள ஒரு மனிதன் இந்த அகிலத்தின் உருவங்களையும், பெயர்களையும் பார்க்கிறான். அவை உண்மை யானவை என எண்ணி அன்பு காட்டி, பந்தப்பட்டு, பிரம்மம் அல்லது கடவுளையே மறந்து விடுகிறான்.

ஆனால் நிர்விகல்ப சமாதி எய்திய ஒரு மகான் ஒவ்வொரு பெயர், உருவத்தின் உள்ளும் புறமும் பிரம்மத்தை — பிரம்மத்தை மட்டுமே காண்கிறார். தங்கத்திலிருந்து மோதிரங்கள், சங்கிலிகள், ஒட்டி யாணங்கள், வளையல்கள் போன்ற ஆபரணங்களைச் செய்கிறார்கள். இதைப் பார்க்கும் குழந்தை இந்த ஆபரணங்களின் பெயர்களையும். உருவங்களையும் மட்டுமே உண்மையென்று நினைக்கிறது. தங்கமே இந்த ஆபரணங்களாக மாற்றம் பெற்றிருக்கிறது என்ற உண்மையை அது உணர்வதில்லை.

ஆனால் வயதானவர் இந்த ஆபரணங்களை எந்த நேரத்திலும் உருக்கித் தங்கமாக மாற்றலாம் என்றும், தங்கமே இதன் உண்மையான மூலப் பொருள் என்பதையும் அறிந்து கொள்கிறார். ஆக, ஒரு சாதாரண மனிதனும், நிர்விகல்ப சமாதி எய்திய வரும் இரு வேறு துருவங்களைப் போன்றவர்கள்.

ஒருவர் கும்மிருட்டில் தடுமாறுகிறார்; மற்றவர் ஒளிமயமான சூரிய வெளிச்சத்தில் மூழ்கித் திளைக்கிறார்.

ஒளியும் இருளும் இணைய முடியாது. ஒன்று இருக்குமிடத்தில் மற்றொன்று இருக்க முடியாது.

ஞானம் பெற்றவர் எங்கும், எல்லா உருவங்கள், பெயர்களின் பின்னணியிலும் பிரம்மத்தையே காண்கிறார். அதே சமயத்தில் ஒரு சாதாரணன் இந்த உலகிலுள்ள உருவங்களையும், பெயர் களையுமே உண்மையென நம்பி பிரம்மத்தை மறந்து விடுகிறான். ஆக, அவனுக்குப் பெயர்களும் உருவங்களும் கொண்ட இந்த உலகம் விடுவிக்க முடியாத புதிராகவே இருக்கிறது. உலகம் பொய் என்றும், பிரம்மமே உண்மையென்றும் அவனிடம் கூறினால் அவனால் அதைப் புரிந்து கொள்வது கடினம்.

மாறாக, ஆன்மிகத்தில் முன்னேறி நிர்விகல்ப சமாதி எய்திய ஒருவர் அகிலத்தின் பொய்த் தோற்றத்தையும் கடவுளின் உண்மை வடிவையும் தெளிவாகப் புரிந்து கொள்கிறார்.

எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது? முதலில் எப்படி அறியாமை வந்தது? மனிதன் இந்த அகிலத்தில் காணும் பெயர்களையும் உருவங்களையும் கண்டு எப்படி ஏமாறுகிறான்? தன் உண்மை நிலையை எப்படி மறந்தான்? போன்ற பதிலளிக்க முடியாத கேள்விகள் எப்போதும் இருந்துகொண்டே தானிருக்கும். உலகின் புலன் போகங்களில் மூழ்கித் திளைத்து, துன்புறும் சாதாரண ஜீவன்களின் மனங்களில் இந்தக் கேள்விகள் உழன்று கொண்டே இருக்கின்றன.

ஆனால் ஒரு ஞானிக்கு (உயரிய மெய்ஞானம் எய்தியவருக்கு) இந்தக் கேள்விகள் எழுவதே இல்லை. அதற்கு அவர் எந்தவித முக்கியத்துவமும் அளிப்பதில்லை; இந்தக் கேள்விகளுக்கு விளக்கமளிக்கவும், இதுபோன்ற புதிரை விடுவிக்கவும் மகான் சங்கரர் மாயைக் கொள்கையைக் கையாண்டார். மாயை என்பது உண்மையில் இருப்பதுமல்ல, இல்லாததும் அல்ல. சாதாரணனுக்கு உலகம் உண்மையாகப்படுகிறது. மேலான மெய்ஞ்ஞானிக்கு அது பொய்த் தோற்றமாகிறது. உண்மையில் இருப்பது ஒன்றே ஒன்றுதான்.

ஒரு தேனீ திறந்த ஜன்னல் வழியே ஓர் அறைக்குள் புகுந்து விடுகிறது. வெள்ளை நிறச் சுவற்றைக் கண்டு வெளியேறும் வழியென்று ஏமாந்து அந்த சுவரை நோக்கிப் பறக்கிறது. சுவற்றில் தலையை மோதிக்கொண்டு திகைக்கிறது. பிறகு சாளரத்தின் வழியாக வரும்

வெளிச்சத்தைப் பார்த்து அவற்றை நோக்கிப் பறக்கிறது. அங்கேயும் தலையை மோதிக்கொண்டு மேலும் குழப்பமடைகிறது. அது வந்த வழி திறந்தே இருந்தாலும், அந்த வழியை மறந்து விடுகிறது. மூடிய கண்ணாடிக் கதவுகள் வழியாக வெளியேற மீண்டும் மீண்டும் முயல்கிறது. விடாமுயற்சியுடன் அந்த ஈ சுவரிலிருந்து ஜன்னலுக்கும், ஒரு சாளரத்திலிருந்து மற்றொரு சாளரத்திற்கும், சாளரத்திலிருந்து சுவரை நோக்கியும் பறந்து அலைகிறது. பிரமை பிடித்துத் திரிந்து முடிவில் அழிந்து போகிறது. இங்கு யாருமே அந்த ஈயை அறைக்குள் செல்லும்படி வற்புறுத்தவில்லை. மீண்டும் அது வெளியேறிப் போவதையும் யாரும் தடுக்கவில்லை. அப்படியிருந்தும் அந்த ஈ எப்படித் தடுமாறியது? அந்தத் தடுமாற்றத்திற்கு என்ன காரணம்? அந்த ஈயே அதனுடைய குழப்பத்திற்குக் காரணம். அறையில் இறப்பதோ அறையை விட்டு வெளியேறுவதோ தேனீயே எடுக்க வேண்டிய முடிவாக இருந்தது.

இதேபோல ஒரு சீவனும் (தனிப்பட்ட உயிரும்) விளையாட்டாக இந்த உலகிற்கு வருகிறது. தெரிந்துகொள்ளும் அவாவுடன் கூடிய மனத்துடனும், அனுபவிக்க வேண்டுமென்ற புலன்களுடனும் அது வருகிறது. மனமே சீவனுக்கு விளங்க வைக்கும் பிரதான கருவி. சீவன் உலகை மனத்தின் மூலமாக அறிந்து கொள்கிறது. மனம் அலைந்து தூலசூக்கும புலன்களால் உலகைப்

பற்றிய அனுபவத்தைத் திரட்டிக்கொண்டு வரு கிறது. உண்மையில் உயிர் (சீவன்) மனம், புலன் களின் சாட்சியாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் அது எந்தவித மாற்றத்துக்கோ, தளைக்கோ, விடுதலைக்கோ ஆட்படுவதில்லை. அதனால் அது எப்போதும் தூய்மை கெடாமலும், சுதந்திரத்துடனும், நிச்சலனமாகவும் திகழ்கிறது.

ஆனால் மனமானது இடையறாது வெளியே போய் வந்து கொண்டிருக்கிறது. அந்த சமயங்களில் புலன் போகங்களை அனுபவிக்கிறது. ஆசைகள் அதிகமாகி புலன்போகங்களைப் பற்றியே நினைத்து மாசுற்று பலவீனப்பட்டு ஆன்ம ஒளியையே இழக்

அது மூன்று குணங்களாலானது. அதாவது சத்துவம், இராசசம், தாமசம் ஆகும்.

இவற்றில் சத்துவம் ஒளியையும் தூய்மையை யும் குறிக்கும்.

இராசசம் செயலைக் (கர்மம்) குறிக்கும்.

தாமசம் இருளையும், சோம்பலையும் குறிக் கும்.

இரசோகுணம் சத்துவத்துடனோ அல்லது தாமசத்துடனோ இணைந்து இயக்கும். சத்துவத் துடன் சேரும்போது அந்த உயிருக்கு ஒளியூட்டும். தாமசத்துடன் சேரும்போது தளையை உண்டாக் கும். ஆக ஒருவருடைய மனமே அவரைத் தளைப் படுத்துவதும், விடுவிப்பதும் ஆகும்.

மாசுற்ற மனம் தளையை உண்டாக்குகிறது. தூய மனம் விடுதலையைப் பெற்றுத் தருகிறது.

தமோகுணம் மேலோங்கி இருக்கும்போது ஒரு நபர் குழப்பத்திலும், பந்தத்திலும் உழல்கிறார்.

சத்துவகுணம் மேலோங்கி இருக்கும் பொழுது அறியாமையையும், தளைகளையும் உடைத்தெறிந்து ஆன்ம தரிசனம் பெற்று பிரம்மத்தைக் காண்கிறார்; விடுதலை எய்துகிறார்.

இதனால் மனத்தின் மாசே அறியாமைக்கும், தளையில் சிக்குவதற்கும் உண்மையான காரணம். அதன் மாசற்ற தன்மை ஒருவருக்கு வீடு பேற்றை அளிக்கிறது.

காமம் (ஆசை); குரோதம் (கோபம்); லோபம் (பேராசை); மோகம் (பெண்ணாசை); மதம் (பெருமை); மாச்சரியம் (வெறுப்பு) ஆகியவற்றால் அழுக்குற்று தூய்மை இழக்கிறது. இதனால் இந்த மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகிறது. அதன்மூலம் மனத்தை தூய்மையாக்கி, சூக்கும நிலைக்கு உயர்த்தி ஒருமுகப்படுத்த முடிகிறது. இதற்கு ஒருவர் எல்லாப் புலன்களையும் அடக்கியாள வேண்டும். நேர்மையான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டும். மனத்தின் தூய்மை, ஒருமுகப்பட்ட நிலை, சூக்குமத் தன்மைகளை ஓரளவு பெற்று உயர்நிலை தியானத்தையும், மன ஒருமைப்பாட்டையும் பயின்றால் நிர்விகல்ப சமாதி எய்த முயற்சிக்கலாம்.

ஒருவர் சமாதி நிலையை எய்தும்பொழுது இயல்பாகவே வாழ்வின் எல்லா பிரச்னைகளையும், குழப்பங்களையும் கடந்து செல்ல முடியும். சமாதி நிலையில் மட்டுமே ஒருவர் பிரம்மத்தை அறிகிறார். பிரம்மத்தை தன் ஆன்மாவாகவே பார்க்கிறார். பிரம்மத்தையும் எங்கும் எதிலும் காண்கிறார். இந்த நிலையை எய்திய பிறகு பந்தம், விடுதலை, மகிழ்ச்சி, துன்பம் என்பதற்கெல்லாம் இடமே கிடையாது.

## பிரம்மமும், தனிப்பட்ட ஆன்மாக்களும்

பிரம்மத்திற்கும் எண்ணற்ற ஜீவன்களுக்கும் (தனிப்பட்ட ஆன்மாக்கள்) இடையேயுள்ள தொடர்பைக் குறித்துநாம் இப்போது பார்க்கப்போகிறோம். ஏற்கெனவே சொல்லியபடி பிரம்மமே முடிவான பேருண்மை. அது ஒன்றே ஆயினும் பலவாகத் தோன்றுகின்றன. உதாரணத்திற்கு சூரியனை எடுத்துக் கொள்வோம். கோடானுகோடி கதிர்கள் சூரியனிலிருந்து தானாகவே விடுபட்டுப் புறப்பட்டு அகில வெளி முழுவதையுமே மூடிக் கொள்கிறது. இந்த ஒளிக்கதிர்கள் எண்ணற்ற பொருள்களின் மீது விழுகிறது. அவைகளில் சில பளிங்குத் தன்மை கொண்டவை. வேறுசில மென்மையுடையவை. மற்றும் சில சற்றே மென்மையானவை. சில கரடு முரடானவை. வேறு சில அதிகக் கரட்டுத்தனம் உடையவை. இவை முறையே சூரிய பிரதிபிம்பத்தை மிகத் தெளிவாகவும், சற்றே தெளிவுட

னும், மந்தமாகவும், குழப்பத் தோற்றத்துடனும் பிரதிபலிக்கின்றன. அவற்றில் சில பிம்பத்தைப் பிரதிபலிப்பதே இல்லை. சூரியனின் இந்தப் பிரதி பிம்பங்கள் தனித்தனியானவை போல் தெரிகின்றன. ஒரு குழந்தை இந்த பிம்பங்களை பல சூரியன் களாக நினைத்துக் கொள்கிறது. வயதில் பெரியவ ருக்கு இது ஒரே சூரியனுடைய பிரதிபலிப்புகள் தான் என்று புரிகிறது.

அது போலவே அறியாமையுள்ள ஒரு மனிதன் பிரம்மனை அறிவதில்லை. அவன் ஜீவர்களை தனித்தனி உயிர்களாகவே நினைத்துக்கொள் கிறான். ஆனால் ஒரு ஞானி எங்கும் எதிலும் பிரம்மனையே காண்கிறார். பிரம்மமே காரணங் களுக்கெல்லாம் காரணன். ஒவ்வொரு உயிரினு டைய உயிர்த் தத்துவமும் அதுவே. அது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம். ஒவ்வொரு உயிரிலுமுள்ள தூய உயிர்ச்சாரமும், உள்ளுறையும் உயிரும் பிரம்மமே. இந்த முடிவேயில்லாத உயிர்ச் சாரமும், தன்னில் தானான உயிர்ச்சார மகாசமுத் திரமும் எங்கும் எதிலும் நிறைந்து மிக சூக்குமத் தன்மையுடன் அகிலம் முழுவதும் நிறைந்துள்ளது.

உயிர்ச்சாரமில்லாத பொருள் எதுவும் கிடையாது. அணுவுக்குள் உயிராக இருப்பதுவும் இந்த உயிர்சாரமே. மின்னணுக்கள், உயிரணுக்களின் இரகசியங்கள் இதற்குத் தெரியும். ஆனால் இந்த உன்னத உயிர்ச்சாரம் பல்வேறு பொருள்களில் பல்வேறு விதமாகத் தோன்றி வெளிப்படுகின்றன.

சூரியனுடைய ஒளி மிகவும் துல்லியமானதொரு பெரிய கண்ணாடியில் பட்டதும் அதன் பிம்பத்தைத் தெளிவாகக் காட்டுவது போல, அதே ஒளி தெளிந்த நீர்ப் பரப்பின்மேல் படும்போதும் அதனுடைய பிரதி பிம்பத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் கரடான கருங்கல்லின்மீது பட்டதும் அதன் பிம்பம் தெரிவதில்லை. இதைப் போன்றே உன்னத உயிர்ச்சாரம் மனிதர்கள், மிருகங்கள், செடிகொடிகள், தாதுப் பொருள்கள் போன்ற பல்வேறு உயிர்களின்மீது பட்டு பலதரப்பட்ட தன்மைகளுடன் பிரதிபலிக்கிறது. ஒரே தன்மையுடைய உயிர்ச்சாரம் பல்வேறு பொருள்களிலும், உயிர்களிலும் வெளிப்படுகிறது. ஒவ்வொரு உயிரிலும் இணைந்துள்ள சிந்திக்கும் மனம், பகுத்தறியும் புத்தி, உணர்வு பெறும் அகந்தை, தனித்து இயங்க நினைக்கும் ஆசை, புலன்களை இயக்கி அனுபவிக்கச் செய்யும் உள்ளம் அனைத்தும் ஒரு தனி உயிராக வளரும் போது அதன் பேருண்மை இயல்பையும், தான்வந்த மூலத்தையும் மறந்து விடுகிறது.

தனிப்பட்ட ஆன்மா உயிருள்ள உடலின் எஜமானன்.

அது தனக்கான ஒளியையும், உயிரையும் உன்னத உயிரிலிருந்து அல்லது பிரம்மத்திலிருந்தும், மனத்திலிருந்தும் பெறுகிறது. திருப்பிச் சொன்னால் அதற்கான ஒளியையும் உயிரையும் சீவனிலிருந்து (தனிப்பட்ட ஆன்மாவிலிருந்து) பெறுகிறது. மனமே புத்தியாகவும், உள்ளம்,

அகந்தை, (மனக்கோப்பு) ஆகவும் இயங்குகிறது. மேலும் மனமே தூல, சூக்கும புலன்களை இயக்கி இந்த அகிலத்தின் முழு விவரத்தையும் தெரிந்து கொள்கிறது. மனத்தின் தூய்மை, சூக்குமத் தன்மை, ஒருமுகப்பாடு பெற்ற ஒருவருக்கு ஜீவாத்மாவின் காட்சி தெரிகிறது. சமாதியில் பிரம்மத்தை அறிகிறார்.

மனத்தின் தூய்மையற்ற தன்மை புலன்போக அனுபவங்களில் ஈடுபடுத்துகிறது. எவ்வளவுக்கெவ்வளவு புலன் போக அனுபவங்களில் மூழ்கித் திளைக்கிறானோ அவ்வளவும் பேருண்மையை காணும் நிலையிலிருந்து வெகுதூரத்துக்கு விலகிப் போகிறான். அதுபோன்ற ஒருவனுடைய மனம் அதிக அளவில் மாசற்று அழுக்கடைகிறது. அத்தகையவன் பந்தத்தில் அகப்பட்டு இருளில் மூழ்கித் தவிக்கிறான். எண்ணற்ற ஆசைகளும், புலன் போகங்களும் மனோசக்தியைச் சிதறடித்து ஒருமுகப்படும் வலிமையை இழக்கச் செய்கிறது. இந்த அழுக்கடைந்த நிலைமையையும், ஒருமுகப்படுவதின் வலுவிழப்புமே பந்தத்திற்கும், சொல்லொணா வேதனைகட்கும் காரணமாகின்றன.

ஒரே பிரம்மம் பல சீவர்களாவது (ஆன்மாக்களாவது) எப்படி என்பதை விளக்க வேறொரு உபமானத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு உயிருள்ள உடலில் ஒரு ஆன்மா, ஒரு மனம்—அதோடன்றி எண்ணற்ற மிகச்சிறிய உயிரணுக்கள் உள்ளன. ஒவ்வொரு உயிரணுவும் மற்றதிலிருந்து வேறு

பட்டது. நமது உடலுக்குள் நாள்தோறும் இத்தகைய கோடானு கோடி சின்னஞ்சிறு உயிரணுக்கள் பிறக்கின்றன ஒவ்வொரு நாளும் இதே போல் உடலிலுள்ள கோடானுகோடி உயிரணுக்கள் இறக்கின்றன. இந்த கோடானுகோடி சிறிய உயிரணுக்கள் அவற்றுக்கான உயிரையும் ஒளியையும் ஆன்மாவிலிருந்தும் மனத்திலிருந்துமே பெறுகின்றன. மேலும் அவை தனித்தனி உயிர்களாகவே தோன்றுகின்றன. ஒரே ஆன்மாவும் ஒரே மனமும் சேர்ந்து எண்ணற்ற உயிரணுக்களுக்கு எப்படியோ, அப்படியே பிரம்மமும் பரவெளி மனமும் கோடானு கோடி உலகங்கள், அவற்றில் வாழும் உயிர்களுக்கும் ஆகும்.

சீவாத்மாவும் (உயிரும்), மனமும் இன்றி உடலிலுள்ள எண்ணற்ற உயிரணுக்கள் ஒரு கணங் கூட உயிரோடு இருக்க முடியாது.

மரணம் சம்பவிக்கும்போது அல்லது உயிர் உடலைவிட்டுப் பிரியும்போது இந்த உயிரணுக்களின் நிலை என்ன ஆகிறது என்பது நமக்குத் தெரியும். இதே போல இந்தப் பரந்த அகிலத்திற்கும் அதில் வாழும் எண்ணற்ற உயிர்களுக்கும் பிரம்மமே உயிர்த் தத்துவமாக மூடி இருக்கிறது. உயிர்களில் உயிர்ச்சாரமாகவும் உறைந்துள்ளது. ஆக உண்மையில் இருப்பது ஒன்றே ஒன்றுதான்! பலவன்று!

ஒரே ஒரு 'பேருண்மைப் பொருள்' தான் உண்டு. அந்தப் பேருண்மைப் பொருளையே

பிரம்மம் அல்லது கடவுள் என்கிறோம். இதுவே முடிந்த துணிபு!

பிரம்மம் நிரந்தரமானவர். முடிவற்றவர். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர். அசைவற்றவர். மாற்றமற்றவர், பிறப்பற்றவர், வளர்ச்சியற்றவர். மரணமற்றவர். ஆண் பெண் பாகுபாடற்றவர். பிரம்மம் தன்னிலிருந்து இந்த அகிலத்தைப் பரிணமிக்கிறது. மீண்டும் இந்த அகிலம் முழுவதும் வியாபித்து அதனுள் இருக்கிறது.

பிரம்மம் இன்றி ஒரு சிறு துரும்பும் இல்லை. சமாதி நிலையில் ஒருவர் ஒரே ஒரு அகண்டப் பொருளையே எங்கும் காண்கிறார். இரண்டாவது என்பதற்கு இடமே இல்லை. சமாதி நிலை எய்தும் வரைக்கும் எண்ணற்ற உயிர்களைக் கொண்ட இந்த உலகம் உண்மையாகவே தோன்றுகிறது. அதை ஒரு சாதாரணனால் உணர முடியாது. நிர்விகல்ப சமாதி என்பது ஒரு ஒளிக்கதிரை அதன் மூல இடத்திற்கே திருப்பிக் கொண்டு செல்வது போன்றது. சூரியனிலிருந்து ஒரே ஒரு ஒளிக்கதிர் வெளிப்பக்கம் வந்தவுடன் அது சூரியனிலிருந்து வேறுபட்டதாகவே அறியாமை காரணமாக ஒருவன் நினைக்கிறான். ஆனால் அது மீண்டும் திரும்பச் சென்று சூரியனில் இணையும் போது சூரியனோடு ஒன்றாகி விடுகிறது. அதே போல் ஒரு தனிப்பட்டவரின் மனம், உள்ளம், புத்தி, அகந்தை, சித்தம் எல்லாமே ஆன்மாவில் ஒன்றுகின்றன. ஆன்மா பிரம்மத்தில் ஒன்றி சமாதி எய்துகிறது. அப்போது மோட்சம் அல்லது வீடு

பேறு சித்திக்கிறது. இதை வேறு வகையில் கூறு வோமெனில் ஒருவர் அந்த நிலையில் தன் பேருண்மை இயல்பை உணர்கிறார். அவரோடு கூடவே வந்த அறியாமை அகன்று விடுகிறது.

ஒரே ஒரு ஒளிக்கதிர் பின் நோக்கிப் போய் சூரியனில் ஒன்றிய பிறகும் எண்ணற்ற ஒளிக் கதிர்கள் அகிலத்தில் இருக்கத்தான் செய்கின்றன. அதேபோல் ஒருவர் நிர்விகல்ப சமாதி அல்லது வீடு பேறு எய்தினாலும், கோடானு கோடிப் பேர் சம்சாரத்தில் (பிறப்பு, வளர்ச்சி, அழிவு, மரணம் உடைய இந்த உலகில்) உழன்று கொண்டிருக்கிறார்கள். 'நிர்விகல்ப சமாதி மட்டுமே வாழ்வின் புதிரை விடுவிக்கும்' — வேறெதுவும் உதவாது.

சமாதி நிலை எய்திய பிறகு உயிருடன் இல்லாத காலமே இல்லையென்பதையும், உயிர் தோன்றாமல் இருக்கும் காலமும் இல்லை என்ப தையும் ஒருவர் உணர்கிறார். 'ஆன்மாவே தான்!' என்னும் போது அவர் தூய்மையானவர். ஒழுக்க சீலர். சுதந்திரமானவர்.

'தளைப்பட்டோம்' என்ற கருந்து'ஒருமாயை' 'அழுக்கு நிறைந்த மனம்.' 'அகந்தையின் நிழல் உருவம்'!

# 4. சாத்திரங்கள்

ஒவ்வொரு பெரிய மதத்திற்கும் அதை நிறுவிய நிறுவனர் (நிறுவனர்கள்) உண்டு. அந்த மதத்திற்கென தனி சாத்திர நூல் உண்டு. அந்த மதச் சீடர்களால் அந்தச் சாத்திர நூல் புனிதம் மிக்கதாகப் போற்றப்படும். இந்தப் புனித சாத்திரங்கள் பல்வேறு மதங்களை நிறுவிய மகான்களின் கொள்கைகளும் போதனைகளும் உட்கொண்டதாக இருக்கும். இந்த மத நிறுவனர்கள் பல்வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுவர். அதாவது கடவுளின் அவதாரம், தூதுவர்கள், தேவதைகள், புத்தர்கள், கிருத்துவர்கள், தீர்த்தங்கரர்கள், துறவிகள், இருடிகள் என்று. எந்தப் பெயர் கொண்டு இவர்களை அழைத்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த மகாபுருடர்கள் எல்லோருமே ஞானிகள். அதாவது அவர்கள் நிர்விகல்பசமாதி பேறு பெற்றவர்கள். இவர்கள் பொதுவில் சீவன் முக்தர்கள் (சுதந்திரர்கள்) என்று அழைக்கப்படுவர். அவர்கள் அருளிய ஞானமொழிகள் அவரவர் சீடர்களால் ஒன்றுதிரட்டப்பட்டு புத்தகங்களாகச் சேர்க்கப்பட்டு சாத்திரங்களாயின.

எல்லா மதங்களுமே அவர்களுடைய புத்தகங்கள் (சாத்திரங்கள்) அழியாதவை என்று கூறும். கடவுளா லேயே நேரில் அருளப்பட்டவை என்றும், வேறு சில வாக்கு தேவதைகளால் கூறப்பட்டவை என்றும் அவற்றைப் போற்றுகின்றன. அவற்றை எப்படிப் போற்றினாலும் நாம் அதிலுள்ள உண்மை வாக்கு களின் சாரத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். வெளிப் படையாகத் தோன்றும் பொருளில் அவற்றை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது.

இவற்றின் உள்நோக்கமாவது பிரம்மத்தை அறிந்தவர் பிரம்மமாகவே ஆகிறார் என்று அவற் றில் கூறப்பட்டுள்ளது. உயர்மட்ட கடவுளுணர்வை எய்திய ஒருவரோ அல்லது சீவன் முக்தரோ கடவுளில் வாழ்ந்து கடவுளுக்காகவே இயங்குகிறார். அவர்களின் உடல்புலன்கள் உருவில் நடமாடினா லும் மாசற்ற அகந்தையுணர்வுடன்தான் செயல் படுகிறார். அவர் மனத்தின் பெரும்பகுதி இருபத்தி நான்கு மணி நேரமும் கடவுளிலேயே ஆழ்ந்திருக் கிறது. வேறு விதத்தில் சொல்வோமெனில் ஒரு சீவன் முக்தர் துரிய நிலையில் (ஆழ்நிலைத் தியான நிலையில்) எந்நேரமும் வாழ்கிறார். அப்படிப் பட்டவர் பன்மையில் ஒருமையைப் பார்ப்பவர்.

மனம் மிகச் சூக்குமமானது. அதற்கென தனி யாக வண்ணமோ, உருவமோ கிடையாது. ஆனால் அது காணும் பொருளின் வண்ணத்தையும், உருவத் தையுமே பெறுகிறது. 'மனம் இடையறாது பிரம்மத் திலேயே இலயித்திருப்பதால் அது பிரம்மமாகவே

ஆகிவிடுகிறது. பிரம்மத்திற்கும் பிரம்மஞானிக்கும் (சீவன் முக்தனுக்கும்) இடையில் வேற்றுமை கிடையாது. ஏனெனில் அவர் தொடர்ந்து தன்னை பிரம்மத்துடனேயே எந்தவித தன்னுணர்வுமின்றி இணைத்து வாழ்கிறார். இந்த அர்த்தத்தில் ஒவ்வொரு சாத்திரமுமே கடவுளின் வாக்கு எனவும் அல்லது அருள்மொழிகள் எனவும், கடவுளால் நேரில் அருளப்பட்டவை எனவும் கொள்ளலாம்.

இரண்டாவதாக, பல்வேறு மதங்களின் சீடர்கள் அவரவர் சாத்திரங்களே மேலானவை— அழிக்க முடியாதவை எனச் சொல்லிக் கொள்கிறார்கள். அச்சடிக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட சாத்திரங்கள் என்பதல்ல அதன் பொருள். அந்த நூல்களிலுள்ள ஞானமொழிகளும் உண்மை வாக்குகளுமே அழிக்க முடியாதவை என்பதேஅதன் பொருள். 'பேருண்மை என்பது எப்பொழுதும் பேருண்மையே! எந்தக் கால யுகத்திலும் அது மாற்றமடைவதே இல்லை. ''இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு''—இந்த விடை எந்தக் காலத்திலும் எந்தச் தேசத்திலும் ஒரே மாதிரிஇருக்கும். இதுபோன்றபேருண்மைகளே சாத்திரங்களில் பகரப்பட்டுள்ளன.

எல்லா சாத்திரங்களுமே நான்கு பாகங்கள் கொண்டவை.

சுருதிகள் (தத்துவம்)

ஸ்மிருதிகள் (பிறப்பிலிருந்து இறப்பு வரை சீடர்களால் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நன்ன

டத்தை, நெறிமுறைகளாகும்) புராணங்கள் (தெய்வீ கக்கதைகள்) சடங்குகள்.

முதலில் கூறிய நான்கு பாகங்களில் 'தத்துவம்' என்பதே என்றும் மாறாமலிருப்பது.

ஸ்மிருதிகள் (நெறிமுறைகள்) காலத்துக்கும் தேசவர்த்தமானங்களுக்கும் ஏற்ப மாறிக் கொண்டே இருப்பவை.

புராண இதிகாசங்கள் கடவுள்கள், தேவதைகள், ஞானிகள் போன்றவர்களின் வாழ்க்கைச் சரித்திரங் களைக் கூறுவன. இந்தக் கதைகள் சிலசூக்குமமான உண்மைகளை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக விளக்கப்படு வன. கடைசியில் சடங்குகளைப் பார்ப்போம்.

அவை கடவுளை வழிபடுவதற்கான நோன்பு, விரதம், விழா போன்றவையும், மந்திரங் களும், யந்திரங்களும் பொறிக்கப்பட்ட தகடுகளை வழிபடுதலும் ஆகும். இந்தத்தகடுகளின் சின்னங்கள் தாந்திரீக முறையிலான கோணங்கள் வெளிப்படை யாகவும், மூடு மந்திரமாகவும் உபயோகிக்கப்படு பவை.

முடிவான பேருண்மை ஒன்றே ஒன்றுதான். பல்வேறு மதங்களும், அதன் நிறுவனர்களும் இந்த ஒரே பேருண்மையை அவரவருக்கான பல்வேறு மொழிகளிலும் பலதரப்பட்ட வழிகளிலும் விளக்கி யுள்ளனர். எந்த மொழியில் பேசினாலும், எந்த முறையில் பிரச்சாரம் செய்தாலும் 'பேருண்மை'

என்பது ஒன்றே. எப்படியும் இந்தப் பேருண்மையை அடைவதற்கே பலதரப்பட்ட பல்வேறு வழிகள் காட்டப்பட்டுள்ளன. ஆனால் 'முடிவான பேருண்மை' என்பது ஒவ்வொருவருக்கும், ஆண் பெண் அங்கங்களுக்கும் பொதுவான ஒன்று. எந்த ஒரு தேசமோ, எந்த ஞானியோ, எந்த இனமோ, எந்த சித்தாந்தமோ, எந்தக் கொள்கைப் பிரிவோ இந்தப்பேருண்மைமுழுக்க முழுக்க தனக்கே சொந்த மானது எனச் சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் யார் ஒருவர் நம்பிக்கையுடன் தூய நிலை யான கொள்கைப் பற்றுக் கொள்கிறாரோ, அவரால் மட்டுமே இந்தப் பேருண்மையை எய்த இயலும். அதன் மூலம் சம்சாரத்திலிருந்து (பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற சகடத்திலிருந்து) விடுதலை பெற முடியும்.

உலகிலுள்ள பல்வேறு சாத்திரங்கள் என்ன கொள்கையைப் பரப்புகின்றன என்பதை இப்போது பார்ப்போம்.

பொதுவாக இருக்கும் ஒன்றே ஒன்று என்ன வெனில் அவை எல்லாமே கடவுளும், ஆன்மாவும் உண்டு என்பதை முதலில் ஒப்புக் கொள்கின்றன.

இரண்டாவதாக, அவை அனைத்துமே இவ்வாறுள்ள கடவுளும், ஆன்மாவும் நீக்கமற நிறைந்திருப்பவை என்பதையும் ஒப்புக் கொள் கின்றன.

மூன்றாவதாக அவை எல்லாமும் வீடுபேற்றையும் அல்லது மோட்சத்தையும் ஒப்புக் கொள்கின்றன. பந்தத்திற்கு பாபமே காரணம். நன்னெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து ஒழுக வேண்டும். மனக்கட்டுப்பாட்டைப் பயில வேண்டும். இவற்றின் மூலம் மனத்தைத் தூய்மைப்படுத்தி வீடுபேற்றை எய்த வேண்டும் என்பவற்றையும் அவை போதிக்கின்றன. எல்லா மதங்களுமே ஒழுக்கசீலத்திற்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றும்படி வற்புறுத்துகின்றன. சுருங்கச் சொல்வோமாயின் எல்லாச் சமயங்களும் நன்னடத்தைக்கான விதிமுறைகளின் அடித்தளத்தின்மீதே அமைக்கப்பட்டுள்ளன.

எல்லா மதங்களுமே மறு பிறவியையும், கர்ம பலதனையும் (வினையும் அதன் விளைவும்) ஏற்றுக் கொள்கின்றன.

அனைத்துச் சமயங்களும் மக்களைக் காக்க மகான்கள் தோன்றுவதையும் ஒப்புக்கொள்கின்றன. அதாவது இந்த மகான்களை இந்து மதம் 'அவதார புருடர்கள்' எனவும், புத்த மதம் 'புத்தர்ாள்' போதி சத்துவர்கள் என்றும், ஜைன மதத்தவர், தீர்த்தங்கரர்கள், அர்வாதர்கள்' எனவும், இஸ்லாமியர் 'குதூப்' என்றும், யூத மதம் 'பிராபெட்' என்றும், கிறித்துவ மதம் 'மெஸ்ஸையர்' எனவும், ஜாரதிருஷ்ட மதம் 'சோஷியன்ட்ஸ்' எனவும் விளம்புகின்றன.

பல்வேறு சமயங்களுமே ஒரு குருவின் (ஆசானின்) தேவையை வற்புறுத்துகின்றன. அந்த சமயங்கள் மந்திர ஜபம் (ஜபம், தவம், தியானத்துக்கான கடவுளின் புனித நாமம் உச்சரித்தல்),உருவங்களை ஒப்புக் கொள்கின்றன. இவை எல்லாமே எல்லா சமயங்களுக்கும் பொதுவானவை.

# 5. சாத்திரங்களின் சாராம்சம்

"உலகிலுள்ள முக்கிய மதங்களாவன: இந்து மதம், ஜைனமதம், புத்தமதம், ஜோராதிஷ்டமதம், சீக்கிய மதம் இந்தியாவில் உள்ளவை.

தாயிசம், கன்பூஷிய மதம் சைனாவில், ஜப்பானில் ஷிண்டோ மதம்; மத்திய ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் இஸ்லாமிய மதமும் சூபி மதமும் உள்ளன. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் யூத மதமும், கிறித்துவ மதமும் உள்ளன. இந்த அனைத்து சமயங்களிலும் சில ஒருநிலை கொள்கையையையும், வேறு சில இருநிலை கொள்கையையும் பின்பற்றுகின்றன. அதாவது, சில அத்வைதத்திற்கும் (ஒரு நிலைக்கும்), மற்றும் சில துவைதத்திற்கும் (இருநிலைக்கும்) முக்கியத்துவம் அளிக்கின்றன. ஆயினும் ஒவ்வொரு சமயமும் முதலில் இருநிலையில் துவங்கி அத்வைதத்தில் முடிவதைக் காணலாம்."

## 1. இந்துமதம்

இந்தோ ஆரியர்களின் மதம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அதாவது சனாதன

தர்மம் (புராதன நீதி நெறிமுறைகள்); வேத தர்மம், இந்து மதம் போன்றவை. இந்தமதத்தின் சாத்திரங்களை வேதங்கள் என்று கூறுகின்றனர். அவை நான்கு, அதாவது ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகும். ஒவ்வொரு வேதமும்நான்கு பாகங்களாக உள்ளன. மந்திரங்கள் (தோத்திரங்கள்),பிரமாணங்கள்(சடங்கு முறைகள்), ஆரண்யகங்கள் (வழி முறை விதிகள்) உபநிடதங்கள் (தத்துவம்).

மந்திரங்கள் (தோத்திரம்) உலகாயத ஆன்மிக உயர்வுக்காக தேவ தேவியரை போற்றும் துதிகள்.

பிரமாணங்கள், யாகம் போன்ற சடங்குகளின் விளக்கம் ஆகும். ஆரண்யகங்கள் வானப்பிரஸ்தர்களுக்கான விதிமுறைகளும், நெறிமுறைகளும் (இல்லறத்தைத் துறந்து சந்நியாசிகளாக வாழ முற்படுபவர்களுக்கானவை). வேறு வகையில் சொல்வோமாயின் ஆரண்யகங்கள் யாக சடங்குகளுக்கான தத்துவ விளக்கங்கள்.

உபநிடதங்கள் வேதங்களின் தத்துவ பொருளைக் கொண்டுள்ளவை. தத்துவங்கள் என்பது அவை பேருண்மை அல்லது மெய்ப் பொருளைப் பற்றிய விசாரம். ஆனால் புத்தக அறிவைக் கொண்டுணருவதைப் போலல்லாமல், அவை 'உண்மையான முடிவு இது' என்று நிர்ணயித்துக் கூறும் விடைகள். அவை வெளிப்படுத்தும் உண்மைகள் வெறும் ஏட்டளவிலானதல்ல. நவீன

விஞ்ஞான முன்னேற்றத்தினால் பாதிக்கப்படுபவை அல்ல. ஆனால் அவை நிர்ணயிக்கப்பட்டவை. இதுவே முடிவு என்று நிச்சயித்துக் கூறப்பட்டவை. அவை மேற்கோள்களாகக் கொள்ளப்பட்டவை. உதாரணங்களாக விளக்கத் தக்கவை. உலகாயத வாழ்வில் மாறிக் கொண்டே வரும் உண்மைகளை ஏற்காத பேருண்மை நிலையைக் கொண்டவை. ஆனால் அவை உயிர்த் தத்துவத்தின் எல்லாக் கூறு களிலும், உயிர்ச்சாரத்தின் இயல்பிலும் வேரூன்றி நிலைத்து நிற்பன.

உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள போதனைகள் 'வேதாந்தம்' எனக் கூறப்படு கிறது.(வேதத்தின் முடிவு அல்லது ஞான காண்டம்) வேதாந்தம் தன்னுள் துவைதத்தையும் (இருநிலை) விசிஷ்டாத்வைதத்தையும் (தனித்தன்மை பெற்ற இருநிலை), அத்வைதத்தையும் (ஒரு நிலை, இரு நிலையற்றதன்மை) அடக்கியுள்ளது. அனைத்து கருத்துகளும் கொள்கைகளும் உள்ளடக்கிய வேதாந்தம்இந்து மத சாத்திரங்களை உருவாக்கி யுள்ளன.வைதிக தத்துவங்களுக்கான விதிமுறைகள் எல்லாமே அவற்றுக்கு அடிப்படை. வேதாந்தம் அனைத்திற்கும் இசைந்து வருவது. அது எல்லா இன மதங்களுக்கும் இடமளிப்பது இவ்வுலகில் எந்தவித பிரிவினரிடமும் விரோதம் பாராட்டுவ தில்லை.

கடவுளின் எல்லா அவதாரங்களையும். தூது வர்களையும், அருளாளர்களையும், கட்டிக்காத்து

உணக்குவிக்கும் ஒரே உயிர்த் தத்துவமாக இருப்பது வேதாந்தம்.

வேதாந்தம் அனைத்து ஆன்மாக்களின் தெய்விக உயர்வில் நம்பிக்கை கொண்டுள்ளது. பல்வேறு சமயங்களையும் அவரவர் சுவை, போக்கு, கருத்துகளுக்கு ஏற்ப அவரவர் விரும்பும் வழியில் செல்வதைப் பாராட்டுகிறது.

அது பல்வேறு மதங்களின் பல்வேறு தத்துவ போதனைகளின் சீடர்களை, அவரவர்களுக்கான தனித்தன்மையைப் போற்றிப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்கிறது. அதே சமயம் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து இணக்கமாக இருந்து மற்ற சமயங்களிலும் போதனைகளிலும் உள்ள உண்மைகளை ஏற்றுக்கொள்ளும்படியும் கூறுகிறது. வேதாந்தம் காரணத்தோடு கூடிய நம்பிக்கை யையோ மதம் தத்துவத்தையோ ஒன்றாக இணைத்து அவை விதிக்கும் தெய்வீகக் கட்டுப் பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால்தான் இறை யுணர்வு அல்லது சமாதியை எய்தலாம். இது ஒன்றே இவ்வுலகிலும் அவ்வுலகிலும் வாழ்க்கைத் தளையிலிருந்து கடைத்தேற ஒரே வழி என்று பகரு கிறது.

இந்து மதம் ஒரு குறிப்பிட்ட மகானையோ அல்லது போதகரையோ சார்ந்து இருக்கும் ஒன்றல்ல. அது ஒரு குறிப்பிட்ட சித்தாந்தமல்ல. ஆனால் பல சித்தாந்தக் கோட்பாடுகளின் பொது

நிறுவனமாகும். அதற்கென ஒரு தனித் தலைவர் இல்லை. அது மாபெரும் ரிஷிகளுடைய (ஞானிகளுடைய) ஆன்மீக அனுபவங்களின் பிரதிநிதி சபையாக உள்ளது. பல்வேறு தத்துவ சித்தாந்தங்களும் இந்து மதத்தின் சமயக் கோட்பாடும் வேதங்களையே அவற்றின் முடிவான கருத்தாகக் கொண்டுள்ளன. வேதங்களின் முடிவான கருத்துக்கு ஏற்பவும் இந்து மதம் என்ற ஒரே பொதுப் பெயரின் கீழும் பலதரப்பட்ட சித்தாந்தங்களும் தத்துவங்களும் உள்ளன. அவையாவன. நியாய, வைசேஷிகா, சாங்கியா, யோகா, பூர்வமீமாம்சை, வேதாந்தா. இந்த ஆறுவகைப் பள்ளிகளும் தத்துவத்தையே போதிக்கின்றன. இவையின்றி வேறு மதப் பிரிவுகளும் உள்ளன. அவை சைவம், வைணவம், தாந்த்ரீகம், (அன்னை சக்தியை வழிபடுபவர்கள்), சூரிய தேவனை வழிபடுபவர்கள், கணேசனை வணங்குபவர்கள்.

## கடவுளும் ஆன்மாவும்

கடவுள் அகிலம் முழுவதையும் வியாபித்து நிற்கிறார். அவர்எல்லாவற்றிலும் நிரம்பித்ததும்பும் தூய ஆற்றலையுடையவர். அவருடைய கரங்களும் பாதங்களும் எங்கும் எதிலும் உள்ளன. அவருடைய கண்களும் செவிகளும், எங்கும் எதிலும் விளங்கக் காணலாம். அவர் உலகிலுள்ள எல்லாவற்றிலுமே ஊடுருவி நிற்கிறார். மனிதரெலாம் அவர் மூலமே பார்க்கின்றனர், பேசுகின்றனர்.

ஆனால்,

மனிதர்கள் பேசினாலும், கேட்டாலும், பார்த்தாலும் உண்மையில் அவரை கண்டதே இல்லை. அதிசயிக்கின்றனர். ஆனால், புரிந்து கொள்வதில்லை. பார்க்கிறார்கள். அவர்கள் பார்த்ததில்லை. அறிந்திருக்கிறார்கள். அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. ஞான ஒளி பெற்ற மகான்களின் கண்கள் மட்டுமே அவரைக் காண்கின்றன. ''ஓயாமல் சுழன்று கொண்டிருக்கும் உலகம் முழுவதுமே என்னில் சிறிதளவே! எஞ்சிய என் தோற்றம் பேரமைதியில் நிலைத்திருக்கிறது. யார் என்னை உள்ளார்ந்த அன்புடன் நேசிக்கிறார்களோ அவர்கள் என்னிலேயே உள்ளனர். நானும் அவர்களிடம் எப்போதும் வாழ்கிறேன்.''

உலகுக்காக கடவுள் எந்த ஒரு பிரதிநிதி சபையையோ, சமயக் கோட்பாட்டையோ படைக்கவில்லை. செய்கைகளின் பலனில் தன்னை இணைத்துக் கொள்வதில்லை. அகிலத்தின் அறியாமையே இவை அனைத்தையும் செய்கிறது. அவர் எதிலும் குற்றம் குறையைக் காண்பதில்லை. மெய் ஞானம் அஞ்ஞானத்தால் மூடப்பட்டுள்ளது. அதனாலேயே மனித இனத்தவர் குழம்பி விடுகின்றனர். ஆனால் ஆன்மீக ஞானத்தால் அறியாமையை அழித்து விட்டால், இந்த ஆன்மீக ஞானம் தேஜோ மயமாகச் சுடர் விடும் கதிரவனைப்போல் பேரான்மாவின் காட்சி கிடைக்கும்.

உயிர் நிரந்தரமாக உள்ள கடவுளின் தத்துவ மாகும்.

லில் உள்ள உயிர் ஆன்மாவின் உயிர்ப் புக்கு இயைந்து இயங்குவது. இந்த ஆன்ம உயிர் இந்த உலகாயத உயிருக்கும் அப்பாற்பட்டு உள்ளது. உயிர்ச்சாரமின்றேல் அகிலம் நமக்குத் தெரியாது; ஆனால் ஆன்மாவுக்குத் தெரியும். ஏனெனில் ஒருவர் தான் உயிருடன் இருப்பதை, தன்னை இல்லை என்று மறுக்க முடியாது அல்லவா? பேரான்மா ஒவ்வொரு உடலிலும் தங்கியுள்ள போது அதை ஜீவாத்மா அல்லது ஆன்மா என்று சொல்லுகிறோம். ஆன்மா மண் அல்ல; நீர் அல்ல; நெருப்பு அல்ல; காற்று அல்ல; ஆகாசமும் (வெளியும்) அல்ல! ஆனால் அது இவை அனைத் துக்குமான சாட்சியாக உள்ளது. தன்னில் தானாக உள்ள உயிர்ச்சாரமும் இதுவே. இந்த ஆன்மா எந்த ஒரு சமயமோ ஜாதியோ, நிறமோ, இனமோ, இனப் பிரிவையோ சார்ந்தது அல்ல. அது பந்த மற்றது. நல்லதுங் கெட்டதும், இன்பமும் துன்பமு மானவை மனத்தைச் சார்ந்ததே யொழிய ஆன் மாவினுடைய தல்ல.

ஆன்மா எதையும்செய்வதில்லை. அனுபவிப்பதும் இல்லை. அது சர்வ சுதந்திரமானது. இந்த அகிலம் முழுவதும் குடி கொண்டுள்ள தூய உயிர்ச் சாரமும் பேரானந்தமும் ஆகும் அது. ஆன்மா ஒரு சாட்சி. எங்கும் நிறைந்திருப்பது. நிலையானது.

ஒன்றேயானது. சுதந்திர மானது. அறிவு பூர்வ மானது. சுயஜோதியானது. சலனமற்றது. பந்த மற்றது. ஆசையற்றது. அமைதி நிறைந்தது. ஆன்மா அகிலம் முழுவதிலும் வியாபித்து நிற்கிறது. அகிலம் ஆன்மாவில் உறைந்திருக் கிறது. ஆன்மா எதற்கும் கட்டுப் பட்டதல்ல. பேச் சற்றது. உருவமற்றது. நன்மை தீமைகளால் அசைக்க வொண்ணாதது. ஆத்திரப் படாதது. ஒரு ஜாடிக்கு உள்ளேயும் வெளியேயும் எங்கும் பரவி யுள்ள ஆகாசம் (பரவெளி) எப்படி உள்ளதோ அதேபோல் எங்கும் வியாபித்துள்ள பிரம்மம் (கடவுள்) எனும் பரிபூரணன். ஆன்மாவைப் போல் அனைத்திலும் நிரம்பியுள்ளான். ஆன்மா அமைதி யானது. மாசு மருவற்றது. இயற்கைக்கு அப்பாற் பட்டது. அறிபவன், அறிந்தவை, அறிவு இம் மூன்றும் உண்மையில் இருப்பன அல்ல. இந்த முக்கூறுகளும் அறியாமையின் விளைவால் ஆன்மா வின் மூலமாகத் தோன்றுவன தெரிந்தது என்ப தற்கு அது மாறானது. தெரியாதது. என்பதற்கு அது அப்பாற்பட்டது. ஆன்மா பந்தமற்றது. சுந்திர மற்றது; சுதந்திரமானது. இந்த இரண்டுமே மனத்தளவேயாம். இந்தக் கற்பனை; அதற்கான வலிவையும் ஆதரவையும் இழக்கும்போது எல்லாமே மறைந்து விடுகின்றன. ஆன்மா பார்க்கக் கூடியதல்ல. எதையும் தோற்றுவிப்பதும் இல்லை. வருவது, போவது என்ப தெல்லாம் ஆன்மாவிற்குக் கிடையாது. ஒப்புதல். மறுத்தல்

என்பனவும் ஆன்மாவிற்கு இல்லை: ஏனெனில் ஒப்பு தலும் மறுத்தலும் எண்ணத்தில் விளைந்தவை. ஆன்மாவோ எண்ணத்திற்கும் அப்பாற் பட்டது மகன், மனைவி செல்வம் போன்றவற்றைக் காட்டிலும் மிகுந்த பிரியமானது ஆன்மா!

ஆதியில் ஆன்மா பிரம்மமாக இருந்தது. அது அப்போது 'நான் பிரம்மம்' என்ற விவரம் மட்டுமே புரிந்து கொண்டிருந்தது. ஆன்மா காட்சி யின் சாட்சி. கேட்கும் பேரொலி. எண்ணத்தின் எண்ணம். ஞானத்தின் ஞானி. அது பசி, தாகம்: வேதனை, மயக்கம், அழிவு, சாவு அனைத்தையும் கடந்து நிற்பது, ஆபத்துக்கு உள்ளாகும் தகுதி அற்ற இடத்தில் (உடலில்) பிரவேசித்திருப்பது, ஆன்மாவே. அகிலத்தைத் தோற்று விப்பதும் அதுவே. அதுவே எல்லாவற்றையும் செய்வது: எல்லாமும் இந்த ஆன்மாவே. திரும்பவும் அதுவே அனைத்துக்கும் ஆன்மா. ஆன்மா அறிய முடியா தது. நிரந்தரமானது. அப்பழுக்கற்றது. பிறப் பற்றது. முடிவே இல்லாதது. சூக்கும வெளிக்கும் (ஆகாசத்திற்கும்) அப்பாற் பட்டது.

பிறப்பற்ற மாபெரும் ஆன்மா, புலன்களுக்கு மத்தியில் இயங்கும் அறிவுக்கு ஒப்புவமை யாக்கப் பட்டது. இது பரவெளியில் நிலைத்திருப்பது இதுவே இதயத்திலும் தங்கி இருப்பது.

இது எல்லாவற்றையும் இயக்குவது. அனைத் துக்கும் பிரபு. அனைத்தையும் ஆள்வது. அது

நல்லதைச் செய்து பெருமை பெறக்கூடிய ஒன்று மல்ல, தீயதைப் புரிந்து இழிவுக்கு உட்படுவது மல்ல. அது அனைத்துக்கும் பிரபுவாக இருப்பது; எல்லா உயிர்களையும் ஆட்சி புரிவது. அரவணைத்துக் கொள்வது. பல்வேறு உலகங்களையும் பிரித்துக் காட்டும் எல்லைக்கல். ஆன்மாவை அறிவதால் மட்டுமே ஒருவர் மகான் ஆக முடியும். ஆனால் ஆனால் ஆன்மா பார்க்க முடியாதது. அதைப் பார்த்ததே இல்லை. அது எதனுடனும் தொடர்பு உடையது அல்ல. பந்தப் பட்டதும் அல்ல. அதற்கு வேதனை கிடையாது. அதற்கு ஊறு உண்டாக்க இயலாது.

ஒரு உப்புக் கட்டிக்கு உள், புறம் என்பது இல்லை. மொத்தத்தில் அது உப்புக் கட்டி. சுவையில் முழுக்க முழுக்க அது உப்பு. இது போல் ஆன்மாவும் உள்ளும் புறமும் அற்றது. தூய அறிவுடன் திகழ்வது. அதில் எந்தவித பேத நிலையும் இல்லை. அது ஊடுருவ முடியாதது. அது வெகு தொலைவிலும் இருப்பது; மிக அருகிலும் இருப்பது. அது எல்லாவற்றின் உள்ளும் புறமும் இருப்பது. அது அசைவது, அசைவற்றது. அதாவது அது பூரண நிலையில் இருக்கும்போது அசையாமல் இருக்கிறது. கூறுபடும்போது அசைவதுபோன்றும் மாறுவது போன்றும் தோன்றுகிறது. ஆன்மா அளிப்பரியது. ஆழமானது. அதாவது படைப்புக்கும் எல்லைக்கும் அப்பாற்பட்டது. அதற்கு இரண்டு தன்மைகளுண்டு. கட்டுப் படுவது,

கட்டுப் படுத்த முடியாதது. அதனாலேயே அதற்கு இரு பேத நிலைகள் உண்டெனக் கூறுகிறோம்.

ஆத்மாவின் (உயிரின்) சக்தியைக் கொண்டே மனம் இயங்குகிறது. கண்கள் பார்க்கின்றன. காதுகள் கேட்கின்றன. இது போன்றே எல்லாம் நிகழ்கிறது. உயிரின் இயக்கம் நடைபெறுகிறது. மனம் உலகை நிரப்புகிறது. மனத்தை ஆன்மா நிரப்புகிறது. ஆன்மா எப்போதும் சுதந்திரமாக இருப்பது. அது கடந்த காலத்தாலும், நிகழ் காலத்தாலும், எதிர்காலத்தாலும் கட்டுப்படுவது அல்ல. ஆகவே அதைச் சுதந்திரமாக இயங்கச் செய்கிறோம் என்னும் விளக்கம் அறிவீனமானது அதற்கு ஒரு தளையை உண்டாக்குவது. அதனாலேயே உலகிலுள்ள ஒரு சராசரி குழப்ப வாதிக்கு மோட்சம் (வீடுபேறு) பெறுவதற்கான ஆசை இன்றியமையாததாகிறது.

கண் பார்வைக் குறைபாட்டினால் சூரியன் எப்படி பாதிப்பு அடைவதில்லையோ அதேபோல் உலகத் துன்பங்களால் ஆன்மா பாதிப்பு அடைவதில்லை. கண்ணாடியில் தன்னைக் காண்பது போலவே பிரம்மத்தை ஆன்மாவில் காணலாம். ஆன்மாவை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. புலன்களால் உணர முடியாது. கிரியைகளால் வெளிக் கொணர முடியாது. பிரார்த்தனைகளாலும் தவச் செயல் களாலும் தோற்றுவிக்க முடியாது. ஆத்மாவின் (உயிரின்) ஒளியாக உள்ள பேரறிவு நிலையை

தில்லை. ஒரு மொட்டை மரத்தைப் பார்த்து பிசாசு என்று பயப்படுபவர், அது கிளைகளற்ற ஒரு மரத்தின் அடிப்பாகம் என்று தெரிந்த உடன் பிசாசு மறைந்து விடுகிறதல்லவா?

மண்பானை கரைந்து மண்ணாவது போலவும் பேரலை நீரில் மறைவது போலவும் பொன்வளையல் உருகிப் பொன்னாவது போலவும் கடவுளில் இருந்து வந்த அகிலமும் முடிவில் கடவுளில் கரைகிறது. ஆகவே உண்மையில் கடவுளின்றி இவ்வுலகம் இல்லை. இவ்வுலகத் தோற்றம் மண்குடத்தைப் போன்றது. அதை இல்லை என்றும் சொல்ல முடியாது; உண்டு எனவும் ஒப்புக் கொள்ள முடியாது. ஒரு பொருளைக் கண்டு மனம் ஆசை யுற்றாலோ அல்லது பெருமூச்செறிந்தாலோ அதை மறுத்தாலோஏற்றுக் கொண்டாலோ அதைக் கண்டு மகிழ்ந்தாலோ கோபித்துக் கொண்டாலோ அது மனத்தில் உள்ள பந்தத்தையே காட்டுகிறது. உலகத் தோற்றத்தை உண்மை என்று நம்ப வைப்பது நமக்குள்ள ஆசையே! எல்லாவித ஆசைகளையும் உண்மையில் துறப்பவனுக்கு வீடு பேறு சித்திக்கும். ஆசை தோன்றும் இடத்தில் உலகம் தோன்றுகிறது. பற்றோ பாசமோபந்தமோ, விடுதலையோ எல்லாமே மனத்தைப் பொறுத்ததே. மனம் எல்லாவித பேத நிலைகளிலிருந்தும் விடுபடும்போது அது சமயக் கோட்பாடுகள், உலகாயதச் செல்வம், புலன்

போகங்கள் ஏன் வீடு பேறும்கூட மனத்தை விடுவித்து விடுகிறது.

எல்லா ஆசைகளையும் துறக்கும்போது உலகெனும் பெருங்கடலும் வற்றி விடுகிறது. மனிதனின் பார்வை வெற்று வெளியாகிறது பலன் கருதாத செயல்கள் தோன்றுகின்றன, அவன் புலன்கள் செயலற்றுப் போகின்றன. உலகாயதப் பொருள்களைப் பெறுவதால் அளப்பரிய ஆனந்தம் கிடைக்கிறது என்றெண்ணி விடுகின்றனர். ஆனால் உண்மையில் அத்தகைய பொருள்களின் மீதுள்ள பற்றை விட்டொழித்தாலன்றி உண்மையான ஆனந்தம் கிடைக்காது. ஏனெனில் புலன் போக அனுபவிப்பின் போது நோய் பற்றிய பயம் தோன்று கிறது, சமூக அந்தஸ்தில் கீழிறங்கி விடுவோமோ என்கிற பயம் தோன்றுகிறது. செல்வம் சேரும் போது திருடர்கள், வறுமை பற்றிய அச்சம் பற்றிக் கொள்கிறது. கௌரவத்தில் அடங்கிப் போக வேண்டுமே என்கிற அச்சம், அதிகாரத்தில் விரோதிகள்-எதிரிகள் பயம், அழகில் முதுமை பயம், சாத்திர ஆராய்ச்சியில் தர்க்கவாதி எதிர்ப்பின் பயம், கற்பு நிலையில் கேடு செய்பவர்களைப் களைப் பற்றிய அச்சம், உடலை நினைக்கும்போது மரணபயம் எனத் தொடர்கிறது.

எல்லா பயங்களையும் விரட்டி அடிப்பது துறவு ஒன்றே!

உலகம் என்பது வேறொன்றுமில்லை. உயிர்ச் சார நிலையே. உண்மையில் கடவுள் எனும் கடவுள்

மட்டுமே! உதாரணமாக விழிப்பு நிலையிலுள்ள சாதாரண மனிதனுக்கு, பெயர்களும் உருவங்களும் கொண்ட இந்த உலகம் உண்மை எனத் தோன்று கிறது. ஆனால் அதே மனிதன் கனவு நிலைக்குள் மூழ்கும்போது அது மறைகிறது. பிறகு கனவு உலகம் உண்மை எனத் தோன்றுகிறது. அதே மனிதன் ஆழ்ந்து உறங்கும்போது கனவு உலகமும் மறைந்து விடுகிறது. இதே மனிதன் 'சமாதி' எய்தி அதனால் துரிய நிலையை (ஆழ்நிலைத் தியானம்) எய்தியவுடன் விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை எல்லாமே மறைந்து விடுகிறது. அந்த மனிதன் அப்போது கடவுள் எனும் கடவுளை அகிலத்திலுள்ளஎல்லாப்பெயர்கள்,உருவங்களுக்கும் அப்பால் காண்கிறான்.

கடவுள் முதலில் மனத்தைப் படைத்தார். தன்னைத்தானே வணங்கும் நிலைக்கும் இசைந்து கொடுத்தார். ஆதியில் இந்த அகிலம் பரமான்மா எனும் அளவில் மட்டுமே இருந்தது. அவர் ஒரு துணையை விரும்பினார். தன் உடலையே இரு கூறு ஆக்கினார். அதன்பிறகு மனிதகுலம் தோன் றியது. பரமான்மா பெயர்களும் உருவங்களும் கொண்ட அகிலத்தில் பிரவேசித்தவுடன் பேதநிலை யைத் தோற்றுவிக்கிறது. அந்த இயக்கத்தை பிராணசக்தி என்றழைத்தனர். அது பேசும்போது, அதை வாக்குசக்தி என்றனர். அது பார்க்கும்போது அதைக் 'கண்' என்றழைத்தனர். அது கேட்கும் சக்தியைப் பெற்றவுடன் அதைக் காது என்றழைத்

தனர். அது சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றபோது, அதை மனம் என்றனர். இவை எல்லாமே அதன் பல்வேறு செயல்களுக்கேற்ப ஏற்பட்ட வெவ்வேறு பெயர்களாகும். மனத்தின் மூலமாகவே ஒருவர் பார்ப்பது, கேட்பது போன்றவை நிகழ்கின்றன. சிலந்தி தானே உருவாக்கும் நூலின் மேல் நகர்வது போலவும்,மின்மினி எல்லாத் திசைகளிலும் ஒளித்துளிகளைச் சிந்துவது போலவும் இந்த பரம ஆன்மாவிலிருந்து எல்லா உறுப்புகளும், அனைத்து உயிர்களும் வெளிப்படுகின்றன. பிரம்மத்திற்கு இரண்டு உருவங்கள் உள்ளன. அதாவது தூலம், சூக்குமம். அழிவது, அழிவற்றது; எல்லையுள்ளது எல்லையற்றது; விளக்கப்படுவது விளக்கஇயலாதது போன்றவை. பஞ்ச பூதங்களாகவும், இந்த அகிலமாகவும் தோன்றுவது தூல நிலை. அவற்றின் சாரமே சூக்கும நிலை. தோன்றுவது,தோன்றியது, தோன்ற இருப்பது ஆகிய எல்லாமே இந்த முடிவற்ற போரான்மாவன்றி வேறல்ல! தெய்வீக ஞானம் தோன்றியவுடன் எல்லா மாயைகளும்விலகி விடுகின்றன. அஞ்ஞானம் முடிவுற்றதும் பிறப்பு—இறப்பு அற்று விடுகின்றன. அகிலத்தின் படைப்பின் போதும், அழிவின் போதும் இருந்த அந்த ஒரே ஒரு பரமான்மாதான் அவர். அவரைவிட உயர்ந்ததோ வேறுபட்டதோ எதுவுமே இல்லை. அவருடைய சுயம் பிரகாசத்திலேயே வேறொன்றி இரண்டாவது அற்ற ஒன்றாகவே அவர்திகழ்கிறார்.

**சாத்திர உண்மைகள்**

'பேருண்மை' என்பது அகில முழுமைக்கும் பொதுவானது. எல்லாமதங்களின் பொதுச்சொத்து. அது எந்த ஒரு மகானுக்கோ அல்லது தேசத்துக்கு மட்டுமோ சொந்தமானது அல்ல. தேவையற்றவை, இடம், பொருள், சூழ்நிலைகள், காலத்துக்கேற்ப மாறுபடுகின்றன. அடிப்படை உண்மைகள் மாறுவதில்லை. மனிதகுலம் முழுவதும் ஒரே குறிக்கோளை நோக்கியே நடைபோடுகின்றன. ஆனால் அவை வித்தியாசமான, வெவ்வேறான பாதைகளில் செல்வதுபோல்தோன்றுகிறது. நாம் ஒன்றை நமக்குப் பிடித்தது, நன்மை பயப்பது என்று நினைத்து நம் அந்தரங்கக் குரலின் அனுமதியும் பெறுகிறோம். அதையே மற்றவர்களும் நல்லதென விரும்பி ஏற்க வேண்டுமென எண்ணுகிறோம். நமக்கு எது பிடித்தமில்லையோ மற்றவர்களுக்கும் அடிபிடிக்காததுஎன்று நினைக்கிறோம். மற்றவருக்கு ஏற்படும் மகிழ்ச்சி, துன்பம், துக்கம் தன்னுடையதாகக் கருதுபவரே உண்மையான யோகி. மற்ற பிராணிகளின் உயிரைத் தன் சொந்த உயிராகக் கருதுபவரே யோகி. அறிவுக் கூர்மையும், மனத் தூய்மையும் நிரம்பப் பெற்ற மனிதர்கள் தங்களை மற்றவர்கள் துதிப்பதைப் போன்றே பிறரையும் தாம் துதிப்பர். அத்தகையவர்கள் குற்றங் காணல், சிறுகுற்றங்களைப் பெரிதுபடுத்தல், பொய்பேசுதல், எதற்கும் தடையாக இருத்தல், புறம் பேசுதல், அவதூறு கிளப்புதல், புண்படுத்தும் சொற்கள்,

அவமானப்படுத்துதல் போன்றவற்றைத்தவிர்த்தல். தங்கள் சொந்த வேலைகளைப் புறக்கணிப்பவர்கள் மற்றவர்களைத் திருத்தமுற்படுவர். கருணையால் கோபத்தை வெல்லுங்கள். நல்லவை செய்து விரோ தத்தை விரட்டுங்கள். தாராளங் காட்டி கீழ்மை யைப் போக்கிடுங்கள், உண்மை, திறந்த மனங் கொண்டு பொய்மையையும், புரட்டையும் ஓட்டுங்கள். அடக்கத்தினால் டம்பத்தைத் தவிர்த்திடுங்கள். போதுமென்ற மனத்தால் பேராசையையொதுக்குங்கள். உன்னுடைய விரோதி பசித்திருந்தால் அவனுக்கு உணவளியுங்கள். அவனுக்குத் தாகமாக இருந்தால் தண்ணீர் கொடுங்கள். இதே முறையில் அவன் மனதை மாற்றுங்கள். பெண்கள், குழந்தைகள், வறியவர், அனாதைகளுக்கு உதவுங்கள்.

நேர்மையைக் கடைப்பிடியுங்கள். ஆனால் ஆதரவு காட்டுங்கள். கண்ணியத்துடன் கருணை காட்டுங்கள். வீரத்துடன் இரு. குரூரமாக இராதே. வலிமையுடன் திகழலாம். ஆனால் கர்வம் கொள்ளதே. பொறுத்துக் கொள். பிடிவாதம் கூடாது. மென்மையாக நட. கண்டிப்பு இருக் கட்டும். புனிதத்தைப் போற்று. அனைவரையும் அரவணைத்துச் செல்லுங்கள். எதையும் பரிசீலனை செய். துருவிப்பாராதே தைரியமாக இரு, அடக்கம் காட்டு. கூர்ந்து கவனித்துச் செய், மன்னிப்பு இருக் கட்டும். உண்மையுடனிரு. முடிவு செய். நியாய மாக நடந்துகொள். துணிவைக் கைவிடாதே.

பொறுமை பெருமை சேர்க்கும்.

அன்பே செல்வத்தின் அடிப்படை. பலவீனர்கள் வலியவர்களை வெற்றி கொள்ளலாம்.

அழிவுக்கு முன் அகந்தை வரும்.
வீழ்ச்சிக்குமுன் ஆணவம் பெருகும்.
கடவுளிடம் பயம் அறிவின் ஆரம்பம்.
மதவாதியாக இரு; ஆனால் மதவெறியனாக அல்ல
நல்லவனாக இரு, தன்னலக்காரனாக இராதே.
குரோத மற்ற வழியில் செல்வத்தையும், மதிப்பையும் ஈட்டு,
அனுபவி, ஆனால் குதிக்காதே.
இனிமையாகப் பேசு. கடுஞ்சொல் வேண்டாம்.
துணிவுடன் இரு. தலைக்கனம் வேண்டாம்.
தாராளமாக இரு. வீண் விரயம் செய்யாதே.
பாத்திரமறிந்து பிச்சையிடு.
துணிவுடன் உண்மை பேசு. கடுமையாக இராதே.
நட்பைப் பெருக்கிக் கொள், துஷ்டர்களோடு அல்ல.
நேர்மைக்காக துணிவுடன் போராடு.
நம்பகமான இடத்திலிருந்து கேட்டறிந்து கொள்.
உனக்காகப் பாடுபடும்போது மற்றவர்களுக்கு ஊறுநேரிடா வண்ணம் பார்த்துக் கொள்.
அறிஞர்களிடமிருந்தே எப்போதும் உனக்கான யோசனையைப் பெறு.

கயவர்களை நம்பாதே
மற்றவர்களிடமுள்ள நல்லவற்றைப் பாராட்டு.
தற்புகழ்ச்சி வேண்டாம்.
மதிப்புக்கு உரியவர்களைக் கௌரவி. அதற்காகத் தற்புகழ்ச்சி வேண்டாம்.
ஒளிவு மறைவின்றிச் சேவை செய்.
நல்லதைச் செய்; ஆனால் வெளிச்சம் போடாதே
புத்தி சாலியாக இரு. தந்திரம் வேண்டாம்.
கண்ணியமாக நடந்துகொள். குறும்புக் காரனிடமல்ல!
கடவுளை வழிபடு. ஆடம்பரம் வேண்டாம்.

அடக்கம், வெள்ளை மனம், ஊறு விளைவிக்காமை, பொறுத்தல், கண்டிப்பான நேர்மை, குரு சேவை, தூய்மை, உறுதி, தன்னடக்கம், புலன் அவா அறுத்தல், அகந்தை தவிர்த்தல், பிறப்பு, இறப்பு, முதுமை, நோய், துன்பம், பந்தமில்லாமை, தன்னலமற்று இருத்தல், மகன், மனைவி வீடு, உற்றார் போன்றவற்றுடன் பந்தமற்று இருத்தல்

எதுவரினும் மனத்தை சமச்சீராக பழக்குதல். விருப்பு வெறுப்பு இன்மை.

கடவுளைவிட்டு எப்போதும் பிரியவொண்ணா யோக நிலையுடன் கூடிய மாறாத பக்தி.

ஆன்மஞானத்தைக்கொண்டு எதையும் ஆராய்ந்தறிதல்,

பேருண்மை மெய்ஞ்ஞான முடிவை தெள்ளத் தெளிய அறிதல்.

இவை அனைத்தும் விஞ்ஞான அறிவைத் தரும் ஆன்மிகக்கோவை.

இதற்கு மாறான அனைத்துமே அறியாமை, அஞ்ஞானம்.

ஒளியின் தோற்றம், செயலில் ஊக்கம் அல்லது மயக்கம் (சத்துவ, ராஜச, தாமசம் ஆகிய முக்குணங் களின் வெளிப்பாடே) போன்றவற்றை வெறுக்காது இருப்பவர் எவரோ, அவை தோன்றாதபோது அதைக் காண வேண்டும் என்ற அவா கொள்பவர் எவரோ, எதையும் ஒரு பொருட்டாக நினைக் காதவர் எவரோ;

இயக்கமே குணங்களால் நிகழ்கிறது என்று அறிந்திருப்பினும் அவற்றுக்கு அதிக முக்கியத் துவம் தராதவர் எவரோ,

தன்னைத்தானே ஆராய்ந்தறியும் அவாவுடன் அயர்வு கொள்ளாதிருப்பவர் எவரோ,

இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாக ஏற்பவர் எவரோ,

தன்னைத்தானே அறிபவர் எவரோ,

மண்ணாங்கட்டி,கல் அல்லது பொன் கட்டியை ஒரே நோக்கில் காண்பவர் எவரோ,

விருப்பு, வெறுப்பு சூழ்நிலை மாறுபாட்டால் உறுதியுடன் நிலைத்து நிற்பவர் எவரோ,

திடமானவர் எவரோ,

கண்டனத்தையும், பாராட்டையும் சமமாகக் கருதுபவர் எவரோ,

கௌரவம், அகௌரவம்:

நண்பன், விரோதி ஆகிய மாறுப்பட்ட தன்மைகளைச் சமமாகப் பாவிப்பவர் எவரோ. தன் அறிவை எதிலும், எங்கேயும் பந்தப்படுத்திக் கொள்ளாதவர் எவரோ,

தன் இதயத்தைப் பண்படுத்தியவர் எவரோ,

ஆசைகளை விட்டொழித்தவர் எவரோ,

அவரே மேலான விடுதலைப் பேற்றின் முழுமையை எய்தியவர்.

அதாவது அவர் பிரம்மத்தை அறிந்தவர். வாலறிவின் உச்சத்தை எட்டியவர்.

## 2. ஜைன மதம்

ஜைன மதம் இருநிலைக் கொள்கையைப் பின்பற்றுகிறது. அகிலத்தில் எண்ணிலடங்காத ஆன்மாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆன்மாவும் தன்னுள் சத்து சித்து ஆனந்தம் ஆகியவற்றை அடக்கியுள்ளது என்று போதிக்கிறது. ஒரு சீவான்மா (தனிப்பட்ட ஆன்மா பாவங்கள் புரிவதன் விளைவாக

வும், அந்த ஆன்மாவின் மனத்தினுடைய கறை படிந்த அழுக்காலும் அதன் 'பேருண்மை இயல்பை' மறந்து விடுகிறது. இந்த மறதியின் பயனாக பந்த பாசமும், மறுபிறவியும் (பிறப்பு, வளர்ச்சி, அழிவு, சாவு) விளைகின்றன. ஒருவர் இவ்வுலகில் தன்னுடைய பாபச் செயல்களின் காரணமாகவே துன்பப் படுகிறார். பாபங்களை விலக்க ஒருவர் சொல், செயல், எண்ணத்தில் தூய்மையைப் பயில வேண்டும்.

மோட்சத்தை (விடுதலையை) எய்த, அல்லது ஆன்மாவின் ஆதி நிலையை அடைய நேரிய நம்பிக்கை, உண்மையான அறிவுத்தெளிவு, நன்னடத்தை ஆகியன இருக்க வேண்டும். இவைகளின்றி 'நிர்வாண நிலை' கிட்டாது; மோட்சமும் சித்திக்காது. தவறான நம்பிக்கை, அறிவுத்தெளிவு இன்மை, கெட்ட நடத்தை போன்றவை ஆன்மாவைப் பந்தப்படுத்துகின்றன.

## உண்மையான நம்பிக்கை

1. ஜைன சாத்திரங்களில் அசைக்க வொண்ணா நம்பிக்கை.

2. புலன் போகங்களுக்காக எவ்வித ஆசையையும் வளர்த்துக் கொள்ளக் கூடாது.

3. மேன்மையானவர்களிடம் அன்பும், மரியாதையும் காட்ட வேண்டும்.

4. ஜைன மதத்தைப் போற்றி வளர்த்தல் மற்ற வர்கள் கண்டனத்திற்குஉள்ளாகாமல் காத்தல். மற்றவர் அதைப்பற்றிக் கொண்டுள்ளதவறான எண்ணத்தைப் போக்க ஆவன செய்தல்.

5. மற்ற கொள்கைகளின் நிர்ணயத்தை ஏற்கத் தேவையில்லை.

6. மற்ற கொள்கையாளர்களின் கண்டனங்களைப் போக்கி, அவற்றின் விளைவுகளைக் களைய வேண்டும்.

7. அலை பாயும் மனத்தினரின் சந்தேகங்களைப் போக்க வேண்டும். அவர்களிடம் ஜைன மதத் தில் உள்ளார்ந்த நம்பிக்கையை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

8. ஜைன மதவாதிகளிடம் மரியாதையும் அன்பும் செலுத்த வேண்டும்.

9. ஜைன சாத்திரங்களின் மேன்மையை நிலை நிறுத்தல் வேண்டும்.

### உண்மையான அறிவுத் தெளிவு

1. பரதமனு யோகம் — இது தர்மத்தையும் (நேர் மையை) அர்த்தம் (செல்வம்), காமம் (ஆசை, இன்ப நுகர்வு), மோட்சம் (ஆன்ம விடுதலை) பற்றியும் விளக்குகிறது.

2. கரணானு யோகம் — இது வெளியின் கூறு களையும், காலத்தின் மாறுதல்களையும்,

வாழ்வின் நால்வகை நிலைகளையும் விளக்கி அதனால் ஒருவர் அடையக் கூடிய சூக்குமப் பயன்களைச் சொல்கிறது.

3. சரணு யோகம் — இது நன்னடத்தையைப் பற்றி விரிவாகப் பேசுகிறது.

4. திரவ்யானு யோகம் — இது தத்துவங்களைப் புரிந்து கொள்ள உதவுகிறது. அதாவது சீலன், அசீலன், நேரிய குணம், தீயகுணம், பந்தம், விடுதலை ஆகியவற்றைக் கூறுகிறது.

## நேரிய குணம்

இது இருவகைப்படும். அதாவது தூய்மை (சகல); விகல (தூய்மை குறைந்த நிலை) ஆகும். முன்னையது துறவிகளால் மட்டுமே கடைப்பிடிக்கப் படுவது. பின்னையது இல்லறத்தாரால் அனுசரிக் கப்படுவது.

'நேரிய குணம்' என்பதில் கீழ்வருபனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

அகிம்சை (கொல்லாமை, புண்படுத்தாமை)
சத்தியம் (உண்மை)
ஆஸ்தேயம் (கள்ளாமை)
பிரம்மச்சரியம் (கற்பு நெறி)
அபரிக்கிரஹம் (கபடு அற்ற தன்மை)

சீவன்களுடன் சகோதரத்துவம், எல்லா உயிர் களையும் சமமாகப் பாவித்தல், தன்னடக்கம்.

இவை அனைத்தையும் எண்ணம், சொல் செயலில் பழகிப் பயில வேண்டும்

ஒரு துறவி கீழ்வரும் ஜபத்தினையும் உறுதி யுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

கொல்லாமை — அற்ப சீலனாயினும் இதைப் பின்பற்றவேண்டும்.

பொய் பேசாமை.

கள்ளாமை, அல்லது தனக்கென இல்லாததை தனதாக்கிக் கொள்ளாமல் இருத்தல்.

கண்டிப்பான பிரம்மச்சரியத்தை (கற்பு நெறி யை)க் கைக்கொள்ள வேண்டும்.

முடிவாக அனைத்து உலகாயதப்பொருட்களின் மீது பற்றறுத்தல்,

ஜைன மதம் தன் மதத்தவரை தயையுடன் (கருணையுடன்) இருந்து அதை கடைப்பிடிக்கச் சொல்கிறது.

தயையை (கருணையை) நான்கு வழிகளில் கடைப்பிடித்து ஒழுகும்படிக் கூறுகிறது. அதாவது:

1. கருணை காட்டும் செயல்களை பிரதிபலன் பாராமல் செய்தல். நல்லவற்றை நல்லதற் காகவே செய்வது.
2. மற்றவர் வளமுடன் வாழ்வதைக் கண்டு மகிழ்தல்.

3. மற்றவர் துன்பப்படுவதைக் கண்டு இரங்குதல். தன்னால் இயன்ற உதவி புரிந்து அதை நீக்கத் தொண்டு செய்தல்.

4. தீயவர்களிடமும், குற்றவாளிடகளிடமும் இரக்கம் கொள்ளுதல்.

ஜைன மதக் கோட்பாடுகள்

''அகிம்சையே பரம தர்மம்'' :

அனைத்து உயிர்களையும், கொல்லாமையும் 'துன்புறுத்தாமையுமே உயரிய மதம் அல்லது தர்மம். பற்றற்று இருத்தலும், பாசம் நீக்குதலுமே உண்மையான அகிம்சை. (கொல்லாமை, துன்புறுத் தாமை) இவையற்றவை இம்சை.

மன்னித்து விடுவதன் மூலம் கோபத்தை அடக்கவும், பெருமையையும் டம்பத்தையும் அடக்கத் தொண்டுசெய். வெள்ளை உள்ளத்தினால் கபடு மோசம் செய்வதையும் தவிர்க்கவும்.

தன்னடக்கத்தாலும், போதுமென்ற மனத் தாலும் பேராசையைத் தவிர்க்கலாம்.

மனத்தில் சம பாவம் எற்படின் அவர் துறவிக் குச் சமமாகிறார்.

ஒருவர் கற்பு நெறியின் மூலம் பிராம்மணன் (அறிவு ஜீவி) ஆகிறார்.

ஞானத்தினால் முனிவர் ஆகிறார்.

தவத்தினால் அருளாளர் ஆகிறார். விருப்பும் வெறுப்பும் மிக்க செயலால் (கர்மா) ஏற்படுகிறது. செயலுக்கு (கர்மா) மூலகாரணம் மாயை

கர்ம வினையின் விளைவால் பிறப்பு, வளர்ச்சி, அழிவு, இழப்பு ஆகியன விளைகின்றன.

இந்தக் கர்ம வினையை, நேரிய கொள்கை, அறிவுத் தெளிவு, நன்னடத்தைகளால் நேரிட்டு அடுத்த பிறவி இன்றி முக்தியை எய்துகிறார்.

ஜைன மதம் 'படைப்பாளி' அல்லது 'கடவுள்' என்பதை ஒப்புக் கொள்வதில்லை. ஜைனர்கள் கடவுளின் பீடத்தில் தீர்த்தங்கரர்களை வழிபடுகிறார்கள். ஜைன மதத்தை பரப்பும் உண்மைத் துறவிகளே தீர்த்தங்கரர்கள்.

தீர்த்தங்கரர்கள் இருபத்து நான்கு பேர். அவர்களில் முதலாமவர் 'ரிஷபர். இறுதியில் வருபவர் 'மகாவீரர்' புத்தர் காலத்தில் வாழ்ந்த மகான்களில் மகாவீரரே முதன்மையானவர்.

தீர்த்தங்கரர்களைத் தவிர ஜைனர்கள் அர்ஹத்ஸ்ஸை (நிர்வாண நிலை எய்திய துறவிகளை வழிபடுவர்.) உண்மையில் ஜைன மதத்தில் தீர்த்தங்கரர்களேகடவுளின் இடத்தை வகிப்பவர்கள்.

## 3. புத்த மதம்

ஒவ்வொரு பேதமும் நான்கு பாகங்களைக் கொண்டது. அவை மந்திரங்கள், பிராமணங்கள்,

ஆரண்யகங்கள் ஆகும். இவை கர்ம காண்டத்தில் (கிரியைகள், மந்திரங்கள், யந்திரங்கள், யாகங்கள், யக்ஞங்கள்) அடங்கும்.

நான்காவதான ஞான காண்டம் (தத்துவம்) மறைவில் இருப்பது.

வேதங்களைப் பயில்பவர்களும், பாதுகாப்பவர்களும் பிராம்மணர்கள். புராதன காலத்தில் பிராம்மணர்கள் ஆசான்களாகவும், விதிமுறைகளை வகுப்பவர்களாகவும் இருந்தனர். அதனால் அவர்கள் எளிய, தூய, தன்னலமற்ற பற்றற்று வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் எளிய வாழ்வும், பரந்த நோக்கமும் குறிக்கோளாக இருந்தது.

பிராம்மணர்கள் தூயஅப்பழுக்கற்ற வாழ்க்கையை மேற்கொண்டதால் அவர்கள் ஆன்மத்தில் உயர்ந்திருந்தார்கள். தேசம் அவர்களுடைய ஆன்மிக வழிகாட்டுதலினால் செல்வச் செழிப்புடன் எல்லா வகையிலும் முன்னேறியது. நாளாவட்டத்தில் தேசம் செல்வச் செழிப்புள்ள நாடாகத் திகழ்ந்தது.

கடினமான ஆன்மிக நடைமுறைப் பயிற்சிகளை மேற்கொள்ளச் செல்வந்தர்கள் விரும்பவில்லை. அதனால் பணத்தைத் தாராளமாகச் சில வழித்து மோட்சத்தை எய்துவதற்கான வழிமுறைகளில் ஈடுபட்டனர். இது பிராம்மணர்களைக் கவர்ந்து, இதை ஒரு நடைமுறைப் பழக்கமாகவே மாற்றிவிட்டது.

நாளடைவில் அவர்களுடைய வாழ்வின் இலட்சியத்தை மறந்தனர். கீழ்த்தர சுகபோகங்களுக்குப் பலியாயினர். காலம் செல்லச்செல்ல இயல்பிலேயே வெகு எளிதில் பொன், பெண்ணுக்குப் பலியாயினர். தொடர்ந்து யாகங்களுக்கும், யக்ஞங்களுக்கும் (வேள்விகள்) முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கினர். இதனால் அவர்கள் யக்ஞங்கள் செய்து செல்வந்தர்களை மனநிறைவு கொள்ளச் செய்து ஏராளமான செல்வத்தைச் சேர்த்துக் கொண்டனர்.

இதன் பயன் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஞான காண்டமும் (விஞ்ஞானமும், தத்துவமும்) அல்லது உபநிடதங்களும் தானாகவே புறக்கணிக்கப்பட்டு மறைந்து போயிற்று.

கர்மகாண்டம் முக்கியத்துவம் பெற்றது. எங்கெங்கும் ஒன்று மறியாத லட்சோபலட்சம் வாயில்லா மிருகங்கள் பலியிடப்பட்டன.

ஒரு மாபெரும் சீர்திருத்தவாதி தோன்றுவதற்கான காலம் கனிந்தது. கொடிய பழக்கங்களை மாற்றுவதற்கும், தர்மத்தையும் அறவழியையும் நிலை நாட்டவும் நேரம் நெருங்கியது.

இந்த மாபெரும் தலைவரே கௌதமபுத்தர். புத்தர் கி.மு. 560ல் பிறந்தார். கி.மு. 480ல் மறைந்தார். முழுக்க முழுக்க ஞானகாண்டத்தையே (பகுத்தறிவு மதம்) போதித்தார்.

வேதங்கள், கடவுளர்களை முன்வைத்து பிராம் மணர்கள் யாக, யக்ஞங்களையே தீவிரமாக மேற் கொண்டபோது புத்தர் இவ்விரண்டையும் எச்சரிக் கையுடன் ஒதுக்கி விட்டார்.

அவருடைய சீடர்களில் சிலர் அவரிடம், 'கடவுள் உண்டா?'', ''ஆன்மா (சீவன்) உண்டா?'', ''நிர்வாண நிலை என்பது என்ன?'' என்று வினவினர். — அவர் மௌனத்தையே பதி லாகச் செயலாற்றினார்.

புத்தர் மகாசமாதி (இறப்பு) எய்திய முன்னூறு ஆண்டுகள் கழித்து அவருடைய சீடர்கள் இந்த 'மௌனத்தை'யே பெரும் உபதேசமாகக் கடைப் பிடித்தனர்.

புத்தர் தனக்கெனத் தனியாக எந்த ஒரு தனி மதத்தை வகுக்கவோ தோற்றுவிக்கவோ இல்லை. முன்னூறு ஆண்டுகள்வரை புத்தரைப் பின் பற்றிய சீடர்கள் இந்தமத,அல்லது பேத மத சீடர்களுடன் சேர்ந்தே வாழ்ந்தனர்.

அஸ்வகோசர், நாகார்ஜுனர் எனும் புத்தமத தத்துவ வாதிகள் புத்தமதத்தை தனிப்பிரிவாகச் செய்தனர். அதற்கெனத் தனித்தத்துவக் கொள்கை களை வகுத்தனர். இந்து மதத்திலிருந்து அதை விலக்கிக் கொண்டனர். நாளடைவில் யுக்தியில் சிறந்த பிராம்மணர்கள் புத்தரைப் பத்து அவதாரங் களில் (கடவுளின் மறு பிறவிகள்) ஒரு அவதார மாக்கி புத்தமதத்தை மீண்டும் இணைத்துக் கொண்டனர்.

ஸ்ரீசங்கரருடைய அத்வைத தத்துவமும், புத்தருடைய போதனைகளும் பெருமளவு ஒன்றோடொன்று ஒத்து இருந்தன.

உபநிடதங்களைக் கண்டிப்புடன் பின்பற்றுபவர்களைப் போலவே புத்தருக்கும் வேள்விகளில் நம்பிக்கை கிடையாது. வாழ்வின் மேலான வெற்றிக்கு (நிர்வாண நிலைக்கு) வெளிப்புற உதவிகளை நாடுவதிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை.

தியானப் பயிற்சி ஒன்றே வாழ்வின் குறிக்கோளை எய்துவதற்கான சரியான பாதை என்பதை அவர் வலியுறுத்தினார்.

உறுதியான பிரம்மச்சரிய நெறியுடன் (கற்பு நெறியுடன்) கூடியவாழ்க்கையேமேலானவெற்றிக்கு வழி என்றும் புகன்றார். உபநிடதங்கள் வற்புறுத்திக் கூறுவதும் இதையே. அவர் தன்னுடைய சீடர்களிடம் அவருடைய தர்மத்தை (போதனைகளை) போதிக்கும்போது தூய பிரம்மச்சரியத்தையும் போதிக்கும்படிக் கூறினார்.

வேதாந்தத் தத்துவத்தைப் போலவே புத்தரும் அவத்தையும் (அஞ்ஞானமும்), காமமுமே (ஆசையுமே) துன்பங்களுக்கும், பந்தத்திற்கும் காரணம் எனக் கூறுகிறார்.

புத்தரும் வேதாந்திகளும் பந்த பாசத்தைத் துறக்க வேண்டியதற்கான இன்றியமையாமையை வலியுறுத்தினர். வேதாந்திகள் உலகை ஒரு

தோற்றம் என்கின்றனர். புத்தர் அதை வாசனா (மனத்தோற்றம்) என்கிறார். ஆக இரண்டுமே அதை வெறும் பொய்த்தோற்றம் என்கின்றன.

புத்த மதத்தினர் நிர்வாண நிலையை கீழ்க் கண்டவாறு விவரிக்கின்றனர்.

நீர், நிலம், சூடு, காற்று புகாத இடம் எங்குள்ளதோ, ஒளி எங்கு புகாதோ, சூரியன் எங்கு பிரகாசிக்க மாட்டானோ, சந்திரஒளி எங்கு பரவாதோ, எங்கு இருளுங்கூட இருக்காதோ — அங்கு ஒரு முனிவர், ஒரு பிராம்மணர் (பிட்சு அல்லது துறவி) அமைதியான ஒருமைப்பாட்டினால் பேருண்மையை அறிகிறார், அவர் உருவம், உருவ மற்றதன்மை, மகிழ்ச்சி, துயரம் அனைத்தையும் கடந்தவராகிறார்!'' — நிர்வாண நிலைபற்றிய இந்தக் கருத்து வேதாந்தம், யோகம் இரண்டாலும் நிர்விகல்ப சமாதியைப் பற்றிய விளக்கத்துடன் ஒத்துப் போகிறது.

ஆனால் புத்தர் வேதங்கள் அறுதியிட்டுக் கூறும் பாங்கை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சங்கரர் உபநிடதங்களை மேலும் வலியுறுத்தி விவரித்துள்ளார். வேதங்களின் ஞான காண்டத்தையும் வற்புறுத்துகிறார்.

இத்தகைய மத மாற்றங்களாலும், முஸ்லீம்கள் இந்தியாவைக் கைப் பற்றி புத்தவிகராங்களை தகர்த்தமையாலும் புத்தமதம் அது பிறந்த இடத்தில் வேரோடு களைந்தெறியப்பட்டது.

சிலோன், பர்மா, சயாம், சைனா, ஜப்பான் திபேத் நாடுகளில் மட்டும் தழைத்து வளர்ந்தது.

**புத்தரின் போதனைகள்:**

புத்தர் நேரிய வாழ்க்கைக்கான எட்டு கொள்கைகளை வகுத்தளிக்கிறார்

1. நேரிய நம்பிக்கை
2. நேரிய குறிக்கோள்
3. சொல்லில் நேர்மை
4. நற்செயல்
5. நெறியான வாழ்வு
6. நேரிய முயற்சி
7. தூய மனநிறைவு
8. சிறந்த தியானம்

இவற்றால் மட்டுமே நிர்வாண நிலையை எய்தமுடியும். துன்பத்தை வெற்றிகொள்ள இயலும்.

பொய் பேசுதல், இழிவாகப் பேசுதல், கடுஞ் சொற்கள், வம்பளப்பு போன்றவற்றைத் தவிர்த்தலே சொல்லில் நேர்மையைக் குறிக்கும்.

கொல்லாமை, கள்ளாமை, முறை தவறிய சிற்றின்ப ஈடுபாடு ஆகியவற்றைத் தவிர்த்தலே நற்செயல்.

போர்க்கருவிகள், உயிர்ப்பிராணிகள், மாமிசம், போதை பானங்கள், விஷம் போன்றவற்றை வியாபாரமாகக் கொள்ளுதல், கபடம், குரூரம், சோதிடம் கூறல், தந்திரம், வட்டி வாங்குதல் போன்றவற்றைத் தவிர்த்தலே நேரிய வாழ்க்கை.

தசகௌசல கர்மம் அல்லது பத்து உத்தமச் செயல்களாவன:

கொல்லாமை, கள்ளாமை முறை தவறிய சிற்றின்ப நுகர்வையும், பொய் பேசுவதையும், கடுஞ்சொல் கூறல், இழிவான சொற்கள் பேசுதல், வம்பளப்பு, பேராசை, வெறுப்பு, மதிமயக்கம் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

ஒரு இனத்தலைவன் தன் நண்பர்களுக்கும், தன்னை நாடி வருபவருக்குப் கீழ்வரும் நால்வகை உபாயங்களால் யோசனை கூற வேண்டும். அவை பெருந்தன்மையுடனும், மரியாதையுடனும், கருணையுடனும், தன்னைப் போல மதித்தும், இனிய சொல் கூறலும் ஆகும்.

யார் ஒருவர் தன் உடல், மனத்தால் புலன் ஆளுமையில் வெற்றி பெறுகிறாரோ, யார் ஒருவர் மெய்யறிவைப் பெறுகிறாரோ, அவரே சரியான உயரிய பிரம்மத்தை எய்துகிறார். அவர் மற்றவருக்கு வழிகாட்டும் ஆசானாக விளங்குகிறார். 'அவன் தனக்குப் பிராமணன் என்ற பெயரை வழங்கிக் கொள்ளலாம்.'

**தம்ம பதத்திலிருக்கும் மேற்கோள்கள் :**

1. ஒரு மனிதன் கறைபடிந்த உள்ளத்தோடு பேசினாலோ, நடந்து கொண்டாலோ துன்பங்கள் அவனைத் தொடரும். அதாவது வண்டி மாட்டின் இழுப்புக்கு ஏற்பப் பின் தொடர்ந்து உருளும் வண்டிச் சக்கரங்கள் போன்றது.

ஒரு மனிதன் தூய உள்ளத்தோடு பேசி, நடந்து கொண்டால் மகிழ்ச்சி அவனது நிழலைப் போல் அவனைப் பின் தொடரும்.

இவ்வுலகில் வெறுப்பினால் வெறுப்பைக் களைய முடியாது. அன்பினால் மட்டுமே அதைக் களைய முடியும். இதுவே இயற்கை வகுத்த சட்டம்.

ஆணிவேரற்ற மரத்தை சுழற்காற்று எப்படிக் கீழே சாய்க்குமோ, அதே போல் புலன் போகங்களில் மூழ்கியவனை, புலனடக்கம் இல்லாதவனை, அமிதமாக உண்பவனை, சோம்பி இருப்பவனை, ஆற்றல் சிதறுண்ட நிலை பெற்றவனை தீமை (மறம்) ஆட்டிப்படைக்கும்.

சுழற்காற்று மலையை அசைக்க முடியாது. அதேபோல் தீமை (மறம்) மனிதனை அணுக முடியாது? — எத்தகைய மனிதனை? புலன் யோகங்களுக்கு அடிமையாகாதவன். புலன்களை அடக்கி ஆள்பவன். மிதமாக உண்பவன். உறுதியாக உண்மையைக் கடைபிடிப்பவன். தன் ஆற்றலைக் கூட்டிக் கொள்பவன்

6. ஓட்டை ஒழுகல் உள்ள கூரை வீட்டுக்குள் தூறலும் உள் புகும். அதே போல் கட்டுப்பாடு இல்லாத மனத்துக்குள் காம இச்சை புகுந்து விடும். கட்டுப்பாடு பெற்ற மனத்துக்குள் அது நுழைய முடியாது.

7. இவ்வுலகம், அவ்வுலகம் இரண்டிலும் தீயவன் வேதனையையே அனுபவிக்கிறான். அவன் செய்த பாபச்செயல்களை எண்ணி எண்ணி பொருமிக் கண்ணீர் வடிக்கிறான்.

8. ஓர் அக்கறையில்லாத மனிதன் வந்து புனித வாசகங்களைப் படித்து அதன்படி நடவாமற் போனால் அவன், மாட்டு மந்தை மேய்ப்பவன் மற்றவருக்குச் சொந்தமான பசு மாடுகளின் எண்ணிக்கையில் மட்டும் கவனம் செலுத்துபவனுக்கு ஒப்பாவான். அத்தகையவன் ஒரு பிக்குவின் வாழ்க்கை நிலையை மேற்கொள்ள முடியாது. பிக்குவாக இருக்கவும் இயலாது.

9. எதிலும் விழிப்பு நிலையுடன் இருப்பதே அழியாப் பேற்றுக்கு வழி வகுக்கும். அக்கறையற்ற தன்மை மரணத்தை அளிக்கும்.

10. விவேகம் உள்ளவரே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டு இடையறா முயற்சியினால் நிர்வாண சித்தியை எய்துவர்.

11. சோம்பலில் உன் காலத்தைக் கழிக்காதே. புலன் போகங்களுக்காக ஆசைப்படுவதை வளர்த்துக் கொள்ளாதே!

12. அறிஞனாக இருப்பவர் தன் மனத்தை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். அதை அடக்கி ஆள வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தப் பட்ட மனம் மகிழ்ச்சியுடன் திகழும்.

13. அலை பாயும் மனத்தையுடைய மனிதனுக்கு மெய்ப்பொருள் விளங்காது. மன அமைதி அலைக்கழிக்கப்படுவதால் மெய்ஞ்ஞானத்தைப் பெற முடிவதில்லை.

14. தந்தை, தாய், உற்றாரைவிட சரியான பாதையில் செலுத்தப்படும் மனமே மேலான பயனை அளிக்கும்.

15. மற்றவர் செய்த குற்றத்தைப் பற்றி ஒரு மனிதன் கவலைப்படவே கூடாது. தான் செய்த தவறை எண்ணிப் பார்க்க வேண்டும். தான் எதைச் செய்யத் தவறி விட்டோம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

16. நறுமணம் இல்லா கண்ணைக் கவரும் நிறமுடைய மலர்களைப் போன்றதே செயலில் செய்து காட்ட இயலாதவனுடைய ஊருக்கு உபதேசம்.

17. செய்யக்கூடாத செயல்புரியும் ஒரு முட்டாளுக்கு முதலில் அது தேன் போல் இனிக்கும். இந்த மயக்கம் அதற்கான பயன் கிட்டாதவரைக்குமே நீடிக்கும். அதன் முடிவு தெரியும்போது அது வெறும் ஏமாற்றமே என்ற வேதனையைத் தோற்றுவிக்கும்.

18. ஞானிகள் மகிழ்ச்சியினால் பூரிப்படைவதோ துன்பத்தினால் துவளுவதோ கிடையாது-போற்றுதல், தூற்றுதல் இரண்டினாலுமே பாதிக்கப்படுவதில்லை.

19. மற்றவர்களை வெல்வதைவிடத் தன் மனத்தை வெற்றி கொள்வதே சிறந்த வெற்றி.

20. நல்லதை வேகமாகச் செய்ய வேண்டும். பாபச் செய்கைகளைக் கண்டால் தூர விலக வேண்டும். நல்லதைச் செய்வதில் தாமதித்தால் மனத்தில் இன்பலாகிரி புகுந்து கொள்ளும்.

21. ஒன்றுமறியாதவன், தூயவன், கெட்டநடத்தையற்றவனை புண்படுத்தினால் அதைச் செய்பவனைக் கேடு சூழ்ந்து கொள்ளும். காற்றடிப்பதற்கு எதிர்முகமாக தூசியை வாரி இறைத்தால் எப்படியோ அதுபோல.

22. எல்லோருமே கழியின் தாக்குதலுக்கு நடுங்குவார்கள். அனைவருமே சாவுக்கு அஞ்சுவார்கள். தன்னை எதிரியின் இடத்தில் இருத்தி நினைத்தால் ஒருவர் அடிக்கவோ, கொல்லவோ கருத மாட்டார்கள்.

23. மற்றவருக்கு வழங்கும் அறிவுரைப்படிதான் நடந்து காட்ட வேண்டும்.

24. தன்னை நன்றாகக் கட்டுப்படுத்தி ஆள்பவன் பிறரை எளிதாகவும், திறமையாகவும் கட்டுப்படுத்த முடியும்.

25. நல்லன அல்லாததைச் செய்வது எளிது. அது ஒருவரை பாதிக்கும். ஆனால் அவருக்கு மீண்டும் அதைக் களைய வேண்டுமானால் அது மிகவும் கடினம்.

26. தூய்மையும், தூய்மையற்ற நிலையும் தன்னளவே ஆகும்.

27. பொறுமையே மாபெரும் தவம். நீடித்த துன்பம் உயரிய நிப்பானா (நோன்பு)

28. காமத்தைப் போல் நெருப்பு வேறெதுவு மில்லை. கெட்ட நடத்தையைவிட ஒழுங் கீனம் ஏதுமில்லை. ஐம்புலன்களுக்கு (கண் டங்கள்) அடிமைப்பட்டு வாழ்வதைப் போன்ற துன்பம் வேறெதுமில்லை. நிப்பானா நோன் பைப் போல் உயர்ந்த தவமில்லை— ('நிம்மதி இல்லை)

29. முட்டாள்களைப் பார்க்காமல் ஒதுங்குபவன் நிச்சயமாக மகிழ்ச்சி நிறைந்தவன்.

30. உடல், நாக்கு, மனத்தை அடக்கி ஆளும் அறிவாளிகளே சிறந்தவர்கள்.

31. நெறி தவறிய ஒரு பெண்ணின் வாழ்க்கை கறைபடிந்த வாழ்க்கையாகும். தாராள மனப்பான்மை உடையவர்களிடம் கஞ்சத் தனம் வந்தால் அது கெடுதி. தீய செயல்கள் இவ்வுலகம் அவ்வுலகம் இரண்டிலும் நிகழும் கேடுகளின் ஆணிவேர்.

32. வெட்கங்கெட்ட எத்தித் திரியும் மனிதனு டைய சோம்பல் வாழ்க்கை ஒரு காக்கையின் வாழ்வைப் போன்றது. மற்றவர்களுடைய வாழ்க்கைத் தியாகங்களைப் பயன்படுத்தி அதிகாரம் செய்பவன் சுயவிளம்பரக்காரன். அவனே ஊழல்காரன். தூய, எளிய, கோரிய வாழ்க்கைக்காரனுக்கு முள் கிரீடமும் அலங்கார மாகிறது.

33. மற்றவர்களிடமுள்ள குற்றங்குறைகளைக் கண்டு பிடிப்பது எளிது. தன்னிடமுள்ளது தெரிவதில்லை. எள்ளளவும் அது புரிவது மில்லை.

34. உன் வார்த்தையை அளந்து பேசு. உன் மனத்தைப் போர்த்திவை. உடலாலும் தீங்கு செய்யாதே. உன் செய்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கான முறைகளே இவை. முதலில் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். புரா தன முனிவர்கள் நடந்து காட்டிய பாதையில் செல்ல முயல வேண்டும்.

35. சிந்தனை (யோகம்)யிலிருந்து ஞானம் பிறக் கிறது. அது இல்லாத இடத்தில் மெய்ஞ் ஞானம் அழிகிறது.

36. நல்லவர்கள் வெகுதூரத்தில் இருந்தாலும் இமயத்தைப் போல் பிராசிக்கிறார்கள். நல்வழி செல்லாதவர்கள் இருட்டில் எய்த அம்பைப் போல யாருக்கும் புலப்படாமல் பயனற்றுப் போகிறார்கள்.

37. பிறன் மனைவியை அபகரிக்கும் பொறுப்பற்ற வன் மீது நால்வகைப் பழிகள் சூழ்கின்றன. அவை: கௌரவ இழப்பு; சரியான தூக்க மின்மை, அவமானம், நரகம் ஆகும்.

38. உனக்காக இருக்கும் எதிர்காலத்தைத் துறந்து விடு. கடந்து போனதை மறந்துவிடு. நிகழ் வனவற்றை அர்ப்பணித்துவிடு. கரையைக் கடந்துவிடு.

39. ஆசைகளற்ற மனத்தின் துணையால் நீ பிறப்பு— இறப்பு எனும் சக்கரத்தின் சுழலி லிருந்து தப்பி விடுவாய்.

40. சந்தேகத்தில் உழன்று, இச்சைகளின் போதங் களுக்காக ஆவல் கொண்டு, அலையும், உலகாயதப் பொருள்களைப் பெறுவதில் பேராசை கொண்ட நிலையற்ற மனிதனிடம் ஆசைகள் மேலும் வளர்ந்து கொண்டே போகும். அப்படிப்பட்டவன் தனக்குத்தானே விலங்கு பூட்டிக் கொள்பவன்.

41. உன்னைக் கொண்டே உன்னை உயர்த்திக் கொள். உன்னைக் கொண்டே உன்னை சோதித்துக் கொள். (உன்னை உன் ஆன்மா வுடன் இணைத்துக் கொள்). சுய பாதுகாப் பாலும், அதைப் பற்றிய சிந்தனையாலும் வாழும் ஒரு பிட்சு ஆனந்தம் அனுபவிப்பார்.

42. ஆன்மாவே பரமான்மா —அதுவே வீடுபேறு. எனவே உயர்ந்த சாதிக் குதிரையை அடக்கி

ஆள்வதைப் போல் உன்னை நீயே கட்டுப் படுத்திக்கொள்.

## 4. ஜோராஸ்டிரியானிசம்

ஜோராஸ்டிரியானிச மதத்தைத் தோற்றுவித் தவர் ஜாராதிஷ்டரர். அவரது பூர்வ பெயர் ஸ்யிதாமா. அவர் ஈரான் (பாரசீகம்) தேசத் தவர். கி.மு. 600ஆம் ஆண்டில் வசித்தவர். ஜோராஸ்டிரியானிச மதத்தவர் கடவுளை 'அஹூரா மாஸ்டா' என அழைப்பர். துஷ்ட தேவதை அல்லது சாத்தானை 'அரிமான்' என்பர். இம்மதத்தின் சீடர்கள் அக்கினியை வணங்குவர். ஏனெனில் அவர்களுக்கு அக்கினியே கடவுள். அதை அவர்கள் மேலான புனிதத்துவமுள்ள கடவுளின் சின்ன மாகக் கருதினர். அஹூரொ மாஸ்டாவின் (கடவுளின்) மகனான அக்கினியைப் போற்றி னர். அவர்கள் அக்கினிக்கு இரண்டு பண்பு கள் இருப்பதாக நம்பினர்.

அதாவது, அதனிடம் நெருங்கும் எதையும் அது மாற்றியமைக்கும் வல்லமையுடையது. இரண்டாவது அதன் புகை மேல் நோக்கிச் செல்வது. இவ்விரண்டும் தூய்மையையும், நற்பண்புடைய வாழ்வையும் குறிப்பன. அவர் கள் வணங்கியது சாதாரண நெருப்பை அல்ல. உயரிய, தெய்வீக, இரகசிய முறையில் அந்த அக்கினியை மின்னலில் இருந்து இறக்கிக்

கொண்டுவந்து அணையாமல் பாதுகாத்தனர். அவர்கள் தங்கள் கோயில்களில் அக்கினி குண்டங்களை வளர்க்கிறார்கள். இந்த அக்னியை சந்தனக் கட்டைகளால் எப்போதும் அணையாமல் காக்கின்றனர்.

பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜோராஸ்டிரியானிய மதத்தவர் முகம்மதியர்களால் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டனர். இம்மதத்தவர் அனைவருமே கி.பி. 936 ஆண்டில் இரானை விட்டு இந்தியாவில் சரண்புகுந்தனர். இங்கு இந்துக்கள் அவர்களுக்குப் புகலிடம் தந்தனர். ஜோராஸ்டிரியானிச மதத்தவரே இன்றுள்ள பார்சிகள். இந்தியாவில் அவர்களுடைய மக்கள் தொகை ஒருலட்சத்து இருபத்தையாயிரம். பத்து நூற்றாண்டுகளுக்கும் முன்னரே பம்பாய்க்கு வடக்கே பத்து மைல் தூரத்திலுள்ள 'உத்வாதா' என்கிற இடத்தில் பார்சிகள் தங்களது முதல் அக்கினி குண்டத்தை அமைத்தனர்.

## அஹுரா மாஸ்டா

அஹுரா மாஸ்டா அகிலத்தின் மேன்மையான பகவான். அவர் பெரியவரிலும் பெரியவர், வல்லமை மிக்கவர். சிறந்தவர். சிறந்த அறிவாளி. கம்பீரமானவர். மிகப் புனிதர். அவரே இந்த அகிலத்தின் படைப்பாளி. அவர் மாற்றமில்லாதவர். நீதிமான். கருணை மிக்கவர். ஆதரிப்பவர். அவரே படைப்பாளி. காப்பாற்றுபவர்.

எல்லாம் அறிந்தவர். அனைவரையும் கண்காணிப்பவர். நல்லனவெல்லாம் அஹுரா மாஸ்டாவிடமிருந்தே நம்மிடம் வந்து சேர்ந்தன. தீயனவெல்லாம் அரிமானிடமிருந்து வந்தவை. ஜோராஸ்டிரியானிச மதத்தின் சீடர்களுக்கு அளித்த போதனைகளாவன :

1. கடவுள் ஒருவரே என்பதை அறிக.
2. இறைதூதுவர் ஜோராஸ்டர் அஹுரமாஸ்டாவின் உண்மையான பிரதிநிதி எனவும் அறிக.
3. மதத்தில் முழு நம்பிக்கை வை. சாத்திரத்தையும் (ஜெண்டா அவெய்தா) நம்பு.
4. அஹுரா மாஸ்டாவின் நல்லெண்ணத்தில் இடையறா நம்பிக்கை இருக்கட்டும்.
5. ஜோராஸ்டிரியானிஸ போதனைகளை புறக்கணிக்காதே; கடைப்பிடி.
6. நற்செய்கைகளையே மேற்கொள்வதன் மூலம் எல்லாத் தீமைகளையும் அகற்று.
7. ஒரு நாளைக்கு ஐந்து முறை பிரார்த்தனை செய். சூரியன் அல்லது ஏதாவது ஒரு ஒளியை நோக்கி பிரார்த்தப்பதன் மூலம் கடவுளை (அஹுரா மாஸ்டாவை) வழிபடு.
8. அஹுரா மாஸ்டாவின் நீதிக்குத் தலைவணங்கு. அவர் இறந்த நான்காவது நாள் (தீர்ப்பு வழங்கிய நாள்) அன்று வணங்கு.

9. நரகத்திற்குப் பயப்படு. சொர்க்கத்திற்காகப் பா(

10. முழு நம்பிக்கையுடன் அஹுரா மாஸ்டா செய்ததைச் செய். அவர் விரும்பியதையே செய்! அவர் எதைச் செய்யக் கட்டளை இடு கிறாரோ அதையே செய் (பூரணமாக கடவு ளிடம் சரணடை!)

## போதனைகள்

மனிதனின் எண்ணங்கள், சொற்கள், செயல் களுக்கு அவனே காரணம். ஒரு தனிப்பட்ட வனுடைய புத்தி, உள்ளம் ஆகியவை பரவெளி புத்தி உள்ளம் போன்றவற்றுடன் தொடர்புடையன. வாழ்வின் குறிக்கோள் நிரந்தர மகிழ்ச்சியை எய்துவதே. இதை அஹுரா மாஸ்டாவினுடைய கருணையாலும், ஆதரவாலுமே அடைய முடியும். புனித வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலமே இந்த ஆதரவைப் பெற முடியும். அதாவது தூய்மை யான பேச்சுகள், தூய செயல்கள் ஆகும். புனிதமே ஆனந்தம். இந்த ஆனந்தம் வேறொன்றுமில்லை. அஹுரா மாஸ்டா அளிக்கும் வரமேயாகும்.

ஒருவருடைய புனிதத்தையும் ஆனந்தத்தையும் அஹுரா மாஸ்டாவிற்கு சமர்ப்பிப்பதே, உயர்ந்த ஆராதனை. புனிதத்துவத்தை அடைய ஒருவர் தூய வாழ்க்கை வாழ்தல், நன்னடத்தைக்கான நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல், கடமையைச்

சரிவரச் செய்தல், உடனிருப்பவர்களுடன் அமைதியுடனும், இணக்கமாகவும் வாழ்தல், கருணையும், தயாளமும் வேண்டும்.

அறச் செயல்களைச் செய்ய வேண்டும். ஏழைகள், நோயாளிகள், அனாதைகள், உதவியற்றவர்களுக்கு உதவுவதனால் எளிதில் ஒருவர் தன்னுடைய பாபங்களைக் களைந்து கொள்ளலாம்.

உண்மை, விருந்தோம்பல், நெறிமுறை, பெருந்தன்மை, அனைவரிடமும் பரிவு, பெற்றோரிடம் பணிவு ஆகிய நற்பண்புகளை கடைபிடிக்க வேண்டும்.

பொய் பேசுதல், நயவஞ்சகம், பேராசை, அலட்சியம், சோம்பல், சமயத்தில் நம்பிக்கையின்மை, கர்வம், கொடுமை, டம்பம், பொறாமை, குரோதம் போன்றவை கூடாது.

தூய்மையும், புனிதத்துவமும் உடையவர்கள் மரணத்திற்குப் பின் சொர்க்கத்திற்குச் செல்கின்றனர். அங்கு அஹுரா மாஸ்டாவின் மாளிகையில் வசிக்கிறார்கள்.

கயவர் நரகத்திற்குப் போகின்றனர்.

அதனால் எல்லோரும் பிறருக்கு நன்மை புரிவதற்குப் பயில வேண்டும்.

உனக்கு நல்லதை விளைவிக்காததை பிறருக்கும் செய்யாதே.

தீய வழிகளில் சேர்க்கும் செல்வத்தைவிட கண்ணியத்துடன் வாழும் ஏழ்மையே ஏற்புடையது.

உலகிலுள்ள அனைத்து செல்வத்தையும் விட நேர்மையே உயர்ந்த செல்வம்.

மதத்தின் சாரம் பேருண்மை.

கௌரவம், மரியாதைக்கு ஆசைப்படுவதால் ஆன்மிக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தடையாகின்றன. அதனால் அவற்றை எல்லாவிதத்திலும் தவிர்த்தே ஆகவேண்டும்.

ஆரோக்கியமே செல்வம்.

ஞானம், மனநிறைவு, நம்பிக்கை, நற்பண்பு, அடக்கம், பெருந்தன்மை போன்றவையே உண்மையான செல்வம். அவையே இவ்வுலகின் மாபெரும் பொக்கிஷங்கள்.

பாபத்திற்கு வருந்துவதைவிட பாபம் செய்யாமலிருத்தலே மேல்.

தவறாகக் காலங் கழிப்பது வாழ்க்கையை வீணடிப்பதாகும்.

காலம் மீண்டும் வராது. அதைத் திரும்பவும் பெற முடியாது. அது மற்றெதைக் காட்டிலும் மதிப்பு மிக்கது. பொன் போன்றது. ஆகவே ஒருவர் அதைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உண்மை எல்லோருக்கும் சமம். அதற்கு இனப் பாகுபாடு கிடையாது. அது எப்பொழுதும் காலப் போக்கில் வெற்றியையே அளிக்கும்.

ஆனால் — பொய்யில் வெற்றிக்கு இடமே இல்லை!

## 5. சீக்கிய மதம்

சீக்கிய மதத்தின் நிறுவனர் குருநானக். இவர் பதினைந்தாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்தவர். முஸ்லீம் ஆட்சியின் போது இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். பலர் பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டனர். சிந்துவும் பஞ்சாபும் முக மதியப் படையினரின் ஆதிக்கத்திற்கு உள்ளாகியது. சிறுபான்மையினரான இந்துக்கள் துவண்டு போயினர். இதன் பயன் முஸ்லீம்களின் பலாத்காரத் தினால் இந்துக்கள் மதம் மாறினர்.

இந்த இக்கட்டான கட்டத்தில் இந்துக்களுக்கு அபயமளிக்க குருநானக் தோன்றினார்.

குருநானக்கும், அவருடைய ஒன்பது பிரதான சீடர்களான குருமார்களும், அவர்களுடைய சீடர் களும் முஸ்லீம் ஆட்சியாளர்களை உள்ள உறுதி யுடன் எதிர்த்தனர். பலர் தங்கள் உயிரையும்கூடத் தியாகம் செய்தனர். அவ்வப்போது அவர்களோடு எதிர்த்துப் போரிட வேண்டியும் இருந்தது.

புராதன காலத்தில் விரும்பத் தகாத சூழ்நிலை யில் பலாத்காரமாக முஸ்லீம்களாக்கப்பட்ட இந்து சகோதர சகோதரிகளை மீண்டும் இந்து மதத்திற்கு அழைத்துக் கொள்ள எவருமே விரும்பவில்லை. நேரம் காலம் ஒத்து வந்த சமயத்திலும்கூட மதம்

மாற்றப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் சொந்த மதத்திற்கு வந்துவிட வேண்டுமென்று ஆவலுடன் வெகுவாக முயற்சித்த போதும் இந்துக்கள் அவர்களைச் சேர்த்துக் கொள்ள இசையவில்லை.

இந்த நிராதரவான இந்துக்களை திரும்ப ஏற்றுக் கொள்வதை வெறிபிடித்த பிராமணர்கள் எதிர்த்தனர். அதன் விளைவு இந்து மதத்தினர் எண்ணிக்கையில் குறைந்து விட்டனர்.

குருநானக் பிராம்மணர்களையும், அவர்களுக்கு ஆதரவு தந்தவர்களையும் சட்டை செய்யவில்லை.

அவர் இந்தச் சின்னத்தனமான சம்பிரதாயங்களை குழிதோண்டிப் புதைத்து விட்டார்.

அவர் உண்மையைப் போதித்தார்!

'கடவுள் ஒருவரே!' என்று போதித்தார். தன் சீடர்களைக் கடவுளிடமும், குருவிடமும் மாறாத நம்பிக்கை வைக்கும்படி கேட்டுக் கொண்டார். பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டார். இஸ்லாம் மதத்திற்குப் பலவந்தமாக மாற்றப்பட்டவர்களையும் அழைத்துக் கொண்டார். மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்ப விரும்பியவர்களை ஏற்றுக் கொண்டார்.

குருநானக்கும் அவருடைய ஒன்பது பிரதான சீடர்களும் பிரச்சாரம் செய்தமதம் முழுக்க முழுக்க இந்து மதத்தின் கோட்பாடுகளேயாம். (ஞானம்

பக்தி சேர்ந்த கலவை. அதாவது பேரறிவும், ஆழ்ந்த ஈடுபாடும்). ஆயினும் நயவஞ்சகமும் மத வெறியும் கொண்ட பிராம்மணர்களின் சவாலைச் சமாளிக்கும் வகையில் அவர் ஒரு தனி மதத்தையே நிறுவினர்.

அதுவே சீக்கிய மதம்!

சீக்கிய குருமார்களின் மாபெரும் தியாகங் களும், வீரப்போராட்டமும் இல்லாமலிருந்தால் சிந்துவிலும், பஞ்சாபிலும் இந்துமதம் பூண்டோடு அழிக்கப்பட்டிருக்கும்.

தற்போது சீக்கியர்களின் எண்ணிக்கை நாற் பத்து மூன்று லட்சத்து இருபத்தைய்யாயிரம். அவர் களுடைய முக்கிய ஆலயம் அமிருதசரஸில் உள்ள 'பொற்கோயில்'. அவர்கள் வணங்குவது குரு கிரந்தசாஹேப் எனும் பத்து குருமார்களின் போதனை நூலாகும்.

இந்தப் புத்தகம் சீக்கியமதத்தின் வேதம். இதை ஒரு புனித நூலாகப் போற்றுகின்றனர். அந்த கிரந்தத்தில் குருமார்கள் உயிருள்ள உடலோடு வசிப்பதாக நம்புகின்றனர்.

அதை ஒரு பட்டாடையால் போர்த்தி ஓர் உயரமான பீடத்தில் வைத்துள்ளனர். குருத்துவார ஆலயங்கள் அனைத்திலும் மற்ற இடங்களிலும் இவ்வாறு வைத்துள்ளனர். அதை மலர்கள்தூவி, பிரசாதம் படைத்து உள்ளார்ந்த பக்தியுடன் வழி படுகின்றனர்.

**போதனைகள்:**

முடிவான பேருண்மை ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது அற்றது. அதையே பிரம்மம் அல்லது கடவுள் என்கிறோம்.

கடவுள் உருவமற்றவர். நிரந்தரமானவர். முடிவே அற்றவர். மாற்றமில்லாதவர். எங்கும் வியாபித்து இருப்பவர். ஒரே நிலையுள்ளவர்.

'ஓம்' எனும் சொல் மேலான கடவுளைக் குறிக்கிறது. உலகம் என்பது மாயத் தோற்றமே.

உண்மையில் மேலான பரம்பொருள் ஒன்று மட்டுமே இன்றும் இருப்பது; முன்பும் இருந்தது. என்றும் இருக்கப் போவது!

மேலான பரம்பொருளுக்கும், தனி ஆத்மாவுக்கும் இடையில் ஏதொரு வித்தியாசமும் இல்லை. சாராம்சத்தில் அவை ஒன்றேதான்!

கடவுளிடமும் குருவிடமும் உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டும். உன்னிடமுள்ள அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய். அகந்தையைக் களைந்து விடு. தூய, புனித வாழ்க்கையைப் பின்பற்று.

உன்னைப் போலவே மற்ற உயிர்களையும் நினைத்து அன்பு காட்டு. சேவைசெய்!

வேலை வேலைக்காகவே. அதற்காக எவ்விதப் பலனையோ, பிரதி உபகாரத்தையோ எதிர் பாராதே!

கடவுளை உள்ளார்ந்த அன்புடன் பிரார்த் தனை செய்! உள்ளார்ந்த பக்தியுடன் கடவுளை வழிபடுவதாலும், அவருடைய கட்டளைக்குப் பணிந்து தன்னை முழுமையாக அர்ப்பணிப்ப தாலும் அவர்தம் கருணையையும், அருளையும் பெறலாம்.

அடக்கத்தைப் பயில வேண்டும்.

கடவுளிடம் பக்தி இல்லாமற் போனால் வாழ் வாங்கு வாழவே முடியாது. வாழ்க்கையின் குறிக் கோளை எய்தவும் இயலாது.

_வுளிடம் மனத்தை நிலை நிறுத்தியவர்களே தங்கள் கடமையைச் செய்தவர்களாவர். அவர் களுக்கு வீடுபேறு சித்திப்பது திண்ணம்.

வாழ்வின் பொருளே கடவுளின் பெயர்தான். அவர்பெயர் இதயத்தைத் தூய்மைப் படுத்துகிறது. ஆன்மவிடுதலைப்பேற்றை அளிக்கிறது, கடவுளிடம் பக்தியைச் செலுத்து. அவர் பெயரை ஜபித்துக் கொண்டே இரு!

ஓ மனிதனே! கடவுளை எப்போதும் மறவாதே அவரை நம்பு! அவருடைய மேன்மையைப் பாடு! உன் இதயத்தை அவரிடம் பூணும் பக்தியினால் நிரப்பு!

பேராசை ஒரு நாய்! பொய் வேடம் குப்பை கூட்டுபவனுக்கு ஒப்பாகும்! தவறான வழியில் சம்பாதிக்கும் உணவு கழிவுக்கு ஒப்பானது!

உணவு, தூக்கத்தைக் குறைத்துக் கொள். அன்பையும், அருளையும், பொறுமையையும் அதிகரித்துக் கொள்!

கடவுளின் நாமாவை ஜபிப்பதே மிகச்சிறந்த பக்தி. கடவுளின் நாமாவை இடையறாது மனனம் செய்வதே மனிதனின் மிக உயரிய கடமை.

உண்மையை எப்போதும் கடைப்பிடி!

நயவஞ்சகத்தையும், உதட்டு ஜாலத்தையும் தவிர்த்து விடு!

போதுமென்ற மனமே பேரானந்தம்! மன்னித்தல் கருணை காட்டல் உயரிய நற்பண்புகள் பேராசை பெருந்தீமை!

கருணை, மனத்திருப்தி, கற்புநெறி, உண்மை போன்றவற்றை உனதாக்கிக் கொள்! இத்தகு தெய்விகப் பண்புகளில் உன்னை நிலை நிறுத்திக்கொள்.

தன்னடக்கத்தைப் பயில்! உன் வாழ்க்கை அருளுடையதாக இருக்கும்.

உலகம் முழுவதுமே பிச்சைக்காரர்களால் நிரப்பப் பட்டுள்ளன. மற்றவன் உதவியை ஆசிக்கும் மனிதன் நரகத்தை அடைகிறான்.

உலகுக்கு அளிப்பவர் ஒருவரே! ஆகையினால் எப்பொழுதும் அவரையே பற்றிக்கொள்.

யார் ஒருவர் உலகைத் துறந்து அதை மீண்டும் விரும்பாமல் இருக்கிறாரோ அவர் மட்டுமே கடவுளை நேசித்து சேவை செய்வார்!

உயிர் என்பது எல்லோருக்கும் சமமானது. ஆகவே எல்லோரிடமும் அன்பு பாராட்டு.

## 6. தாயிசம்

தாயிசம் லாவோ-சே என்பவரால் நிறுவப் பட்டது. கி.மு.அறுநூற்று நான்காம் ஆண்டில் னசனாவில் பிறந்தார். லாவோ-சேயும் கன்பூஷியஸுும் அவர்களுடைய கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்தனர். அதே கால கட்டத்தில் மகா வீரரும் புத்தரும் இந்தியாவிலும், சாக்ரடீஸ் கிரேக்க நாட்டிலும் அவரவர் தத்துவ போதனை களைப் பரப்பினர். ஒரே நூற்றாண்டில் ஐந்து அற்புத மனிதர்கள் இவ்வுலகில் ஒன்றாக அவ தரித்தனர். லாவோ-சே ஒரு சரித்திரநாயகன். சார்க் அரச மாளிகையில் இருந்த பழங்கலை ஏடு களின் பாதுகாவலன்.

தாயிசம் மரணத்திற்குப் பின் சொர்க்கம், நரகம் எனும் கொள்கையை ஒப்புக் கொள்கிறது. அது மறு பிறவிக் கொள்கையையும் ஏற்றுக் கொள்கிறது. மீண்டும் ஆன்மா அவதரிப்பதையும், சீவன் முக்தி எய்துவதையும் ஒப்புக் கொள்கிறது.

## போதனைகள்

தாய் என்றால் மேலான பரம்பொருள் என்று அர்த்தம். அது ஒன்றே ஒன்றுதான். ஆதியிலிருந்ததும், எப்போதும் இருப்பதுவும் அதுவே! அது அழிவற்றது. உருவமற்றது. பெயர் இல்லாதது. மாற்றமில்லாதது. எங்கும் நிறைந்திருப்பது.

அதைப் புலன்களால் காண முடியாது. அதை விவரிக்க இயலாது. தாய் செவிகளால் கேட்க வொண்ணாதது. கேட்கும் ஒலிகள் எதுவாயினும் அது 'தாய்' அல்ல.

தாய் பார்க்க முடியாதது. பார்க்க முடிவதெல்லாம் தாய் அல்ல.

வார்த்தைகளில் தாயை விவரிக்க முடியாது. விவரிக்க இயன்றால் அது தாயல்ல.

உருவமற்ற அதுவே ஒவ்வொன்றுக்கும் வடிவத்தைத் தருகிறது.

அதை ஒரு உருவத்தில் அன்றி காண முடியாது.

பெயரற்ற அது ஒவ்வொரு பெயரிலும் அதன் பெயரைத் தருகிறது.

தனக்கென ஒரு பெயரில்லாத அது எல்லாப் பெயர்களுக்கும் பெயர் சூட்டுகிறது.

தாயை உனக்குள்ளேயே பார். பிறகு உனக்கு எல்லாமே தெரியும்.

ஒரு அவதார மனிதன் வேற்றுமையில் ஒற்றுமையையும், பன்மையில் ஒருமையையும் காண்கிறான்.

ஒன்றே ஒன்றான அது மாற்றமே இல்லாதது.

புத்திசாலித்தனமே பெரிய சொர்க்கம். உன் செயல்கள் எல்லாவற்றிலும் அது உனக்குத் துணையாகிறது.

மேலான சொர்க்கம் தெளிவான பார்வை. நீ அலைந்து தேடுவதிலும், நீ புகுந்து செயலாற்றுவதிலும் அது உனக்கு வழிகாட்டியாகிறது.

மேலான பரம்பொருளை (தாய்) எப்படி அழைப்பாய்? அது எங்கு இருக்கிறது?

அது இல்லாத இடத்தில் ஒன்றுமே இருப்பதில்லை.

மனிதனுடைய இரகசியப் பேச்சுக்கள் சொர்க்கத்தில் இடி முழக்கமாக ஒலிக்கிறது.

முழு அகிலத்தின் தோற்றத்திற்கு தாய் மூல காரணம். எல்லாமே உயிர்வாழ அதைச் சார்ந்து நிற்கின்றன. தாய் கொள்கையை எதிர்ப்பனவெல்லாம் அழிந்து போகின்றன.

தாய் தன்னில்தானே வேரூன்றி நிற்பது!

## நெறிமுறைகள்

தூய்மை, தன்னடக்கம், மனநிறைவு, கருணை, அன்புடைமை, மன அடக்கம் ஆகியவை தாய்

நிலையை எய்துவதற்கான வழிமுறைகளாகும். அன்பின் அரவணைப்பால் துயரத்தைத் துடைத்திடுக!

சேர்த்து வைக்காதே! முன்கூட்டிய திட்டம் வேண்டாம்! விளம்பரப்படுத்திக் கொள்ளாதே! டாம்பீகமாக இருக்காதே! தற்பெருமை கொள்ளாதே! லாபம்-நஷ்டம், மதிப்பு – அவமதிப்பு போன்ற மாறுபட்ட நிலைகளை ஒரே மாதிரி எதிர்கொள்! உண்மை கூறும் சொற்கள் இனிக்காது! இனிய வார்த்தைகளில் உண்மை இருக்காது!

ஞானிகள் மௌனமாக இருப்பர். அஞ்ஞானிகள் அதிகம் பேசுவர்.

கண்ணியமாக இரு. ஆனால் எதற்கும் அஞ்சாதே!

சிக்கனத்தைக் கடைப்பிடி. ஆனால் ஈகை மனம் வேண்டும். தன்னடக்கத்தைக் கையாண்டால் சமூகத்தில் நீ ஒரு தலைவனாகலாம்.

ஆசைக்கு அடிமையாவது பெரும் பாபம்!

மனநிறைவு இல்லையேல் அதைவிடத் துன்பம் வேறேதுமில்லை.

தனதாக்கிக் கொள்ள ஆசைப்படுவதை விடப் பெரிய தீங்கு ஏதுமில்லை.

மற்றவரை வெற்றி கொள்பவன் பலசாலி!

தன்னை அடக்கி ஆள்பவன் ஆற்றல் மிக்கவன்!

பற்றுள்ள இடத்தில் அடிமை நிலை (பந்தம்) விளைகிறது. அடிமை நிலை (பந்தம்) இல்லாத போது ஆனந்தம் விளைகிறது.

நல்லவற்றையே சேர்த்துக் கொள்!

அனைவரையும் அன்புடனும் கண்ணியத்துடனும் நடத்து!

உன்னைவிட வயதில் மூத்தவர்களையும், முதியவர்களையும் மதித்து நட! வயதில் சிறியவர்களிடம் அன்பு காட்டு!

கடமையைச் செய்!

எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்காதே!

அனாதைகளிடமும், கைம் பெண்களிடமும் கருணை காட்டு!

வெளிப்படையாகத் தீங்கு செய்பவர்களை மனிதன் தண்டிக்கிறான்!

ஆனால் இரகசியமாகத் தீமை செய்பவர்களை கடவுள் தண்டிக்கிறார்!

நல்ல மனிதனுக்கும் கடவுளுக்கும் அஞ்சி நடப்பவர்கள் தன்னந்தனியாக முன்னேறலாம்!

நல்லதையே வளர்க்க வேண்டும்!

துறப்பது அதிகமாக இருக்கட்டும்! பெறுவது கொஞ்சமாக இருக்கட்டும்!

மற்றவரிடமுள்ள குற்றங்களைப் பார்க்காதே!

நல்லதைப் பேசும் மனிதனுக்குக் கடவுள் துணை இருப்பார்!

பிறப்பு ஆரம்பமல்ல; மரணம் முடிவும் அல்ல! எல்லையற்று அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அமைதி கொண்ட மனம் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மனத்திற்கு அகிலம் முழுவதுமே கட்டுப்படுகிறது. அத்தகையவர் 'தாவோ'வை எய்துகிறார். அவரை அடைய உண்மையான நம்பிக்கை இருத்தல் வேண்டும்.

## 7. கன்பூஷியனிஸம்

கன்பூஷியனிஸ மதம் கன்பூஷியஸ் என்பவரால் நிறுவப்பட்டது. அவர் கி.மு. 551இல் சீனாவில் பிறந்தார். கன்பூஷியஸின் இயற்பெயர் குங்-பூ-சே. ஆனால் இந்தச் சீனப் பெயரை சரிவர உச்சரிக்க இயலாமை காரணமாக ஐரோப்பிய அறிஞர்கள் இவருக்கு ஒரு லத்தீன் மொழிப் பெயரைச் சூட்டினர். அதுவே கன்பூஷியஸ். குங்-பூ-சே என்பதின் பொருள் ராஜதந்திரி — தத்துவஞானி.

படித்து முடித்ததும் கன்பூஷியஸ் ஒரு வேலையில் அமர்ந்தார். லூ மாகாணத்தில் உள்ள 'சீ' குடும்பத்துக்குச் சொந்தமான தானியக் கிடங்கின் கணக்காளராகப் பணி புரிந்தார். அவர் கடும் உழைப்பாளி. நேர்மையானவர். நேரம் தவறாமல் பணியாற்றுபவர். திடமான கட்டுப்பாடுடையவர்.

ஐம்பதாவது வயதில் அவர் தொழில் அமைச்சரானார். பின்னர் தலைமை நீதிபதி பொறுப்பு வகித்தார். அதன் பிறகு அவருக்கு சுங்கு-தூ-மாவட்டத்தின் ஆளுநர் பதவி கிடைத்தது. அவருடைய நிர்வாகம் மிகவும் திறமையுடன் விளங்கிற்று. ஓராண்டுக்குப் பிறகு அவர் மாநிலத்தின் முதல்வராக நியமிக்கப்பட்டார்.

முதலமைச்சரான பிறகு மக்களிடையே பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்தார். அதனால் அவர்கள் தேசபக்தி, நம்பிக்கையுணர்வு, உண்மை பேசுதல், நன்னடத்தை, நேர்மை உடையவர்களாக ஆனார்கள்.

மக்களிடையே ஏற்பட்ட இந்த அபூர்வ மாறுதல் கன்பூஷியஸின் நிர்வாக வெற்றியை வெளிப்படுத்தியது. 'சீன தேச அதிபதி மார்க்கிஸ் இதயத்தில் அச்சத்தையும் பொறாமையையும் உண்டாக்கியது. அவன் கையாண்ட சூழ்ச்சிகளின் விளைவினால் கன்பூஷியஸ் தன் பதவியை விட்டு விலகி 'லூ' நாட்டிலிருந்தே ஓட வேண்டியதாயிற்று. பின்னர் அவர் ஒரு நாடோடியாக அலைய வேண்டியதாயிற்று. பதின்மூன்று ஆண்டுகள் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணம் எனும் ரீதியில் பயணம் செய்தபோது அவர் வகுத்த கொள்கைகளைப் பரப்பினார். அவருக்கு ஏராளமான சீடர்கள் சேர்ந்தனர். தனது எழுபத்து

மூன்றாவது வயதில் அதாவது கி.மு. 478ஆம் ஆண்டில் தன் பூத உடலை நீத்தார்.

கன்பூஷியஸ் தன் சீடர்களிடம் நன்னெறி முறைகளைப் பழகும்படிப் போதித்தார்.

அவையாவன:

தேசபக்தி, உண்மை, தயாளம், அறம், கற்பு, பெருந்தன்மை, உளப்பூர்வம், கருணை, நன்மை, இதயத் தூய்மை, நற்பண்பு ஆகும்.

மக்களுக்கு நன்னடத்தைப் பயிற்சி தர அவர் பெரும்பாடு பட்டார். மக்களிடையே நன்னெறி-நன்னடத்தையைப் பயிற்றுவிக்க தனிக்கவனம் செலுத்தினார்.

அவர் சொன்னார்:—

மனம் ஊன்றாமல் படிக்கும் பாடம் வீண் உழைப்பே.

படிப்பில்லாத எண்ணம் அழிந்து விடும்.

வறுமையை வேதனைப்படாமல் அனுபவிப்பது கடினம்.

ஆனால் கர்வம் கொள்ளாமல் செல்வந்தனாக இருப்பது எளிது.

அளவுக்கு மீறிச் செயல்படாதே!

ஊறு விளைவிக்காதே!

உண்மைத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் கிடைப்பது அரிது.

உன் அண்டை அயலாரிடம் இணக்கமாக வாழப் பழகு!

உன் சகோதரர்களுடன் ஒத்து வாழ்! உனக்குச் சந்தேகம் தோன்றினால் உன்னிடமே அதை ஆராய்ந்து அறிந்து கொள்!

ஒவ்வொரு உள்ளத்திலும் ஒரு மகான் வாழ்கிறார்! மனிதன்தான் அந்த நம்பிக்கையை அடியொற்றிப் பின்பற்றுவதில்லை! அதனால் அது புதைகுழிக்குள் மறைந்து விடுகிறது!

கருணையுள்ளங் கொண்ட கீழினத்தாரிடங்கூட நல்ல குணங்களைப் பதித்துள்ளார்.

பண்படாத மனிதன் அதை வெளியில் தேடுகிறான்.

பண்பட்டவன் அதைத் தன்னுள்ளேயே தேடுகிறான்.

நீ ஏற்றுக்கொள்ள விரும்பாததை, மற்றவர்களிடம் திணிக்காதே!

ஆசைகள் அவ்வளவையும் அடைய முடியாது.

அளவுக்கு மீறிய யோகங்களைத் தவிர்க்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தனது சொல்லை அளந்துபேச வேண்டும். தன் நடத்தையில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஒருவர் அற்பங்களை விட்டொழிக்க வேண்டும். பெருந்தன்மையாகப் பழக வேண்டும். பிறரை மதித்தல், பணிந்து போதல், நன்றியுடனிருத்தல் போன்றவற்றுடன் இருக்க வேண்டும்.

நல்லதையே பயில வேண்டும். அன்பு, கற்றல், நேர்மை பழக வேண்டும்.

நேர்மை நெறிகளை உளப்பூர்வமாகப் பழகினால் இதயம் தூய்மையைப் பெறுகிறது. மனம் மயக்க நிலையிலிருந்து மீளுகிறது.

கீழ்வரும் மூன்றையும் எப்பொழுதும் கடைப் பிடியுங்கள்.

சொர்க்கத்தின் கட்டளைக்குப் பயப்படுதல், பெரியவர்களுக்கு அடங்கி நடத்தல், மகான்களின் அருளுரைகளைப் பின்பற்றுதல்!

கடவுளை வழிபடும்போது வழிபடும் மூர்த்தத்தில் தெய்வீகம் பொதிந்திருப்பதாக நம்புங்கள்.

உலகம் ஒரு தங்குமிடமே! கணநேர கோபத்தை அடக்குவதின் மூலம் வாழ்நாள் பூராவும் விளையக் கூடிய துக்கத்தைத் தவிர்க்கலாம்.

மற்றவர்களை எப்படிக் குறை சொல்வாயோ அதே போல் உன் குறைகளையும் எடுத்துக் கூறு.

உனக்காக நீ மன்னிப்பு கோருவதைப் போலவே மற்றவர்களையும் மன்னித்து விடு!

மரியாதை காட்டுவதைவிட அடங்கிப் போவது மேல்.

உளப்பூர்வமான சேவையே கடவுளை அடையும் வழி.

தெய்வீக நீதியை அறியாதவன் ஞானியாக முடியாது!

நற்பண்புகளுக்கான விதிகளைத் தெரிந்து கொள்ளாதவன் நல்ல குணத்தை அமைத்துக் கொள்ள முடியாது.

தெளிந்த அறிவுடையவர்களுக்கு சந்தேகம் என்பதே எழுவதில்லை.

நேர்மையாளர்களுக்கு விளைவைப் பற்றிய கவலை இருப்பதில்லை.

துணிவுள்ளவர்களுக்குப் பயமில்லை.

கூச்சல் சந்தையில் இல்லை! காட்டிற்குள்ளும் அமைதி இல்லை! அது இதயத்தில் மட்டுமே உள்ளது.

ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து ஊதுவத்திகள் ஏற்றித் தொழுவதைவிட, வீட்டில் இருந்து கொண்டே நற்காரியங்களைச் செய்வது மேல்.

தெளிந்த அறிவுடைய மனத்திற்குள்ளேயே சொர்க்கம்

இருண்ட மனத்தில் நரகம் புலப்படுகிறது.

## 8. ஷிண்டாயிசம்

ஷிண்டாயிசம் ஜப்பானிய நாட்டின் தேசிய நம்பிக்கை. இதுவே, அந்நாட்டின் மதம், தேசபக்தி உணர்வு, தேசிய கலாச்சாரம், வாழ்க்கை அமைப்புக்கான கொள்கை, நன்னெறி விதிகள், கலைகள். ஜப்பானிய தேசத்திலுள்ள இல்லறத்தாருக்கான நெறிமுறை. புத்தமதம் அங்கு தோன்றுவதற்கு முன்னரே ஷிண்டாயிசம் ஜப்பான் தேசம் முழுவதும் பரவி இருந்தது. இந்துமத போதனைகளும், ஷிண்டாயிசமும் ஒன்றுக் கொன்று பெரும்பாலும் ஒன்றாகவே இருந்தன. ஷிண்டாயிசக் கொள்கைப்படி மேலான பரம்பொருள் ஒன்றே. அந்த ஒரே பரம்பொருளின் கீழ் பல்வேறு கடவுள்கள் உண்டு.

### போதனைகள்

முதல் ஜப்பானிய சக்கரவர்த்தியும் அவரது பாரம்பரிய வாரிசுகளும் கடவுளின் வாரிசுகளாகவே கருதப்பட்டனர். ஆகவே ஒவ்வொரு பிரஜையும் சக்கரவர்த்திக்கு முழு மரியாதையைச் செலுத்த வேண்டும்.

எல்லா மக்களும் தங்கள் மூதாதையர்களுக்குக் கௌரவம் அளிக்க வேண்டும். பெற்றோர்களிடம்

அன்பும்,மதிப்பும் காட்டவேண்டும். குழந்தைகளிடம் அன்பு செலுத்த வேண்டும்.

அனைவருமே எண்ணம், சொல் செயலில் உண்மையுடனும், தூய்மையுடனும் இருத்தல் வேண்டும்.

உண்மை, தூய்மையுடன் கூடிய உள்ளார்ந்த வழிபாட்டை யார் ஒருவன் கடவுளிடம் செலுத்து கிறானோ, அவனுக்கு இறைக்காட்சி கிடைக்கிறது.

இனம், மொழி, நடத்தை, கலாச்சாரம் பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் நேசக்கரம் நீட்டி உதவிட வேண்டும். செய்த நன்றி மறக்கக் கூடாது. இத்தகு அமைதி கலந்த இன்பத்தைப் பெற எல்லோரும் சகோதரர்கள் என்ற முறையில் செயல்பட வேண்டும்.

இந்த அகிலம் கடவுளின் உடல், தெய்வ நீதி (தெய்வீக நெறிமுறை) அகிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கெங்கணும் நிரம்பிச் செயல்படுகிறது. அதுவே மாறாத ஆற்றலாக விளங்குகிறது.

சொர்க்க பூமிகள் அமைதியுடன் இருக்கின்றன. அங்கு எந்த ஓசையும் இல்லை. அவ்வாறெனில் கடவுளை எங்கே காண்பது? தூரத்து வான்வெளியில் அவரைத் தேடாதே! மனிதனின் இதயத்தில்தான் உறைகிறார்!

கடவுளின் விதிகளை மீறாதே!

சட்டங்களை மீறி நடந்து தேசத்தை துன்புறுத்தாதே!

கடவுளின் பூரண உத்தம நிலையை எப்போதும் சந்தேகிக்காதே!

உனக்கென ஒரு வரம்பு உண்டு என்பதை மறந்து விடாதே!

கோபப்படாதே!

செய்யுந்தொழிலைச் சரிவரச் செய்!

உள்ளார்ந்த பிரார்த்தனைகளால் கடவுளைத் தரிசிக்கலாம்! எங்கெல்லாம் உண்மை இருக்கிறதோ அங்கு நேர்மை இருக்கிறது! நேர்மை உள்ள இடத்தில் ஞானம் பிறக்கிறது!

நல்லதைச் செய்து தூய்மையைப் பெறு!

தீயதைப் புரிந்து அழுக்கை சேர்த்துக் கொள்ளாதே!

ஆன்மாவைப் புரிந்து கொள்வதால் அருள் பிறக்கிறது. நற்பண்பும், இன்பமும் அடுத்தடுத்து இருப்பவை!

தீயதைப் பார்க்காதே. தீமையைக் கேட்காதே! கெடுதியைப் பேசாதே! கேடு விளைவிக்காதே! கேடு விளைவிப்பவனையே கெடுதி சூழ்ந்து கொள்ளும்.

பொறுத்தலே மனநிறைவுக்கு அடிப்படை. அது அபூர்வமானது!

உங்கள் பெற்றோர்களின் கட்டளைகளை முழுக்க முழுக்கப் பின்பற்றுங்கள். உங்கள் ஆசான் களின் போதனைகளின்படி நடவுங்கள். திறந்த இதயத்துடன் நேர்மையாக நடவுங்கள். பொய் பேசாதீர்! கற்பதைக் கடசடறக் கற்கவும்.

நியாயம் இதுவெனத் தெரிந்திருந்தும்அதன்படி ஒழுகாமை கோழைத்தனம்.

பகட்டைத் தவிர்த்து எல்லோரிடமு ம் அன்புடன் நடந்து கொள்ளுங்கள்.

மனிதனுடைய மனம் பேருண்மையில் நிலைத் திருக்கும் வரை அவன் வழிபாடுகள் நடத்தா விட்டா லும் அவனைக் கடவுள் காப்பாற்றுகிறார்.

## 9. இஸ்லாம்

இஸ்லாமிய மதத் தோற்றத்திற்கு முன்னர் அராபிய நாடு தனக்கென ஒரு சமயச் சார்பு இல்லாதநிலையில் தடுமாற்றத்தில் ஆழ்ந்திருந்தது. பல தெய்வங்களை வணங்குதல், சிலை வழிபாடு போன்ற நிலை அந்த நாடு பூராவிலும் தாறுமாறாக வளர்ந்து விட்டது. பெரும்பாலான அராபியர்கள் கல்லை நட்டு வழிபட்டுக் கொண்டிருந்தனர். மதினாவிலும், மெக்காவிலும் யூத மதமும் கிறித்துவ மதமும் பரவியிருந்தது. இருப்பினும் அவை மக்களிடையே வலுவாக ஊன்றவில்லை. அந்நாடு முழுவதிலுமே எவ்விதக் கலாச்சாரமும் நிலை கொள்ளவில்லை.

மது அருந்துதல், சூதாடுதல், விபச்சாரம், கருச்சிதைவு, தெய்வங்களுக்கு மனிதபலி, தந்தையரின் மனைவிகளையே மகன்கள் மனைவியராக வரித்துக் கொள்ளுதல் (தன் சொந்தத் தாயைத் தவிர்த்து) போன்றவை அந்த நாட்டில் அப்போது பொதுவில் நிலவிய தீமைகள். இத்தகைய இக்கட்டான கால கட்டத்தில் அந்நாட்டிற்கு ஒரு புதிய சமயத் தலைவர் தோன்ற வேண்டிய நிலை. இதற்கான தகுதியும் தலைமையும் முகம்மதுவிடம் வெளிப்பட்டது.

முகம்மது கி.பி.571–ஆம் ஆண்டில் மெக்காவில் பிறந்தார். அவரே இஸ்லாமிய மத நிறுவனர். இஸ்லாமிய சமய சாத்திரப் புனித நூல் 'குர்ஆன்.' ஒவ்வொரு முகம்மதியரும் அதைப் புனிதம் மிக்கதாகப் போற்றுவர்.

## போதனைகள்

முகம்மது கடவுளின் ஒருமை நிலையை விளக்கினார், கடவுளின் அன்பு நேயத்தை விவரித்தார்.

வயதில் மூத்தவர்களிடமும், பெற்றோரிடமும் மரியாதை காட்ட வேண்டும் என்றார். மேலும் பெண்களைப் போற்றுதற்குரியவர்களாகக் கருதுதல், நன்னெறி, நற்பண்புடன் கூடிய வாழ்க்கை வழி நடத்தல் ஆகிய நடைமுறை நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வற்புறுத்தினார்.

'செய்யும் ஒவ்வொரு நற்செயலும் அறப் பயன் தரும் செயலாகும்.

தனக்குள்ளதைப் போலவே தன் சகோதரனுக்கும் அமைய வேண்டும் என்பவரே உண்மையில் நம்பிக்கையுள்ளவர்.

எல்லோருமே கடவுளிடமிருந்தே வந்தவர்கள். அவர்களைத் தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே கருத வேண்டும்.

பசித்தவருக்கு உணவு அளியுங்கள். நோய் வாய்ப்பட்டவரை அணுகி ஆறுதல் கூறுங்கள். தளையுண்டவனை விடுவியுங்கள். எல்லா உயிரினங்களுக்கும் நல்லதைச் செய்யுங்கள்.

தாழ்த்தப்பட்டவருக்கு உதவவும். உங்களை நாடி வருபவர்களை நேசிக்கவும்.

எந்தச் சீவனையும் துன்புறுத்தாதீர். போதை பானங்களை அருந்த வேண்டாம். தீமையைத் தவிர்க்கவும். எப்போதும் நல்லதையே பயில வேண்டும். நேர்மையுடனிருந்து ஒளிவு மறைவின்றி வாழ வேண்டும்.

ஏழைகளிடமும், நலிந்தவர்களிடமும் கருணை காட்டுங்கள்.

உபகாரம் செய்யுங்கள். எண்ணம், சொல், செயலில் தூய்மையை மேற்கொள்ளவும். உள்ளார்ந்த பிரார்த்தனை அவசியம்.

அல்லாவே (கடவுள்) அகிலத்தைக் காப்பவர். அவர் பூரண கருணையுள்ளங் கொண்டவர். அவரே மகோன்னத நியாயவான். அவரவர் நன்மை-தீமை களுக்கேற்ப நியாயம் வழங்குகிறார். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டாலொழிய யாருமே ஆயுதங்களைத் தொடக் கூடாது.

சகிப்புத் தன்மையில் சிறந்து விளங்க வேண்டும். எல்லா சமயங்களின் உண்மைப் போதனைகளையும் உண்மையானவை என ஏற்க வேண்டும். இந்த நெறியைக் கடைப்பிடிக்காத எவனும் ஒரு உண்மை யான முஸ்லீம் ஆக மாட்டான்.

இவற்றை எதிர்ப்பவர், மற்ற சமயத்தவரை கொடுமைப்படுத்துபவர் அனைவருமே கடவுள் தண்டனைக்கு உள்ளாவர்.

ஒவ்வொரு மதமுமே நியாயமானவை. ஒரு உண்மையான முஸ்லீம் மற்ற மதங்களிடம் சகிப்புத் தன்மையுடன் கூடிய இணக்கம் காட்ட வேண்டும்.

யாரையும் வையாதீர்; நல்லதைப் புறக்கணிக் காதீர்; உங்கள் உடன்பிறப்புகளிடம் இதயம் திறந்து பேசுங்கள்.

இறந்தவரைப் பழிக்காதீர். அவ்வாறு செய் தால் உயிருடனிருப்பவரைப் பழிப்பதற்குச் சமம்.

காம நினைப்புடன் பார்ப்பது கண் செய்யும் விபச்சாரம்.

கெட்டதைக் கேட்பது காதுகளின் அபச்சாரம். தீயன பேசுதல் நாவினால் செய்யும் பொல்லாங்கு. கெட்ட எண்ணத்துடன் கைகளை இயக்குவது கைகளின் குற்றம். கெட்ட எண்ணத்தோடு அடி எடுத்து வைத்தால் அது கால்களுக்குக் கெடுதி.

ஒரு முகம்மதியனின் (நம்பிக்கையாளன்) மத நம்பிக்கைக்குப் பேராசையும், கெட்ட எண்ணமும் விரோதமானவை.

சுத்தம் கடவுளைச் சேர இலகுவான பாதையைக் காட்டி விடுகிறது.

கடவுள் தூய்மையாளர்; கருணை மிக்கவர்; ஆதரிப்பவர். இத்தகு பண்புகள் நிறைந்தவரை மிகவும் நேசிக்கிறார்.

பாபச் செயல் புரியாதவன், மத நம்பிக்கை சட்ட திட்டங்களை மீறாதவன், சூதுவாது இல்லாதவன், பகைமை பாராட்டதவன் எவனோ அவனே தூய்மையாளன். பக்தியில் சிறந்தவன்.

கடவுள் நம்பிக்கையும், பகைமை உணர்வும் கடவுள் சேவகனின் இதயத்தில் ஒன்றாகக் குடி இருக்காது. நெருப்பு விறகை எப்படி எரித்து விடுகிறதோ அதே போல் பகைமையுணர்வு நல்லதைப் பொசுக்கி விடும்.

உனக்குத் தீங்கு விளைவிப்பனை மன்னித்து விடு. உன்னை விட்டு விலகிப் போனவனிடம் மீண்டும் போய்ச் சேர்ந்து கொள்.

உனக்குக் கேடு விளைவித்தவனுக்கு நல்லதைச் செய். உனக்கு ஊறு விளைவிப்பதாயினும் உண்மையையே பேசு.

பேராசையே வறுமை. ஆசைகளற்ற நிலையே செல்வ நிலை.

எல்லா ஆசைகளையும் விட்டவன் சுதந்திர மானவன்.

பொய்யே பேசாதே. நீ கொடுத்த வாக்குறுதியில் தவறி விடாதே. நம்பினவருக்குத் துரோகம் செய்யாதே.

எல்லாக் கொடுமைகளையும் களைவது மத நம்பிக்கை.

எந்த முகம்மதியனும் (கடவுள் நம்பிக்கையாளன்) இம்சை புரிவது கூடாது.

எல்லா மனிதர்களிலும் கடவுள் நம்பிக்கையுடையவர்கள் உயிர்க்கொலை புரிவதைத் தவிர்த்து விடுகிறார்கள்.

தவறு செய்பவனுடைய வழிபாட்டைக் கண்டு பயப்பட வேண்டும். ஏனெனில் கடவுள் அவனிடம் கூடக் கருணை காட்டுகிறார்.

கடவுள் சேவகனே ஆனந்த மயமானவன். அவரைக் கடவுள் நல்வழி காட்டும் பாதையின் கதவைத் திறந்து விடும் வாயிற் காப்போனாகவும், தீமைகளுக்கான வழியின் கதவை அடைக்கும் காவல்காரனாகவும் பணி புரிய வைக்கிறார்.

தன் இதயத்தில் அணுவளவு அகந்தை கொள் பவன்கூட சொர்க்கத்தின் வாயிலில் நுழைய முடியாது.

எல்லாமே கடவுளிலிருந்து வருபவை. அவனிடம் உள்ள பேரழகின் பொலிவே உலகெலாமுள்ள அழகுக்கு ஆதாரம். கடவுளிடமுள்ள பேரன்பே மனிதன் இதயத்தில் அன்பை ஊன்றுகிறது. பேருண்மையில் இருக்கும் கடவுளே அனைத்திலும் காணும் கடவுள்.

அவரே முதலும் முடிவும் ஆனவர்.

தோற்றமளிக்கும் அனைத்திலும் அவரே உள்ளார். அவற்றின் நடை, உடை, பாவனையிலும் அவரே இயங்குகிறார். அனைத்திற்குள்ளும் நிறைந்திருப்பவரும் அவரே.

உருவமாவதும் அவரே. உருவமற்றவரும் அவரே.

நன்மை — தீமை இரண்டுமே அவர்களிடமிருந்தே வருகின்றன.

தன்னை அறிந்தவன், கடவுளை அறிந்தவன். கடவுளை மறந்தவன், தன்னையே மறக்கிறான்.

## 10. சூபிஸம்

சூபிஸம் இஸ்லாமிய மதத்திலிருந்தே தோன்றியது. இதன் போதனைகள் பெரும்பாலும் இந்து மத போதனைகளோடு ஒத்துப் போகிறது.

குறிப்பாக வேதாந்தக் கருத்துகளுடன் கூடியவை. தெளிவாகக் கூறுவோமாயின் இம்மத நிறுவனம் இஸ்லாம் சமயத்தையும் இந்து மதத்தையும் இணக்கமாக்கி ஒத்து வாழ மேற்கொண்ட முயற்சி எனலாம்.

தாராசிகோவா எனும் இளவரசனால் இதற்கான இயக்கம் துவக்கப்பட்டது. இவர் சக்கரவர்த்தி ஷாஜஹானின் மூத்த புதல்வர். ஷாஜஹான் இந்தியாவை கி.பி. 1629ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1659ஆம் ஆண்டுவரை ஆண்டு வந்தார்.

இளவரசர் தாரா ஷிகோவா தனது தம்பி அவுரங்கசீப்பினால் கி.பி. 1658இல் கொலை செய்யப்பட்டார். அதிலிருந்தே இந்த மத இயக்கம் இரகசியமாகவே இயங்கிக் கொண்டிருந்தது.

சூபி மதம் எத்தனையோ பெரும் ஞானிகளைத் தோற்றுவித்துள்ளது. சூபி மத ஞானிகள் கருணை உள்ளம் கொண்டவர்கள். உருவ, அருவ கடவுள் நிலைகள் இரண்டிலுமே நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒரு சூபி மத சித்தர் கடவுளை எங்கும் எதிலும் காண்பவர். அனைத்தையும் எண்ணம், சொல், செயலால் துறந்துவிட முயல்பவர். காமம் பேராசை, அகந்தை, கோபம், படாடோபம் முதலியவற்றைத் தன்னிடமிருந்து விலக்குபவர்.

முழு மனக்கட்டுப்பாட்டைப் பயில்பவர் துறவு வாழ்க்கையை வாழ்பவர்.

பிறகு வட இந்தியாவில் உள்ள பரோடாவில் கி.பி. 1882இல் பிறந்த ஹஸரத் இனயத்கான் என்பவர் சூபி மதத்தை மீண்டும் வெளிக் கொணர்ந்து பரவச் செய்தார்.

கி.பி. 1910 இல் அதை ஐரோப்பா முழுவதும் பிரச்சாரம் செய்தார்.

**போதனைகள்**

-வுளின் மறதி நிலையில் பிறந்ததே உலகம். அது மணமகனோ மணமகளோ அல்ல; குழந்தையு மல்ல.

இவ்வுலகத்தைப் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொள்பவர் எவரோ அவர் தன்னிலை இழக்ாதவர். மாறாக மறந்துபோன நெடு நாளைய மறதியிலிருந்து மீள்கிறார். இழந்த ஆன்மாவைக் காண்கிறார்.

கடவுளிடமிருந்து வெகு தூரத்தில் விலகி நிற்பவன், கடவுள் எங்கே இருக்கிறார் என்பான். கடவுளைக் காண்பவன் தன்னுள்ளேயே அவர் குடிகொண்டிருப்பதை உணர்கிறான். கடவுளை! அவர் என்பதும் சரியல்ல. 'நீங்கள்' என்பதும் சரி யல்ல; 'நான்' என்பதே சரி.

அனைத்து யுகங்களிலும், அனைத்து மண்டலங்களிலும் தோன்றும் அவதார சீலர்கள்

மேலான பரம்பொருளால் அனுப்பப்பட்டவர்களே யாவர். மனிதர்கள் மேலான பரம்பொருள் ஒருவருக்கு மட்டுமே சேவை செய்ய வேண்டும் என்பதை, உலகுக்கு போதிப்பதற்காக ஒரே குறிக் கோளுடன்தான் அனுப்பப்படுகிறார்.

இதன் துணிந்த முடிபே 'நான்' — ஆன்மா கடவுள் என்பதாகும். மேலான பரம்பொருளன்றி வேறேதும் கடவுளல்ல.

ஞானிகள் நல்லன தீயன இரண்டுமே கடவு களைச் சார்ந்தவை என்பதை அறிவர். ஆகவே அவர்கள் இவ்விரண்டினிடத்தும் இருந்து தங்கள் ஆன்மாவை விலக்கிக் கொண்டு இவ்விரண்டையும் ஆட்சி புரியும் தலைவனிடம் அவற்றை ஒப்புவித்து விடுகின்றனர்.

நிறமற்ற மாபெரும் உயிர்ப்பொருள் ஆயிர மாயிரம் நிறங்களைத் தோற்றுவிக்கும் விளை யாட்டு அதிசயத்திலும் அதிசயம்! மிகவும் அற்புதம்.

உருவமற்ற மகத்தான ஒரே பொருள் எண் ணற்ற உருவங்களில் காட்சியளிப்பதும் மகத்தான அதிசயமே!

அப் பேருயிராளனை எல்லா நிறங்களிலும் அனைத்து உருவங்களிலும் நாம் காண்போமாக!

மனமெனும் நீரோடை தீமை நன்மை எனும் இருவேறு நீரோட்டங்களாகப் பிரிந்து பாய்ந்து மீண்டும் சங்கமிக்கின்றன.

சரியான பாதையைப் புரிந்து கொண்ட மனம் பேரறிவு, ஆசை, செய்கையாகிய மூன்றினாலும் பிணைக்கப்பட்ட தளையைத் தாண்டி மேலே செல்லும்போது அந்த மனத்துக்கு அச்சம் என்பதே இருப்பதில்லை. அதற்கு விருப்பு வெறுப்பு இரண்டும் ஒன்றே.

கடவுளைக் காண்பவர் கடவுளாகவே ஆகிறார். அத்தகைய ஒருவருக்கு வேறொரு தனிக் கடவுள் கிடையாது.

பிரிவினை, வித்தியாசம், தனித்தன்மை போன்ற பாகுபாடு தோன்றுவது மிருக மனத்தின் குணாதிசயங்கள்.

எல்லாம் ஒன்றே என்ற எண்ணம் மனித மனத்தில் மட்டுமே உதிக்கும்.

கடவுளைக் காண்பாயாகில் நீ அனைத்தையுமே அறிந்தவனாகிறாய்! உலகைப் படைத்தவனையே கண்ட பிறகு அவனுக்குப் பின்னால் தொடர்வது ஏதுமிருக்காதல்லவா? அவனன்றிப் பிரிந்து காணும் வேறொன்று இருக்காதல்லவா?

உன் ஆன்மாவே நீ! சிந்திப்பவனும் அந்த ஆன்மாவே! அதன் தோற்றமாகிய உலகமும் அதுவே!

கடவுள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு ரசவாதக் கல்லைப் பொருத்தி இருக்கிறார். அது இடையறாது உண்மையில் மறைந்துள்ள பொய்

யைப் பிரித்துக் காட்டி உணர்த்திக் கொண்டே

கடவுள் அனைத்து எண்ணம், சிந்தனை, பாவனை, கற்பனைக்கும் அப்பாற்பட்டவர். நமது வார்த்தைகள், ஒலி ஓசைகள், சாத்திர அறிவு ஆகிய வற்றுக்குப் பிடிபடாத வெகு தூரத்திலிருப்பவர். அவரே அனைத்துக்கும் மூலம். வழிபாடு கடவுளைச் சேரும் தூரத்தின் பாதிவழிக்கு இட்டுச் செல்கிறது. உண்ணா நோன்பு அவர் மாளிகை வாயிற்படியில் கொண்டு விடுகிறது.

அறச்செய்கை அவருடைய இருப்பிடத்திற் கருகில் போக அனுமதிக்கிறது.

தீங்கிழைக்காதே. உனக்குத் தீங்கு புரிவதையும் அனுமதிக்காதே!

உன் பெற்றோரிடம் அன்புடன் இரு! சுற்றத் தார், அனாதைகள், ஏழைகளிடமும் அன்பு காட்டு!

பிச்சை இடு! உன் வழிபாட்டு முறையில் உறுதியுடன் இரு! கடவுள் முதலும் முடிவும் ஆனவர்! காட்சிக்குத் தெரிபவர்! காண முடியாதவர்!

அவருக்கு எல்லாமே தெரியும். நீ எங்கிருந் தாலும் அவர் அங்கெல்லாம் உன்னோடு இருப்பார்! சொர்க்கத்தில் உள்ளதும், பூமியிலுள்ளதும் ஆன எல்லாமே கடவுள் அறிவார்!

முடிவு கட்டிக் கூறுவோமாயின் நாம் கடவுளிட மிருந்தே வருகிறோம். முடிவில் அவரிடமே போய்ச் சேருகிறோம்.

நல்லதையே செய்! ஏனெனில் நல்லதைச் செய்பவரிடமே கடவுள் அன்பு பாராட்டுகிறார்.

## 11. ஜூடாயிசம் (யூத மதம்)

ஜூடாயிசம் யூதர்களின் மதம். இதுவே பழைய டெஸ்டமெண்ட்' (பைபிள் பழைய, புதிய டெஸ்டமெண்டுகளினால் ஆனது. இவற்றில் பழைய டெஸ்டமெண்ட் யூதர்களின் சாத்திரத்தை மூலமாகக் கொண்டது. புதிய டெஸ்டமெண்ட் கிறித்துவர்களின் சாத்திரத்தைக் கருவாகக் கொண்டது. மனு மகரிஷி இந்திய சட்ட விதிமுறைகளை வகுத்துத் தந்ததைப் போல் மோசஸ் யூதர்கள், கிறித்துவர்களுக்கான சட்ட விதிமுறைகளை வகுத்தளித்தவர்.)

ஆன்மா அழிவற்றது என்ற சித்தாந்தத்தில் யூதர்கள் நம்பிக்கையுடையவர்கள். ஆன்மாவின் மறு பிறவியில் நம்பிக்கையுடையவர்கள், சொர்க்கம் அல்லது நரக வாழ்க்கை அமைவதையும், தேவதைகள், பூதகணங்கள் உண்டு என்பதையும் ஒப்புக் கொள்பவர்கள். ஒவ்வொருவரும் கடவுளிடம் ஐக்கியமாதலையும், தெய்வீகத்தையும், கடவுளின் சூக்கும உருவ நிலையையும், சாத்தான் (துர்த்தேவதை) என்பது உண்டு என்பதையும் ஆமோதிக்கிறது.

### போதனைகள்

அகிலத்தைப் படைத்தவர் கடவுள்— எல்லா படைப்புகளின் தந்தையுமாவார். அவர் நியாயவான். இரக்கமிக்கவர். அவர் கள்ளங்கபடம்

அற்றவர். மனிதனுடைய 'விதி' என்பது உள் ளார்ந்த ஈடுபாட்டுடன் கூடிய பிரார்த்தனை, செய்த பாபத்துக்கு வருந்தி மன்னிப்புக்கோருதல் ஆகியவற் றைப் பொறுத்ததேயாகும்.

உங்களுடைய தந்தை— தாயை மதித்து நடவுங் கள். கொல்லாமையைக் கடைப்பிடி. விபச்சாரக் குற்றத்தைச் செய்யவே கூடாது. திருடக் கூடாது. உன் அண்டை வீட்டானுக்கு எதிராகப் பொய்சாட்சி சொல்லாதே. உனது பக்கத்தில் குடியிருப்பவன் வீட்டை அபகரிக்கக் கூடாது. அண்டை வீட்டான் மனைவி, மக்களையும், அவன் பணியாட்களையும், அவனுடைய இதர மாடு, கழுதை போன்ற எந்த ஜங்கம சொத்துகளையும்கூட அபகரிக்கும் எண்ணம் கொள்ளக் கூடாது.

வேதனைகள் ஒருவகை வாழ்க்கையை மேற் கொள்வதற்கான வழி வகுக்கும். தியாகம் செய்யும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தும்.

உடல் ஆன்மாவுக்கான உறை. ஒரு பெண்ணின் பாதத்தின் நுனியை காம எண்ணத்துடன் ஒருகணம் நோக்கினாலும் அது அவளோடு உறவாடியதற்கு ஒப்பாகும். எல்லாக் கபடச் செயல்களையும் விட பெண்ணிடம் (விபச்சார எண்ணம்) கபடமிருப்பது பெருத்த குற்றம்.

கடவுள் பெண்ணை ஆணின் தலையிலிருந்து படைக்கவில்லை — அவள் அவனை ஆட்சி புரியலாம் என்பதற்கு! அவன் பாதங்களிலிருந்தும்

படைக்கவில்லை அதனால் அவன் அவளை அடக்கி ஆளலாம் என்பதற்கு! ஆனால் அவனது ஒரு பாதியிலிருந்தே அவளைப் படைத்தான். அவள் அவன் தலைமையுடன் இணைந்தே இருப்பாள்!

எரிந்து விழுந்தபடி எவ்வளவுதான் கொடுத்தாலும் அதன் மதிப்பு சொற்பமே. முறுவல் பூத்த முகத்துடன் சிறிதளவே தந்தாலும் அதற்கு மதிப்பு அதிகம். தான் கொடுத்ததையே நினைத்துக் கொண்டு இருப்பது கூடாது. வாங்கியவனும் தான் பெற்றதை மறத்தல் கூடாது.

ஒரு கடவுளை நோக்கி ஒருமுழ தூரம் நடந்தால் கடவுள் அவனை நோக்கி இரு மடங்கு வேகத்தில் ஓடி வருவார். தன் குற்றத்தை மறுப்பதால் அதன் அளவு இரு மடங்கு ஆகிறது!

பொறுமையோடு பதில் சொல்லுங்கள். நம்பிக்கையுள்ளவராக வாழுங்கள். உங்கள் இதயமே மேலான ஆசான். காலம் என்பதே உங்கள் ஆசிரியன். நல்ல நூல் என்பது இந்த உலகமேயாம். உண்மையான நண்பர் கடவுளே!

## 12. கிறித்துவ மதம்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யூத மதம் தனது குறிக்கோளின் உச்சியிலிருந்து குப்புற விழுந்து விட்டது. சீலங்குலைந்த பாதிரிமார்கள் சாத்திரங்களை தவறாகப் பயன்படுத்தி மக்களைத் தீய பாதையில் திருப்பிவிட்டனர். ஆலயங்

களை பணம் சம்பாதிப்பதற்கும், பேரம் பேசும் இடமாகவும், பொருள்களை வாங்கி விற்கும் விற்பனைக் கூடங்களாகவும் மாற்றினர். இத்தகைய இக்கட்டான நேரத்தில் ஒரு மாபெரும் சமயச் சீர்திருத்தவாதியின் தேவை இன்றியமையாததாயிற்று. அந்த நேரத்தில் மக்களை நற்பண்புகளுக்கான பாதையில் வழி நடத்திச் செல்லும் நிலைமை அத்தியாவசியமாக இருந்தது!

கிறித்துவ போதகர் இயேசுநாதரிடம் இதற்கான தலைமைச் சிறப்பு மேலோங்கி விளங்கிற்று. ஜோசப்- மேரி ஆகிய இருவருக்கும் பெத்லேகேமில் இயேசு பிறந்தார். ஜோசப் ஒரு தச்சர். பாலஸ்தீன் நாட்டு யூதர். நயவஞ்சகப் பாதிரிமார்களின் எண்ணங்களுக்கு ஊறுவிளைவிப்பதாக இருந்தது இயேசுவின் போதனைகள். அவர்கள் இயேசுவை தவறான பழிகளைச் சுமத்தி முடிவில் சிலுவையில் அறைவதில் வெற்றி பெற்றனர். தர்மத்தின் (நேர்மையின்) பாதைக்காக இயேசு தன் உயிரையே பணயமாக்கினார். ஆயினும் தனக்குப் பின்னால் தான் விட்ட பணியைத் தொடரப் பன்னிரண்டு சீடர்களை விட்டுச் சென்றார். இந்தச் சீடர்களுங்கூட மிகுந்த வேதனைகளை அனுபவிக்க நேர்ந்தது. இருப்பினும் அவர்கள் தங்கள் குருவினிடமும், அவருடைய போதனைகளிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அவருடைய போதனைகளை அவர்கள் வெகுதூரத்து தேசங்களிலும் சென்று தீவிரமாகப் பரவச்செய்தனர்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளே கிறித்துவ மதம் எனும் பெயருடன் தோன்றியது.

## போதனைகள்

செய்த குற்றத்திற்கு வருந்துங்கள்; சொர்க்கம் கைக்கெட்டும் தூரத்துக்கு நெருங்கி வரும். ஏழைகளின் ஆன்மா ஆசிகள் பெற்றவை. அவர்களுக்கு சொர்க்கமே சொந்த பூமி. நொந்து அழுகிறவர்களுக்கு இறைவன் ஆசிகள் நிச்சயம். அவர்களுக்கு ஆறுதல் கிடைப்பது திண்ணம். நலிந்தவர்களும் நல்லாசி பெற்றவரே. இந்தப் பூமியே அவர்களின் பாரம்பரியச் சொத்து. நல்லதையே செய்து பசிக்கும், தாகவிடாய்க்கும் ஆளானவர்களுக்கு இறைவன் ஆசிகள் நிறைய உண்டு. அவர்கள் வயிற்றை நிரப்புவது அவசியம். கருணையுள்ளம் கொண்டவர்களுக்குக் கடவுள் ஆசி கிட்டும். இறைவன் கருணை பெற்றே ஆக வேண்டும். தூய இதயத்தினர் மேலானவர்கள்; ஏனெனில் அவர்கள் இறை தரிசனம் பெற்றவர்கள். அமைதி நிலவச் செய்யும் காப்பாளர்கள் சான்றோர். அவர்களைக் கடவுளின் குழந்தைகள் என்றே அழைக்க வேண்டும். நேர்மைக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள், இறைவனின் கருணைக்கு ஆளானவர்களுக்கு சொர்க்கத்தில் மட்டுமே இடம்.

என்னைச் சாக்காக வைத்து யாராவது உன்னை வைதும், கொடுமைப்படுத்தியும், எல்லா

வகையிலும் துன்புறுத்துவர்களேயானால் கருணைக்கு ஆளானவர் யாருமே இல்லை.

முன்காலத்தின் அறவுரையை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள், கொல்வது கூடாது என்பதை! ஆனால் நான் கூறுவதையும் கேட்பாய்!

'காரணமில்லாமல் தன் சேராதனிடம் கோபப் படுபவனுக்கு ஆபத்தான தண்டனை கிடைப்பது நிச்சயம். தன் சோதரனை தரக்குறைவாகப் பேசுப வனுக்கு ஊர்கூடி தண்டனை தரும். அவனைப் பார்த்து நீ முட்டாள் என்று சொல்பவன் நரகத் தீயில் தள்ளப்படுவான்.

கடைசியாக இறைவன் திருவடியில் உன் காணிக்கையைக் கொண்டு செலுத்தும்போது உன் சோதரன் உனக்கெதிராக வந்து நிற்பது நினை வுக்கு வரும். உன் காணிக்கையை கடவுளுக் கெதிரிலுள்ள தட்டில் வைத்து விடு. வந்த வழியே போய்விடு. முதலில் உன் சோதரனோடு சமா தானம் செய்து கொள். பிறகு வந்து உன் காணிக் கையைச் செலுத்து.

நீங்கள் விபச்சாரம் செய்வது கூடாது. ஒன்று மட்டும் உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன். யார் ஒருவன் ஒரு பெண்ணை காம இச்சை கொண்ட பார்வையும் பார்த்தானாயின் தன் சூக்கும உடலால் அவளோடு கள்ள உறவு பூண்டதாக ஆகிவிடும்.

எப்போதும் சத்தியம் செய்வது கூடாது! சொர்க்கத்தின் மீது ஆணையிடுவதைத் தவிர்த்து

விடுங்கள். ஏனெனில் அது கடவுளின் சிங்காதனம்; பூமியை சாட்சியாக்காதே! அதுவே அவன் பாதம் பதிந்த இடம்!

கெடுதியை எதிர்க்காதே! யாராவது உனது வலக் கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் பணிவுடன் காட்டு! யாராவது உன் மீது நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு உனது சட்டையைப் பறித்துக் கொண்டால், அவனை உனது மேலங்கியையும் எடுத்துக்கொள்ளச் சொல்!

உன் எதிரிகளிடம் அன்பு காட்டு! உன்னை சபிப்பவரை ஆசி கூறுவீர்! உம்மை வெறுப்பவருக்கும் நன்மை செய்யுங்கள். உம்மை இழிவாக நடத்துபவருக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களைத் தண்டிக்க விரும்புபவருக்காகவும் பிரார்த்தனை செய்வீர்.

நீங்கள் தருமம் செய்யும்போது அதை விளம்பரப்படுத்தாமல் செய்யுங்கள். வழிபாட்டுத் தலங்களிலும், தெருவீதியிலும் நயவஞ்சகர்கள் விளம்பரப் படுத்திக் கொள்வதுபோல் தம்பட்டமடிக்காதீர். நாலு பேர் புகழ வேண்டுமென்ற ஆசை அவர்களுக்குத் தேவை. நீங்கள் பிச்சையிடும்போது வலது கை செய்வது இடது கைக்குத் தெரியக் கூடாது.

நீங்கள் வழிபடும்போது வஞ்சகர் பாணியில் பிரார்த்தனை செய்யாதீர்! பூசை அறைக்குள் சென்றதும் கதவை மூடிக் கொண்டு ஆண்டவனிடம் பிரார்த்தியுங்கள்.

உலகத்தில் உங்களுக்காகப் பணத்தைச் சேர்த்து வைக்காதீர்! அதைச் செல்லரித்துவிடும். பாசை படிந்து பாழாகிப் போகும்! திருடர்கள் பூட்டை உடைத்துக் களவாடிச் செல்லக் கூடும். எப்போதும் உன் சொத்தின் மீதே உன் கவனம் இருக்கும். கடவுளைப் பற்றிய நினைவு அற்றுப் போகும். பூசைகளுக்கும் நேரமிராது. எப்போதும் உன்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டும், எதைச் சாப்பிடுவது எதைப் பருகுவது என்ற கவலையுட னிருக்காதே!

உன் உணவு, உடல், உடையைவிட வாழ்வு உயரியதல்லவா?

முதலில் கடவுள் ஆட்சி புரியும் நாட்டைப் பற்றித் தெரிந்து கொள். அவருடைய உத்தமத் தன்மை யைப் புரிந்து கொள். இவை அனைத்தையும் உன்னிடம் ஐக்கியப்படுத்திக் கொள்.

மற்றவன் கண்ணில் உள்ள களங்கத்தை ஏன் உற்றுப் பார்க்கிறாய்? அது உன் பார்வையின் குற்ற மாக இருக்கலாமல்லவா?

புனிதமானவற்றை நாய்களுக்குத் தராதே. முத்துக்களை பன்றிகளின் முன்னால் வீசி எறிந்தால் அவை அதை மிதித்து நாசப்படுத்தி உன் மீதே பாய வரும். வேண்டுவன கேளுங்கள். அது உங்களுக் குத் தரப்படும்! தேடினால் தேடுவது கிடைப்பது உறுதி. தட்டுங்கள் திறக்கப்படும்.

விதைப்பவனுக்கு மட்டுமே அறுவடை பலன் கிட்டும்.

மேன்மேலும் பாபம் செய்ய வேண்டாம். ஒரு பாபம் மற்றொரு பாபத்தை விளைவிக்கும்.

ஒட்டகம் வேண்டுமானாலும் ஊசியின் காதில் நுழைந்துவிடுமே தவிர, பணக்காரன் கடவுளிடம் நெருங்குவது கடினம்.

உன்னைப் போலவே அயலானையும் நேசி. பொன்னால் அர்ச்சனை செய்வதைவிட மனம் உருகிப் பிரார்த்திப்பதே மேலானது.

நாம் உறைவதும், பழகுவதும், உயிர் வாழ்வதும் கடவுளிடமே! நாம் அவருடைய குழந்தைகள் தானே!

உங்களுக்குள்ளேயே கடவுளின் சாம்ராஜ்யம் இருப்பதைப் பாருங்கள்! சொர்க்கம்—நரகம் இரண்டுமே உமது இதயத்தில்தான் இருக்கிறது. நல்ல உள்ளமே கடவுளின் இருப்பிடம்.

### 6. நாம் கூறும் முடிவுகள்

முன் பக்கங்களில் உலகின் பல்வேறு மதங்களைக் குறித்துச் சொன்னோம். அவற்றைச் சரிவரப் புரிந்து கொள்ள அவற்றின் சாத்திரங்களிலுள்ள போதனைகளையும், கருத்துகளையும் மேற்கோளாக எடுத்து விளக்கினோம்.

இந்த அத்தியாயத்தில் அனைத்து மத போதனைகளின் கருத்துகளைக் கோர்வைப்படுத்தி, ஒப்பிட்டு விளக்கி, சில குறிப்பிட்ட தெளிவான முடிவு களைத் தேர்ந்தெடுப்போம்.

கீழ்வரும் அடிப்படை நோக்கங்களை உலகி லுள்ள அனைத்துச் சாத்திரங்களும் ஒப்புக்கொள் கின்றனவா என்பதைக் கண்டறிவதில் எந்தவிதச் சிரமமும் இருக்காது. நேரத்தை வீணாக்கவும் தேவையில்லை.

1. மேலான பரம்பொருள் ஒன்று உண்டு. அதுவே முடிவான பேருண்மை எனும் கடவுள் அல்லது பிரம்மம்.

2. அந்தக் கடவுளே சகுணமானது (உருவமுடை யது) நிர்க்குணமானதுங்கூட (அருவமானது.)

3. அது நிரந்தரமானது. முடிவே இல்லாத ஒன்று. மாற்றமற்றது. எங்கும் வியாபித்து நிற்பது. அசைவற்றது. பிறப்பற்றது, வளர்ச்சி இல்லாதது. அழிவற்றது. இறப்பற்றது, ஆண் பெண் பேதமற்றது. சர்வ வல்லமையுடையது, சர்வ வியாபகமானது, சர்வ ஞானமும் நிரம்பி யது. இரண்டாவதற்ற ஒன்றே ஒன்று.

4. அந்தக் கடவுளே இந்த அகண்டத்தின் மூல காரணன். அவருடைய எல்லையற்ற ஆற்றல் அல்லது சக்தியே உயிராகவும், மனமாகவும், தூல வடிவமாகவும் பரிணமிக்கிறது. மேலும்

இந்த அகண்டத்தின் மாபெரும் ஆதார தத்துவ மாகவே விளங்குகிறது.

5. தனி உயிர் அல்லது பிராணன் அல்லது உயிர்ச் சாரத்தின் ஆத்மா அல்லது சீவன் என்பது ஒன்று உண்டு. அதுவே உயிர் வாழ்வதற்கான காரணப் பொருள்.

6. ஆன்மா உயிருள்ள உடலின் அதிபதி. அதன் எண்ணம், செய்கைகளுக்கான கருவிகளாக இருப்பவை மனம், அறிவு (புத்தி), உள் ளுணர்வு, அகந்தை, மனக்கோப்பு (சித்தம்) ஆகும். இவையே ஐந்து தூல ஐந்து சூக்குமப் புலன்கள் ஆகும்.

7. மனத்தின் கண் மாசுடனிருந்தால் அதுவே அறியாமை. பந்தம், துன்பங்களுக்கு காரண மாக அமைகிறது. மாசற்ற தன்மையே மோட்சம் அல்லது ஆன்ம விடுதலையை அளிக் கிறது. எண்ணம், சொல், செயலில் காமம், கோபம், பேராசை, சோகம், கர்வம், வெறுப்பு, பாசம், பொறாமை, பொய் பேசுதல், களவு, சுயநலம், விபச்சாரம், பணம் சுருட்டல், கயமை போன்றவையே பாபத்திற்கான காரணங் களாக இருப்பவை. இந்த பாப குணங்களே மனத்தை மாசுபடுத்துகின்றன. இந்த மன மாசே ஒருவருடைய பேருண்மை நிலையை மறக்கடிக்கிறது.

8. எண்ணம் சொல் செயலில் உண்மையே பேசு தல், அன்பு காட்டுதல், எல்லா உயிர்களையும் நேசித்தல், அறம் செய்தல், சுயநலமின்மை, கற்பு நெறி, கள்ளாமை, கொல்லாமை, புறத் தூய்மை, கடவுளை வழிபடுதல், பெற்றோருக் கும், ஆசானுக்கும் (குரு), நோயாளிகளுக்கும், ஆதரவு தேவையுள்ளவருக்கும், பெரியோர் களுக்கும் உதவுதல், சான்றோர்களுக்குப் பணிந்து போதல், தன்னடக்கமும், மன ஒழுக்க மும் பேணுதல், ஜபம் (கடவுள் நாமாவை உச்சரித்தல்), தியானம், மனக்கட்டுப்பாடு, வழிபாடு போன்ற நற்குணங்கள் பயின்றால் அவருக்கு மனத் தூய்மை கிட்டுகிறது. இறைக் காட்சியும், ஆன்ம விடுதலையும் சித்திக்கிறது.

9. பொதுவில் எல்லா மனிதர்களுக்குமே அவதரித் தல், மறுபிறவி, கர்மபலம் (காரண காரியம், செய்கை விளைவும் பலனும்) தவிர்க்க முடியா தவை. ஒருவர் எதை விதைக்கிறாரோ அதையே அறுவடை செய்கிறார். கடந்த காலத்திய நமது ஆசைகள், எண்ணங்கள், செயல்களால் உருவாக்கப்பட்டவர்களே நாம். நம் எண்ணத்தின் விளைவே நாம். மொத்தத் தில் மனிதன் தன இன்ப துன்பங்களுக்கு அவனேதான் காரண கர்த்தா; கடவுளல்ல. அதனால்தான் இவ்வுலகில் இவ்வளவு பெரிய வித்தியாசங்கள்.

10. ஒவ்வொரு மதம், தேசம், இனத்தில் ஏதாவ தொரு சாதி இருக்கவே செய்கிறது.

தற்போது மேற்கூறிய எல்லாக் கருத்து களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொண்டு அதைப் புரிந்து கொள்ள முற்படு வோம்.

## 1. கடவுள்

உலகிலுள்ள பல்வேறான அனைத்துச் சாத்திரங் களுமே கடவுள் உண்டு என்பதை ஏற்றுக் கொள் கின்றன. இந்தச் சாத்திரங்களெல்லாமே உலகின் பேரறிவு படைத்த ஞானிகளால் கூறப்பட்டவை. இப்பேரறிவாளர்கள் தூய்மை, புனிதம், சீலம் மிக்கவர்கள். அவர்களுக்கு மேலான பேருண்மைப் பொருளுடன் நேருக்கு நேர் பேசும் தொடர்பு

சமாதிப் பேற்றை எய்திய சீவன்முக்தர்கள். அவர்கள் எந்த ஒரு ஆண் அல்லது பெண்ணுக்கும் இறைக்காட்சி கிடைத்தே தீரும் என்று கூறுகின் றனர். அதை அடையும் வழியை அவரவர்களே வகுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவனோ அல்லது அவளோ வகுத்துள்ள நியதிக்குட்பட்டே அந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். கடவுள் உண்டு என்பது ஒரு புதிரோ கதையோ அல்ல. பலவீனர்களாலோ, அஞ்ஞானி ராலோ பயம் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட

ஒன்றல்ல. உண்மை என்னவெனில் பயந்தவன், பலவீனன், அஞ்ஞானி ஆகியோருக்கு எந்த ஒரு மத நம்பிக்கையும் கிடையாது. அத்தகையவனுக்கு இறைக் காட்சி குறிக்கோள் எண்ணமே எழாது.

உண்மையான சமயப் பற்று பயில்வதற்கும், இறை தரிசனம் பெறும் பேற்றைப் பெறவும் ஒரு உண்மையான வீரன் அல்லது வீராங்கனையா லேயே இயலும்.

கடவுள் உண்டு என்பது அனுபவத்தாலும் நிரூபணமாகியுள்ளது. உண்மையிலேயே கடவுள் ஒன்றே எல்லாவற்றையும்விட பேருண்மை யானது.

ஒன்றுமில்லாததிலிருந்து ஏதாவது ஒன்று வர முடியாது. அவ்வாறு வந்த அந்த ஒன்றிலிருந்தே முழு அகிலாண்டமே தோன்றியது. அதையே கடவுள் என்கிறோம்.

சில பலவீன மனம் படைத்தவர்கள் இந்த அகண்டம், ஜடசக்தி ஜடப்பொருளின் சேர்க்கையில் பிறந்தது என நினைக்கிறார்கள். இது போன்ற முடிவு அப்பட்டமான முட்டாள்தனத்தையே காட்டு கிறது. அஞ்ஞானக் கூற்றேயாகும்.

அறிவிழந்த நிலை, ஜடப் பொருள், சக்தி, ஜடம், இணைந்து எப்படி உயிர்ச்சாரத்தையும் அறிவு நிலையையும் (ஞானத்தை) தோற்றுவிக்க முடியும்? ரயில்கள், மோட்டார்கள், விமான ஊர்திகள் போன்ற இயந்திரங்கள் தமக்குத்தாமே

மனிதனுடைய அறிவுத் திறனின்றி ஓடுவதோ பறப்பதோ இயலக்கூடுமோ? மேலும் தாவரத்திலிருந்து மனிதன் வரையுள்ள பலதரப்பட்ட உருவங்களை நாம் பார்த்தோமானால் அவற்றின் அமைப்பு எவ்வளவு அறிவு பூர்வமானதாகவும், சந்தம் பிசகாமலும், மாற்றமடையாமலும் காலகாலமாக தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. உண்மை என்னவோ ஜடப் பொருள் மட்டுமே இத்தகைய அற்புதங்களை ஆற்றுவதில்லை. மேலும் கூறுவோமாயின் அறிவுத்திறன் கொண்ட உயிர்களையும் உயிர்ச்சார வாழ்க்கையையும் தோற்றுவிக்கவே முடியாது.

கடவுளை நம்பாத அற்ப மனிதனுங்கூட தன்னுள் உயிர் இருப்பதை மறுக்க முடியாது. அவன் தன் சொந்த உயிரையும் உயிர்ச்சாரத்தையும் இல்லையென்று சொல்ல முடியாது. அவன் உள்ளான். அவனிடம் புத்திசாலித்தனம் பரிணமிக்கிறது. அவன் வாழ்கிறான், உணர்கிறான் என்பதற்கு என்ன ஆதாரம் வேண்டும். அதில் ஒன்றுமே இல்லையே? ஆதாரம் கேட்பது அப்பட்ட முட்டாள்தனந்தான்.

சரிவரப் புரிந்து கொள்ளாததின் காரணமே கடவுளை மறுப்பதும், நரகத்தில் உழல்வதுமாகும்.

ஒவ்வொரு உயிரிலும் உள்ள அந்தராத்மாவின் குரலும், தூய உயிர்ச்சார நிலையுமே கடவுள். கடவுள் எங்கும் நிறைந்திருப்பவர் என்று கூறிவிட்ட பிறகு கடவுள் இன்றி ஏதுமில்லை என்பது

தெளிவாகி விடுகிறதல்லவா? கடவுள் எங்கும் இருக்கிறார் எதிலும் இருக்கிறார். அவர் தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம். அதனால் ஒவ்வொரு உயிரிலும், உயிர்ப் பொருளிலும் உள்ளிருக்கும் உயிரும், தூய உயிர்ச்சாரமும் கடவுளே. கடவுளன்றி எதுவும் உயிர்வாழ முடியாது. ஏதேனும் கடவுளின்றி வாழ முடியும் என்றால் கடவுள் எங்கும் நிறைந்தவர், நிரந்தரமானவர், முடிவேயற்றவர் போன்ற மறை விளக்கங்கள் பொருளற்றவையாகி விடும்.

## 2. கடவுளின் உருவங்கள்

கடவுள் சகுணமானவர் (உருவமுள்ளவர்) நிர்க்குண மானவர் (அருவமானவருங்கூட). கடவுள் உருவம் கொண்டவர். அவருக்கு உருவம் என்பது இல்லாமல் இருப்பதும் உண்டு. உதாரணத்திற்கு நீராவியை எடுத்துக் கொள்வோம். சாதாரணமாக நம் பார்வைக்கு நீராவி புலப்படுவதில்லை. ஆனால் அந்தச் சூக்கும நிலையிலிருக்கும் நீராவி குளிர்காற்று பட்டதும் குளிர்ந்து உறைந்து மேகமாகவும், மழையாகவும், பனிக்கட்டியாகவுங் கூட உருமாற்றம் பெறுகிறது. சூக்கும நீராவி பல்வேறு உருவங்களை அடைகிறது. அதே போல் கடவுள் தன்னை வழிபடுபவர்களின் பக்தி நிலைக்கேற்ப பலதரப்பட்ட உருவங்களில் தோன்றுகிறார். ஒரு பக்தரின் தூய ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கூடிய வழிபாடு கடவுளின் அருவ நிலையை உறையச்

செய்து அதற்கு ஒரு உருவத்தை உண்டாக்கு கிறது. பக்தன் விரும்பிய உருவத்தில் கடவுள் தரிசனம் (இறைகாட்சி) தருகிறார். அதே பக்தன் நிர்விகல்பசமாதி நிலைக்கு உயரும்போது உருவ மற்ற கடவுளின் தரிசனம் அவருக்குக் கிட்டுகிறது.

ஒவ்வொருவரும் சரியான பாதையைப் பின் பற்றிச் சென்றால் இத்தகைய பேருண்மை அனு பவத்தை நிச்சயம் பெற முடியும்.

## 3. கடவுளின் குணாதிசயங்கள்

கடவுளைப் பற்றிய மனித மனத்தின் உயரிய கருத்து சத் — சித் — ஆனந்தம் அல்லது உயிர்ப்பு, மெய்யறிவு, பேரானந்தம் ஆகும். இந்தக் கருத்துங் கூடச் சரியானதன்று. இது எல்லையற்றதற்கு எல்லை வகுப்பது போன்றதாகும். இதன்றி வேறு வழியில் விளக்க இயலாது.

கடவுள் எங்கும் வியாபித்து இருப்பவர். நிரந்தரமானவர். முடிவற்றவர். மாற்றமற்றவர். அசைவற்றவர். பிறப்பற்றவர். வளர்தலற்றவர். அழிவற்றவர். மரணமற்றவர். ஆண்—பெண் பேத மற்றவர்.

காரணங்களுக் கெல்லாம் காரணமானவர். எல்லா உயிர்களின் உயிரானவர். எல்லாப் பொருள் களுக்கும் பொருளானவர். உண்மையென்னவோ கடவுளை இல்லையென்று கூறமுடியாது. அவரைக் காணமுடியாது. ஒன்றைக் காண்பது என்றால் அதற்கு ஓர் உருவம் கொடுத்தாக வேண்டும்.

அந்த உருவத்தை விமர்சித்தால் அதற்கு ஒரு எல்லை வகுப்பதாகிவிடும். கடவுள் எல்லாப்பொருள் களுக்கும் பொருளானவரெனில் நாம் எப்படி அவரை உருவகித்துக் காண முடியும்? அது நடக்க முடியாதது. ஆகவே கடவுளுக்கு மட்டுமே அவர் யார், அவர் இல்லாத நிலை என்ன என்பது தெரியும். அவர் வருணனைக்கு அப்பாற் பட்டவர். வேறுவகையில் சொல்வோமாயின் கடவுள் நாம் அறிந்த நிலைக்கு அப்பாற்பட்டவர். அவர் நம்முள் உள்ளிருப்பவர். நமக்குள் இருக்கும் உயிர்ச்சாரமே அவர். கடவுளின் இது போன்ற நிலையை நிர்விகல்ப சமாதியின் போதே தெள்ளத்தெளிய உணரமுடியும்.

கடவுளுக்கு ஆண் பெண் பேதம் கிடையாது. ஒவ்வொரு உயிரிலுமுள்ள உயிர்ச்சாரம், உயிர் அல்லது சீவன் ஆணுமல்ல — பெண்ணுமல்ல. ஆண் பெண் வித்தியாசம் உடலைப் பொறுத்த அளவில்தான். அதற்கான பேத உணர்வு மனத்தில் மட்டுமே. கடவுள் ஆண்—பெண் பேதமற்றவரா யினும் அவர் தனது பக்தனின் விருப்பத்திற்கேற்ற ஆண் அல்லது பெண் உருவத்தில் காட்சியளிக் கிறார். அதனால் கடவுளை அவன், அவள் அல்லது அது என்றெல்லாம் கூறுகிறோம்.

## 4. இந்த அகிலத்திற்கு கடவுளே மூலகாரணம்

கடவுள், அகிலம் ஆகிய இரண்டைக் குறித்தும் இரண்டு கொள்கைகள் உள்ளன.

இதில் ஒன்று இருநிலைக் கொள்கை. இதன் படி கடவுள் தன் எல்லையற்ற ஆற்றலினால் இந்த அகிலத்தைப் படைத்து, நிலைபெறப் பாது காத்து மீண்டும் அதன் முடிவில் அதை அழித்து விடுகிறார்.

அல்லது அவர் அகிலத்தைப் பரிணமிக்கிறார். மீண்டும் உள்வயப் படுத்திக் கொள்கிறார்,

ஒரு நிலைக் கொள்கைப்படி கடவுளின் ஆற்றல் அல்லது சக்தி உயிர்ப்பு, மனம், சடமாகப் பரிணமித்து நாம் காணும் அகிலமாகத் தோன்று கிறது. மீண்டும் அந்த ஆற்றல் அகிலம் முழுமை யும் மிக நுட்பமான உருவில் வியாபித்துள்ளது.

இந்த இரு கொள்கைகளின் ஆழத்துக்குள் சென்று ஆராய்ந்தால் ஒரே அர்த்தத்தைத்தான் அது தருகிறது.

கடவுள் இந்த அகிலத்தைப் படைக்கிறார் என்னும்பொழுது, கடவுள் தம்முடைய எல்லை யற்ற ஆற்றலினால் இதைச் செய்து முடிக்கிறார் என்பது மறுக்க முடியாத சான்று. அதன் பொருள் கடவுளின் ஆற்றல் அல்லது சக்தி வெளிப்பட்டு இந்த அகிலமாக உருவெடுக்கிறது என்பதாகும். மற்றொரு கருத்து என்னவெனில் கடவுளின் ஆற்றலே இந்த அகிலத்தின் பரிணாமத் தோற்றம். இவ்விரு விஷயங்களிலும் கடவுள் இந்த அகிலத் தின் மூல காரணர் என்பதாகும். இந்த இருவேறு சித்தாந்தக் கருத்துக்களும் கடவுள் எங்கும்

வியாபித்து நிற்பவர் என்றே சொல்கிறது. அவ்வா றெனில் கடவுள் படைக்கப்பட்ட பொருளிலும் உள்ளார் என்று அர்த்தம். இந்த அகிலத்தில் கடவுள் இல்லாத பொருள் ஏதுமே இல்லை. இதன் விவரத்தை மேலும் ஒரு உதாரணத்தால் விளக்கு வோம்.

சூரியன் இருக்கிறது. அதிலிருந்து புறப்படும் எண்ணற்ற ஒளிக்கதிர்கள் இந்த அகிலம் முழுவதை யும் வளைக்கும் அளவுக்கு நாலா திசைகளிலும் பரவுகின்றன. அந்தக் கதிர்கள் சூரியனிலிருந்து மேலும் மேலும் விலகி வெகுதூரம் சென்றவுடன் தனித்தனி ஒளிக்கதிர்களாகின்றன. ஒவ்வொரு கதிரும் மற்றதில் இருந்து தனியாகி விட்டதாகப் புலப்படுகிறது. அவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. உண்மை என்னவோ அவற்றுக்கெல்லாம் மூலம் சூரியனே. அதேபோல் படைப்பு முழுவதுமே கடவு ளிடமிருந்து வருகிறது. கடவுளில் நிலைத்து நீடிக் கிறது. முடிவில் கடவுளில் கரைந்து விடுகிறது.

இந்தப் படைப்பு பொய்யா? கடவுளே அல்லது கடவுளின் சக்தியே இந்த அகிலமாக உருவெடுத் துள்ளது எனும்போது அது எப்படிப் பொய்யாகும்?

இந்த அகிலம் பொய்; கடவுள் மட்டுமே உண்மை என்று சொல்வோமாயின் அப்படிச் சொல்வது எதைப்பற்றி? பெயர்களும், உருவங் களும் அடிக்கடி மாறிக் கொண்டேயிருக்கும் எதுவும் பொய்யானதேயன்றி வேறல்லவே? ஆக பெயர்

களும் உருவங்களும் மட்டுமே பொய். நாம் இந்தப் பெயர்களையும் உருவங்களையும் அப்புறப்படுத்தி விட்டுப் பார்ப்போமாயின் மீதமுள்ளது கடவுள் மட்டுமே. இதுபோன்ற மாறிக்கொண்டே வரும் பொருள்களுக்குப் பின்னால் மாறாத ஒன்று இருக்கவே செய்யும். அத்தகைய மாற்றம் பெறாமல் நீடித்துநிற்கும் பொருளையே கடவுள் என்கிறோம். இத்தகைய பாவம் வெறும் கற்பனையல்ல. அதுவே உண்மை. எல்லா முனிவர்களும் மத நிறுவனர்களும் இந்தப் பேருண்மையை உணர்ந்தவர்கள். நாமும் உண்மையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து வாழ்வோமாயின்—ஏன் ஒவ்வொருவரும் இந்த அனுபவத்தைப் பெறமுடியும். தூய வாழ்வுடன் சாதனையை (ஆன்மீகப் பயிற்சி)ப் பயின்று நிர்விகல்ப சமாதிப் பேற்றை எய்தலாம்.

ஒருவன் எல்லா ஆசைகளையும் துறந்து தன்னடக்கத்தைக் கடைப்பிடித்து நல்லொழுக்கம், கற்புநெறியை மேற்கொண்டால்— ஒழுங்கும் சீர் மிக்க தியானம் மன ஒருமைப் பாட்டைப் பயின்றால் அவர் சமாதிப் பேற்றை (நிர்விகல்ப சமாதி நிலையை) எய்தலாம்.

நிர்விகல்ப சமாதி நிலையில் மனம் மேலான பரம்பொருளில் ஒன்றுகிறது. பொருள், உருவம். அதைப் பற்றிய விவரம் எல்லாமே மறைந்து விடுகிறது. பிறகு எஞ்சி நிற்பதே தன்னில்தானான உயிர்ச்சார மகா சமுத்திரமே.

இத்தகைய சமாதி நிலையில் படைப்பு, படைத்தவன் பந்தம்—பந்தமற்றவன், துன்பம், இன்பம் போன்ற எந்தவித முரண்பாட்டு நிலையும் இருக்கவே இருக்காது.

இத்தகைய சமாதி நிலையில் ஒன்றே ஒன்று தான் நிலைத்து நிற்கிறது. அதுவே பிரம்மம் அல்லது கடவுள்.

ஒருமுறை நிர்விகல்ப சமாதி நிலையை எய்திய பிறகு அவர் திரும்பி உலகாயத உறவு நிலைக்கு இறங்கி வந்ததும், இந்தப் பெயரும் உருவமும் கொண்ட அகிலத்தை பார்க்கும் பார்வையின் கோணம் மாறுபடுகிறது. இவ்வுலகத்தைப் பற்றிய எண்ணம் முழுமையாக வேறுபடுகிறது. அவர் வேற்றுமையில் ஒற்றுமையைப் பார்க்கிறார். அவர் ஒவ்வொரு பெயருக்கும் உருவத்திற்கும் பின்னால் கடவுள் அல்லது பிரம்மத்தையே காண்கிறார். அப்படிப் பட்டவருக்கு இந்த அகிலம் முழுவதுமே கடவுள் தோற்றமாகவே புலப்படுகிறது. கடவுள் மட்டுமே காட்சியளிக்கிறார்!

இந்த ஒரு முடிவை மட்டுமே வைத்துக் கொண்டு பார்த்தாலே அத்வைத தத்துவம் (கடவுளின் ஒரு நிலை) எங்கும் எதிலும் கடவுள் அல்லது பிரம்மமே இருக்கிறது என்று பறைசாற்றுகிறது. உலகம் பொய், அது மாசுமிக்க, அறிவீனமான அழுக்கடைந்த மனத்தின் பிரதிபலிப்பேயன்றி வேறேதுமில்லை. மாசும் அறிவீனமும் மிக்க மனம் ஒன்றைக் காண்பதற்குப் பதிலாக பல

வற்றைப் பார்க்கிறது. அது தோன்றி மறையும் புலன் பொருள்களையும், மாறிக் கொண்டே வரும் உருவம், பெயர்களையும் உண்மையான அகிலம் என்று நினைத்து விடுகிறது. அந்த நினைப்பில் அதைப் பற்றிக் கொள்கிறது. கடவுள் காட்சியை இழந்து நரக வேதனையையே அனுபவிக்கிறது.

உண்மை என்னவோ எங்கும், எப்பொருளிலும் கடவுளெனும் கடவுள் மட்டுமே நிலைத்து நிற்கிறார். அந்தக்கடவுள் ஒரே ஒருவர்தான்.

5. எல்லா மதங்களுமே ஆன்மா அல்லது ஜீவன் இருப்பதை ஒப்புக் கொள்கிறது.

ஒவ்வொரு உயிரிலும் உள்ள உயிர்த் தத்துவம் எனும் தூய உயிர்ச்சாரத்தை பல்வேறு பெயர் களிட்டு அழைக்கிறோம்.

ஜீவாத்மன்
ஜீவன்
தன்னுணர்வு
ஆத்மா
ஆன்மா
என்பன ஆகும்.

மூச்சுள்ள உடல் ஒவ்வொன்றிலும் சீவனே அரசோச்சுகிறது! எங்கெல்லாம் உயிர் உள்ளதோ அங்கெல்லாம் இந்த ஆன்மா உள்ளது. ஆன்மா இல்லாத உயிர் இல்லை. எங்கும் வியாபித்து

நிற்கும் கடவுள் ஒரு உடலுக்குள் உறைந்திருக்கும் போது அதையே சீவன் அல்லது ஆன்மா என்கிறோம்.

உதாரணத்திற்கு ஒரு காலி குடத்தைச் சுற்றி லும் ஆகாசம் (பரவெளி) சூழ்ந்துள்ளது. அந்த ஆகாசம் அதாவது பரவெளி குடத்தினுள்ளும்

ஆகாசம் என்னும் பரவெளி குடத்தின் உள்ளும் புறமும் இருப்பது ஒன்றே! ஆயினும் நாம் அதை வேறுபடுத்திக் கூறுகிறோம். ஒன்றை மகா ஆகாசமென்றும் (எங்கும் வியாபித்து நிற்கும் ஆகாசம்) மற்றதை குடாகாசம் என்றும் (குடத்தினுள் இருக்கும் ஆகாசம்) அழைக்கின்றோம்.

இதேபோல் எங்கும் நிறைந்திருக்கும் கடவுள் அல்லது பிரம்மம் ஒர் உயிருள்ள உடலில் இருக்கும் போது அதைத் தனி உயிர் (இது 'தான்' உள்ள அகந்தை அல்ல — ஆனால் தூய அகம் உடையது) என்றழைக்கிறோம். இதுவே ஆன்மா' எனும் 'ஆத்மன்.'

ஒருவர் நிர்விகல்ப சமாதி நிலையை எய்தும் போது தனிமனித உயிர் தூய்மை அடைந்து நுட்பமாகி மிக உயரிய உயிர்ச்சாரத்தில் ஒன்று கிறது. இதையே தன்னில் தானான உயிர்ச்சார மகாசமுத்திரத்தில் ஒன்றும் நிலை என்கிறோம்.

நிர்விகல்ப சமாதிநிலை எய்திய பிறகு அதிலிருந்து மீண்டு திரும்பி உலகாயத உறவு நிலைக்கு ஒருவர் இறங்கி வருகிறார். அவர் தன்னை ''நானே பிரம்மம்! நானே மேலான பரம் பொருள்! நானே சத் — சித் — ஆனந்த பிரம்மம்! எல்லாம் நானே!'' எனலாம்

வர்ணனை அலங்காரச்சொல் அல்ல! இது தந்திர மொழி அல்ல! இது அப்பட்டமான உண்மை! பட்டப் பகல் போன்ற வெட்ட வெளிச்ச மான உண்மை!

ஒவ்வொரு ஆணும், பெண்ணும் உன்னத அனுபவத்தைப் பெற முடியும். இது ஒவ் வொரு உயிரின் பிறப்புரிமை!

இதில் ஒளிவு மறைவு இல்லை!

யார் ஒருவர் இதை அடையப் பாடுபடு கின்றாரோ அதற்கான சரியான பாதையில் உண்மையுடன் உழைப்பாரானால் அது அவருக்கு கிடைத்தே தீரும்!

**6. ஒவ்வொரு உயிரிலும் ஒரு ஆன்மா, மனம், புத்தி, உள்ளுணர்வு (இச்சை, அகந்தை, சித்தம் (மனக்கோப்பு) உள்ளன.**

முந்தைய விளக்கத்தில் ஒவ்வொரு உயிரிலும் ஓர் ஆன்மா உள்ளது. அந்த ஆன்மாவே அனைத் தையும் ஆளும் ஏகசக்கராதிபதி என்று கூறினோம். அது உடலில் ஒரு சாட்சியாகவே இருந்து கொண்

டிருக்கிறது. அது வளர்வதும் இல்லை. சாவதும் இல்லை. ஒரேநிலையில் உள்ளது. பிறப்பு இறப்பு உடல் புலன்களைமட்டும் சார்ந்தவை. ஆன்மாவின் பிரதான கருவி மனம். மனத்தின் பல்வேறு செயல்களே புத்தி, இச்சை, அகந்தை, சித்தம் (மனக் கோப்பு) ஆகும்.

மனம் ஒரு உருவம் அல்லது பொருளைப் பகுத்தறிந்து அதன் விவரத்தைப் புரிந்துகொள்ளும் நிலையையே புத்தி என்கிறோம்.

மனம் ஒன்றைச் செயல்படுத்தி இயக்குவதையே உள்ளுணர்வின் ஆற்றல் (இச்சை) என்கிறோம்.

மனம் உடலையே 'தான்' என நினைப்பதே அகந்தையாகும்.

அனைத்து அனுபவங்களையும் தன்னுள் சேமித்து வைத்திருந்து தேவைப்படும்போது நினைவில் தரும் மனச் செய்கையையே 'சித்தம்' என்கிறோம்.

மனமே ஐந்து சூக்கும, ஐந்து தூலப் புலன்களை இடையறாது இயக்கி இந்த அகிலத்தின் எல்லா அனுபவங்களையும் திரட்டித் தருகிறது.

**7, 8, எல்லா மதங்களுமே ஒரே குரலில் அறியாமைக்கும், பந்தத்திற்கும், துன்பத்திற்கும் மாசுற்ற மனமே காரணம் என்று பறை சாற்றுகிறது, மனத்**

தூய்மையே மோட்சம் அல்லது ஆன்ம விடுதலையைத் தருகிறது என்று பகர்கிறது.

தூய்மை, அழுக்காறு என்பவற்றின் பொருள் யாது என்பதை முதலில் காண்போம்.

காமம், கோபம், பேராசை, மோகம், டம்பம், வெறுப்பு, பொறாமை, பற்று, பொய் பேசுதல், திருடுதல், வைதல், தன்னலம். நயவஞ்சகம், கையாடல், சோரம் போன்றவை தீய குணங்கள். இவையே மனத்தை அழுக்கடையச் செய்கின்றன. இவையே பாபக் கிருத்தியங்கள். ஒவ்வொரு மத நிறுவனமும் தங்கள் சீடர்களை இவற்றைத் தவிர்க்க வேண்டுமென உபதேசிக்கிறது.

இந்த பாபச் செயல்கள் மனத்தை மாசுபடச் செய்கிறது. இந்த அழுக்கு ஒருவரைக் கடவுளிடம் நெருங்க விடுவதில்லை. கடவுளை மறக்கவும் செய்து விடுகிறது. அப்படிப்பட்டவன் இவ்வுலகில் சொல்லாணாத் துன்பத்தை அனுபவிக்கிறான்.

இவ்வுலகில் நாம் காணும் வேதனைகள், துன்பங்கள், கவலைகள், துக்கங்கள், துயரங்கள் எல்லாமே ஒருவருடைய பாபக் கிருத்தியங்களின் விளைவே.

மாறாக அனைத்து மதங்களும் தம் சீடர்க நற்பண்புகளை தினந்தோறும் தவறாமல் பழகும் படிக் கேட்டுக் கொள்கின்றன. அவையாவன: உண்மை பேசுதல், கருணை காட்டுதல், கற்புநெறி.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல், அறம், தன்னலமின்மை, கொல்லாமை, கள்ளாமை, மன நிறைவு, சுத்தம், பெற்றோர்களுக்கும் மூத்தவர்களுக்குப் மரியாதைக் குரியவர்களுக்கும் நோயாளிக்கும், ஏழை எளியவர்க்கும் தொண்டு செய்தல், சுயக்கட்டுப்பாடு, தன்னடக்கம், கடவுளைத் தியானித்தல், பிரார்த்தனை, வழிபாடுபோன்றவை.

ஒருவர் மனத்தூய்மையையும் இதயத் தூய்மையையும் அடைந்தவுடன் அவர் மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகிறார். இந்தத் தூய்மை நிலை அவருக்கு மோட்சம் அல்லது ஆன்ம விடுதலைப் பேற்றை அளிக்கிறது.

உண்மையைச் சொல்வோமானால் நீதி நெறிக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதே கடவுளை அடைவதற்கான எளிய வழிமுறை.

எல்லா மதங்களுமே நீதி நெறிக் கோட்பாடுகள் எனும் அடித்தளத்தின் மேல் நிறுவப்பட்டவையே! தன் வாழ்க்கையில் இவற்றைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்காத எவருமே ஆன்மிக முன்னேற்றத்தில் ஒரு அங்குலம்கூட நகர முடியாது!

ஒரு நயவஞ்சகன், பணம் கையாடல் செய்பவன், ஒரு திருடன், பொய் பேசுபவன், விபச்சாரம் புரிபவன் யாருமே இன்பத்தை எய்த முடியாது. கடவுளைப் பற்றிய நினைவே அவர்களிடம் அற்றுப் போகும். அது போன்றோருக்குக் கடவுள் ஈடுபாடு கிடைக்குமாயின் தமது தீய வஞ்சக குணங்களை

உடனே விலக்கிக் கொண்டு தங்கள் பாபச்செயலுக்கு வருந்தி மன்னிப்புக்கோரி சாதனை மேற்கொள்வதற்கான வரந்தர வேண்டுமென மனமாறப் பிரார்த்திக்க வேண்டும். அதன்பிறகே தங்கள் பாபங்கள் விலகி இறையுணர்வுப் பேற்றுக்கு வழி கிடைக்கும்.

உண்மையான இன்பத்திற்கும், மோட்சம் அல்லது ஆன்ம விடுதலைக்கும் பண்பு நிறை தூய புனித வாழ்க்கை மிக மிக இன்றியமையாதவை.

எல்லா மதங்களுமே மனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கான வழிகளை வகுத்தளித்துள்ளன.

விரிவாகக் கூறுவோமாயின் மனத்திற்கு நான்கு பிரதான ஆற்றல்கள் உள்ளன. உள்ளுணர்வின் ஆற்றல், தன்வயப்படுதல், ஆழ்ந்து சிந்தித்தல் ஒருமுகப்படுதல் ஆகும்.

ஒவ்வொருவர் மனத்திலும் இந்த நால்வகை ஆற்றல்களும் உள்ளன. ஆனால் அவை ஒவ்வொருவரிடமும் சமச் சீராக வளர்ச்சி பெற்றிருப்பதில்லை.

பெரும்பாலானோரிடம், ஒரே ஒரு ஆற்றல் மட்டும் மற்ற மூன்றையும் ஆக்கிரமித்து நிற்கும். இவ்வாறு ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலுக்கேற்ப ஒருவர் மனத்தை தூயதாக்கி கட்டுப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட வழியை பின்பற்றுகிறார். மனத்தின் இந்த நால்வகை ஆற்றல்களுக்கேற்ப மதநிறுவனங்கள் நால்வகை பிரதான வழிகளை

வகுத்துத் தந்துள்ளன. அவை செய்யும் தொழில், பக்தி, தத்துவம், மனக்கட்டுப்பாடு ஆகும்.

உலகிலுள்ள எல்லா மதங்களுமே தம் சீடர்களை இதில் ஒன்று அல்லது எல்லாப் பாதைகளையுமே பின்பற்றச் செய்கின்றன. அவ்வாறு பின்பற்றும்போது முழு ஈடுபாட்டுடன் கூடிய நம்பிக்கையுடன் மனத்தைக் கட்டுப்படுத்தி மனமாசுகளைக் களைந்து இறையுணர்வை எய்தத் தூண்டுகிறது.

9. **எல்லா மதங்களும் மறுபிறவி, சொர்க்கம்—நரகம், கடவுளின் அவதாரம் அல்லது அருளாளர்கள், கர்மம் அல்லது கர்மபலன் (செயலும் அதன் விளைவும்) என்பனவற்றை ஒப்புக் கொள்கின்றன.**

அனைத்து மதங்களும் மறுபிறவியை ஆமோதிக்கின்றன. ஒருவர் சமாதி அல்லது மோட்ச கதியை எய்தாத வரைக்கும் அவர் இவ்வுலகிலோ அல்லது வேறு உலகத்திலோ பிறக்கிறார்.

நற்பண்புள்ள மனிதனும், நல்ல புகழ் வாய்ந்தவரும் சொர்க்கத்திற்குச் செல்கிறார்கள். அங்கே நீண்டகாலம் வசிக்கிறார்கள். அவர்கள் ஈட்டிய நற்பண்புகளைச் சிலவழித்த பிறகு இவ்வுலகத்திற்கே மீண்டும் வந்து பிறக்கிறார்கள்.

மோட்சம் அல்லது ஆன்ம விடுதலை எய்த நிர்விகல்ப சமாதிப் பேற்றைப் பெற வேண்டும். அதுவே பிரம்மஞான நிலை.

சொர்க்கத்திலிருந்து வந்து பிறப்பவர்கள் நல்ல பக்தியுள்ள செல்வம் மிக்க குடும்பங்களில் தோன்றுகிறார்கள். அவர்களுக்கு நல்ல சூழ்நிலையும், திடகாத்திரமான உடலமைப்பும், புத்திக்கூர்மையும் அமைகின்றன. அத்தகையோர் தங்களுக்கான பாதையை எளிதாக வகுத்துக் கொள்கிறார்கள். கடினமாக உழைத்து சமாதி நிலையை எய்துகின்றனர்.

அத்தகைய பிறவிகள் அபூர்வம். அவர்கள் தமக்கே உரித்தான சிறப்புடையவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் மற்ற சாதாரண மனிதர்களைப் போலன்றி மிக்கதூய, இலட்சிய, உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். அவர்களே மனிதகுலத்தை வழி நடத்தும் உண்மையான ஆசான்கள். மாறாக— நடத்தை குறைந்த பாபிகள் இறந்தவுடன் நரகத்திற்குப் போகிறார்கள் அல்லது கீழினத்தில் பிறக்கிறார்கள். துன்பம், வறுமை கலந்த வேதனையுடன் வாழ்கின்றனர்.

எல்லா மதங்களுமே கடவுளின் அவதாரம், அருளாளர்களின் தோற்றம், இறை தூதுவர்களின் பிறப்பு போன்றவற்றை ஒத்துக் கொள்கின்றன. கடவுளே இறங்கி வந்து பிறக்கிறார் எனவும், அல்லது தர்மத்தை (நேர்மையை) மீண்டும் நிலை நிறுத்தி மக்களை நேர்மையான பாதையில் வழி நடத்திச் செல்ல ஒரு உத்தமர் தோன்றுகிறார் என்பதையும் ஆமோதிக்கின்றன. இவ்விரண்டு கருத்துக்களுமே ஒன்றையே குறிக்கின்றன. நிறை

குணம் மிக்கதொரு உத்தமன் பிரம்மத்தை அறிந்தவன் ஆனதால் பிரம்மமாகவே ஆகிறான் என்று கூறப்பட்டுள்ளது. அத்தகைய குணவானுக்கு தனக்கென எந்த ஒரு தனிப்பட்ட பாதையும் கிடையாது. அவரிடம் அகந்தைஅற்றிருக்கும். பாபக்கிருத்தியங்களும் இருக்காது. அவர் தூய்மையாளர். எல்லா வகையிலும் நிறை மனிதர். முழுக்க முழுக்க அவர் கடவுளில் ஐக்கியப்பட்டவராகி விடுகிறார். அல்லது கடவுளாகயே தோற்றமளிக்கிறார். அது போன்ற ஒருவருக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் கிடையாது. இதுபோன்ற சான்றோர்கள் கடவுளின் அவதாரங்கள், அருளாளர்கள், இறைதூதர்களுமாவர். இவர்களே அவரவர்க்கான பாதைக்கேற்ற பல்வேறு மதங்களை நிறுவியவர்கள்.

இவர்கள் அனைவருமே நிர்விகல்ப சமாதிப் பேற்றைப் பெற்றவர்கள். அத்தகைய மேலான நிலையை எட்டியபிறகு மனித குலத்தை உய்விப்பதற்கான புதிய கொள்கையுடன் உலகிற்கு இறங்கி வந்து உலகாயத உறவை ஏற்படுத்திக் கொண்டவர்கள். அகந்தையற்ற புனித எண்ணத்தால் தர்மத்தை (நேரிய பாதையை)நிலை நாட்டியவர்கள்.

புத்தர்பிரானை பத்து அவதாரங்களில் ஒருவராக (விஷ்ணுவின் அவதார ருபங்கள்) கருதுகிறோம். அவர் தனது வாக்கில், தான் இதற்கு முன்னர் இருபத்து நான்கு பிறவிகள் எடுத்து

அனைத்துப் பிறவிகளிலும் மக்கள் சேவைக்கே தன்னை அர்ப்பணித்து விட்டதாகவும் கூறியுள்ளார்.

இது எதைக் காட்டுகிறது? அவதாரங்கள் (கடவுளின் மறு அவதாரம்), இறை தூதுவர்கள், தெய்வ மனிதர்கள் போன்றோர் ஆன்ம நிலையில் உன்னதமானவர்கள். இவர்கள் முற்பிறவிகளில் கடுமையான சாதனை செய்தவர்கள். முடிவில் தூய, புனித, செல்வச் செழிப்பு மிக்க குடும்பங் களில் வந்து பிறந்தவர்கள். அத்தகையோர் புனித மிக்க தூய அப்பழுக்கற்று வாழ்ந்தவர்கள். இடை யறாத சாதனையில் நிர்விகல்பசமாதி நிலை எய்தி மனித குலத்தின் உத்தமத் தலைவர்களாகத் திகழ் பவர்கள். அவர்கள் எண்ணிக்கையில் ஒரு சிலரே!

கர்மம், கர்மபலன் (செயல் — அதன்விளைவு) என்பது வேறு. இவற்றை எல்லா மதங்களுமே ஏதாவது ஒரு வகையில் ஏற்றுக் கொள்கின்றன.

வினையும் விளைவும், செயலும் அதன்பயனும் என்பவற்றை எவருமே தவிர்க்க முடியாது.

ஆசைகள், எண்ணங்கள், சொற்கள், செயல் களை விதைக்கும் ஒருவர் அதை அனுபவித்தேயாக வேண்டும்.

நல்லதும், புனிதமானதும், மேன்மை மிக்கது மான ஆசைகள், எண்ணங்கள், சொற்கள், செயல் களால் ஒருவருக்கு ஆனந்தம் கிட்டுகிறது.

மாறாகக் கொடிய பாபமிக்க ஆசைகள். எண்ணங்கள், சொற்கள், செயல்களால் ஒருவருக்கு இழிநிலையும், துன்பமும் நேரிடுகின்றன. நாம் கடந்த கால ஆசைகள் எண்ணங்கள், சொற்கள், செயல்களால் உருவாக்கப்பட்டவர்கள். நாம் எதை நினைக்கிறோமோ அதுபோலவே ஆகிறோம்.

அகிலத்தில் நாம் காணும் கேடுகள், புகள், துன்பங்கள், வேதனைகள் எல்லாமே அனைத்து உயிர்களின் பாபச் செய்கைகளால் உருவாக்கப்பட்டவை.

சில உயிர்களின் ஆனந்தம், செல்வச்செழிப்பு எல்லாம் அவற்றின் கடந்த கால நற்காரியங்களின் நல்லாக்கமே!

இந்த அகிலத்தில் காணப்படும் வித்தியாசங்களுக்கு தனிப்பட்ட உயிர்களிடையே இருக்கும் இழிநிலையும், மதிப்புயர்வுமே காரணம். இதில் கடவுளின் பங்கு ஏதுமில்லை.

தன் அதிர்ஷ்டம்-துரதிர்ஷ்டத்திற்குக் காரணம் மனிதன் தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்வது தான்!

மனிதன் தன்னை திருத்திக் கொள்வதற்கும், மாய்த்துக் கொள்வதற்கும் அவனே காரணம்.

நன்னடத்தை, சிறந்த நினைப்பு, நற்செய்கை போன்றவற்றைக் கடைப்பிடிப்பதால் தானே தன்னைத்திருத்திக் கொள்கிறான். நிரந்தரமானசாந்தி, ஆனந்தம், ஆன்மவிடுதலை அவனுக்கு கிட்டுகிறது.

ஆனால் அவன் பாதைமாறிச் செல்வானாயின் ஒழுக்கமற்ற, தலைகுனிவைத்தரும் விபச்சார, பாபக்காரியங்களைச் செய்கிறான். நரகத்திற்கான வழியை தானே தேடிக் கொள்கிறான். இதையே கர்மம், கர்மபலன் என்கிறோம்.

''விதியை மாற்ற முடியாது. இதுவே விதி என்பதைத் தவிர்க்க இயலாது''என்பது முதுமொழி. ஒவ்வொரு செய்கையின் விளைவையும் அறுவடை செய்தே தீரவேண்டும்.

## 10. சாதி.

அனைத்து மதங்களுமே ஏதாவதொரு வகையில் சாதியைச் சார்ந்தே உள்ளன.

சாதி எப்படி வளர்ந்து சீர்குலைகிறது என்பதையும் காண்போம்.

ஒரே மாதிரியான சுவை, குணம், தன்மை, போக்கு உள்ளவர்கள் ஒரே குழுவினராக ஒன்று சேர்கின்றனர். இது போல ஒன்று சேர்ந்த குழுவே ஒரு சாதியாக அமைகிறது. இது இயற்கையின் போக்கு!

நமது ஆராய்ச்சியைத் தாதுப் பொருள்களில் துவங்குவோம்.

பலதரப்பட்ட பிரிவினங்கள் தத்தமக்கான தோற்றத்துடன் தனித்தனியாகச் சேர்ந்து காணப் படுவதைப் பார்க்கலாம்.

இவ்வுலகில் எத்தனையோ வகை மண் பாங்குகள் உள்ளன. இவைகள் தமக்கே உரித்தான தனிப்பிரிவுகளாக விளங்குகின்றன.

சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே ஒரு குறிப்பிட்ட தன்மையுள்ள மண்வகை இருக்கிறது. இந்தவகை மண்ணை வேறுவகை மண்ணுடன் கலக்க முயல்வோமாயின் அது எளிதில் முடிவதில்லை. அவற்றை மேலும்மேலும் கலந்து குழைத்தோமானால் வலுமிக்கமண் தரங்குறைந்த மண்ணை தன்னுள் உறிஞ்சிக் கொள்கிறது. இந்தக்கலவை புதிய ரக மண்ணாக உருவாகிறது.

ஒரு ஆற்றுப் படுகையை உற்றுப் பார்ப்போமாயின் அங்கே கூழாங்கற்கள், மணல், பல்வகை மணல் வகைகள் தனித்தனி அடுக்குகளாகப் பிரிந்து படிந்திருப்பதைக் காணலாம். அவை ஒன்றுடனொன்று கலப்பதில்லை. தெளிந்த மணல் ஓரிடத்தில் மட்டும் தனியாகக் குவிந்திருக்கும். வேறுவகை மணல் வேறோரிடத்தில் தங்கியிருக்கும். கூழாங்கற்கள் மற்றோரிடத்தில் தனி இனமாகப் படிந்திருக்கும்.

அதேபோல் பொன், வெள்ளி, இரும்பு, பித்தளை போன்றவைகளும் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே காணப்படும்.

சாதி என்பது மண்ணிலும் தாதுப்பொருள்களிலும்கூட அதற்கான பாங்கில் இருக்கவே செய்கிறது என்பது தெளிவாகிறது.

இப்போது தாவர இனத்தைப் பார்ப்போம். இயற்கையாக வளரும் காடுகளையும், தாவரங்களையும் பார்ப்போமாயின் சில குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள தனிப்பட்ட மண்பாங்கில் மட்டுமே சில குறிப்பிட்ட புல், மூலிகை, அல்லது தாவரவகைகள் வளர்வதைப் பார்க்கலாம். வேறுவகை புல் பூண்டுகள் அங்கே வளர்வதில்லை. ஆக தாவர இன வாழ்விலும் சாதி வரையறை இருக்கவே செய்கிறது.

எறும்புகள், ஈக்கள், குளவிகள் போன்ற பூச்சி இனங்களைப் பார்ப்போம். இவற்றில் சாதிபேதம் மேலும் ஒரு படி உயர்ந்து காணப்படுகிறது.

எறும்புகள், ஈக்கள், குளவிகள் எல்லாமே தத்தமக்கான தனித்தனி இடங்களில் வசிக்கின்றன.

ஒரு இடத்தில் வசிக்கும் எறும்பு, ஈ, அல்லது குளவி மற்றோர் இடத்திற்குச் சென்று வசிக்க அனுமதிக்கப் படுவதில்லை. இரண்டு வெவ்வேறு ஈக்கள் அல்லது குளவிகள் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவையாக இருந்து சந்திக்க நேர்ந்தால் அவை ஒன்றோடொன்று போரிட்டு அழிகின்றன.

எறும்புகள், ஈக்கள் குளவிகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவைகளாயினும் அவற்றுக்குள் தனித்தனிப் பிரிவுகள் வேறு உள்ளன.

ஒவ்வொரு இருப்பிடத்லும் ஒரு ராணி அல்லது ராணிகள் உள்ளன (தேனீக்களுக்கு மட்டும் ஒரே ஒரு ராணி உண்டு, மற்றவைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ராணிகள் உள்ளன).

ராணியே அந்த இருப்பிடத்தின் தலைமை அரசி. அதற்கடுத்து உழைப்பாளிகள். உழைப்பாளிகள் இடையே மூன்று பிரிவுகள் உண்டு. கட்டுமானப் பணியாளர்கள், உணவு தேடிக் கொணர்பவர்கள், இருப்பிடத்தைக் காக்கும். காவலாளிகள் அல்லது வீரர்கள். கடைசியாகச் சோம்பேறிகள் இனமும் உண்டு. அவர்களுக்கு எந்த வேலையும் கிடையாது. ராணியோடு கூடவே இருப்பது அவற்றின் வேலை. பல்வகைப் பிரிவுகளாலான இந்த ஈக்கள், எறும்புகள், குளவிகள் எல்லாமே தங்கள் கடமைகளைத் தவறாது செய்கின்றன. ஆக புழு பூச்சிகளிலுங்கூட சாதி ஏற்பாடு விஞ்ஞான ரீதியில் வளர்ச்சி பெற்றிருப்பதைப் பார்த்தோம்!

பறவைகளுக்கு வருவோம். பல்வேறு இனப் பறவைகள் தத்தமக்கான பிரிவுகளாகப் பிரிந்து வாழ்கின்றன. ஒரு இனத்தைச் சேர்ந்த பறவைகள் மற்றொரு இனத்துடன் எளிதில் கலந்து வாழ்வதில்லை. பறவைகளிலும் சாதிப் பாகுபாடு இருப்பது

மிருக சாதியிலும் இனப் பாகுபாடு உண்டு. பல்வேறு காட்டு மிருகங்கள் — அதாவது மான்கள்

காட்டெருமைகள், யானைகள் பல்வகை குரங்குகள் தத்தமக்கான தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து வாழ்கின்றன.

ஒரே வகையைச் சேர்ந்த ஒரு மிருகம் தனது மந்தையிலிருந்து பிரிந்து வேறொரு மந்தையில் சேர அனுமதிக்கப்படுவதில்லை.

ஒரே இனத்தின் இரண்டு சமவலுவுள்ள மந்தைகளின் மிருகங்கள் சந்திக்கும்போது ஒன்றுடனொன்று கோரமாகப் போரிட்டுக் கொள்ளைதக் காணலாம்.

மந்தையிலுள்ள பலம் வாய்ந்த மிருகம் ஆட்சி செய்கிறது. மற்ற மிருகங்கள் அதற்கு அடங்கிப் போகின்றன.

குரங்குகள் தங்களுக்கே உரித்தான தனிப்பாணிகளை அமைத்துக் கொள்கின்றன. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவன் உண்டு. அதில் ஐம்பதிலிருந்து நூறு வரை இருப்பது மிகப்பெரிய மந்தை. ஒரு பெருந்தலைவரின் கீழ் பல உப தலைவர்கள் இருப்பர். ஒவ்வொரு உப தலைவரும் ஐந்திலிருந்து பத்து வரையிலான குரங்குகளுக்கு (குட்டிகள் பெண் குரங்குகள்) தலைமை தாங்கி வழி நடத்திச் செல்கிறது.

பல பிரிவுகளைச் சேர்ந்த பெண் குரங்குகள் தன் பிரிவின் ஆண் குரங்குகளுக்கு மட்டுமே வேலை செய்யும். கூடிவாழும்.

நீண்ட வாலுடைய குரங்குகள் நாடோடிகளாக வாழ்பவை. இடத்துக்கு இடம் மாறுவதும், ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கு இடம் பெயர் வதும் தமது பெருந்தலைவரின் விருப்பத்திற்கு ஏற்பவே நிகழும்.

சாதி ஏற்பாடு மிருகங்களிடையேயும் காணப்படு வதைப் பார்த்தோம்.

சாதி ஏற்பாடு மனித இனத்தில் விஞ்ஞான ரீதியில் உயர்ந்த ஏற்பாட்டின் கீழ் திகழ்வதைக் காணலாம்.

ஏதாவதொரு உருவில் சாதி ஏற்பாடு அமைந் திராத நாடே இல்லை.

தாங்கள் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் என மார்தட்டிக் கொள்ளும் மக்கள்கூடத் தாமாகவே மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரிந்து காணப்படு கின்றனர். அதாவது செல்வந்தர், நடுத்தர வகுப் பினர், ஏழைகள் ஆகும். எப்போதும் செல்வந் தர்கள் மற்ற செல்வந்தர் கூட்டத்துடன் கலந்து வாழவே விரும்புகின்றனர். ஒரு பணக்காரன் ஏழை யோடு சுமுகமாக கலந்து பழக முடிவதில்லை. அது சிரமமாக இருக்கிறது. ஆனால் மற்ற பணக்காரர் களுடன் கலந்து பழகுவது அவனுக்கு எளிதாகவும், மனநிறைவாகவுகம் இருக்கிறது.

இதே மாதிரி நடுத்தர வர்க்கத்தினரும் ஏழை களுடன் கலந்து உறவாட இயலுவதில்லை. ஒவ்

வொரு வகுப்பினரும் அவ்வாறு பழகுவதற்கு அச்சப் படுகின்றனர்.

ஒரு நடுத்தர வர்க்க மனிதன் சமூக நிகழ்ச்சிகள், திருமணங்கள் பல்வேறு சந்திப்பிடங்களில் தன் போன்ற நடுத்தர வர்க்கத்தினருடன் தாராளமாகப் பழகி உறவாடுகிறான்.

ஒரு ஏழை மற்ற ஏழைகள் மத்தியில் கலந்து பழகுவதில் இன்பம் காண்கிறான். மனித குலத் தவர் இயற்கையிலேயே தத்தமக்கான உறவுகளில் கலந்து பழகி வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து

தொடர்ந்து இந்த மூன்று பிரதான பிரிவினரும் தத்தமக்கான தொழில் அமைப்புகளின் அடிப்படை யில் பல்வேறு இனங்களாகப் பிரிகின்றனர்.

செல்வந்தர், அரசர்கள், பிரபுக்கள், கனவான் கள், துரைகள், தொழில் அதிபர்கள், வியாபாரிகள் என்ற முறையில் அமைகின்றனர்.

நடுத்தர, ஏழை வர்க்கத்தினர் ஆசிரியர்கள், அர்ச்சகர்கள், சிறு வியாபாரிகள், விவசாயிகள், நகைத் தொழிலாளர்கள், தச்சுவேலை செய்பவர் கள், துணி வெளுப்பவர்கள், குப்பை கூட்டுபவர்கள் போன்ற பிரிவுகளாக பிரிகின்றனர்.

உலகிலுள்ள பலதரப்பட்ட மதங்களில் இந்து மதம் மட்டுமே தம் மக்களை நான்கு பிரதான சாதி களாகப் பிரித்துள்ளது. அவை பிராம்மணர்

(அர்ச்சகர்); க்ஷத்திரியர் (ஆட்சிபுரிபவர் அல்லது போரிடுபவர்); வைசியர் (வியாபாரி அல்லது விவசாயி); சூத்திரர் (உழைப்பவர்) ஆகும்.

ஆரியர்கள் நாடோடிகளாக வந்த பொழுது அவர்களிடையே சாதி ஏற்பாடு இருக்கவில்லை. அவர்களின் மக்கள் தொகை மிகமிகச் சொற்பம். அதனால்அவர்களுக்கு அரசனுமில்லை; அரசாங்கமும் இல்லை.

ஒவ்வொரு குடும்பமும் குடும்பத்தின் மூத்தஆண் அங்கத்தினரால் வழி நடத்தப்பட்டது.

குடும்பத்திலுள்ள மற்ற இளம் வயதினர் அவருக்குப் பணிந்து நடந்து கொண்டனர்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு குடும்பத் தலைவர் இருந்தார். இந்தத் தலைவர்களே குடும்பத்தின் அரசனாகவும், சர்வாதிகாரிகளாகவும் திகழ்ந்தனர். எண்ணிக்கையில் அதிகமான குடும்பங்களும், தலைவர்களும் மிகுந்து காணப்பட்டனர். அவர்கள் எல்லோரும் அடுத்தடுத்து இணைந்து வாழ்ந்தனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தவுடன் தங்கள் நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டனர். ஒரே ...ில் குடியிருப்பை அமர்த்திக் கொண்டனர்.

தங்கள் உறவுக் குடும்பங்களைச் சார்ந்த குழுவினர் ஓரிடத்தில் அக்கம்பக்கமாக வசிக்க ஆரம்பித்தனர். நாளா வட்டத்தில் ஒவ்வொரு

குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் மிகுந்து அதிகரித்தன. அதன் பிறகு அவர்களுக்குள்ளே சண்டை சச்சரவுகள் துவங்க ஆரம்பித்தன.

எளிய குடும்பங்கள் வலுவுள்ள குடும்பங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு காலப்போக்கில் ஆக்கிரமிப்பாளர்கள் அரசர்களாகவும், சக்கரவர்த்திகளாகவும் ஆயினர்.

அந்த நிலையிலும் சாதி அமைப்பு அதோடு நிற்கவில்லை. மேலும், பிரிவுகளுக்கு ஆளாகும் நிலையே தொடர்ந்தது.

ஆரியர்களின் ஜனத்தொகை பெருக ஆரம்பித்தது. அவர்கள்பல்வேறுஅரசுகளைஅமைத்தனர். தேசத்தின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியின் போது அறிஞர்கள் மக்களை பல்வேறு வகுப்பினராக பகுக்க எண்ணினர், அத்தகைய பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புமிக்க எண்ணம், கலாச்சாரத்துடன் கூடிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் என்பதே இதன் அடிப்படை நோக்கம். அவ்வாறான உயர் நோக்கத்தின் திசையில் ஏற்படும் வளர்ச்சி தேசம் முழுமைக்குமே சாதகமான வளர்ச்சியை உண்டாக்கும். இந்தக் கலாச்சார பிரிவினை மிகவும் உயரிய விஞ்ஞான ரீதியில் இயற்கைக்கு ஒத்ததாய் அமைந்திருந்தது.

இம்முயற்சி தேசத்தை எல்லா விதங்களிலும் புகழேணியின் உச்சியில் ஏற்றி வைத்தது.

உதாரணமாக நமது பள்ளிகளில் ஆரம்ப நிலையில் குழந்தைகளுக்குப் பல்வேறு பாடங்களைப் போதிக்கிறோம். ஆனால் அவர்கள் உயர்வகுப்புகளுக்குப் போகும்போது அவரவர் திறமை, ஆர்வத்திற்கு ஏற்ப சில குறிப்பிட்ட சிறப்புப் பாடங்களை கற்றுத் தருகிறோம். இதுபோன்ற சிறப்புப் பாடங்கள் போதிக்கும் ஏற்பாட்டின் மூலம் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் செல்லும் போது அங்கு அவர்கள் ஆராய்ச்சி, புதிய கண்டு பிடிப்புகள் போன்றவற்றைப் பயில வழி ஏற்படுகிறது. அதனால் கிடைக்கும் முன்னேற்றம் நாடு முழுவதற்கும் பயன்படுகிறது. இதனாலேயே தற்காலக் கல்வி முறை பல்வேறு கல்வித்துறைகளில் பெரும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

இதுபோன்றதே சாதி ஏற்பாடும்! மாபெரும் அரசனும் ரிஷியுமான (முனிவருமான) மனு என்பவர் இந்த ஏற்பாட்டின் மூலம் அவரவர்களுக்கான கடமைகளை (தர்மத்தை) வகுத்தளித்தார்.

மனு என்பவரே இந்திய சட்டத்தை முதலில் வகுத்தளித்த மாமேதை.

நான்கு வருணங்களுக்கு ஏற்ற தர்மத்தை (கடமையை) வகுத்ததும் இன்றைக்கும் சிறப்பித்துப் போற்றப்படுவதும் மனுஸ்மிருதியே! அந்த நான்கு வருணங்களாவன: பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகியவையே.

இதற்கும் மேல் மனிதனுடைய வாழ்க்கையை மனுவானவர் நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளார். அவை பிரம்மச்சாரி (குருகுல மாணவர்), கிருகஸ்தர் (இல்லறத்தார்), வானப் பிரஸ்தி (ஓய்வு பெற்றவர்), சன்னியாசி (துறவி) ஆகும். இந்த ஒவ்வொரு ஆசிரம நிலைக்கும் கண்டிப்பாகக் கடைப் பிடித் தொழுக வேண்டிய விதிமுறைகளையும் ஏற்படுத்தி யுள்ளார்.

இந்த நால்வகை சாதிகளில் பிராம்மணருக்கு கல்வி பயிலல், தர்மத்தைப் போற்றி வளர்த்தல், மத நம்பிக்கைகளைப் பரவச் செய்தல் ஆகிய கடமைகள் தரப்பட்டன. பிராம்மணன் தூய வாழ்க்கையையும் சுயக் கட்டுப்பாட்டுடன் கூடிய எளிய வாழ்க்கையும், தன்னடக்கடக்கமும் மேற்கொள்ள வேண்டும். அவர் வேதங்களைப் பயின்று தர்மத்தை வாழ்விக்க வேண்டும். அவர் செல்வத்தைச் சேர்த்து வைக்கக் கூடாது. மாறாக அவர் பற்றற்ற வாழ்வை வாழ வேண்டும். தகுதியுள்ள மாணவர்களுக்கு சுதந்திர மான, பேதமற்ற ஆன்மிக ஞானத்தை ஊட்ட வேண்டும்.

பிராம்மணர்கள் மெய்யான தூய வாழ்க்கையை வாழ்ந்தபோது அவர்கள் மிகுந்த ஆற்றல் மிக்கவ ராகவும், போற்றுவதற்குரியவராகவும் எங்கும் திகழ்ந்தனர்.

அரசர்களும் சக்கரவர்த்திகளுங்கூட அவர்களிடம் மிகுந்த மரியாதை செலுத்தினர்.

க்ஷத்திரிய வகுப்பினர் நாட்டை ஆண்டனர். அவர்களிடம் நாட்டின் பாதுகாப்பும் எதிரிகளை முறியடிக்கும் பொறுப்பும் தரப்பட்டன. க்ஷத்திரிய வகுப்பினரே சக்கரவர்த்திகளாகவும், அரசர்களாகவும், போர்வீரர்களாகவும் ஆயினர்.

எதிரிகளோடு போரிடுவதும், நாட்டையும் உடைமைகளையும் பாதுகாப்பதும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும், அமைதியை நிலைநாட்டுவதுமே க்ஷத்திரியர்களின் கடமைகளாயின.

விவசாயம், வியாபாரம், கால்நடை வளர்ப்பு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பது, நாட்டின் செல்வ நிலையை உயர்த்துவது போன்றவை வைசியருடைய கடமைகளாயின.

மூவகை உயர் வகுப்பு மக்களுக்குச் சேவை செய்தல் சூத்திரருடைய கடமையாயிற்று.

இந்தச் சாதிப்பிரிவினை மிகச்சிறந்த முறையில் அமைக்கப்பட்டது.

புராதன காலத்தில் யுத்தம் மூண்டபோது க்ஷத்திரியர்களே போரில் ஈடுபட்டனர். மற்ற மூன்று பிரிவினரும் எந்தவகை பாதிப்புமின்றி அவரவர் கடமைகளைச் செய்வர். போர்நடக்கும் நாட்களில்

இப்போதுள்ளதுபோல் மற்றவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரிடாது.

நான்கு பிரிவினரும் இந்தியாவில் அவரவர்க்கான தர்மங்களை (கடமைகளை) தவறாமல் செய்து வந்தபோது தேசமே செழிப்புடன் இருந்தது. பல்வேறு கலைத்துறைகளில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது. செல்வம் கொழித்தது. உன்னத நிலையை எட்டியது.

சொல்லப் போனால் சாதி ஏற்பாட்டில் இறுக்கம் இல்லை. அது பிறப்பினால் மட்டுமே நிர்ணயக்கப் படவில்லை. ஒருவருடைய தகுதியையும் வைத்தே அது அமைந்திருந்தது.

ஆன்மிகத்தில் உயர்வளர்ச்சி பெற்றவர், ஞானி, ஆழ்ந்தஅறிவுமேதை ஆகியோர் போற்றப்பட்டனர். மேலோர்களாகக் கருதப்பட்டனர். பிராம்மணர் எனவும், பிரம்மரிஷி என்றும் அழைக்கப்பட்டனர்.

காலப் போக்கில் பல்வேறு சாதிப் பிரிவினரின் நிலை சீர்குலைந்தது. சுயநலவாதிகளாயினர். சாத்திரங்களைத் தவறாகப்பயன்படுத்தினர். எல்லா வகை விஷமத்தன்மைகளும் ஊடுருவின. இதன் விளைவாக பிறப்பினால் சாதி என்ற முறை மேலோங்கியது. அதற் கென்றிருந்த மற்றைய விதி முறைகள் புறக்கணிக்கப்பட்டன. ஆதியில் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை சாதிப் பாகுபாட்டின் உயிர்நாடி இருக்குமிடந் தெரியாமல் அழிந்து போயிற்று.

மற்ற இடங்களில் இயற்கையாகவே சாதிப் பிரிவினைகள் எப்படி உண்டாயின என்பதைக் காண்போம்.

விளக்கத்திற்காக நான்கு மகன்களைப் பெற்ற ஒரு விவசாயியை எடுத்துக் கொள்வோம். இந்த நான்கு பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் போக்கிலும் சுவையிலும் மாறுபட்டே இருப்பர்.

அதில் ஒருவருக்கு மதத்திலும் தத்துவத்திலும் ஆர்வம் இருக்கும்.

இரண்டாமவன் அரசியலை விரும்பக்கூடும்! மூன்றாவது மகனை வியாபாரம் கவர்ந்திழுக்கும்.

நான்காமவன் மந்த புத்திக்காரனாயிருப்பினும் கட்டுடல் கொண்டவன். இவன் இயல்பிலேயே கடினமாக உழைப்பவனாக இருப்பான்.

இந்நால்வரும் தங்கள் சொந்த வாழ்வில் மேற்கொள்ளும் வாழ்க்கைமுறை, உடை, உணவு போன்றவற்றில் தனித்தனி பாணியைப் பின்பற்றுவார்கள்.

தத்துவவாதி எளிய, தூய, தியான வாழ்வை மேற்கொள்வான். அவன் தன் ரசனைக்கேற்ற தன்னைப் போன்ற போக்குள்ள பெண்ணையே மணப்பான்.

அரசியலை விரும்பி ஏற்ற இரண்டாவது மகன் பலதரப்பட்ட மக்களுடன் கலந்து பழகுவான். சுறு சுறுப்பான வாழ்க்கையையே வாழ்வான். அவன்

வாழும் வழி, நினைக்கும் நினைப்பு,உடுக்கும் உடை போன்றவை முழுக்க முழுக்க தத்துவவாதி சகோதரனிலிருந்து மாறுபட்டிருக்கும். இவன் திருமணம் ஏற்பதும் தன் போக்குக்கு உகந்த பெண்ணாகவே இருப்பாள்.

மூன்றாவது மகன் பணம் ஈட்டுவதில் குறியாக இருப்பான். அவன் விலைவாசிப் போக்கை முன் கூட்டியே அறிந்து,அதற்கேற்பத் திட்டம்தீட்டி வியாபாரம் செய்து பணத்தைக் குவிப்பான். அவனுடைய நடை, உடை, உணவு, பாவனை முற்றிலும் மற்ற இருவரிடத்திலும் முழுக்க முழுக்க தத்துவவாதி சகோதரனிலிருந்து மாறுபட்டிருக்கும். அவன் இயல்பிலேயே சிக்கனக்காரனாகவும், வாழ்வில் குறுகிய மனப்பான்மை உடையவனாகவும் இருப்பான். அவன் திருமணம் செய்து கொள்ளும்போது தன் குணத்திற்கு ஏற்றவளையே விரும்புவான்.

நான்காவது மகன் கடும் உழைப்பாளி. தூசு, அழுக்கு, வெயில், மழை பாராமல் உழைப்பான். மற்ற மூவரைப் போல் கவர்ச்சியாக இருக்க மாட்டான். அவனால் எப்போதும் பளிச்சென்று உடை உடுக்க முடியாது.

தன் உடன்பிறந்தாரைப் போல் எல்லா சமயங்களிலும் சுத்தமாக இருக்க மாட்டான். அதனால் தன் தொழிலுக்கு ஒத்துவரும் ஒருத்தியையே மனைவியாக ஏற்பான். நாம் எங்கும் இதே போன்ற உண்மை நிலையைத்தான் காண்கிறோம்.

இந்த நால்வகை மனிதர்கள் தம் மனைவி மக்களுடன் மாறுபட்ட விருப்பு வெறுப்புகளுடன், வித்தியாசமான போக்குகள் நிறைந்து இருப்பதால் இவர்களிடையே தாராளமாக கலந்து வாழும் நிலையைக் காண முடியாது.

எந்தச் சமயத்திலும் தனித்தனியே பிரிந்து நிற்பதைப் பார்க்கலாம். தங்கள் பெற்றோர் உயிருருடனிருக்கும் காலம்வரை ஏதோ சில சமயங்களில் ஒன்று திரண்டு காரியமாற்றுவர். தம் தாய் தந்தையர் இறந்தவுடன் இந்த நான்கு புதல்வர்களும் தங்கள் தங்கள் பிழைப்பைக் கோரி மனைவி மக்களுடன் தனித்தனி குடும்பங்களாகப் பிரிந்து விடுவர். சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருவரோடொருவர் கலந்து பழகுவதற்கே வெட்கப்படுவர்.

இவர்களுக்குள் பலதரப்பட்ட வேற்று வித்தியாசங்களிருப்பினும் முதல்தலைமுறைவரை இந்த நான்கு குடும்பங்களுமே ஒரே தாய் தந்தை மக்களென்பதையும் ஒரே சாதியைச் சேர்ந்தவரென்பதையும் நினைவில் வைத்திருப்பர்.

ஆனால் பல தலைமுறைகளுக்குப் பிறகு இவர்கள் தங்களுடைய முதல் மூதாதையர்கள் இன்னார் என்பதை அடியோடுமறந்து போவார்கள். இந்த நால்வகைக் குடும்பத்தாரும் நான்கு சாதிகளாக வளர்ந்து விடுகின்றனர்.

சாதி ஏற்பாடே இல்லாத ஒரு தேசத்தில்கூட ஒரே பெற்றோரின் பரம்பரையினர் பல்வேறு சாதி

களாகப் பிரிந்து போகின்றனர். ஒரு தேச வளர்ச்சி யின் ஆரம்ப கட்டத்திற்கு முன்னர் மக்கள் நான்கு பிரதான சாதிப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். இந்தியாவிலும் கூட சாதி ஒருவருடைய ரசனை போக்கு, தொழில் அடிப்படையிலேயே அமைந்தி ருந்தது.

மனு எனும் மகரிஷி அறிஞர் பலரின் உதவி யுடன் தேசம் முழுவதையுமே நான்கு பிரதான பிரிவு களாக (சாதிகளாக) அவரவரின் குணம், வினை, பிறப்பினால் வந்த போக்குகள், வேலைகளுக்கேற்ப அமைத்தார். அவர்களுக்குத் தனித்தனியே இன்னின்ன தொழில்களென்பதையும் வகுத்தளித் தார். அதை அந்தந்தச் சாதியினர் தம் குலத்திற் கான தொழிலாகக் கடைப்பிடிக்க வேண்டுமென் பதைக் கட்டாயமாக்கினார்.

சாதாரணமாக மனித இனத்தவர் தங்கள் சுயதர்மத்தை (தம் சாதித் தொழிலை) கடைப் பிடித்து ஒழுகினர்.

ஆனால் போற்றத் தக்க குணங்கள் பெற்ற ஆண் பெண் இருபாலரையும் சென்றவிடமெல்லாம் வர யேற்று வாழ்த்தினர், போற்றினர். பிராமணருக் குரிய உயர்ந்த மரியாதை அளித்தனர். இதை நிரூபணம் செய்யும் பல நிகழ்ச்சிகள் உள்ளன.

விசுவாமித்திரர் பிறப்பினால் க்ஷத்திரியர். கடும் தவம் (வைராக்கியம்) புரிந்து நிர்விகல்ப சமாதிப் பேற்றை எய்தினார். அதன் பிறகு பிரம்மரிஷி என்கிற பட்டமும் கிடைத்தது.

வால்மீகி மகரிஷி துவக்கத்தில் ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரர். ஆனால் அவருக்கு ஞானசித்தி கிடைத்த பிறகு அவர் பிரம்மரிஷியானார்! நாரதர் ஒரு வேலைக்காரியின் வயிற்றில் பிறந்தார். அவருக் கிருந்த மேலான ஞானத்தின் காரணத்தாலும், கடவுளிடமிருந்த ஆழ்ந்த பக்தியினாலும் அவருக்கு தேவரிஷி என்ற கௌரவம் அளிக்கப்பட்டது.

வியாசர் ஒரு செம்படவப் பெண்ணின் வயிற்றில் உதித்தவர். ஆனால் தன் சீடர்களின் உதவியால் நான்கு வேதங்களையும், பதினெட்டுப் புராணங் களையும் புத்தக உருவில் கொண்டு வந்தார். இதனால் அவருக்கு உலகத்தின் உன்னதப் பட்டமான ஜகத்குரு (சிறந்த ஆசான் அல்லது உலக ஆசான்) என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது.

இன்றுங்கூட நால் வருணத்தினருமே வியாச பௌர்ணமியன்று (குருபூர்ணிமை என்றும் அழைப்பர்) வியாசரை வழிபடுகின்றனர்.

ஆரம்ப கட்டத்தில் சாதி அவ்வளவு கண்டிப் பானதாக இல்லை.

அப்போது மக்கள் சாதி ஏற்பாட்டின் உயிர் நாடியை நன்றாகப் புரிந்து கொண்டிருந்த காரணத் தால் ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்து கொண் டனர். ஆகவே ஒவ்வொரு சாதியும் தனது சுய தர்மத்தை (குலத்தொழிலை) முழு நம்பிக்கையுடன் தொடர்ந்து கடைப்பிடித்தனர்.

கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறுகிறார்: (அத்தியாயம் III சுலோகம் : 35) அரைகுறையாகச் செய்யும் ஒருவருடைய சொந்தத் தர்மம், பூரணமாக நிறைவேற்றப்படும் அயலாரின் தர்மத்தைவிட மேலானது. தன் சொந்தத் தர்மத்தைக் காக்க உயிர் துறப்பது மேலானது. அயலாரின் தர்மத்தைக் கண்டு அஞ்ச வேண்டும்.

அந்நாட்களிலேயே ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது குடும்பத்தில் பிறப்பதால் மட்டுமே மோட்சம் கிட்டும் என்பதில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒருவர் தன் சொந்தத் தர்மநெறியில் வழுவாமல் நடப்பதாலும், அவர் தன் கடமைகளைச் சரியாகச் செய்வதாலும், சுயக்கட்டுப்பாட்டுடன் கூடிய தூய எளிய வாழ்வை கடைப்பிடிப்பதாலும், ஞானத்தைப் பெற முயல்வதாலும் மட்டுமே மோட்சம் கிட்டும்.

அவர்களுக்கு வாழ்வின் நால்வகைக் குறிக்கோள்களும் நன்றாகத் தெரிந்திருந்தன.

அதாவது, தர்மம் (அறநெறி) அர்த்தம் (செல்வம்), காமம் (இன்பம்), மோட்சம் (ஆன்ம விடுதலை) ஆகும்.

எல்லா இன மக்களும் மோட்சத்தை எய்த முடியும். அவர்கள் தூய புனித வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறப்பதால் மட்டுமே ஒருவன் தூய புனிதவான் ஆகிவிட மாட்டான்.

மோட்சம் எய்தப் பிறப்பு மட்டும் போதாது. தான் செய்யும் ஒரு குறிப்பிட்ட செயலும் போதாது. தூய அறநெறி வாழ்வே இதற்கு வழி வகுக்கும்.

ஒரு பணியைச் செய்வதிலும், தர்மம் செய்வதிலும் அதன் உள் நோக்கம், அதில் உள்ள ஈடுபாடு முக்கியமே தவிர வெளிப்புறப் பகட்டினால் பெற முடியாது.

ஒரு அர்ச்சகரையும், ஒரு குப்பை கூட்டுபவரையும் எடுத்துக் கொள்வோம். அர்ச்சகர் வழக்கம் போல் கோயிலுக்குச் செல்கிறார். எப்போதும் போல் எந்தவித ஈடுபாடுமின்றி அர்ச்சனை செய்து விட்டு வருகிறார்.

ஆனால் குப்பை கூட்டுபவன் அழுக்கும் துர் நாற்றமும் நிறைந்த தெருக்களைக் கூட்டுகிறான். அக்கறையோடு அவற்றையெல்லாம் அப்புறப் படுத்துகிறான்: கடவுள் நம்பிக்கையோடு அப்பணியைச் செய்கிறான். தான் செய்யும் வேலை கடவுளின் வேலை; அதன் விளைவை ஆண்டவனுக்கு அர்ப் பணித்து விடுகிறான்.

இவ்விருவரில் கடவுளுக்கு நெருக்கமானவர், பிரியமானவர், யார்? யாருடைய பணி சிறந்த பணி? நிச்சயமாகக் குப்பைகூட்டுபவனேகடவுளுக்குப் பிரியமானவன்! அவன் பணியே அர்ச்சகருடைய பணியைவிட மேலானது!

ஒருவன் பிராம்மணனாகவோ, க்ஷத்திரியனாகவோ, வைசியனாகவோ அல்லது சூத்திரனாகவோ

பிறக்கக் கூடும். அவன் மோட்சம் எய்துவதற்கு முக்கியமாக உள்ளது தான் செய்யும் கடமையை உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செய்வது. இதயத் தூய்மை, செய்யும் வேலையில் ஒழுங்கு, கடவுளிடம் அன்பு கலந்த பக்தி போன்றவையே.

இதைப் பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் சொல்லி இருப்பதாவது:

''செய்யும் ஒவ்வொரு தொழிலையும் கடவுளுக் காகச் செய்! அவ்வாறு செய்வதில் சொந்தம் பாராட்டி பலனை எதிர்பார்த்துச் செய்யாதே! தொழிலுக்காகவே தொழில் என்று ஒவ்வொரு செயலையும் செய்! தன் குலத்தொழில் (சுய தர்மக் கடமை) எதுவாக இருப்பினும் அதை விருப்பு வெறுப்பின்றிச் செய்! அதே சமயம் தான் செய்யும் கடமையை கிஞ்சித்தும் புறக்கணிப்பது கூடாது.''

''இந்த கருத்தை மனத்தில் கொண்டு பல்வேறு இனத்தவரும் தங்களுடைய தர்மநெறிகளை (பல்வேறு இனங்களுக்கான ஆன்மிகக் கட்டுப்பாட்டு விதிகள்) கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் கடமையை அப்பழுக்கின்றி குறைவாக்கா மல் செய்து முடிக்க வேண்டும். அவர்கள் அனை வருமே எவ்விதத் தங்குதடையின்றி பேரமைதியை யும், பேரானந்தத்தையும் எய்துவர்.''

## பிறப்பினால் சாதி

இந்தியாவில் சாதி ஏற்பாடு கட்டாயப்படுத்தப் பட்ட நிலையில் பல்வேறு இன மக்கள் தத்தமக்கான

கடமைகளை நம்பிக்கையுடன் கடைப்பிடித்தனர். அரசாங்கமும் அதை விதிமுறைப் படுத்தியது.

பல்வேறு இனத்தவரும் தங்களின் கடமைகளை எந்தவித மாற்றமுமின்றித் தவறாமல் செய்து வந்ததால் தேசம் எல்லா வகையிலும் வளர்ச்சி பெற்று செழிப்புடன் விளங்கியது.

ஆரம்ப கட்டங்களில் மூன்று உயர் வகுப்பினரிடையே அதிக வித்தியாசம் இருக்கவில்லை. அதாவது பிராம்மணர், க்ஷத்திரியர் வைசியர்களிடையே அதிக வித்தியாசம் இல்லாமலிருந்தது.

முதலில் ஆதிவாசிகளிடமிருந்தே சூத்திர வகுப்பினர் தோன்றினர். அவர்களை ஆரியர்கள் வென்று அடிமைகளாக வைத்திருந்தனர். இந்தச் சூத்திரரை அடக்கியே வைத்திருந்தனர். மற்ற மூன்று உயர் வகுப்பினருக்கிருந்த சலுகைகள் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

'மனுஸ்மிருதி'யின்படி பிராம்மண க்ஷத்திரிய, வைசிய இனத்தினரின் குழந்தைகள் பூணூல் அணியும் விழாவிற்குப் பின்னர் (பூணூல் அணிந்த பிறகு அவனை திவிஜன்- இரண்டாவது பிறவி என்றனர்.) அவன் புதிய பிறவி எடுத்தவனாக ஆகிறான். அதன் பிறகு (ஆசானுடன்) தங்கி வேதங்கள் பயில வேண்டும். இருபத்தைந்து வயதுவரை கற்ற பின்னர் அவன் விரும்பினால் இல்லற வாழ்வை யேற்கலாம். இன்றேல் ஆயுள் முழுவதும் பிரம்மச்சரிய விரதமேற்று கற்பு நெறியுடன் வாழலாம்.

இந்த மூன்று உயர் சாதியினரின் வாழ்க்கை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பிரம்மச்சாரி மாணவர்); கிருகஸ்தர் (இல்லறத்தார்), வானப் பிரஸ்தம் வனாந்திர(வாழ்க்கை); சந்நியாசி (துறவி) ஆகும்.

சூந்திர வகுப்பினருக்கு இச்சலுகைகள் ஏதும் தரப்படவில்லை. சூத்திரருடைய கடமை மூவகை உயர் சாதியினருக்கும் தொண்டு செய்வது. அவர்கள் வேதங்கள் பயில முடியாது. வானப் பிரஸ்தி ஆக முடியாது. துறவறமும் ஏற்க முடியாது.

இது தெளிவாகக் காட்டுவது என்னவெனில் மற்ற மூன்று மேல் சாதியினரும் ஆரியர்கள் ஆனதால் தங்களுக்கான தனிச் சலுகைகளை அமைத்துக் கொண்டனர்.

அவரவருக்கான குறிப்பிட்ட தர்ம நெறிகளை இம்மூவகை மேல் சாதியினரும் கடைப்பிடித் தொழுகியதால் பல தலைமுறைகளுக்குப் பிறகு அவர்களுடைய பழக்கவழக்கங்களும் முழுமையாக மாறி மூவகை வெவ்வேறான தனித்தன்மைகள் நிலைத்து நின்று விட்டன.

காலப்போக்கில் இம்மூன்று உயர்வகுப்பி னருங்கூட தங்களுக்குள் ஒரு சாதியினர் மற்றொரு வகுப்பினரோடு, ஒட்டி உறவாடி, உணவருந்தி, திருமணம் செய்து கொள்ளும் பழக்கங்களும் கடின மாகி விட்டன.

## சாதியும் பரம்பரையும்

ஏற்கெனவே கூறியுள்ளபடி சாதி ஏற்பாடு கட்டாயப்படுத்தாத நிலையில் இந்தியர்கள் தமது தனித்தனி ரசனைகள், பழக்கவழக்கங்களுக்கேற்ப தமக்கென ஒரு சாதியை வகுத்துக் கொண்டனர்.

ஆனால் சாதி ஏற்பாடு கட்டாயமும் நிரந்தரமும் ஆக்கப்பட்ட பின்னர் ஒரே தந்தையின் புதல்வர்களே தங்களுக்குள் எவ்வளவோ மாறுபட்ட குணங்கள், திறமைகள் இருந்தும் தன் தந்தை செய்த தொழிலையே எல்லோரும் செய்தாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

ஒரு குடும்பம் சில தலைமுறைகள் வரைக்கும் ஒரு குறிப்பிட்ட தொழிலையே தொடர்ந்து செய்வதால் இயல்பாகவே அந்தத் தொழிலின் நுட்பங்களை அறிந்து தேர்ந்து அந்த வம்சாவளியினர் தொழிலில் தேர்ந்த நிபுணர்களாகி விடுவர்!

உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம்.

இரண்டு பையன்கள் உள்ளனர். பத்து வயதுச் சிறுவர்கள். அதில் ஒருவன் கிராமத்தில் வசிக்கும் விவசாயியின் மகன்.

அடுத்தவன் நகரில் வசிக்கும் மருத்துவரின் மகன்.

விவசாயியின் மகன் தன் பெற்றோர்கள் கூடவே இருப்பதால் செடி நடுதல், உரமிடுதல், தண்ணீர்

பாய்ச்சுதல் போன்றவற்றை எளிதில் தெரிந்து கொள்கிறான். பல்வகைச் செடி கொடி பெயர்களை யும் அறிந்து கொள்கிறான். ஆனால் அவனிடம் வானொலி, திரைப்படம், வியாபாரம், மருந்து வகைப் பெயர்கள் போன்றதைக் கேட்டால் புரியாது விழிப்பான்.

மாறாக மருத்துவரின் மகன் சில முக்கியமான பெயர்களைச் சொல்வான். வானொலி, தொலை பேசி போன்றவற்றை விளக்குவான். செடி கொடி கள், அவற்றை வளர்த்தல் போன்றவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாது!

இதே போல் பிராம்மணச் சிறுவன் வழிபாடு, மதம் ஆகியவற்றை எளிதில் கற்றுக் கொள்கிறான்.

ஒரு அரச குமாரன் தனது பெற்றோர்களிட மிருந்து எப்படி அரசோச்சுவது, மக்களின் முன் எவ்வாறு அரசனுக்குரிய கம்பீரத்துடன் தோன்று வது என்பனவற்றை அறிந்து கொள்கிறான்.

ஒரு வியாபாரியின் மகன் பொருள்களை வாங்கி விற்றுப் பணம் சம்பாதிக்கும் வித்தையை எளிதில் கற்றுக் கொள்கிறான்.

ஆகவே சாதி ஏற்பாடு கட்டாயம் நீதி நெறி யாக்கப்பட்ட நிலையில் அதை அளித்த சட்ட நிபுணர் நம் தேசம் எல்லா வகையிலும் வளர்ந்து செழிப்புற பெரும் பங்காற்றினார்!

பிராம்மண இனத்தவர் பல தலைமுறைகள் வரை இடையறாது உண்மையுடன் தங்கள் ஸ்வதர்மத்தை (சாதிக்கடமையை) கடைப்பிடித்து ஒழுகினர். அதனால் உலகத்திற்கு உன்னதமான தத்துவங்களை— வேதம், வேதாந்த உருவில் வழங்கினர்.

பிரமிக்கத்தக்க தத்துவம், சமயம், இரண்டையும் அளித்த அவர்கள், ஆயுர் வேதத்தில் மருந்து வகையில்புதிய கண்டுபிடிப்புகளையும்,கணிதம்,வரை கணிதம் பின்ன எழுத்துக் கணிதம், வானியல் போன்ற துறைகளில் அ ய கண்டுபிடிப்புகளையும் உலகுக்கு அளித்தனர்.

க்ஷத்திரியர்கள் போர்க்கலையில் நல்ல முன்னேற்றங் கண்டனர். நிர்வாகத் துறையில் புதிய உத்திகளைக் கையாண்டனர்.

வைசியர்கள் வணிக த் துறையில் முன்னேறினர். உலகின் பல பாகங்களுடன் தொடர்பு கொண்டு வர்த்தகம் செய்து நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கினர்.

துவக்கத்தில் நால்வகைச் சாதியினரும் கடுமையாகவும் உண்மையாகவும் பாடுபட்டனர். தேச வளத்தைப் பெருக்கினர். பல தலைமுறைகள்வரை பிராம்மணர்களின் அதிகாரமே நாட்டை ஆட்சி புரிந்தது.

ஆனால் நாடு அளவுக்கு மீறிய செல்வச் செழிப்பை அடைந்ததும் மக்கள் சுகமாக இருப்ப தோடு புலன் போகங்களில் காலங் கழித்தனர்.

பிராம்மணர்களுங்கூட எளிமையைக் கடைப் பிடிப்பதை மறந்து போயினர். உயரிய நோக்கங் களையும் மறந்தனர். காமினி காஞ்சனையில் கவனத்தைத் திருப்பினர்.

இந்த வீழ்ச்சியின் காரணமாக வேதங்களின் ஞான காண்டம் (வேத உபநிடதங்களின் அறிவுத் தெளிவு) புறக்கணிக்கப்பட்டது. கர்ம காண்டத்திற்கு மட்டுமே (கிரியைகளுக்கான நெறிமுறைகள்) முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக யாகங்களும், யக்ஞங்களும் (வேள்விகளும்) நடை முறைக்கு வந்தன.

அரசர்களும், செல்வச் சீமான்களும் சுயக்கட்டுப் பாட்டையும் மனக்கட்டுப்பாட்டையும் பயில்வதை விடுத்தனர். பொருளை வாரி இறைத்து யக்ஞங் களையும் செய்து சொர்க்கத்திற்கான அனுமதிச் சீட்டை சுலபமாகப் பெறும் வழியைப் பின்பற்றினர். இதுபோன்ற யாக-யக்ஞங்களின் மூலம் பிராம்மணர் கள் ஏராளமான செல்வத்தைத் திரட்டினர். அதன் விளைவாக செல்வந்தர்களாயினர்; தன்னலக்காரர் களாயினர். கீழ்த்தரமான ஆபாசங்களில் ஈடுபட்டனர்.

இதனால் தங்கள் ரசனைச் சுவைகளுக்கேற்ப சாத்திரங்களின் உட்கருத்துக்கு தவறான விளக்கத்தைக் கற்பித்துக் கொண்டனர். அதனால் மக்களை தவறான பாதையில் திசை திருப்பி விட்டனர்.

ஆதியிலிருந்த சாதி ஏற்பாட்டின் உட்கருத்து மக்களுக்கு விளங்காத இருட்டடிப்பு நிலைக்கு ஆளாயிற்று· நாளடைவில் சாதி ஏற்பாடு நரக வேதனை ஆயிற்று!

பிராம்மண ஆதிக்க வீழ்ச்சிக்குப் பின்னர் க்ஷத்திரியரின் அதிகாரம் சில தலைமுறைகளுக்கு மேலோங்கி இருந்தது. அதன் பிறகு காலம் செல்லச் செல்ல அந்த ஆதிக்கமும் மறைந்து அந்த இடத்தை வைசியரின் அதிகாரம் பற்றிக் கொண்டது. இப்போது பல தலைமுறைகளாக வைசியரின் அதிகாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் இப்போது முடியும் கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

சூத்திரரின் ஆதிக்கம் விரைவில் வருவதற்கான பக்குவம் கனிந்து விட்டது. அது நம் கண்ணுக்கெட்டும் தூரத்தில் வந்து கொண்டிருப்பது தெரிகிறது. இந்த அதிகாரம் உச்சகட்டத்தை அடையும்போது அது எல்லாக் கலாச்சாரங்களையும் அழித்துவிடும். ஆனால் இதன் ஆதிக்கமும் ஒரு முடிவுக்கு வந்தே ஆகவேண்டும். பிறகு மீண்டும் மறு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டே தீரும்.

ஆகவே ஒருவருடைய சாதியைத் தீர்மானிக்க வேண்டுமாயின் மூன்று தன்மைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவருடைய பாரம் பரியம், சுற்றமும் நட்பும், திறமையும் ஆகும்.

ஒரு குழந்தை தனது பெற்றோரிடமிருந்து சில நல்லதும் தீயதுமான குணங்களை பரம்பரையாகப் பெறுகிறது. இத்தகைய பரம்பரைக் குணங்கள் ஒரு குறிப்பட்ட அளவுக்கு அதனுடைய நடத்தையை உருவாக்குகிறது.

இரண்டாவதாக ஒருவன் தன்னுடைய பண்பு களை சூழ்நிலைகளுக்கேற்ப வளர்த்துக் கொள் கிறான். சரியான சூழ்நிலையை அமைத்துக் கொள்வதன் மூலம் பரம்பரை பழக்கவழக்கங் களைக்கூட அடியோடு மாற்றி விடலாம்.

கடைசியாக இயற்கையாக அமைந்துள்ள திறமையும், அறிவுக்கூர்மையும் அவனிடம் வெளிப் படும்.

ஒரே பெற்றோரின் குழந்தைகளிடம் ஒரே மாதிரி யான பாரம்பரியமும் சூழலும் அமைந்திருந்தாலும் பண்புகளும் ரசனைப் போக்குகளும் பல்வேறு வழி களில் வளர்ச்சி பெறுவதைக் காணலாம்.

அறிவுக்கூர்மை என்பது முற்பிறவித் தொடர் பினால் இயல்பாக அமைவது. அதாவது கர்ம பலனின் விளைவு (கடந்த கால வாழ்வின் பலன்).

மொத்தத்தில் கடவுளின்றி மனிதன் வாழ முடியாது.

கடவுளில்லாத வாழ்வு துடுப்பு இல்லாத படகு போன்றது. அத்தகைய வாழ்வு எப்பொழுதும் வேதனைக் குரியதாகத்தான் இருக்கும்.

கண்டிப்பாக மனிதன் கடவுள் இல்லையென்று மறுக்க முடியாது. கடவுளை மறுப்பவன் தன்னையே இல்லை என்று சொல்வது போன்றதாகும். இது நடவாதது!

இந்த அகிலம் முழுவதின் செயற்பாடுகளின் இயக்கத்தைக் கூர்ந்து கவனிப்போமாயின் ஆனந்தம், ஆன்ம விடுதலை இரண்டையும் தேடியே அவை நகர்வது தெரியும்.

ஆனந்தம், விடுதலைக்கான போக்கு ஒரு சாதாரண புல்லிதழிலும் படிந்திருப்பதைக் காணலாம்.

ஆனால் ஓர் உயிரானது தனது போக்கைத் திசை மாறிய வழியில் செலுத்துவதால் மகிழ்ச்சிக்குப் பதிலாக கட்டுத்தளையை ஏற்படுத்திக் கொள் கிறது.

ஒரு சாதாரண மனிதன் செல்வத்தைச் சேர்ப் பதாலும் போகங்களைத் துய்ப்பதாலும், பெயர் புகழை ஈட்டுவதாலும் ஆனந்தத்தை எய்த முடியும் என நினைக்கிறான். ஆனால் இவற்றால் ஒரு வனுக்கு உண்மையான ஆனந்தம் கிட்டுகிறதா?

இல்லை! இல்லவே இல்லை!!

இவையெல்லாம் கணநேர இன்பங்களே தவிர, நிரந்தர அமைதி, ஆனந்தம், விடுதலை அல்ல!

எனில் ஒருவன் உண்மையான சாந்தி, ஆனந்தம், விடுதலையை எப்படி எய்த முடியும்?

இதற்கான பதில் சுலபமானது- தெளிவானது. இவற்றை ஒருவன் தன் உண்மையான 'பேருண்மை நிலையை அறிவதால் மட்டுமே பெறலாம். இதை எய்த ஒருவன் தன் சொந்த மனத்தைக் கட்டுப் படுத்த வேண்டும். மனத்தைக் கட்டுப்படுத்த அவன் தன்னுடைய எல்லாப் புலன்களையும்கட்டுப்படுத்தும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஒழுங்கான வாழ்க்கை முறையைப் பழக வேண்டும்.

இதற்கும் மேல் மனத்தையும் புலன்களையும் கட்டுப்படுத்த நீதிநெறி விதிமுறைகளுக்கு மிக முக்கியத்துவம் தர வேண்டும்.

தூய வாழ்க்கையின்றி - நற்பண்புகளின்றி - உண்மை, கற்பு கருணை, அன்பு, அறம் போன்ற வற்றில் முழு ஈடுபாடில்லாமல் ஒருவன் ஆன்மீகத்தில் ஓரங்குலங்கூட நகர முடியாது!

இதை விளக்க ஒரு பெரிய கண்ணாடியின் மேல் சூரியனின் ஒளிக்கதிர்கள் விழுவதாக வைத்துக் கொள்வோம். கண்ணாடி சூரிய பிம்பத்தைப் பற்றிக் கொள்கிறது. அது அதன் ஒளியையும் பிரதி பலிக்கிறது.

பிரதிபலிக்கும் இதே ஒளி அழுக்கும் அலையும் நுரையுமாக இருக்கும் ஒரு குட்டையின் நீர்ப்பரப்பில் விழுகிறது என வைத்துக் கொள்வோம்.

கண்ணாடியிலிருந்து பிரதிபலித்து வரும் சூரிய ஒளி அந்த நீர்ப்பரப்பின் மேல் விழுகிறது. ஆயினும் சூரிய பிம்பம் அதில் தெரிவதில்லை.

தண்ணீர் அழுக்கில்லாமலிருந்து, அலைகள் அதிகமில்லாமல் இருப்பின் சிறிதளவேனும் பிரதிபம்பம் தெரியும்.

மாறாக நீர்ப்பரப்பு தெளிவாகவும், சுத்தமாகவும், அசையாமலும் (அலைகளற்று) இருந்தால் பிரதிபிம்பம் தெளிவாகத் தெரியும்.

சூரியனைக் கடவுளுக்கு ஒப்பிடுவோம். கண்ணாடியை தனி மனித சீவான்மாவாகக் கொள்வோம். குட்டையிலிருக்கும் தண்ணீர் மனத்தின் மூவகை நிலைகளைக் கொண்டது.

அழுக்கும் அலையும் நுரையுமாக இருக்கும் தண்ணீர் தாமச மனத்திற்கு (அழுக்காறுடைய மந்த மனத்திற்கு) ஒப்பானது.

சிறிதளவே அழுக்குள்ள சிற்றலை கொண்ட தண்ணீர் ராஜச மனத்திற்கு (சுறுசுறுப்பான, தூய்மை குறைந்த, ஆசைகள் நிறைந்த மனத்திற்கு) ஒப்பானது.

பளிங்கு போன்ற அலைகளற்ற தண்ணீரை சாத்துவீக மனத்திற்கு (தூய, சூக்கும ஒரு நிலை பெற்ற மனம்) ஒப்பிடலாம்.

(உயிர்களின் மனங்களை பலபிரிவுகளாகப் பாகு படுத்தலாம். விளக்கத்தின் வசதிக்காக அவற்றை நாம் மூன்று பிரதான பிரிவுகளாக மட்டுமே வகுத் துள்ளோம்.)

இம்மூவகை நீர்ப்பரப்பின் மீது பிரதிபலிக்கும் ஒளிக்கதிர்கள் ஒரே சீராக இருப்பினும் முதலாவதில் பிம்பத்தை முழுக்கமுழுக்கக் காண இயலுவதில்லை.

இரண்டாவதில் அதனுடைய மங்கலான பிம்பத் தைக் காண்கிறோம்,

மூன்றாவதில் பிம்பத்தை தெள்ளத் தெளியப் பார்க்கிறோம்.

உலகத்தில் பிரகாசிக்கும் சூரியனைப் போல் கடவுள் எல்லா இடங்களிலுமுள்ள ஒவ்வொரு படைப்பிலும் சீவனாகத் திகழ்கிறார்.

மேலான பரமான்மாவின் பிரதிபலிப்பேஆன்மா. ஆன்மாவிலிருந்தே மனம் அதற்கான உயிர்ப்பை யும், ஒளியையும் பெறுகிறது.

மனம் அலை பாய்வதாலும், அழுக்காறும், பாபமும், தூய்மை அற்றும் இருப்பதால் அதனால் ஆன்மாவின் பிரதிபலிப்பைப் பற்றிக்கொள்ள இயலு வதில்லை. அந்நிலையில் புலன் போகங்களில் சிக்கி மூழ்கி விடுகிறார். உலகாயதப் பொருளின் மீது பாசம் கொள்கிறார்.

சிறிதளவே அழுக்குள்ள மனம் அல்லது ராஜச மனமானது மிகவும் சுறுசுறுப்புடையது. அதனிடம் எண்ணிலடங்கா ஆசைகளும், லட்சியங்களும் கொப்பளிக்கும். அத்தகைய மனத்திற்கு கடவுள், தர்மத்தின்(அறநெறியின்) இன்றியமையாமை நன்கு புரியும். ஆயினும் அது உலகாயதப் பொருள்கள் மீது பாசம் வைக்கும். ஆபத்தின் போதும், மரண பயத்தின் போதும் ராஜச மனிதன் கடவுளை நினைக்கிறான். அவரை வழிபடுகிறான்.

ஒருவருடைய மனம் தூய்மையும், சூக்கும ஒருமை நிலையும் மிகுந்து, அமைதியுடன் கூடிய பளிங்குக் குட்டையின் நீர்ப்பரப்பைப் போல் இருப்பின் (சாத்துவீக மனம்) அது பிரதிபலிப்பைக் காட்டுகிறது. அதாவது அதற்கு ஆன்ம தரிசனம் புலனாகிறது.

கடவுளை அறிதல் அல்லது சமாதி என்பது வேறொன்றுமில்லை. குட்டைத் தண்ணீரிலிருந்து ஒளிக்கதிர்களை சூரியனுக்குத் திருப்பி அனுப்புவதே யாகும்!

எனில் சமாதி நிலையை எய்த மனத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும். அமைதி கொள்ளச் செய்ய வேண்டும். ஒருமுகப்படுத்த வேண்டும். பிறகு அதை ஆன்மாவுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலம் மேலான பரமான்மாவில் இணைக்க வேண்டும். இதுவே உண்மையில் எய்தும் பேரமைதி, பேரானந்தம், விடுதலை அல்லது மோட்சம் ஆகும்.

## எல்லா மதங்களின் குறியும் இதுவே!

எல்லா மதங்களின் நிறுவனர்களும் எளிய, தூய உத்தம வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்கள் தங்களது சீடர்களையும் அதையே கடைப்பிடிக்கும்படிக் கட்டளையிட்டனர்,

இந்த ஒழுக்க நெறிகளை உறுதியாகப் பின் பற்றிப் பல்வேறு சித்தாந்த மார்க்கங்களைச் சேர்ந்த மாபெரும் முனிவர்கள் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தனர். பேரமைதி, பேரானந்த விடுதலையை எய்தினர்.

பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்கள் இந்த உண்மைகளை மறந்து வாழ்வின் குறிக்கோளைத் தவற விட்டனர். உலகம் முழுவதையும் நரக மாக்கினர்.

பேரானந்தக் குழந்தைகளே!

உங்கள் அறியாமையையும், பெருமையையும் ஒதுக்கிவிட்டு ஞானம் பெற முயலுங்கள்!

எளிய, தூய, பக்தியுடன் இருந்து உங்கள் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

எல்லோரையும் நேசியுங்கள். பொறுமை, பொறுத்துக் கொள்ளுந் தன்மையைப் பழகிக் கொள்ளுங்கள்.

யாரையும் வெறுக்காதீர்!

ஏனெனில் மற்றவரை வெறுப்பதால், நீ உன் சொந்த ஆன்மாவையே வெறுத்து அதனால் தெய்வத்தையும் வெறுக்கிறாய்!

ஞானியாக இரு!

உடல், மனம் உரம்பெற்று பண்பு ஆன்ம பலம்பெற்று பேரமைதி, பேரானந்தம், விடுதலையை எய்துங்கள்!

அது உங்கள் பிறப்புரிமை!

எழுமின்! விழிமின்! குறிக்கோளை எய்தும் வரை துஞ்சாதீர்!

ஆமென்!

# கேள்வியும் பதிலும்

## கடவுள்

**கேள்வி :** கடவுள் உண்டா?

**பதில் :** ஆம்! கடவுள் இருக்கிறார்.

**கேள்வி :** கடவுள் உண்டென்றால் அவர் ஆணா, பெண்ணா?

**பதில் :** கடவுள் உருவமற்றவர். ஆனால் முடிவைத் தேடும் மனம் கடவுளை உருவமற்ற நிலையில் கற்பனை செய்ய இயலாது. ஆதலின் மனிதன் தன் மனத்திற்குப் பயிற்சியைத் தரவும் ஒரு முகப்படுத்தவும் அருவக்கடவுளுக்கு ஓருருவத்தைக் கொடுக்கிறான். அந்தக் கடவுளை அவன், அவள் அல்லது அது என்று அழைக்கிறான்.

ஆழ்ந்த பக்தியில் மூழ்கிய மனிதர்கள் கடவுளை கருணையுள்ளம் படைத்த அகிலத்தின் தந்தையெனவும், தாயெனவும் அழைக்கிறார்கள். ஆனால் ஒரு தத்துவவாதி கடவுளை அருவ நிலையில் பார்க்கிறார். அதே உருவமற்ற

நிலையில் கடவுளை நினைக்கிறார். கடவுளை 'அது' என்கிறார். ஒருவர் நிர்விகல்ப சமாதி நிலையை அடையும் போது கடவுளின் உருவ மற்ற நிலையில் ஒன்றி விடுகிறார்.

கேள்வி : கடவுள் உண்டென்றால் நாம் ஏன் அவரைப் பார்க்க முடியவில்லை?

பதில் ; கடவுள் நுட்பத்திலும் மிக மிக நுட்ப மானவர். ஆதலால் புலன்களால் பார்க்கக் கூடிய ஒரு பொருளல்ல. ஆனால் மனம் தூய்மையுற்று, ஒருமுகப்பட்டு, நுட்பமாகும் போது ஒருவர் கடவுள் அல்லது பிரம்மம் அல்லது தன்னில் தானாகவே உள்ள உயிர்ச் சார உணர்வெனும் மகாசமுத்திரத்தில் ஒன்றிய நிலைக்குப் போய் நிர்விகல்ப சமாதி நிலையை (ஆழ்நிலைத் தியானநிலையை) எய்துகிறார். ஒரு விதத்தில் கடவுளைப் பார்க்க முடியாது. ஏனெனில் கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் மூலப் பொருளானதால் அதை உருவ நிலையில் காண முடியாது. காண்பது என்றால் ஓர் உருவ அமைப்பில் காண்பது என்று பொருள். இம் முறையில் கடவுளைக் காண முடியாது. வேறொரு முறையில் கடவுள் நீங்கள் அறிந் திருப்பதற்கும் அப்பாற்பட்டவர்.

கடவுள் உன்னுள் உறைந்திருப்பவர். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்பதற்குக் கூட ஆதாரம் வேண்டுமா? உங்களுக்கு உயிர்

இருக்கிறது என்பதை எப்படி நீங்கள் மறுக்க முடியும்? பொதுவாக நீங்கள் என்னுடைய உடம்பு, என்னுடைய புலன்கள், என்னுடைய மனம், என்னுடைய அகந்தை என்றெல்லாம் சொல்கிறீர்கள்.

இந்தத் தோரணையில் நீங்கள் சொல்வதி லிருந்தே நீங்கள் என்றால் உங்களுடைய உடல் அல்ல; புலன் கூறுமல்ல; மனமுமல்ல; அகந்தையுமல்ல! எனில் நீங்கள் யார்? கண்டு பிடியுங்கள். உங்களுடைய உண்மையான சொரூபத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சிக்கே தத்துவம் அல்லது சமயம் என்று பெயர்.

**கேள்வி :** கடவுள் உண்டென்றால் விஞ்ஞானம் ஏன் அதைப் பற்றி மௌனம் சாதிக்கிறது?

**பதில் :** விஞ்ஞானம் கண்கூடான சாட்சியங்களைக் கேட்கிறது. அவர்கள் தங்களுடைய விஞ்ஞானக் கருவிகள் மூலம் பார்க்க முடிவதை மட்டுமே நம்புகிறார்கள். ஆனால் கடவுளோ நுட்பத்தி லும் அதிநுட்பமானவர். அனைத்துப் பொருள் களுக்கும் மூலமானவர். அது அவர் களுடைய பரிசோதனைக் கூடத்தில் செய்யும் சோதனைக்கு உட்படும் பொருளல்ல. இந்த ஒருவிஷயத்தில் மட்டும் விஞ்ஞானம் எப்போதும் இருளிலேயே உழல வேண்டியதுதான். தூலப் பொருள்கள் விஷயத்தில் மனித சமுதாயத்திற்கு விஞ்ஞானம் பெரும் பணி ஆற்றியுள்ளது.

ஆனால் மனம், குண்டலினி சக்தி, ஆன்மா அல்லது கடவுள் போன்ற மிகமிக நுட்பமான விஷயங்களில் இன்னும் இருட்டறையிலேயே இருக்கிறது. மனோதத்துவவாதிகள், விஞ்ஞானி களில் பலருக்கு இன்னும் மனம், குண்டலினி சக்தி, ஆன்மா என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. அவர்களுக்கு அவை வெறும் வார்த்தைகளாகவே உள்ளன. ஆயினும், மூளை, மனம், குண்டலினி சக்தி, ஆன்மா ஆகிய நான்குமே உயிருள்ள உடலில் இயங்கும் தனித்தனிப் பொருள்கள். இவற்றைக் கண்டு கொள்வது என்பது எளிதான விஷயமல்ல! இவற்றின் இயக்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் ஒருவர் தன்னுடைய மூளை மையத்தை ஒரு ஆராய்ச்சிக் கூடமாக்கி,தூய்மை யான மனத்தை அதைக் கண்டுபிடிக்கும் கருவி யாக்க வேண்டும். இதன்றி உடலிலும் அகிலத் திலும் இயங்கிக் கொண்டிருக்கும் மிக நுட்ப மான விஷயங்களை அறிவதென்பது இயலாது.

கேள்வி : உலகில் எத்தனைக் கடவுள்கள் இருக் கிறார்கள்?கிறிஸ்துவக் கடவுள்,இந்துக்கடவுள், முஸ்லீம் கடவுள் போன்றதெல்லாம் உண்டா?

பதில் : ஒரு வட்டத்திற்கு ஒரே ஒரு மையந்தான் உண்டு. அதுபோலவே இந்த அகிலமும் ஒரே ஒரு கடவுளைக் கொண்டே இயங்குகிறது. பல்வேறு கடவுள்கள் என்ற கருத்தே அபத்த

மானது. கிறித்துவக் கடவுள், இந்துக் கடவுள், முஸ்லிம் கடவுள் என்றெல்லாம் பேசுவது அறியாமையினாலேயே! இவை மட்டுமின்றி ஏராளமான மனித தெய்வங்களும் உண்டு. பல்வேறு மதத் துறைகளின் மத நிறுவனர் களையே மக்கள் போற்றி வணங்குகிறார்கள், இந்த அடிப்படையில்தான் அவர்கள்கிறித்துவக் கடவுள், இந்துக்கடவுள், முஸ்லீம் கடவுள் என்றெல்லாம் வழிபடுகின்றனர். உண்மை என்னவோ கடவுள் என்பவர் ஒரே ஒருவர்தான். உருவமற்ற நிலையில் கடவுளை மனத்தில் கொண்டுவந்து நிறுத்தி வழிபடுவது இலேசான காரியமல்லஎன்று ஏற்கெனவே கூறியுள்ளோம்.

ஆரம்ப சாதகன் வழிபாட்டிற்கும் தியானத் திற்கும் சில தூல வடிவங்களும், குறியீடுகளும் தேவைப்படுகிறது. அதன் காரணமாகவே பல்வேறு மதங்களும் பலதரப்பட்ட குறியீடு களும், குறியீட்டுச் சின்னங்களும் நடைமுறை யில் வந்து விட்டன.

**கேள்வி :** நீங்கள் கடவுளை எப்படி விளக்குறீர்கள்?

**பதில் :** ஒரு எல்லைக்குள் இயங்கும் மனித மனம் கடவுளைப் பற்றி அறிந்த மிக மேலான நிலை சத்-சித்-ஆனந்தம்(உயிர்-அறிவு-பேரானந்தம்) அல்லது எல்லாம் வல்லவர்— எங்கும் நிறைந் தவர்— எல்லாம் அறிந்தவர் என்பதுதான். கடவுள் தன்னில் தானாகவுள்ள சுயம்புவானவர்.

அது ஆதியானது — இன்றும் இருப்பது. இனியும் இதேபோல் இருக்கப்போவது. கடவுள் சர்வவியாபி என்று நாம் சொல்லும்போதே கடவுளின்றி ஓர் அணுவும் அசைவதில்லை என்பது ருசுப்பிக்கப்படுகிறது. நவீன விஞ்ஞானம் அணுவைப் பிளந்து பார்த்த பின்னர் 'ஜடப்பொருள்' என்பதே கிடையாது என்ற முடிவுக்கு வந்துள்ளது. சக்தி மட்டுந் தான் உண்டு. ஆனால் இந்த விஞ்ஞானி களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தச் சக்தி உயிர்ச்சார உணர்வின்றி வெறும் ஜட சக்தியாக மட்டும் இருக்க முடியாது. அணுவைப் பிளந்து பார்ப்பதற்கு முன்னர் விஞ்ஞானிகள் அதில் (electron) உயிரணுசக்தி (proton) என்ற இருவேறு சக்திகள் சுழன்று கொண்டிருக்கின்றன ஏன்பதை மட்டுமே கண்டு பிடித்தனர். ஆனால் இந்த இரு சக்திகளும் சுழல்வதற்கான ஆதாரச் சூழல் மையத்தைப் (Nuclear centre) பற்றி அறிந்திலர். ஓர் அணுவின் ஆதாரச் சுழல் மையம் என்பது அந்த அணுவிலுள்ள 'ஆன்மா'வே ஆகும். இதிலி ருந்தே உயிர்ச்சாரமின்றி 'ஜடசக்தி' என்ற ஒன்று இருக்கவே முடியாது என்பதை அறிந்து கொள்கிறோம். அதற்காகவே நாம் கடவுளை தன்னில் தானாக நிரம்பியுள்ள உயிர்ச்சார உணர்வெனும் மகாசமுத்திரம் என்று அழைத் தோம். ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்று வருவ தில்லை. ஜடமோ அல்லது ஜடசக்தியோ உயிர்ப்

பொருள்களையோ அல்லது உயிர்களையோ உண்டாக்க முடியாது.அது முடியவே முடியாது! உயிர்ப்பு உயிர்ச்சார உணர்விலிருந்துதான் வர முடியும். கடவுளைப் பரிபூரணமாக நிரம்பித் ததும்பும் உயிர்ச்சார உணர்வெனும் மகா சமுத்திரம் என்று அழைக்கிறோம்.

கடவுள் முடிவே இல்லாதவர். முடிவற்ற நிலை என்பது ஆரம்பமோ இடையோ,முடிவோ அற்றது. உண்மைப் பொருள் ஒன்றேதான் இருக்க முடியும். ஏனென்றால் அது இரண்டாக இருந்தால் ஒன்று மற்றொன்றிற்கு எல்லை வகுக்கும். எல்லையுள்ள பொருளுக்கு ஒரு முடிவு உண்டு.முடிவற்றதாக இருக்க முடியாது. ஆகவே கடவுள் முடிவற்றவர் என்னும்போது ஒரே ஒரு கடவுள்தான் இருக்க முடியும். கடவுள் தன்னில் தானாக நிரம்பியுள்ள உயிர்ச்சார மகா சமுத்திரம் என்னும்போது அகிலம் முழு வதும் உயிர்ச்சாரம் நிரம்பியது. உயிர்ச்சார மில்லாத இடமே இருக்க முடியாது. இந்த உண்மை ஆதாரத்தின் அடிப்படையில் பார்த் தோமானால் 'படைப்பு' என்னும் வார்த்தையே அர்த்தமற்றது. ஏனெனில் ஒன்றுமில்லாததிலி ருந்து ஒன்று தோன்றும் என்பதற்குப் 'படைப்பு' என்ற வார்த்தை இடமளிக்கிறது மேலும் கடவுள் எங்கும் வியாபித்துள்ளவராக இருக்கும் போது அந்தக் கடவுள் எப்படிப் படைப்பாளியாக

ஆக முடியும்? எதிலிருந்து படைப்பது? அவர் படைப்பாளியாக இருந்தால் அவர் இல்லாத ஓர் இடத்திலிருந்து ஒன்றை எடுத்துப் படைத்த தாகப் பொருள்படும். பிறகு ''கடவுள் சர்வ வியாபி—எல்லையற்றவர்'' என்பதற்குப் பொருளே இல்லை. ஆகவே 'படைப்பு' என்கிற வார்த்தை எல்லையற்ற ஒன்றுக்கு எல்லை வகுத்ததாக ஆகிவிடும்.

கடவுள் காரணங்களுக்கெல்லாம் காரண மான மகாகாரணன். அதுவே 'எல்லையற்ற பேருண்மை!' அவனன்றி இந்த அகிலம் ஒரு கணம்கூட இருக்க முடியாது. கடவுள் எல்லோ ருக்கும் பொதுவான சொத்து. எந்த ஒரு தேசமோ, ஒரு சமயமோ அல்லது ஒரு வேத நூலோ (சாத்திர நூல்) தனக்கே உரித்தானது என்று கடவுளைச் சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் யார் யார் தூய வாழ்க் கையை மேற்கொண்டு அவருக்காகப் பிரார்த் திக்கிறார்களோ அவர்களே அவரை அடைய முடியும்.

**கேள்வி :** கடவுளைப் பலர் மகாசக்தி என்று நினைக் கின்றனர்; வேறு சிலர் கடவுளை கல், பளிங்குச் சிலைகளை வைத்து வணங்குகிறார்கள். எனில் அவ்வாறு செய்வது தவறா?

**பதில் :** கடவுளின் உயரிய தத்துவம் அவர் உருவ மற்றவர் என்பதே. கடவுளின் இந்த உருவ மற்ற நிலையை நிர்விகல்ப சமாதி நிலையில்

மட்டுமே உணர்ந்து—புரிந்து கொள்ள முடியும். இந்த நிலையைத் தவிர்த்த வாழ்க்கை இரண்டு பட்டது. சாதாரணர்களுக்குக் கடவுளின் உருவ மற்ற நிலையை புரிந்து கொள்ளவே முடியாது. நீங்கள் கடவுள் எங்கும் வியாபித்துள்ளவர் என்னும்போது பரந்து விரிந்த ஆகாயத்தையோ அல்லது அகண்டாகாரமான சமுத்திரத்தையோ எண்ணிப் பாருங்கள். இங்கு ஆகாயம் அல்லது சமுத்திரத்திற்கு ஓர் உருவம் ஏற்படுகிறது. அந்த உருவம் தூலமாகவோ அல்லது சூக்கும மாகவே இருக்கக் கூடும். எப்படியாயினும் நீங்கள் உருவங்களைத் தவிர்க்க முடியாது. உருவங்கள் இல்லாமல் எல்லைக்குள் இயங்கும் மனம் எதைப் பற்றியும் சிந்திக்க முடியாது. எண்ணம், சூக்கும உருவம், அதனுடைய பொருள் ஒன்றை ஒன்று எப்போதும் இணைந்து நிற்பன. நீங்கள் நினைத்ததும் மனமானது எண்ணத்தின் சூக்கும உருவத்தை மூளை மையத்தில் படம் போட்டுக் காட்டுகிறது. இந்த பிரதிபிம்பம் இல்லாமல் நீங்கள் எதையுமே புரிந்து கொள்ள முடியாது. ஆதலின் எண்ணம், அதன் சூக்கும உருவம், அதற்கான பொருள் எல்லாமே ஒன்றையொன்று தழுவியே இருப்பன. அதனாலேயே மனிதன் கடவுளை நினைப்பதற்கும், வணங்குவதற்கும் பலதரப் பட்ட உருவங்கள் அல்லது சிலைகள் தேவைப் படுகிறது. ஒருவர் எந்த வடிவத்தை வணங்கு வதானாலும், பக்தர் தாம் வணங்கும் உருவத்

திற்கு எல்லாவகைத் தெய்வீக ஆற்றல் களையும் கற்பித்துக் கொள்கிறார். இவ்வாறு செய்வதில் யாதொரு தவறுமில்லை.

**கேள்வி:** ஒருவன் கடவுளின் ஒரு குறிப்பிட்ட உருவத்தை வைத்து பக்தி செய்து கொண்டே போனால் அவன் எந்த முடிவைப் பெறுவான்?

**பதில்:** ஆரம்பத்தில் ஒருவர் கடவுளின் ஒரு குறிப் பிட்ட உருவத்தை இருத்தி முயலும்போது அவர் மனமானது இங்கும் அங்குமாக அலை கிறது. ஆனால் அவர் பொறுமையைக் கைக் கொண்டு விடாமல் முயல்வாரானால் அலை பாயும் மனத்தின் போக்கு கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைந்து விடுகிறது. பிறகு அவர் இஷ்ட தெய்வத்தின் உருவத்தில் மனம் லயித்து விடுகிறது. இதே மனோலயம் தொடர்ந்து நீடிக்குமானால் எங்கும் வியாபித் துள்ள தெய்வீக ஒளியை (நீக்கமற நிறைந் துள்ள வெள்ளி ஒளியை) மனக் கண்ணால் பார்க்க முடியும். இத்துடன் உருவம் மறைந்து விடுகிறது. இந்தச் சமயத்தில் ஒருவர் அந்த ஒளியைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து அதிலேயே இலயித்துப் போனால் ஒரு குறிப் பிட்ட இலக்கை அடைகிறார். இந்த இலக்கை வைத்துக் கொண்டு மேலும் மனத்தைத் தொடர்ந்து அதிலேயே இலயிக்க விட்டால் அந்த இலக்கும் மறைந்து விடுகிறது. மனம் பரவெளியில் ஒன்றி விடுகிறது. இங்கே

ஒருவர் உருவமற்ற கடவுளைப் புரிந்து கொள்கிறார்.

கேள்வி: 'சமாதி' என்றால் என்ன?

பதில்: நீ புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிப் போய்ச் சேருவதற்குச் 'சமாதி' என்று பெயர்.

கேள்வி: 'சமாதிகள்' எத்தனை வகை?

பதில்: பிரதானமானவை இரண்டு. 'சவிகல்ப' என்பதும் 'நிர்விகல்ப' என்பது மாகும்.

கேள்வி: 'சவிகல்ப சமாதிக்கும் 'நிர்விகல்ப சமாதி' க்கும் இடையில் என்ன வேற்றுமை?

பதில்: சவிகல்ப சமாதி நிலையில் உருவம் தென் படும். இரண்டுபட்ட நிலை இருக்கும். ஆனால் நிர்விகல்ப சமாதிநிலையில் உருவமே இருக்காது. இந்த நிலையில் தன்னில் தானாகவே நிரம்பியுள்ள உயிர்ச்சார உணர் வெனும் மகா சமுத்திரம் மட்டுமே உண்டு. இதுவே கடைசி நிலை.

மனம்.

கேள்வி: மனம் என்ற ஒன்று உண்டா?

பதில்: உண்டு. மனம் என்ற ஒன்று இருக்கிறது.

கேள்வி: 'மனம்' எனத் தனியாக ஒன்றும் கிடையாது எனச் சிலர் சொல்கிறார்கள். இதை

விடாத எண்ணங்கள் மூளைக்கு வந்து போய்க் கொண்டும், தோன்றி மறைவதுமே மனம் என்று சிலர் சொல்கிறார்கள்! "நீங்கள் ஓர் ஆற்றை எடுத்துக் கொள்ளுங்கள். புறப்படும் இடத்திலிருந்து சங்கமிக்கும் இடம் வரை அதில் வரும் தண்ணீர் இடைவிடாது மாறிக் கொண்டே இருக்கிறது. இருப்பினும் அது ஒரு உருவத்துடன் இருக்கிறது. அதே போல மூளை மையத்தில் தோன்றி மறைந்த வண்ணமிருக்கும் எண்ணங்களுக்கே மனம் என்று பெயர்" என்கின்றனர். சரியா?

பதில்: உங்களை அறிந்து கொள்ளப் பயன்படும் கருவியே மனம். உலகை நீங்கள் தெரிந்து கொள்வது மனத்தின் மூலந்தான். வேறு வகையில் சொல்வோமாயின் மனம் ஆன்மாவுக்கு உணர்த்தும் கருவி. ஆன்மா உலகை மனத்தின் மூலம் அறிகிறது. மனம் உலகை ஐந்து சூக்குமப் புலன்கள், ஐந்து தூலப் புலன்களின் மூலம் அறிகிறது. மனம் பலதரப்பட்ட ஒலிகளைக் காதுகளின் மூலம் கேட்கிறது. அது பல்வேறு ஸ்பரிசங்களை சருமத்தின் மூலம் அறிந்து கொள்கிறது. அது கண்களின் மூலம் பலவகை நிறங்களையும் உருவங்களையும் கண்டு கொள்கிறது. அது நாக்கினால் பல்வேறு சுவைகளை அறிகிறது. அது நறுமணம், துர்நாற்றம் போன்றதை மூக்கினால் நுகர்கிறது. இந்த ஐம்புலன்களும் அந்தந்தப் பொருள்களுடன் தொடர்பு கொள்ளும்போது

மனத்தில் இடைவிடாத எண்ணங்களை உண்டாக்குகிறது. இதற்கு நதியையும், மாறிய வண்ணம் ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரையும் மேற்கோளாகக் காட்டுவது அர்த்தமற்றது. இடைவிடாது ஓடும் தண்ணீர் மாறிக் கொண்டே இருப்பினும், அது ஓர் உருவமாகத் தோற்றமளிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆற்றுப் படுகையும், இருகரைகளும் ஓடும் தண்ணீருடன் சேர்ந்து திசை மாறினால் பழைய ஆற்றின் உருவம் என்ன ஆகும்? பழைய தோற்றத்திற்கான சின்னஞ்சிறு அறிகுறியாவது தென்படுமா? இல்லை. மனமே இல்லையெனில் 'மனக்கட்டுப்பாடு' என்ற ஒன்றுக்கு அவசியமே இல்லை. மனம் என்பதே கிடையாது, இடைவிடாது தோன்றி வரும் எண்ணங்களே மனம் என்று சொன்னால் மனக்கட்டுப்பாடு என்பதற்கு என்ன பொருள் சொல்வீர்கள்? மாறிவரும் எண்ணங்களால் மாறிக் கொண்டே இருப்பது மனம் எனில், மனத்தை எப்படி ஒருமுகப் படுத்துவது? எனில் சமாதி, நிர்வாணம் அல்லது நிர்விகல்ப சமாதி என்பதற் கெல்லாம் என்ன பொருள்? இவை எல்லாமே அர்த்த மற்றவைகளாகி விடுமே! ஆனால் நிர்வாணம் அல்லது நிர்விகல்ப சமாதி நிலை என்பது உலகிலுள்ள எல்லாவற்றையும்விட 'மிகப் பெரிய பேருண்மையானது' என்று அனுபவ பூர்வமாகத் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

கேள்வி : மூளை, மனம், ஆன்மா, உயிர், உயிர்ச் சார உணர்வு எல்லாமே ஒன்றாகத் தோன்று கிறது. இதன் உண்மை என்ன?

பதில் : மூளை தூல வடிவமுள்ளது. பலவகைச் சிக்கல் நிறைந்த இயந்திர அமைப்புடன் கூடிய ஒரு வானொலிப் பெட்டிக்கு இதை ஒப்பிடலாம். உயிர்ச்சாரத்தைப் பின்னணியாகக் கொண்டு மனம் ஒரு சூக்கும சக்தியாக இயங்குகிறது. ஜடசக்தியைப் போல் அல்லாமல் மனம் தன்னுடைய செய்கையை உணர்ந்தே செய்கிறது. அது மூளை மையத்தில் இயங்குகிறது. ஒரு வானொலிப் பெட்டி மின்சாரம் இல்லாமல் வேலை செய்யாது. மனம் இன்றேல் மூளையும் இயங்காது. உலகைப் பற்றிய அறிவையும் உண்டாக்காது. ஆகவே மனம் மூளை அல்ல. உயிர், ஆன்மா, உயிர்ச்சாரம் மூன்றும் ஒரே பொருளை உடையன. மனம்தனக்கான உயிர்ப்பையும் ஒளியையும் உயிர்ச்சாரத்திலிருந்து பெற்றுக் கொள்கிறது. மனத்தின் மூலகாரணமாக இருப்பதே உயிர்ச்சாரம். மூளை, மனம், உயிர்ச்சாரம் ஆகிய மூன்றுமே ஓர் உயிருள்ள உடலில் இயங்கும் தனித்தனியானவை. அவை வெவ்வேறானவை; ஒன்றானவை அல்ல. அவ்வாறு சொல்வது பெருத்த அபத்தமாகும். ஆயினும் அறியாமையினால் பலர் இதையே சொல்கின்றனர்.

**கேள்வி :** ஆயின் நீங்கள் மனம் என்பதற்கு என்ன விளக்கம் தருவீர்கள்?

**பதில் :** உயிர் அல்லது ஆன்மா அல்லது உயிர்ச் சாரம் உயிருள்ள உடலை ஆளும் சக்கிராதிபதி. இந்தச் சக்கிராதிபதியின் கீழ் இருக்கும் பிரதம மந்திரிக்கு மனத்தை ஒப்பிடலாம். மனம், மூளை மையத்தில் வேலை செய்கிறது அல்லது பிரதமர் தலைநகரில் பணியாற்றுகிறார்.

நவீன விஞ்ஞானம் மிக நுண்ணிய கருவிகளைக் கொண்டு ஒலிஅலைகளையும், வெப்ப அலைகளையும் இனம் கண்டுபிடித்து விடுகிறது. ஆனால் இன்னும் அது எண்ண அலைகளின் இயக்கத்தைக் கண்டுபிடிக்கவில்லை. ஒலி அலைகளைவிட எண்ண அலைகள் மிக நுட்பமானது. மனம் இந்த எண்ண அலைகளைவிடக் கூடுதல் நுட்பம் படைத்தது. உயிர் அல்லது உயிர்ச்சரம் இவை எல்லாவற்றையும்விட மிகவும் மேலான நுட்பம் கொண்டது. இதன் காரணமாகவே மனமும், உயிரும் ஆய்வுக்கூட பரிசோதனைகளுக்குட் படாது. ஏனெனில் மனந்தான் இந்த அரிய நுட்பக் கருவிகளைக் கண்டுபிடிக்கிறது. நிலைமை இவ்வாறிக்கும்போது இந்த நுட்பக் கருவிகள் எப்படி மனத்தையும், உயிர்ச்சாரத்தையும் கண்டுபிடித்துச்சொல்லும்? இது நடக்க முடியாதது. எனவே விஞ்ஞானம் இன்னும்

மனம், உயிர்சாரத்தைப் பொறுத்தவரை அறியாமையிலேயே உழல்கிறது.

உண்மை இவ்வாறிருக்க ஓர் உயிரில் மனம், உயிர்ச்சாரம் இல்லை என்று எவ்வாறு மறுக்க முடியும்? நீங்கள் உயிருடனிருக்கிறீர்கள், உலக விஷயங்களைப் புரிந்து கொள்கிறீர்கள் என்பதை நிரூபணம் செய்ய ஆதாரங்கள் வேண்டுமா? மனம், உயிர்ச்சாரம் இரண்டின் இயக்கத்தை கருவிகளால் கண்டு பிடிக்க முடியாது. அவற்றை மனத்தின் மூலமே அறிந்து கொள்ள முடியும். எண்ணற்ற ஆசைகள், எண்ணங்கள், பிழைகள் மனத்தை பலவீனமாக்கி குப்பைமேடு ஆக்குகிறது. இந்த பலவீனமும், அழுக்கும் உன்னுள் ஒரு பிரமையைத் தோற்றுவிக்கிறது. அதனால் உமது 'உண்மை சொரூபத்தையே' மறந்து போகிறீர்கள். உதாரணமாக 'நீங்கள் ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களருகே தண்ணீர் நிரம்பிய தொட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீரில் உங்கள் பிரதிபலிப்பு விழுகிறது. தொட்டியிலுள்ள தண்ணீர் சுத்தமாகவும், அலைகளற்றும் இருப்பின் நீங்கள் உங்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாகக் காணலாம். அதே தண்ணீர் நிறமாற்றம் செய்யப்பட்டு, அலைக்கழித்து விடப்பட்டால் உங்கள் பிரதிபிம்பம் அந்தத்தண்ணீரில் இருப்பினும், உங்களால் அதைப் பார்க்க முடிவதில்லை.

இங்கே பரிசுத்த மனத்தை தூய நீர் நிலைக்கு ஒப்பிடலாம். அலையும் தண்ணீரை பல்வேறு ஆசைகளுக்கும் எண்ணங்களுக்கும், நிறத்தை பிழைகளுக்கும் ஒப்பிடலாம். இப் போது உங்களுடைய உண்மையான நிலை யைத் திரும்பப் பெறவும், நீங்கள் புறப்பட்டு வந்த மூலத்தைப் போய்ச் சேரவும் அல்லது உங்கள் உண்மையான சொரூபத்தை அறியவும் உங்கள் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். மனத்தைக் கட்டுப்படுத்த சாதனையை (மந்திர ஜபம், தியானம், கற்புநெறி எனும் பிரம்மச் சரிய வாழ்க்கையை கடைப்பிடித்தல்) செய்ய வேண்டும். இவையின்றி உங்களுடைய உண்மையான சொரூபத்தை அறிய முடியாது.

மனம் தனக்கென ஒரு நிறமோ, ஒரு வடிவமோ கொண்டதல்ல. ஆனால் அது எண்ணிய பொருளின் உருவத்தையும், நிறத் தையும் பெறுகிறது. நீங்கள் கீழ்த்தரமான ஆபாச நினைப்புகளை நினைத்தீர்களானால் விரைவில் நீங்களும் அதே மாதிரி ஆகி விடு வீர்கள். மாறாக நீங்கள் உயரிய, கண்ணிய மிக்க விஷயங்களை சிந்திப்பீர்களானால் வெகு சிக்கிரமே நீங்களும் உயர்ந்து விடுகிறீர்கள், ஆக உங்களுடைய அதிர்ஷ்டத்திற்கும், துரதிர்ஷ்டத்திற்கும், நீங்களே பொறுப்பாளி யாகிறீர்கள். ஏனென்றால் எண்ணம் போலவே நீங்கள் ஆகிறீர்கள்.

தற்போது உங்கள் வாழ்க்கையில் நிகழும் உயர்வு—தாழ்வுகள் கடந்தகால நல்ல, கெட்ட ஆசைகள், எண்ணங்கள் செயல்களைப் பொறுத்தே நிகழ்கின்றன. தற்போது உங்கள் வாழ்வில் நிகழும் ஏற்றத் தாழ்வுகள் உங்களுடைய கடந்தகால நன்மையும் தீமையுமான ஆசைகள், எண்ணங்கள், செயல்களைப் பொறுத்ததே. எனின் உங்கள் எதிர்கால வாழ்வின் உயர்வு — தாழ்வு, உங்களுடைய தற்போதைய ஆசைகள், எண்ணங்கள், செயல்களைப் பொறுத்தே முழுக்க முழுக்க நடக்கும். நீங்களே உங்களுடைய அதிருஷ்டம், துரதிர்ஷ்டத்திற்குப் பொறுப்பாளி ஆகிறீர்கள்.

மனம் நான்கு பிரதான ஆற்றல்களைக் கொண்டது. அதாவது உள்ளுணர்வு பெறுதல், உணர்ச்சி வயப்படுதல், ஒருமுகப்படுத்துதல், சிந்தனை வயப்படுதல் ஆகும். இந்த நான்கு ஆற்றல்களின் அடிப்படையில் மனத்தைக் கட்டுப்படுத்த நான்கு பாதைகள் உள்ளன. அதாவது செயலாற்றுதல், பக்தி செய்தல், மனோதத்துவக் கட்டுப்பாடு, தத்துவம் அறிதல் ஆகும். எல்லா ஆற்றல்களும் மனத்திற்குள் இருந்தாலும் ஒருவரிடம் இவை எல்லாமே சம அளவில் வளர்வதில்லை. பெரும்பாலான மக்களிடம் மற்றமூன்றைவிட ஏதாவது ஒரு ஆற்றல் மட்டுமே ஓங்கியிருக்கும். அவர் அவ்வாறு அதிகமாகி ஆக்கிரமித்துள்ள ஆற்ற

லுக்கு ஏற்ற பாதையை வகுத்துக் கொண்டு அதன் மூலம் 'உயரிய குறிக்கோளை' எய்து கிறார்.

மனத்திற்குப் பல்வேறு செய்கைகள் உள்ளன. பலதரப்பட்ட செய்கைகளுக்கு ஏற்ப அந்த ஒரே மனத்தை பல்வேறு பெயர்களால் குறிப்பிடுகிறோம். மனம் ஒன்றை, ஒரு சம்ப வத்தை,ஒரு நிகழ்ச்சி போன்றதை பகுத்தறிந்து, முடிவெடுத்து தீர்மானிக்குந் திறனையே புத்தி என்கிறோம். ஒருவருடைய எல்லாச் செயல் களுமே அறிவின் முடிவைப் பொறுத்து அமை கின்றன. அறிவைக் கொண்டே ஒருவரை மதிப் பிடுகிறோம். அந்த அறிவுதான் ஒரு மனித னுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையி லுள்ள வித்தியாசத்தைக் காட்டுகின்றன. இதே போல் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடை யிலுள்ள வித்தியாசமும், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் போன்றவையும் அறிவைப் பொறுத்தே அமை கின்றன. எளிய,தூய, புனித வாழ்கையை மேற் கொள்வதாலும், கற்பு நெறியினாலும், பிரயாண அனுபவத்தினாலும், நல்ல நூல் களைப் படிப்பதினாலும் அறிவுக் கூர்மை ஏற்படுகிறது. எங்கும் அறிவாளிகளே மக்களை வழி நடத்தி ஆட்சி செய்கிறார்கள்.

எதைச் செய்வது—எதைச் செய்யக் கூடாது என்பதை அறிவே தீர்மானிக்கிறது. இந்தத்-

தீர்மானத்தின் பேரில் என்று மனம் உடல் புலன்களைச் செயல்படச் செய்கிறது. இந்தச் செயலையே உள்ளுணர்வின் ஆற்றல் (Will) என்கிறோம்.

மனம் உடலைத் தான் என நினைப்பதையே 'அகந்தை' என்கிறோம். ஒரே ஒரு மனந்தான் இருக்கிறது. அது பல்வேறு நிலைத் தளங்களில் வேலை செய்கிறது. அவற்றை நினைவு நிலைத்தளம், மறதி நிலைத்தளம், ஆழ்நிலைத் தளம், யோக நித்திரை, பேராற்றலின் நிலைத்தளம் என்கிறோம்.

விழிப்பு நிலையில் மனம் மூளை மையத்தில் வேலை செய்கிறது. கனவு நிலையில் மனம் சிறு மூளைப் பகுதியில் வேலை செய்கிறது. கனவுக்கான கருப்பொருளை அது சித்தத்தின் (மனக்கோப்பின்) மறதி நிலைத்தளம், ஆழ் நிலைத்தளங்களிலிருந்து கொண்டு வருகிறது. சுயமாக எழும் எண்ணக் கதிர்களினால் கனவு உண்டாகிறது.இந்தச் சுயமாக எழும் எண்ணக் கதிர் அலைகள் குண்டலினிகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. குண்டலினி சக்தியே சித்தம் என்பதும்! நாடிக்கதிர்களுக்குக் காரணம் அதுவே. குண்டலினி சக்தி தன்னிடமுள்ள எல்லையில்லா ஆற்றலால் ஞாபக சக்தியைப் பாதுகாத்து அவசியமாகும்போது வெளிப் படுத்துகின்றது.

பக்குவப்பட்ட யோகிகள் உறங்குவதில்லை. யோக நித்திரை என்னும் நிலையையே அவர்கள் அனுபவிக்கிறார்கள். தூக்கத்தில் ஒருவகை உண்டு. அவர்கள் உறங்குவார்கள். அதே சமயம் மற்றவர்களின் நடமாட்டத்தை யும், பேச்சுகளையும் உணர முடியும். அதே சமயம் ஒரு சிறு தூக்கம் போட்டு எழுந்த பலன் இருக்கும். ஒருவர் நிர்விகல்ப சமாதி நிலையை (ஆழ்நிலைத் தியான நிலையை) எய்தி உலகாயத உறவு முறைக்குத் திரும்பி வந்த பிறகு அவர் மனம் எல்லாம் அறிந்த நிலைத் தளத்தில் தங்கி இயங்குகிறது.

அறிவது என்றால் அறியும் பொருள், பொருளுக்கான வடிவம், வடிவத்தைப் பற்றிய விளக்கம் எல்லாமே இருந்தாக வேண்டும். அறியும் பொருளும், பொருளின் வடிவமும், வடிவத்தின் விளக்கமும் மனத்தில் மட்டுமே உள்ளன. மனம் இன்றேல் புரிந்து கொள்வது என்பதும் இல்லை. உதாரணமாக ஆழ்ந்த உறக்கத்தின்போது மனம் கணநேரம் ஆன்மா வில் ஒன்றி விடுகிறது. அதனால்தான் அவருக்கு உலகைப் பற்றிய ஞாபகமே இருப்பதில்லை. மனம் ஐம்புலன்களின் மூலம் உலகைக் காட்டு வதால்தான் நீங்கள் அறிகிறீர்கள். ஐம்புலன் களில் பழுது ஏற்பட்டு மூளைக்கோளாறும் ஏற் பட்டால் அகிலம் பூராவும் மாற்றமுடன் தெரியும். ஆகவே அகிலம் என்பது உங்கள்

மனம் படம் பிடித்துக்காட்டும் தோற்றமே ஒழிய வேறொன்றுமில்லை. காலம், பரவெளி, காரணம் எல்லாமே உங்களுடைய மனத்தில் தான் உள்ளன.

## பொது

**கேள்வி :** அகிலம் பூராவும் உயிர்ச்சார உணர்வினால் நிரப்பப்பட்டுள்ளது என்று எப்படிக் கூறுகிறீர்கள்?

**பதில் :** பிரம்மம் அல்லது அருவக் கடவுள் தன்னில் தானாகவே உள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம். ஒவ்வொரு மதமும், 'கடவுள் சர்வ வியாபி — எல்லையற்றவர்' என்று முழங்குகிறது. எல்லையற்றவர் எனில் ஆரம்பம் இல்லாதவர், மத்தியும் இல்லாதவர்; முடிவும் அற்றவர் என்பதாகும். அந்த நிலையிலான பொருள்ஒன்றே ஒன்றாகத் தான் இருக்கமுடியும். கடவுள் அல்லது பிரம்மம் எல்லையில்லாதவர் ஒரே ஒருவர்தான். தன்னில் தானாகவே நிரம்பியுள்ள உயிர்ச்சார மகா சமுத்திரம். எனின் உயிரற்ற ஜடத்துக்கோ அல்லது அசைவற்ற பொருளுக்கோ இடமில்லை. ஆகவே அகிலம் முழுவதுமே உயிர்ச்சார உணர்வாகவே உள்ளது.

**கேள்வி :** அகிலம் முழுவதுமே உயிர்ச்சார உணர்வாக இருப்பின் 'இறப்பு' என்பது ஏது? அப்படியாயின் ஒரு மனிதன் எப்படி இறக்க முடியும்?

பதில் : மின்சாரம் சூக்கும உருவில் அகிலம் பூராவும் பரவியிருக்கிறது. ஒரு மின் இயக்கி சாதனத்தின் (டைனமோவின்) மூலம் அது ஓர் இடத்தில் சேமிக்கப்படுகிறது. அந்த மின் இயக்கி சாதனத்திலிருந்து சேமிக்கப்பட்ட நிலையிலுள்ள மின் சக்தியை கம்பியில் பாய்ச்சுகிறோம். அதைத் தொடர்ந்து இந்த மின்சாரத்தினால் மின்விளக்கை எரிய விடுகிறோம். சில நேரங்களில் மின்விளக்கு பழுதடைந்து விடுகிறது. மின்விளக்கு எரிவது அணைந்து போனாலும் எங்கும் பரவி நிற்கும் மின்சாரம் அங்கே இருக்கத்தான் இருக்கிறது. (எங்கும் வியாபித்து இருக்கிறது.) அதேபோல் ஒரு மனிதன் இறந்தாலும் எங்கும் வியாபித்துள்ள உயிர்ச்சார உணர்வு இருக்கத்தான் இருக்கிறது (எங்கும் வியாபித்து இருக்கிறது.)

**கேள்வி** : சிலர் 'கர்மம்' என்பதையும் அதன் விளைவான பலன்கள் என்பதையும் ஒப்புக் கொள்வதில்லை (கர்மம் வேலை; கர்மபலம் அதன்பலன்). அவ்வாறு சொல்பவர்கள், ஒருவருக்கு விளையும் துயரங்களுக்கு சமூகமே காரணம் என்கிறார்கள். இதை எப்படி எடுத்துக் கொள்வது? இதன் பின்னணியில் உள்ள உண்மை என்ன?

பதில் ; 'கருமம்' என்பதும் 'கர்மபலன்' என்பதும் வடமொழிச் சொற்கள். 'கருமம்' என்றால்

வேலை. 'கருமபலன்' எனில் வேலையினால் விளையும் பலன்கள். காரணமின்றி ஒரு விளைவு உண்டாவதில்லை. நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுவடை செய் கிறீர்கள்.

நீங்கள் ஒரு ஆப்பிள் செடியை நட்டு அதற்குத் தேவையான உரமிட்டு தண்ணீர் பாய்ச்சினால் உரிய காலத்தில் தரமான ஆப்பிள் பழங்களைப் பறிக்கிறீர்கள். மாறாக நீங்கள் ஒரு முள்செடியை நட்டு உரமிட்டு நீர்பாய்ச்சி னால் முள்புதரையே பலனாகப் பெறுவீர்கள். அதேபோல் நீங்கள் நற்செயலைச் செய்து, மனித குலத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்வீர்களானால், உங்கள் மதிப்பு உயர்ந்து ஆனந்த வாழ்க்கையை அனுபவிக்க முடியும். எதிர்மாறாகப் பொய் பேசி, வஞ்சித்து, கொள்ளையடித்து, கொலை செய்து, குடித்து, இதைப் போன்ற எல்லா பாபக்கிருத்தியங் களையும் செய்தால் நீங்கள் நரக வேதனையில் உழல வேண்டியதுதான். எல்லாப் பாபங்களை யும் செய்துவிட்டு ஒருவர் எப்படித் தண்டனையி லிருந்து தப்ப முடியும்? ஒருவர் செய்யும் பாபங் களுக்குச் சமூகம் எப்படிப் பொறுப்பாகும்?

அறியாமையினால் தவறாக முட்புதர் களை நட்டுவிட்டு, ஆப்பிள் பழங்களைச் சாப்பிட ஆசைப்பட்டால் அது எப்படி முடியும்? உங்க ளுடைய கெட்ட நடவடிக்கைகளுக்கு சமூகம்

எப்படிப் பொறுப்பாளியாக முடியும்? சமூகத்தைக் குறை கூறுவது மிகவும் அர்த்தமற்றது. 'சமூகந்தான் காரணம்' என்று சொல்வது அடி முட்டாள்தனமாகும். பகுத்தறிவு இல்லாதவன்தான் அவன் செய்யும் தவறுகளுக்கு சமூகத்தை நிந்திப்பான். வாழ்க்கை என்பது பூர்வத்தில் செய்த கர்ம வினையும், இப் பிறவியின் முயற்சிகளும் கலந்த கலவையே ஆகும்.

ஒருவருடைய வாழ்க்கையில் பூர்வத்தில் செய்த செய்கைகளின் காரணமாகப் பல்வேறு விளைவுகள் அவருடைய வாழ்க்கையில் நிகழ்கின்றன. அவர்கள் ஒன்றை விரும்பி உழைப்பதின் பலனாகவும் பல விளைவுகள் ஏற்படுகின்றன. பூர்வத்தில் செய்த பலன்களின் விளைவுகளை இப் பிறவியின் நற்செய்கைகளால் தீர்த்துக் கொள்ள முயல்வது இரண்டு காளைகள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்வதைப் போன்றதாகும். கடந்த கால விளைவுகளைக் குறிக்கும் காளை வலிவுள்ளதாக இருந்தால், இப்பொழுது நீ செய்யும் காரியத்தின் காளை பலமிழந்து தோற்று விடுகிறது. அதே போல் இப்போதைய முயற்சிகள் என்னும் காளை வலிவுள்ளதாக இருந்தால், கடந்த கால வினைகளுக்கான காளையைத் தோற்கடித்துவிடும். முறையான நற்செய்கைகளால் ஒருவருடைய வாழ்க்கையை

வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முடியும். நேர்மையும், கண்ணியமும் மிக்க முயற்சியினால் ஆகாதது ஒன்றுமேயில்லை. ஆகவே நீங்கள்தான் உங்களுடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் காரணம்! உங்களுடைய தவறுகளுக்கும், குறைபாடுகளுக்கும் மற்றவர் மீது பழி சுமத்துவது அப்பட்டமான கோழைத்தனமாகும். வாழ்க்கையில் உயர்வு — தாழ்வுகளை துணிவோடு எதிர்த்து நில்லுங்கள். உண்மையான மனிதனாக இருங்கள். எளிய தூய புனித வாழ்க்கையை கடைப்பிடியுங்கள். வெற்றி உங்களைத் தேடிவரும்

**கேள்வி**: மறு பிறப்பு என்பது உண்டா?

**பதில்**: உண்டு. மறுபிறவி இருக்கிறது.

**கேள்வி**: அதை எப்படி நிரூபிக்க முடியும்?

**பதில்**: நீங்கள் உங்கள் மனத்தையும், சித்தத்தையும் (மனக்கோப்பினையும்) கட்டுப்படுத்த முடியுமானால் உங்களுடையமுற்பிறவியைப் பாதித்த விவரங்கள் அனைத்தையும் நினைவில் கொண்டு வர முடியும். இது நிச்சயம். மரணம் என்பதின் அர்த்தம் ஒருவருடைய தூல உடல் மட்டும் அழிந்து போவது என்பதாகும். சூக்கும உடல், காரண உடல், சித்தம் (முற்பிறவி, இப்பிறவிகளின் நினைவுகளைச் சேமித்து வைத்திருக்கும் இடம்), உயிர் இறப்பதில்லை. அடுத்த பிறவி எடுக்க

எல்லாமே உயிரைத் தொடர்ந்து செல்கிறது. ஒருவர் பூர்வத்தில்செய்த நன்மை—தீமைகளின் முடிவுக்கேற்ப மரணமடைபவனின் அடுத்த பிறவி அமைகிறது. இறப்பவன் பாபியாக இருந்தால், கீழ்த்தரமான குடும்பத்தில் பிறக்கிறான். அதீத பாபத்தைச் சம்பாதித்துக் கொண்டவர்கள் குறைப்பட்ட புலன்களோடு பிறக்கிறார்கள். அதாவது குருடு, நொண்டி, செவிடு, தீராத வியாதிகள் போன்ற குறைபாடுகளுடன் பிறக்கிறார்கள். சிலர் முட்டாள்களாகப் பிறக்கிறார்கள். அவர்களுக்காக நீங்கள் எவ்வளவு போராடினாலும் அவர்களைத் திருத்தவே முடியாது. ஆனால் முன்னுக்கு வர அவர்களை ஓரளவு பழக்கலாம். மறுபுறம் பார்ப்போமானால் நற்காரியங்களைச் செய்து இறந்தவர்கள் நல்ல செல்வந்தர்களது குடும்பங்களில் பிறக்கிறார்கள். அவர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். எல்லா லட்சணங்களோடும் பிறக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்கிறார்கள். இன்றேல் அகிலத்தில் காணும் இது போன்ற வித்தியாசங்களுக்கு எப்படி விளக்கம் தர முடியும்? ஒருவன் முதன்முதலாக அப்போது தான் பிறவி எடுத்திருப்பானாயின் இந்த அகிலத்தில் ஏன் இத்தனை வித்தியாசங்கள் இருக்கின்றன? உயிர்ப்பொருள்கள் என்ற வகையில் எல்லாமே ஒரே இனந்தான். ஆனால்

அவை ஒன்றுக்கொன்று மிகவும் வித்தியாசப் படுகின்றன.

பூச்சிகள், புழுக்கள், மீன்கள், மிருகங்கள், மனித சாதி இடத்தே இருக்கும் உயிர் அல்லது உயிர்ச்சார உணர்வு ஒரே மாதிரியானதுதான். ஆனால் பரிணாம வளர்ச்சியில் மிகுந்த வித்தியாசம் ஏற்படுகிறது. எல்லா உயிர்களுமே ஒரே சமயத்தில் தோன்றியிருப்பின் அனுதாபம், அன்புக்கு அவசியமே இல்லை. அத்தகைய நிலையில் 'பலம்' மட்டும் போதும். 'தர்ம நியாயம்' தேவையில்லை. பரிணாம வளர்ச்சிக்கே அவசியமில்லை. 'பரிணாம வளர்ச்சி' என்றால் மறுபிறவி என்று பொருள். மறு பிறவி எடுக்காமல் எப்படிப் பரிணாம வளர்ச்சி ஏற்படும்?

மேலும் ஒரே மாதிரி நற்குணங்களையும், கெட்ட குணங்களையும் படைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட தேசத்தில் போய்ப் பிறக்கிறார்கள். மிகவும் நெருக்கமான உயர்வு — தாழ்வு கொண்டவர்கள் ஒரே குடும்பத்தில் ஒரே தாய் வயிற்றில் பிறக்கிறார்கள். அது மட்டுமின்றி ஏறக்குறைய ஒரே மாதிரித் தன்மை படைத்தவர்கள் இரட்டையர்களாகப் பிறக்கிறார்கள். அதனால்தான் யுத்தம், பூகம்பம், வெள்ளம், பஞ்சம், கொள்ளைநோய், புயல் ஏற்படும்போது எல்லோருமே பாதிக்கப்படுகிறார்கள். மறு பிறவியே இல்லையெனில் எல்லோருமே சம

அந்தஸ்துடன் பிறந்தாக வேண்டும். அப்படி யானால் இந்த வித்தியாசங்கள் ஏன்? ஒரே பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு உணவு, ஆசிரியர், சூழ்நிலை போன்ற ஒரே மாதிரியான வசதிகளைச் செய்து கொடுத் தாலும் அவர்கள் மாறுபட்ட வழிகளில்தான் வளர்கிறார்கள். இரட்டையர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்களும் வெவ்வேறு முறைகளில் வளர்கிறார்கள். எப்படிப் பார்த் தாலும் அவர்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. அது ஏன் அப்படி?

ஒரு தந்தைக்கு மூன்று வளர்ந்த பிள்ளை கள் உள்ளனர். அவர் ஒவ்வொருவரிடமும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து அவர்களாகவே தங்களுக்கான எதிர்கால வாழ்வை முழு சுதந்தரத்துடன் அமைத்துக் கொள்ளும்படிச் சொன்னார். ஒரு பிள்ளை தான் தந்தையிட மிருந்து கிடைத்த பரிசுப் பணத்தை நல்வழியில் பயன்படுத்திக் கோடீசுவரனாக வளர்கிறான். அடுத்தவன் தந்தையிடமிருந்து கிடைத்த பணத்தைச் சூதாட்டங்களில் விரயமாக்கி ஏழ்மையில் உழல்கிறான். மற்றொரு பிள்ளை அலட்சியப் போக்குடன் தன் வாழ்நாளை குடியும் கூத்துமாகக் கழித்துத் தெருச்சுற்றும் 'ரௌடி'யாகி விட்டான். அந்த ரௌடி தன்னுடைய தவறான செய்கைகளுக்கு தன்மீது பழி என ஒத்துக்கொள்ள மாட்டான். சூதாட் டங்களில் தோற்ற மற்றொருவனும் தன்

இழப்பிற்கு தானேதான் காரணம் என்பதை ஒப்புக் கொள்ள மட்டான். அவர்கள் இருவருமே சமூகத்தைக் குறை கூறிக்கொண்டு முதலாளித்துவத்தைப் பழித்து,கோடீசுவரனான சகோதரனிடமேகொள்ளையிட விரும்புவார்கள். இது எவ்வளவு நியாயமற்ற செய்கை! தந்தை என்னவோ மூன்று பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்புகளையே அளித்தார். எல்லோருக்கும் நல்ல கல்வியைக் கொடுத்தார். சமமான சூழ்நிலையில் வளர்த்தார். ஒரே மாதிரியான பாரம்பரியத்திலே வந்தவர்கள்தான். பிறகு எப்படி இந்த மூன்று பிள்ளைகளும் மூன்று வித்தியாசமான வழிகளில் வளர்ச்சியடைந்தார்கள்.

இது குருட்டாம்போக்கினாலா? இல்லை இந்த மூன்று பிள்ளைகளுக்கு நல்லது எது, கெட்டது எது என்பது தெரியும். ஆயினும் இருவர் மட்டும் தவறான வழியைக் கடைப்பிடித்துத் துன்பத்திற்குள்ளானார்கள். இது அவர்களுடைய பூர்வ பிறவியில் நேர்ந்த கர்ம பலனின் விளைவுகள், இந்த இரண்டு பிள்ளைகளின் அறிவைக் கெட்ட வழிகளில் திருப்பி விட்டன. ஆயினும் அவர்கள் தகுந்த முன்னெச்சரிக்கையுடனிருந்து, தங்கள் மனத்தை நேர்ப்படுத்தி அவர்களுடைய உள்ளுணர்வின் ஆற்றலை உரிய வழிகளில் உபயோகித்திருந்தால், அவர்களும் இந்த விபரீத முடிவிலிருந்து

எளிதில் தப்பித்திருக்கலாம். ஒருவருடைய வாழ்வில் பல விஷயங்கள் திடீரென நிறைவேறுகின்றன. இதுவும் பூர்வ பிறவியின் கர்ம பலன். வேறு பல விஷயங்கள் நிறைவேறுவது எப்படியெனில் அதற்காக அவர் திட்டமிட்டு, கடுமையாக உழைக்கிறார். வாழ்க்கை என்பது பூர்வ பிறவியின் கர்மபலனும், இப்பிறவியில் செய்யும் முயற்சிகளும் கலந்த கலவையாகும். இதில் எது வலுவுள்ளதாக ஆகிறதோ அது மற்றதைத் தோற்கடிக்கிறது. மனிதன் தனது மனம், ஆசைகளின் கைப்பொம்மையாகி விடுகிறான். மனிதனுக்கு மேன்மையான காலம் எதுவெனில் மனக்கட்டுப்பாட்டைப் பழகி மனம், புலன்கள், ஆசைகளின் எசமானனாக அவன் ஆவதுதான். உண்மையான நிம்மதியும் உண்மையான முன்னேற்றமும் இதுவே.

மக்கள் தங்களுடைய பூர்வ பிறவியை நினைவில் வைத்திருக்கும் நிகழ்ச்சிகளும் பல இருக்கின்றன. இதுபோன்ற சம்பவங்களில் இப்போது ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். பிருந்தாவனுக்கு (டில்லிக்கு அருகில் உள்ள இடம்) அருகில்இருந்த ஓர் கிராமத்தில் நான்கு வயதுப் பையனொருவன் தன்னுடைய பூர்வ பிறவியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். இது 1973-இல் நடந்தது.

இந்த 1973-ஆம் ஆண்டில் நான்கு வயதுப் பையன் அவனுடைய அன்னையிடம் தனக்கு

ஒரு மனைவியும், மகளும் இருப்பதாகச் சொல் லிக் கொண்டிருந்தான். தாயும் மற்ற உறவினர் களும் சிரித்து இதை ஒரு வேடிக்கையாகக் கருதினர். பையன் கிராமத்துப் பள்ளியில் சேர்க்கப்பட்டான் அங்கும் அவனுக்கு ஒரு மனைவியும் மகளும் இருப்பதாகச் சொல்லத் தொடங்கினான். குழந்தைகள் இதைப் பெரும் வேடிக்கையாகக் கருதினர். விஷயம் ஆசிரிய ருக்கும் எட்டியது. ஆசிரியர் பையனை அழைத்து இதுபோன்று இனிப் பேசக்கூடாது என்று புத்திமதி சொன்னார். ஆனால் அந்தப் பையன் தனக்கு ஒரு மனைவியும் மகளும் இருப்பது வேடிக்கையல்ல; உண்மைதான்! என்று சாதித்துச் சொன்னான். அந்த ஆசிரியர் அந்தப் பையனுடைய தாத்தாவிடம் இதைப் பற்றிப் புகார் செய்தார். அந்தப் பையனுக்கு தந்தை கிடையாது.

தந்தை இறந்து போயிருந்தார். பையனு டைய தாத்தா இதைக்கேட்டு மிகவும் மனம் சோர்ந்து போனார். அவர் பையனை அழைத்து 'பள்ளியில் ஏன் அசட்டுத்தனமாக உளறுகிறாய்?' என்று கேட்டார். அந்தச் சிறுவன் அழுது கொண்டே, 'அடுத்துள்ள கிராமத்தில் தனக்கு ஒரு மனைவியும், மகளும் இருப்பதாகச் சாதித்தான்.' அவனுடைய பாட்டனார் பையனிடமிருந்து அந்தக் குடும்பத் தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கேட்டுச்

சேகரித்து எழுதிக் கொண்டார். அந்தக் கிராமத்திற்கும் போனார். பையன் சொன்ன குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்தார். பையன் கூறிய ஒவ்வொன்றும் மிகச் சரியாக இருந்தது. சில நாள்கள் கழித்து பையனுடைய முற்பிறவி மனைவி இந்தக் குடும்பத்திற்கும் பையனுக்கும் தெரியாமல் இவனுடைய வீட்டிற்குத் தனது மூத்த சகோதரியுடன் திடீரென வந்தாள். அவள் அந்தச் சிறுவனை முன்பு ஒருபோதும் பார்த்ததில்லை. பையனும் அவளைப் பார்த்ததில்லை. அந்தச் சிறுவன் திடீரென அந்தப் பெண்ணிடம் (விதவை) சென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு 'அவள் தன்னுடைய மனைவி' என்றும், மற்றொருத்தி 'தனது மைத்துனி' எனவும் சொன்னான். அப்போது தான் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் ஒரு மனோதத்துவ நிபுணரிடம் சொல்லப்பட்டது. டெல்லியிலுள்ள பிரதான மனோதத்துவ நிபுணர் தனது குழுவினருடன் பையனுடைய பாட்டனாரிடம் வந்து இதைப் பற்றிப் பையனிடம் விசாரணை செய்ய அனுமதி பெற்றார்.

அவர்கள், அந்தப் பையனை அவனுடைய முற்பிறவி மனைவி, மகள் இருக்கும் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படிக் கேட்டார்கள். அந்தச் சிறுவனும் அவர்களை பூர்வ பிறவியில் தனது மனைவியும் மகளும் உ

இல்லத்திற்கு அழைத்துச் சென்றான். முற்பிறவியில் தான் அங்கு வாழ்ந்தபோது நடந்த சில இரகசியங்களையும் அவர்களிடம் சொன்னான். அதை அவர்கள் ஒப்பிட்டுப் பார்த்தபோது மனைவியும் அதை உண்மையென ஒப்புக் கொண்டாள். மேலும் ஆராய முற்பட்டனர். அவனுடைய மாமனாரின் இல்லத்தைக் காட்டும்படிக் கேட்டனர். அந்தப் பையன் அடுத்திருந்த கிராமத்திற்கு அழைத்துச் சென்று அந்த வீட்டையும் காட்டினான். அந்த வீட்டில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருந்தன. அதாவது சில அறைகள் புதிதாகக் கட்டப்பட்டிருந்தன. அதையும் அந்தப் பையன் சொன்னான்.

பையனிடமும், விதவையிடமும் முழு விவரங்களைக் கேட்டறிந்த பிறகு அந்த 'மனோ தத்துவவாதிகள்' தங்களுடைய ஆய்வின் முடிவைத் தெரிவித்தனர். அந்தப் பையன் தனது பூர்வ பிறவியை நினைவில் கொண்டிருப்பது உண்மை. அந்த நினைவுகள் மூளையில் சாலைகளாகப் பதிந்து போகின்றன. ஆனால் இறக்கும்போது ஒருவனுடைய மூளையும் அதிலுள்ள சாலைகளும் அழிந்து விடுகின்றன. அப்படியிருந்தும் இந்தப் பையன் எப்படி முற்பிறவியைச் சொல்கிறான் என்பது எங்களுக்குப் புரியவில்லை! என்றார்கள்.

1973-இல் நான் ஐரோப்பாவிலிருந்து டில்லி திரும்பினேன். அந்த மனோதத்துவக் குழுவின் தலைவர் டில்லியிலுள்ள எனது ஆசிரமத்திற்கு வந்தார். நாங்கள் அந்தக் குறிப்பிட்ட ஒரே விஷயத்தைப் பற்றி மூன்று மணி நேரம் பேசினோம். மூளையில் உள்ள சாலைகள் உருவில் நினைவாற்றல் பதிந்துள்ளது என்று அவர் சொன்ன தவறான வாக்குமூலத்தை நான் திருத்தினேன். மனக்கோப்பின் (நினைவுக் கோர்வையான சித்தம்) சேமிப்புக் கிடங்கு மூளை அல்ல என்று சொன்னேன். குண்டலினி சக்தி தனது அளவிலா ஆற்றலி னால் காரண வடிவில் எல்லா நினைவுகளை யும் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக் கிறது. மனம் கடந்தகால நினைவுகளைக் கேட்கும்போது அந்தச் 'சக்தி' அவற்றை உடனுக்குடன் கொண்டு வந்து தருகிறது. 'மரணம்' என்றால் உடல் மட்டுமே மரண மடைகிறது. சூக்குமம உடல், காரண உடல், மனம், குண்டலினி சக்தி, உயிர் ஆகியன இறப்ப தில்லை. மனிதன் இறந்தவுடன் சூக்கும உடல், காரணஉடலில் ஒன்றி விடுகிறது. காரண உடல் குண்டலினி சக்தியுடன் இணைகிறது. அந்தக் கணத்தில் சக்தியானது உயிருடன் சேர்ந்து கொள்கிறது. உடனே உயிரெனும் ஆன்மா பிறக்கப் போகும் இடத்திற்குப் போய்ச்சேர் கிறது. அப்போது தன்னிடமுள்ள எல்லாப் பூர்வ பதிவுகளையும் புதிய பதிவுகளாக்கிக் கொள்

கிறது. இதன்மூலம் ஒருவர் தன்னுடைய பூர்வப் பிறவியின் விஷயங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வர முடியும். பலருக்கு இவை நினைவில் இருப்பதில்லை. பலர் கனவு காண் கின்றனர். விழித்தவுடன் அந்தக்கனவு, நினை வில் நிற்பதில்லை. நல்ல ஞாபகசக்தியுடைய வேறு சிலர்தாங்கள் கண்ட கனவு முழுவதையும் ஒன்று விடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள் கின்றனர்.

சிலர் தங்கள் குழந்தைப் பருவத்தை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் அவற்றை அடியோடு மறந்து போகிறார்கள். அதேபோல் சிலர் தங்களுடைய பூர்வ பிறவியை ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறது. வேறு சிலர் முழுவதையும் மறந்து விடுகின்றனர். இருப்பினும் ஒருவர் உறுதியான மனக்கட்டுப் பாட்டினால் அவற்றை நினைவுக் குக் கொண்டு வரமுடியும். அதாவது குழந்தைப் பருவம், முற்பிறவி வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கூற முடியும்.

கேள்வி : ஒரு நாட்டின் குறிக்கோள் என்ன? கல்வி யின் குறிக்கோள் எதுவாக இருத்தல் வேண்டும்? மதத்தின் குறிக்கோள் யாது? மதம் என்றஒன்று தேவைதானா?

பதில் : நாடு, கல்வி முறை, மதம் மூன்றுமே ஒரு பொதுவான குறிக்கோளைக் கொண்டது.

அதாவது மனிதனைச் சுபிட்சமாகவும், அமைதி யுடனும், ஆனந்தமாகவும் வைத்துக் கொள்வது. இதை அடைய நாடு, கல்வி, மதம் மூன்றுமே அவசியம். உதாரணத்திற்கு செல்வம், அமைதி, ஆனந்தம் மூன்றையும் பெற்றிருக்கிறான் என்று நீங்கள் கூறும் ஒருவனை எடுத்துக் கொள்வோம். அத்தகைய ஒருவனிடம் நல்ல ஆரோக்கியமும், செல்வமும், அறிவும், நன்டைத்தையும், மனக்கட்டுப்பாடும் இருந் தாக வேண்டும். இந்த விஷயத்தில் நல்ல ஆரோக்கியம், செல்வம் இரண்டையும் ஒரு நல்ல ஆட்சிக்கு ஒப்பிடலாம். அறிவு வளர்ச் சிக்கு கல்வி— நன்னடத்தைக்கும். மனக்கட்டுப் பாட்டுக்கும் மதம். ஒரு சமூகத்தின் அல்லது தேசத்தின் உண்மையான வளர்ச்சிக்கு இந்த மூன்று துறைகளுமே மிகமிக அத்தியாவசியம். அவை இணைந்து செயல்பட வேண்டும். மாறாக அரசாங்கம் மதத்தை அலட்சியப் படுத்திவிட்டு கல்விக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்குமானால், அதாவது இந்த நவீன நாள்களில் நடப்பதுபோல் செய்யுமானால் — அது மிகத் தவறானது. தோல்விக்கும் காரண மாகிறது. வேறொரு வகையில் அரசு மதத்தை மட்டும் வளர்த்து, கல்வியையும் அறிவு வளர்ச்சி யையும் ஒதுக்கினால் அதுவும் தவறானது தான். ஆகவே ஒரு தேசம் அல்லது நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கு அரசும், கல்வித்

துறையும், மதத்துறையும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும்.

ஆனால் நவீன சமுதாயம் மதத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறது. இது மிகவும் தவறானது; துரதிர்ஷ்டமானதுங்கூட. புரட்சி செய்வது மிகவும் சுலபம். ஆனால் நல்ல பண்பாளர்களை உருவாக்குவது கடினம். மதம் அவசியமில்லை என்று இன்றைய மனிதன் எண்ணுகிறான். அவன் சுதந்திரமாக இருக்க விரும்புகிறான். தனது மாசுபடிந்த மனம்போன வழியில் நடந்து கொள்வதுதான் சுதந்திரம் என்று அவன் கருதுகிறான். அத்தகைய ஆசை அவனுக்குத் தோன்றி அதை அப்படியே நிறைவேற்றி விடவேண்டும் என்றும் செயல்படுகிறான். 'கட்டுப்பாடு' என்ற வார்த்தை அவனுடைய அகராதியிலேயே இல்லாமற் போய் விடுகிறது. இப்படியெல்லாம் நடந்து கொள்வதால் இந்தப் பரிதாபத்திற்குரியவன் தனது ஆசைகள், எண்ணங்கள், செயல்களின் முழு அடிமை என்பதைப் புரிந்து கொள்வதில்லை. அந்தோ—பரிதாபம்! அவன் எத்தகைய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிறான்? உலகம் பூராவிலுமுள்ள அரசாங்கங்கள் தான் கல்வி முறையைத் தவறான வழிகளில் செயல்படுத்துகின்றன.

**கேள்வி :** சாதி என்றால் என்ன? அது எப்படி முதன் முதலில் வந்தது? சாதி என்பதே இல்லாத நிலை சாத்தியமா?

**பதில் :** ஒரே மாதிரியான நோக்கமும், மனப் போக்கும் உடைய மனிதர்கள் ஒரே குழுவாகச் செயல்படும் அமைப்புக்கே சாதி என்று பெயர். இது ஒரு இயற்கை நியதி. இது தவிர்க்க முடியாதது. உதாரணத்திற்கு தாதுப் பொருள் கள், செடிகள், பூச்சிகள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் விஷயங்களில் சாதி என்பதைப் பார்ப்போம். நீங்கள் ஒரு ஆற்றுப் படுகையைக் கூர்ந்து பார்ப்பீர்களானால் மண் ஒரே பக்கத்தில் படிந்திருப்பதைப் பார்க்கலாம். அதன் அருகே தனித்தனியே மணல், கூழாங் கற்கள், கற்கள் குவிந்திருப்பதைப் பார்க்கலாம். மண், மணல், கூழாங்கற்கள், கற்கள் தனித் தனிக் குவியல்களாகக் குவிந்திருக்கக் காணலா மேயொழிய அவை ஒன்றோடு மற்றொன்று கலந்து இருக்காது. உலகின் பல்வேறு கண்டங் களில் வெவ்வேறு வகை மண் பாங்குகள் அமைந்திருக்கக் காணலாம். எண்ணெய்க் கனிமங்கள் வாயுக்கனிமங்கள் போன்றவை உலகில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே படிந்திருப்பன. இவை உலகத்தின் எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. மண்வகை,

கனிமப் பொருள் வகைகளில் தனித்தனி இனம் உண்டு.

தாவர வகைகளுக்கு வருவோம். குறிப் பிட்ட சில பகுதிகளில் ஒருவகைப் புல்லும் மரங் களும் மட்டும் வளர்வதைக் காணலாம். அவை யும் தனித்தனிக் கூட்டங்களாக அமைந் துள்ளன.

பல்வேறு பூச்சிகள், ஈக்கள், எறும்புகள் தனித் தனிக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு வாழ்கின்றன. ஒரு வழியில் பார்ப்போமானால் அவையும் இனப்பாகுபாட்டை அமைத்துக் கொள்கின்றன. தேனீக்கள், குளவிகள் போன்ற வையும் இராணி ஈக்கள், பாட்டாளி ஈக்கள், சோம்பேறி ஈக்கள், போன்ற பாகுபாட்டுடன் உள்ளன.அவையும் ஒரு வழியில் இனப் பிரிவை வகுத்துக் கொண்டுள்ளன.

பறவைகள் தனித்தனி இனங்களாக வாழ் கின்றன. ஒரு இனம் மற்றொரு இனத்துடன் கலப்பதில்லை. அவையும்தான் சாதியைக் கடைப்பிடிக்கின்றன.

மிருகங்களின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். ஒரே மாதிரியான மிருகங்கள் தனித்தனி மந்தைகளாக வாழ்கின்றன. இதிலிருந்து அவையும்கூட சாதியைக் கடைப்பிடிக்கின்றன.

மனிதனுக்கு வருவோம். ஒரே மாதிரி ரசனைகளும் போக்குகளும் உள்ள மனிதர்கள்

தனி இனமாக வாழ்கின்றனர். இதன் விளைவே செல்வந்தர்கள், மத்தியதரக் குடும்பத்தினர், ஏழைகள் என்று தனித்தனிப் பிரிவுகளாக விளங்குகின்றனர்.

இவர்களில் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினரோடு கலந்து வாழ்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் உலகின் பல்வேறு கண்டங்களில் வாழ்பவர்கள் பல்வேறு மொழிகள், பல்வேறு வெப்ப— தட்ப நிலைகளில் வாழ்கிறார்கள். அவர்கள் தனித்தனி இனங்களாக வாழ்கின்றனர். அவரவர்களின் ரசனைக்கும், போக்குக்கும் ஏற்ப வாழ்க்கை முறை அமைத்திருப்பதால் சாதி தோன்றியது. இது தவிர்க்க முடியாதது.

இந்தியாவில் சாதிக்கு ஒரு தனிப்பாதை வகுக்கப்பட்டது. ஆரியர்கள் முதன்முதலில் இந்திய நாட்டுக்குள் வந்தபொழுது கால்நடைகளுக்கான மேய்ச்சலைத் தேடி வந்த நாடோடிகள். இப்போது நடைமுறையிலுள்ள சாதிப் பாகுபாடு அப்போது அவர்களிடம் இல்லை. அப்போது அவர்களுடைய வழிகாட்டிகளாக குடும்பத் தலைவர்கள் என்ற அமைப்பு முறை மட்டுமே இருந்தது. பல்வேறு குடும்பங்கள் அந்தந்தக் குடும்பங்களுக்கான தனித்தனித் தலைவர்களுடன் இருந்தன. குடும்பத்தின் மூத்தவர் குடும்பத்தை நடத்துபவராக இருந்தார். இந்தக் குடும்பத் தலைவர்களுக்கு அவர்

களுடைய கூட்டத்தாரிடம் நல்ல மதிப்பு இருந்தது. பின்னர் இந்த நாடோடிக் கூட்டத்தினர் ஒரே இடத்தில் தங்க ஆரம்பித்தனர்.

ஜனத்தொகை பெருகியவுடன் இந்தக் குடும்பத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். தோற்ற கூட்டத்தார் ஜயித்த கூட்டத்தாரின் அடிமைகளாயினர், இதைத் தொடர்ந்து கூட்டத்தலைவர்கள். சிறிய அரசுகள், சக்கரவர்த்திகள் எனக் காலப் போக்கில் உருவாகிக் கொண்டே வந்தது. நாட்டின் குடிமக்களாக இருந்த திராவிடர்கள் ஆரியர்களால் வெல்லப்பட்டு சூத்திரர்கள் அல்லது தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப் பட்டனர். இத்தகைய வளர்ச்சி முறையின் குறிப்பிட்டதொரு காலகட்டத்தில் மனு என்ற ரிஷி அரசோச்சியபோது இந்திய ஆரியர்களை நான்கு பிரிவினராகப் பிரித்தார். அதாவது பிராம்மணன்,க்ஷத்திரியன்,வைசியன், சூத்திரன் ஆகும். அவரவர்களுடைய குணங்கள், கர்மங் களுக்கு ஏற்ப (அறிவு வளர்ச்சி, செய்யும் தொழிலைப்(கர்மாவை) பொருத்து இந்த முறை வகுக்கப்பட்டது. இதில் பிராமணன் ககல்வியில் தேர்ச்சி பெற்று, எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை; பக்திப்பயிற்சி, மனக்கட்டுப்பாடு, சமாதி நிலை பெறுதல் என வகுத்துக் கொண்டு வாழ்ந்தான். ஒரு சிப்பாய் அல்லது போர்

வீரன் தேசத்தைப் பாதுகாப்பதையும் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதையும் கடமை யாகக் கொண்டதால் க்ஷத்திரியன் என்றழைக் கப்பட்டான். விவசாயம், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் செய்தவர்களை வைசியர்கள் என்றழைத்தனர்.

திடகாத்திரமான உடலும், மந்த புத்தியும் பெற்று மூவகை உயர்சாதியினரிடம் அடிமைத் தொழில் செய்து வாழ்ந்தவர்களை சூத்திரர்கள் என்றழைக்கத் தொடங்கினர்.

ஆரம்ப கட்டங்களில் இந்த ஏற்பாடு கண்டிப்பான முறையில் இல்லை. நல்ல திறமையும், உயர்ந்த பண்பும் உள்ள ஒருவர் கீழ்மட்ட சாதியிலிருந்து தோன்றிவராக இருப் பினும் உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்து அவரை ரிஷி என்று அழைத்தனர்.

நாளடைவில் இந்த சாதி ஏற்பாடு தேய்வ டைந்து பிறப்பினால் மட்டுமே என்றானது. மூட த்திருமணங்கள், ஊழல்முறை, முறை கேடுகள் ஆசியவை இந்தியரின் சாதி ஏற்பாட் டில் நுழைந்தன. ஆரம்ப கட்டத்தில் சாதி முறை ஏற்றதாக இருந்தது; தேசமும் எல்லா விதத்திலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டது. அது எதைப் போன்றது என்றால் பத்தாவது வரையில் ஒரு மாணவன் பல்வேறு ஆரம்பப் பாடங்களைக் கற்கிறான்; கல்லூரி, பல்கலைக்

கழகம் என்று போகும்போது அவன் உயர்ந்த படிப்புக்காக ஒரு தனிப்பாடத்தைக் கற்க எடுத்துக்கொள்கிறான். அதேபோன்று 'மனு' ஜனத்தொகை பெருகியபோது மக்களை தனித்தனி இனங்களாகப் பிரிப்பது அவசியம் எனக் கருதினார்.

இதனால் சாதி தவிர்க்க முடியாதது என்றாயிற்று. ஒரேவகை ரசனையும் போக்கும் உள்ளவர்கள் தனித்தனிப் பிரிவினராக வகுத்துக் கொண்டனர்.

இதே மாதிரிதான், மிருகங்களிலும், பறவைகளிலும், தாவரங்களிலும் தாதுக்களிலும் சாதி அமைப்புகள் உருவாகி உள்ளன.

கேள்வி : விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்றால் என்ன? எது முக்கியமானது? இதில் ஒன்று மட்டும் போதுமா? இந்த இரண்டும் இணைவதற்கு வழி உண்டா?

பதில்: பௌதிகம் (Physic) என்று ஒற்றைப்படையில் சொன்னால் ரசாயனம் என்று பொருள். பௌதிக விஞ்ஞானம் (Physics) என்று இரட்டைப் படையில் கூறினால் அது சடம், சக்தி அவற்றின் குணங்கள் ஆகிய விஞ்ஞான நுட்பங்கள் என்று பொருள். பௌதிகம் (Physic) வினைச் சொல்லாகும்போது, (transitiue verb) மருத்துவப் பயனுள்ள மருந்தைக் குறிப்பிடுகிறது. உடற்கூறு (Pysical) என்று செயப்பாட்டு

வினையாகும் போது உடல் வலிமை அல்லது உடல்கூறு ஆகிறது. உடலைப் பற்றியது என்னும்போது அது 'மனதைப் பற்றியது' அல்ல என்றாகிறது. உடற்கூறை அறிந்தவன் (Physician) என்றால், பட்டம் பெற்ற மருத்துவ நிபுணர் என்று பொருள். மெய்ஞ்ஞானம் என்ற மெய், ஞானம் என இரு பொருள் கொண்ட சொல்லின் (இருபெயர்ச்சொல்) அர்த்தம். உயிர் - அறிவுக்கான (Being and knowing-Theory) விஞ்ஞானக் கருத்து. இந்த அர்த்தத்தையே அகராதியும் சொல்கிறது. இந்த உண்மையின் அடிப்படையிலேயே விஞ்ஞானம் தூலப் பொருள்களைக் கையாள்கிறது. மெய்ஞ்ஞானம் சூக்குமப் பொருள்களைக் கையாள்கிறது. வேறு வகையில் சொல்வோமாயின் விஞ்ஞானம் விளைவுகளை அறிய முற்படுகிறது. மெய்ஞ்ஞானம் மூல காரணத்தை அறிய முற்படுகிறது. இந்த இரண்டுமே அவசியமாகிறது. ஏனெனில் காரணமில்லாமல் காரியமில்லை. விளைவைவிட மிகச் சூக்குமமானது காரணம். தூலப் பொருள்களைக் கையாள்வது சுலபம். அவற்றை வைத்துக் கொண்டு ஆராய்வதற்கு மிக அரிய கருவிகள் உள்ளன. ஆனால் நாம் மிக மிக நுட்பமான இரகசியத் தன்மைகளை (காரண நிலை அமைப்புகளை) ஆராய்வதற்கு கருவிகளே இல்லை. காரண நிலை நுட்பங்களைக் கண்டறிய எந்தக் கருவியுமே இல்லை. இதன் காரணமாகவே நவீன

விஞ்ஞானத்திற்கு மனம், குண்டலினி சக்தி, உயிர்ச்சார உணர்வு ஆகியவைப் பற்றித் தெரியவே தெரியாது.

மனம், குண்டலினி சக்தி, உயிர்ச்சார உணர்வின் இரகசியங்களை அறிய வேண்டுமாயின், ஒருவர் தன்னுடைய சொந்த மனத்தையே கருவியாகப் பயன்படுத்த வேண்டும். நவீன விஞ்ஞானம் மூளை, உடல் போன்றவற்றின் நுட்பங்களை அறிய ஏராளமான ஆய்வுகளை நடத்தியுள்ளது. மனம், எண்ண இயக்கங்கள், சித்தம் (மனக்கோப்பு), குண்டலினி சக்தி, உயிர்ச்சார உணர்வு ஆகியவை பற்றி ஏதுமே அறியாத இருண்ட நிலையில் அது இருக்கிறது. விளைவு விஞ்ஞானம் ஒரு சார்புடையதாகி விட்டது.

மனிதனை மேம்படுத்தி, மகிழ்ச்சியுடையவனாக்க இரண்டுமே (விஞ்ஞானம் – மெய்ஞ்ஞானம்) மிக மிக அவசியம். இந்த இரண்டும் இணைந்த நிலை நிச்சயமாகத் தேவைதான்.

கேள்வி : அவ்வாறெனில் விஞ்ஞானம் ஏன் மெய்ஞ்ஞானத்தைக் கண்டு பயப்படுகிறது?

பதில் : விஞ்ஞானம் தூலப் பொருள்களைக் கையாளுகிறது. அவர்களின் கண்டுபிடிப்புகளை நிருபணம் செய்ய அதி அற்புதக் கருவிகள் உள்ளன. பரிசோதனைகள் மூலம் நிருபித்துக் காட்ட முடிந்த உண்மைகளை

மட்டுமே விஞ்ஞானம் நம்புகிறது. மெய்ஞ் ஞானம் மிகமிகச் சூக்கும விஷயங்களைக் கையாள்கிறது. விஞ்ஞானிகளிடம் அவற்றை நிரூபித்துக் காட்டுவதற்கான கருவிகள் இல்லை. இங்கே ஒருவருடைய சொந்த மனமே பரிசோதனைகளைச் செய்வதற்கான கருவியாக இருக்க வேண்டியுள்ளது. முன் சொன்ன விளக் கத்தின்படி ஒருவர் மனத்தைத் தூய்மையாகவும், நுட்பமாகவும், ஒருமுகப்படுவதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அவர் கற்பு நெறி யுடன் வாழ்ந்து மனக்கட்டுப்பாட்டுச் சாதனை செய்ய வேண்டும். இவையன்றி ஒருவர் இதில் வெற்றி பெற முடியாது. மெய்ஞ் ஞானமும் விஞ்ஞானத்தின் பாற்பட்டதே. அது ஒரு சூக்கும விஞ்ஞானம். ஆனால் வெகு சிலரே இந்த நெறியான வாழ்க்கையை வாழ முற்படுகின்றனர். வாழ்க்கை என்பது பாதி (50%) மனத்தாலும், பாதி (50%) உடலா லும் ஆனது. இந்த இரண்டினுடைய சேர்க்கை யும் இருந்தேயாக வேண்டும். அப்போதுதான் சமச்சீர் நிலை ஏற்படும். உண்மையான உலக அமைதிக்கும், செல்வச் செழிப்புக்கும் இந்த இரண்டுமே வளர்ச்சி அடைய வேண்டும். இன்றேல் சமச்சீர் நிலை கெடும். அதன் காரண மாகவே நவீன விஞ்ஞானம் இயந்திரமயமாக எவ்வளவுதான் முன்னேறினாலும் மனோ உலகத்தைப் பொறுத்தவரை ஆரம்ப அரிச்

சுவடி வகுப்பிலேயே இருக்கிறது. இதனாலேயே விஞ்ஞானம் மிக முக்கியமான மனம், குண்லினி சக்தி, உயிர்ச்சார உணர்வு (கடவுள்) போன்றவற்றில் அறியாமையில் உழல்கிறது. விஞ்ஞானம் மூளை மையத்திலிருந்து ஆரம்பமாகிறது. மூளை மனம் அல்ல! மனமும் மூளையும் இரண்டு வெவ்வேறு பொருள்கள். அவற்றில் மூளை தூலமானது. மனம் மூளை மையத்தில் வேலை செய்யும் சூக்குமச் சக்தி.

குண்டலினி சக்தி மனம் அல்ல. அது மனத்தின் காரணன். உயிர்ச்சார உணர்வு குண்டலினி சக்தி அல்ல. உயிர்ச்சார உணர்வு குண்டலினி சக்தி, மனம் இரண்டின் காரணன். இவை எல்லாமே மிகச் சூக்குமமானவை. சாதாரணப்பரிசோதனைகளுக்குஉட்படாதவை. தூல அல்லது மிகச் சூக்குமக் கருவிகளால் அவற்றை உணரவே முடியாது. விஞ்ஞானிகளுக்கு அவை புரியாமற் போனாலும் அவை என்னமோ இருக்கவே செய்கிறது. மனக் கட்டுப்பாடு இன்றி விஞ்ஞானிகள் இருளிலிருந்து வெளியேற முடியாது! விஞ்ஞானிகள் எப்படி அவர்களுடைய சொந்த உயிர்ச்சார உணர்வெனும் ஆற்றலை மறுக்க முடியும்? உயிர்ச்சார உணர்வை 'மறுத்தல்' என்றால் 'மரணம்' என்று பொருள்! எனின் இறந்தவனுக்கும் உயிருள்ளவனுக்கும் இடையிலுள்ள

வித்தியாசந்தான் என்ன? இறந்தவன், உயிருள்ளவன் இடையில் உள்ள வேறுபாடு உயிர்ச் சாரந்தான்!

கேள்வி : வாழ்க்கையின் குறிக்கோள் யாது?

பதில் ; பிறவியோடு வந்த போக்கு ஒன்று உண்டு. அதுவே விடுதலை உணர்வு. இந்த விடுதலை உணர்வு ஒரு புல்லிதழிலுங்கூட இருக்கிறது. நீங்கள் மிக உன்னிப்போடு அகிலத்தின் நடவடிக்கைகளைக் கவனிப்பீர்களானால் நீங்களும் இதே முடிவிற்கு வருவீர்கள்! ஆனால் மனிதனோ தன் மன அழுக்கின் காரணமாக மிகவும் குழம்பிப் போயுள்ளான். பல்வேறு ஆசைகள், பாபங்கள் காரணமாக மனம் சலனமடைந்து அழுக்கேறியுள்ளது. இதன் விளைவாக வாழ்க்கையின் குறிக்கோளைப்பற்றி பலரும் பலவிதமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள். வசதிகளுடன் வாழ்வதே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை என்று சிலர் நினைக்கிறார்கள். புலன் இன்பங்களில் மகிழ்ச்சி இருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஏராளமான செல்வம், பெயர், புகழ் இவைகளில் ஆனந்தமிருப்பதாக வேறுசிலர் நினைக்கின்றனர். வியாதி இன்றேல் மகிழ்ச்சியாக இருக்குமென்று ஒரு டாக்டர் நினைக்கிறார். உடலுறவுக்கு தாராள அனுமதி இருந்தாலே உலகில் ஆனந்தம் நிலவும் என்று காமாந்தகாரன் எண்ணுகிறான். சோஷலிசவாதியும்

மார்க்சியவாதி அல்லது பொதுவுடைமைவாதியும் எல்லோரையும் சமமாக்கி, எல்லோருக்கும் சம அந்தஸ்தும் வாய்ப்பும் தந்தால் உலகமே மகிழ்ச்சியுடனிருக்கும் என்று கருதுகின்றனர். இவை எல்லாமே அறியாமையினால் ஏற்படும் ஒரு சார்புடைய கருத்துகளாகும். செல்வச் செழிப்பு வேண்டுவதுதான். புலன் போகங்கள்கூடத் தேவைதான்! ஆனால் மனக் கட்டுப்பாடு இல்லாத புலன் போகங்களோ செல்வ வளமோ ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தந்து விடாது. ஒருவர் ஏராளமான செல்வத்தை வைத்திருக்கக் கூடும். ஆனால் அவர் மனக் கட்டுப்பாட்டை இழந்தவராக இருந்தால் துன்பத்திற்கே ஆளாவார். மாறாக ஒரு மனிதன் ஒன்றுமில்லாதவனாக இருக்கலாம். அவன் மனக்கட்டுப்பாடு உடையவனாக இருந்தால் அவன் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பான். உண்மையான மனநிம்மதி மனக் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. விடுதலை, அமைதி, ஆனந்தம் ஒன்றை ஒன்று தழுவி இருப்பன. எங்கே விடுதலை இருக்கிறதோ அங்கே அமைதி தவழ்கிறது. எங்கே நிம்மதி இருக்கிறதோ அங்கே மகிழ்ச்சி இருக்கிறது. நமக்குச் செல்வ வளம் அவசியமே. அதே சமயம் ஒருவருக்கு மனக்கட்டுப்பாடும் இன்றியமையாதது. அதன் பிறகே ஒருவருக்கு உண்மையான நிம்மதியும், மகிழ்ச்சியும் கிட்டுகிறது. ஆக வாழ்க்கைப் பாதி மனத்தாலும்

பாதிப் பொருளாலும் ஆனது. தனது வாழ்க்கையை முழுமையாக்க ஒருவருடைய மனோ நிலை, செல்வநிலை இரண்டும் பெருக வேண்டும். அதன் பிறகுதான் ஒருவர் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

**கேள்வி :** நல்ல ஆசைகள், கெட்ட ஆசைகள் என்பதற்கு என்ன அர்த்தம்? அதுமாதிரி ஒன்று இருக்கிறதா? ஏன் ஒருவர் நல்லதையே செய்ய வேண்டும்? கெட்டது ஏன் கூடாது?

**பதில் :** உண்மை என்னவோ முழுக்க முழுக்க நல்லது அல்லது கெட்டது எனத்தக்க ஆசையோ, எண்ணமோ, செயலோ கிடையாது. ஒரு நல்ல எண்ணம், செயல் என்று சொல்லும் போது அதில் சிறிய அளவாவது கெடுதல் இருக்கத்தான் செய்யும். அதே மாதிரி ஒரு கெட்ட ஆசை, எண்ணம் செயல் என்னும்போது எங்காவது சிறிதளவு நன்மையும் ஒளிந்து கொண்டிருக்கும். நீங்கள் ஊன்றிப் பார்ப்பீர்களானால் இது தெரிய வரும். ஒரு ஆசை, எண்ணம், செயல் நிரம்ப நல்லதையும், சிறிதளவு கெட்டதையும் பலனாகத் தரக்கூடியதாக இருப்பின் அதையே நல்ல ஆசை, எண்ணம். செயல் என்கிறோம். இதையே கெட்ட ஆசை எண்ணம், செயலிலும் சொல்கிறோம். ஆசை என்பது எண்ணத்தின் சூக்கும வடிவம். ஆசை வளரும்போது அது ஒரு எண்ணமாக ஆகிறது. எண்ணம் செயலை உண்டாக்குகிறது. ஆசை

முதலில் இருதய மையத்தில் ஆரம்பிக்கிறது. இதே ஆசை மூளை மையத்தை அடையும் போது அது ஒரு எண்ணமாகிறது. இந்த எண்ணத்தை புத்தி மூளை மையத்தில் முடிவெடுக்கும்போது அது செயலாகச் செயல்படுகிறது.

ஒவ்வொரு செய்கையும் (ஆசை, எண்ணம் செயல் உருவாகும் நிலையில்) ஒரு எதிர் விளைவைப் பெற்றுள்ளது. யாரும் இதைத் தவிர்க்க முடியாது. நீங்கள் நன்மை செய்தால் நல்ல முடிவைப் பெறுகிறீர்கள். நீங்கள் தீயன புரிந்தால் தீமைகளே விளைகின்றன. எனவே தான் ஒவ்வொரு செய்கையிலும் நல்லதும் கெட்டதுமான விளைவுகள் கலந்தே இருக்கின்றன. ஆகவே நற்காரியத்தையே செய்யும் போதுகூட ஒரு சிறு எதிர்ப்பைக் காண்பீர்கள். இதன் முடிவு என்னவென்றால் வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு என்பதே. ஒரு மனிதன் கெடுதல்களையே செய்வானாயின் பெருந் தோல்விகளையும், துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி நேரும். ஒரு மனிதன் எப்பொழுதும் நல்லதற்கே பாடுபட வேண்டும்.

கேள்வி : யோகப் பயிற்சி ஏன் ஒருவரை உணர்ச்சி மிக்கவராகச் செய்கிறது? இதை எப்படிச் சமாளிப்பது?

பதில் : தியானம், மந்திர ஜபம் (கடவுள் நாமத்தைச் சொல்வது) ஒரு மனிதனைத் தூய்மைப் படுத்துகிறது. இந்தத் தூய்மை நிலையால் மனமும் புலன்களும் தூய்மை பெற்றுச் சூக்கும நிலையடைந்து கூர்மையாகிறது. அதனால் ஒருவர் எளிதில் உணர்ச்சிவயமாகி விடுகிறார். இதை விளக்குவோம். உதாரணமாக மூவகைப் பூதக் கண்ணாடிகளை எடுத்துக் கொள்வோம். அதில் ஒன்று குழந்தைகள் விளையாட உபயோகப்படுவது; மற்றொன்று கண்களில் அணியும் கண்ணாடி, மூன்றாவது தூரத்தில் பார்க்கும் தொலை நோக்குக் கண்ணாடி. குழந்தைகள் விளையாட உபயோகிக்கும் கண்ணாடி கரடுமுரடானது. இதே கண்ணாடியை சுத்தப்படுத்தி மூக்குக்கண்ணாடியாக மாற்றும்போது அது மிகவும் இலேசானதாக ஆகி, அதே சமயம் மிகவும் ஒளிமிக்கதாகவும் ஆகிறது. இந்தக் கண்ணாடியை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். இதே கண்ணாடியை மேலும் தேய்த்துப் பட்டைதீட்டி தொலைநோக்குக் கண்ணாடியாகச் செய்யும் போது அது மிகவும் சக்தி வாய்ந்ததாக ஆகிறது. அதே சமயம் அது மிகவும் மென்மை கொண்டதாக ஆகிறது. அதை மிக ஜாக்கிரதையாக பத்திரப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். அதே போல் யோகப் பயிற்சியினால் மனம், புலன்கள் மென்மையடைகின்றன. துரிதமாகச் செயலாற்றுகின்றன. இந்தத் துரிதமெனும்

வளர்ச்சி நிலையில் ஒருவர் மிகவும் தேவையான முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அதாவது உழைப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். காமக் குரோதங் களைத் தவிர்க்க வேண்டும். ஒருவர் பொறுமை யைக் கடைப்பிடித்து பொறுத்துக் கொள்ளப் பழக வேண்டும். ஒருவர் சமாதி நிலையை எய்தும்போது அவர் அபாய எல்லையைக் கடந்தவராகிறார்! அதற்குபின் அவர் எத் தகைய எதிர்ப்புகளையும் சட்டை செய்வ தில்லை. சமாதி நிலையை எய்திய பின்னர் இன்பம்— துன்பம்; வேதனை— மகிழ்ச்சி; நல்லது—கெட்டது ஆகிய எல்லா நிலைகளிலும் சம நிலை பாவனையைப் பெறுகிறார்.

**கேள்வி** : நோய்க்குக் காரணங்கள் என்ன?

**பதில்** : சில நோய்களுக்கு இரத்த அணுக்கள் காரணமாகிறது. வேறு சில நோய்கள் கட்டுப்படுத்தாமல் விடப்படும் வலுவான உணர்ச்சிகளுக்கு ஆட்படுவதால்உண்டாகிறது. உதாரணத்திற்கு துக்கம் என்கிற உணர்ச்சி யை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன்னு டைய பெயர், புகழ், செல்வம் எல்லாவற்றை யும் இழந்து விடுகிறான் அல்லது அவனுடைய உயிர் நண்பன் இறந்து விடுகிறான். அந்த மனிதன் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலு டையவனாக இருப்பின் உணர்ச்சி வயப்படு வதைக் கட்டுப்படுத்தி சாதாரணமாக இருக்

கிறான்.மாறாக உணர்ச்சியைக் கட்டுப்படுத்தத் தவறினால் எண்ணங்கள் அவனை இரவும் பகலுமாக வதைத்து வாட்டுகின்றன. இடைவிடாத இந்த எண்ணங்களின் அழுத்தம் அசீரணத்தைத் தோற்றுவிக்கிறது. அசீரணக் கோளாறு ஆரம்பித்து தூக்கமின்மையால் அவனுடைய ஆரோக்கியம் கெடுகிறது. இதே கவலை நீடித்தால் அவன் நோயாளியாகிறான். அதாவது விதவிதமான வியாதிகள் ஏற்படுகின்றன. சிலருக்கு மூளைக் கோளாறு ஏற்படுகிறது. மனக்கட்டுப்பாடு (உணர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்) தளர்ந்தால் இதுபோன்ற விதவிதமான வியாதிகள் ஏற்படுகின்றன.

**கேள்வி:** நிர்விகல்ப சமாதி என்றால் என்ன?

**பதில் :** குண்டலினி சக்தி ஆன்மாவிற்கு இடையில் தோன்றும் பிரிவுத் தோற்றம் இருவேறு நிலை (Duality)க்குக் காரணமாகிறது. நீங்கள் எந்தப் பொருளையாவது உன்னிப்பாக ஆராய்ந்தீர்களானாலும் அது ஒன்றில்தான் முடியும். அது பெருங்காரணம்— காரணங்களுக்கெல்லாம் காரணம்—அது ஒன்றே ஒன்றுதான். அது எல்லா இடங்களிலும் முடிவில்லாமல் வியாதித்து நிற்பது. அந்த ஒரே ஒரு பொருள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. அதாவது பிரம்மம், கடவுள் (உருவமற்ற கடவுள்)

உயிர்ச்சார மகாசமுத்திரம், ஆத்மா, பெருங் காரணன், இயற்கை ஆகும். எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது ஒன்றே ஒன்றைத்தான் குறிக்கும். அது ஒன்றேயானாலும் இந்த அகில மாகத் தோன்றுகிறது. நிர்விகல்ப சமாதியில் இந்த இருநிலைத் தன்மை அழிந்து போகிறது. மனத்தின் உதவியின்றி ஏற்படும் ஒரு அனுப வமே நிர்விகல்ப சமாதி. இந்த நிலையில் ஒரு விஷயம், அதற்கான பொருள், அதைப் பற்றிய அறிவு எதுவுமே கிடையாது. அதன் பிறகு தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சாரம் மட்டுமே இருக்கிறது. பல்வேறு உருவங்களையும் பெயர்களையும் கொண்ட அகிலம் மறைந்து போகிறது.

சீவான்மாவின் தோற்றத்திற்கு முன்னர் குண்டலினி சக்தியும் ஆன்மாவும் சிரசின் மையத்தில் ஒன்றி நிற்கிறது. சீவான்மாவாகப் பரிணமிக்கும்போது அவை இரண்டாகப் பிரிகின்றன. இந்தப் பிரிவுத் தோற்றமே இரண்டுபட்ட நிலைக்குக் காரணமாகிறது. நிர்விகல்ப சமாதி நிலையில் குண்டலினி சக்தி யும் ஆன்மாவும் மீண்டும் இணைந்து விடுகிறது. முன்னர் அவை பிரிந்ததினால் ஏற்பட்ட இரண்டுபட்ட நிலை மறைந்து விடுகிறது. இரு வேறு நிலைக்குப் பதிலாக ஒருநிலைத் தன்மை தோன்றுகிறது. குண்டலினி சக்தியும், ஆன்மா வும் பரிணாம வளர்ச்சியைப் பெறும்போது

அதன் இயக்க மையங்களை மாற்றிக்கொண்டே போகின்றன. ஆயினும் அவற்றின் நிலை யான மையம் மட்டும் சிரசின் உச்சியில் எப்போதும் இருக்கிறது.

குண்டலினி சக்தியே மனத்தின் காரண கர்த்தா. ஆன்மாவின் ஆற்றலே (சக்தியே) குண்டலினி சக்தி எனப்படுவது. குண்டலினி சக்தியே நாடி ஓட்டங்களுக்குக்கூடக் காரணமா கிறது. அது உடலில் இருபத்துநான்கு மணி நேரமும் இடைவிடாது இயங்குகிறது. அதன் மூலம் உடலுக்கான நாடிக் கதிர்களை அனுப்புகிறது.

குண்டலினி சக்தியை முழுமையாக மேல் நிலை மையங்களுக்கு அனுப்புவதற்கு மூவகைத் தூய்மைநிலை இருந்தே ஆக வேண்டும். அதாவது மனத்தூய்மை, நாடிகளின் தூய்மை, உடல் தூய்மை ஆகும். இந்த மூவகைத் தூய்மை நிலைகளையும் ஒருவர் அடைந்து விட்டால் சக்தியானது முழு அளவில் தலை உச்சிக்குப் போய்ச் சேருகிறது. இந்தச் சக்தி ஆன்மாவில் ஒன்றிவிடும்போது ஒருவர் நிர்விகல்ப சமாதி நிலையைப் பெறுகிறார்.

குண்டலினி சக்தி ஒருவர் உடலிலுள்ள கீழ்மட்ட மையத்தில் தங்கியிருக்கும்வரை உணவு, உறக்கம், காமாந்தகாரம் ஆகியவை அந்த நபரை ஆதிக்கம் செலுத்துகிறது.

உலகமே இந்த மூன்று விஷயங்களைத் திருப்திப்படுத்துவதில் மூழ்கி இருக்கிறது. குண்டலினி சக்தியை முழுமையாக சிரசின் மையத்திற்கு எழுப்பக் கண்டிப்பான பிரம்மச் சரியம் (கற்பு நெறி) இன்றியமையாதது. கண்டிப்பான பிரம்மச்சரியம் (கற்புநெறி) இன்றேல் 'சக்தி' முழு அளவில் சிரசின் மையத் திற்குப் போகாது. பிரம்மச்சரியத்தை (கற்பு நெறியை) கடைப்பிடிக்காமற் போனால் நிர்விகல்ப சமாதி நிலை கிட்டாது.

குண்டலினி சக்தி இரண்டு திசைகளில் நகர்கிறது. அதாவது கீழ்நோக்கியும் மேல் நோக்கியும், ஆகும். காமாந்த காரத்தில் ஈடுபடும் போது எளிதில் அது கீழ்நோக்கிச் செல்கிறது. பிரம்மச்சரிய நிலையில் (கற்பு நெறியில்) அது மேல் நோக்கி எழுகிறது. குண்டலினி சக்தி மூன்று கீழ் மையங்களில் தங்கியுள்ளவரை காம உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. குண்டலினி சக்தி மேலுக்கு உயர்ந்து ஐந்தா வது சக்கரத்தில் (மையத்தில்) வேலை செய்யும்போது விந்துச் சுரப்பு ஏற்படுவதில்லை. குண்டலினி சக்தியே விந்து உற்பத்திக்குக் காரணம். ஆகவே ஒருவர் பிரம்மச்சரியத் திற்கு (கற்பு நெறிக்கு) முக்கியத்துவம் தர வேண்டும். நிர்விகல்ப சமாதி நிலைக்கான

வெற்றி வாய்ப்புக்கு இது மிக இன்றிமை யாதது!

கேள்வி : இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு போன்ற கடவுள்களைத் தொழுவதால் முக்தி நிலை எய்த முடியுமா?

பதில் : கடவுளின் முடிவான நிலை, உருவமற்ற நிலை. உருவமற்ற நிலையில் கடவுளைச் சிந்தனை செய்வது மிகக் கடினம். பெரும் பாலான மக்கள் உருவமற்ற நிலையில் கடவுளை நினைப்பதில்லை. பெயரும் அதற் கான சூக்கும வடிவமும் ஒன்றை ஒன்று தழுவியே இருக்கின்றன. கடவுள் என்று சொன்னவுடன் கடவுளைப் பற்றி முன்னரே நீங்கள் கற்பித்துக் கொண்டுள்ள தன்மைக் கேற்ற சூக்கும உருவத்தை மனக்கண்ணில் காண்கிறீர்கள். பெயருக்கேற்ற வடிவத்தை மனக்கண்ணில் காண இயலவில்லையெனில் அந்தப் பெயருடைய பொருளுக்கான விளக்கத் தையும் பெற முடியாது. ஆகவே பெயர், பெயருக்கான விவரம், பெயருக்கான சூக்கும வடிவம் ஆகிய எல்லாமே ஒன்றுடனொன்று இணைந்தவை. எனவேதான் உருவங்களும், உருவக் குறியீடுகளும் மதத்துறையில் கையா ளப்படுகின்றன.

தன் மனத்தை நிலைநிறுத்த ஒருவர் துவக்கத்தில் இராமர், கிருஷ்ணர், புத்தர்,

இயேசு போன்ற உருவங்களை எடுத்துக் கொள்கிறார். இவர்களிடம் எல்லாத் தெய்வீகக் குணங்களும் நிரம்பியுள்ளதாக நம்புகிறார். மனம் ஒருநிலைப்படும்போது, மனக்கட்டுப் பாட்டுப் பயிற்சியில் முன்னேறுவதால் இந்த உருவங்கள் ஒருவரது மனக்கண்ணிலிருந்து தானாகவே மறைந்து போகின்றன. அதற்குப் பின் ஒருவர் எங்கும் வியாபித்து நிற்கும் வெள்ளிநிற ஒளியைக் காண்கிறார். இந்த ஒளியைப் பின்பற்றிச் செல்வாராயின் அந்தஒளி ஒரு குறிப்பிட்ட புள்ளி நிலைவரை வருகிறது. ஒருவர் மேலும் மேலும் விடாமல், மனக்கட்டுப் பாட்டுப் பயிற்சியைத் தொடர்ந்து பயில்வாரா னால் கண்ணில் தெரிந்த புள்ளியும் மறைந்து விடுகிறது. மனம் பரந்த வெளியில் போய்ப் புகும் நிலை ஏற்படுகிறது. இந்த பரவெளி ஒளியுமில்லை; இருளுமில்லை! இந்த நிலையில் ஒருவர் தன்னில் தானாகவே உள்ள தூய உயிர்ச்சார சமுத்திரத்தில் கலந்து விடுகிறார். இந்த நிலையே கடவுளைக் கண்ட நிலை; ஆன்மாவை அறிந்த நிலை, நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்த நிலை ஆகும்.

இந்த அகிலத்துக்கெல்லாம் ஒரே ஒரு கடவுள்தான் இருக்க முடியும். ஆயினும் அது எண்ணற்ற மதங்களை உள்ளடக்கி இருக் கிறது. எல்லா மதங்களின் குறிக்கோள் களும் மனிதனை, கடவுளைக் காணும்

நல்ல மனிதனாகவோ அல்லது தனது பேருண்மை நிலையை உணர்பவனாகவோ செய்வதுதான். ஆனால் நிர்விகல்ப சமாதி நிலை என்னும் கடைசி நிலையை அடைவது மிகவும் கடினமானது. பெரும்பாலான மத நிறுவனர்கள் சில குறிப்பிட்ட கட்டங்களை அடைந்தவுடனேயே அவசரப்பட்டு தங்களது சீடர்களுக்குத் தவறான வழியைக் காட்டி விடுகின்றனர். சீடர்களும் கால ஓட்டத்தில் மத வெறியர்களாக மாறி விடுகிறார்கள். இவர்கள் தங்கள் மதம் ஒன்றுதான் மற்ற எல்லா மதங்களையும்விட உயர்ந்தது — மற்றதெல்லாம் தவறானது என்று முழங்குகின்றனர். இதே ரீதியில் சென்று பல்வேறு மதங்களின் சீடர்கள் ஒருவரை ஒருவர் சச்சரவுபடுத்தி விட்டுக் கொண்டு தங்களைத் தாங்களே குறைவு படுத்திக் கொள்கின்றனர்.

'முடிவான பேருண்மை' என்னவோ ஒன்றே ஒன்றுதான். அதுவே கடவுள். கடவுள் ஒவ்வொருவருக்கும் எல்லா மதங்களுக்குமே பொதுவானவர். ஒரு தனி மனிதனோ, எந்த ஒரு தனி இனமோ, எந்த ஒரு தனி தேசமோ, எந்த மதமோ ஒரு கடவுளை தனக்கே எனச் சொந்தம் கொண்டாட முடியாது. எவன் ஒருவன் உள்ளார்ந்த பக்தியுடனிருக்கிறானோ, கடுமையாகப் பாடுபடுகிறானோ அவனுக்கே அது கிட்டுகிறது! இதுவே உண்மை'

இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு — யாராக இருந்தாலும் அவர்களைப் பக்தி பூர்வமாக வழிபட்டால் ஒருவர் உண்மையான சித்தியை அடைய முடியும்.

கேள்வி : கடவுள் ஒருவரே; எல்லா மதங்களும் ஒன்றே; எல்லாரும் போய் அடைவது ஒரே இடந்தான் என்றிருக்கும் போது கடவுள், மதம் என்பதில் ஏன் இவ்வளவு சண்டையும் சச்சரவும்?

பதில் : எல்லாம் அறியாமையினால்தான்!

# ஆசிரியரும் அவர் பணியும்

தென் இந்தியாவில் 'கூர்க்' மலைப் பிரதேசத்தில் 1902 ஆம் ஆண்டு ஏப்ரல் 12இல் நாராயணானந்தா பிறந்தார். அவர் பெற்றோர் குழந்தைப் பேற்றுக்காகப் பல ஆண்டுகள் இறைவனை வேண்டி இறைஞ்சி நின்றனர். ஆகவே தான் தங்களுக்குப் பிறந்த பொலிவுமிக்க, அழகுள்ள மகனிடம் ஆழ்ந்த அன்பு காட்டி வந்தனர். அந்த மகனும் அந்தக் கிராமத்தினரின் மனத்தை மிகவும் கவர்ந்திருந்தான்.

அவனும் தன் பெற்றோரிடம் மிகவும் பாசம் கொண்டிருந்தான். ஆயினும் ஐந்தாவது வயதில் அவனைப் பள்ளிக்கு அனுப்பியதும் அவன் கொஞ்சம்கூடத் தயக்கம் காட்டாமல். வெகு சகஜமாக வீட்டை விட்டுச் சென்றான்.

சிறுவயதில் அவன் படிப்பில் சிறந்து, சுறு சுறுப்பு மிக்க மாணவனாகவும் விளங்கினான். பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தேர்வைப் பெற்று, பல பரிசுகளைப் பள்ளிக்குப் பெற்றுத் தந்தான்.

இதுபோன்ற பல்வேறு செயல்களுக்கிடையில் காலை, மாலை இரு வேளைகளிலும் தீவிர

தியானத்தில் சுமார் அரை மணி நேரம் அமர்ந்து விடுவான். எந்த வெளிப்புறத் தூண்டுதலுமில்லா மல் உள்ளுக்குள்ளிருந்து கிளர்ந்தெழுந்த ஒருவகை உந்துதலினாலேயே இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டான்.

இத்தகைய முறையான நியதியுடன் கூடிய தியானம் அந்தச் சிறுவனை ஆன்மிக வாழ்க்கையில் நிலை நிறுத்தி எதிர்காலத்தில் நிர்விகல்ப சமாதி நிலையை எய்துவதற்கான அரிய வாய்ப்புக்கு அடி கோலியது.

கல்வியை முடித்ததும் அந்த இளைஞன் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக உலகைத் துறந்து தனது இருபத்தேழாவது வயதில் சந்நியாசியானார்.

வாழ்க்கையில் தோல்வி ஏதும் ஏற்படாத நிலையிலேயே அவர் இந்த சந்நியாசத்தை மேற் கொண்டார்.

எந்த விதமான விரக்தியும் ஏற்படாத நிலையில் ஒளிமிக்க எதிர்காலமும் அவருக்காகக் காத் திருந்தது. அவருடைய மனோ நிலையில் ஏற் பட்டிருந்த பெருத்த ஆன்மிக நிலை மாறுதலே இதற்குக் காரணம்.

ஒரு நாள் வழக்கம்போல் தியானத்தில் அமர்ந் திருந்தபோது அவர் மனம் ஒரு மணி நேர அளவுக்கு மேலே ஒருமுகப்பட்டு ஒருமைப்பாட்டில் ஊன்றி நின்றது. இந்த மேலான உயரிய சாதனை

முடிந்ததும் அந்தராத்மா அவரை அழைத்து உலகைத் துறக்கும்படிக் கட்டளை பிறப்பித்த சொற்கள் அவர் காதுகளில் ஒலித்தன. அந்த இளைஞர் கணநேரம்கூடத் தயங்காமல் கடைசிப் பைசா வரை தன்னுடைய செல்வத்தைத் தானம் செய்து விட்டார்.

1929-இல் குருவைத் (ஆன்மீக ஆசானை) தேடி தன் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

களைப்பு மிகுந்த பல்லாயிரம் மைல் தூரமான நெடிய பயணத்திற்குப் பின்னர் கடைசியாக அந்த இளந்துறவி ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகமான கல்கத்தாவிலுள்ள பேலூர் மடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்த மடத்திலிருந்த சந்நியாசிகள் மூன்று நாட்கள் வரை அவரைப் பலவிதமான சோதனைகளுக்கு உட்படுத்தி, அதன் பின்னரே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர்ச் சீடரான தலைவர் சுவாமி சிவானந்தரைத் தரிசிப்பதற்கு அனுமதித்தனர். இந்த இளந்துறவி, அந்த மகானைக் கண்டதும் அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிச் சரணடைந்தார்.

இவ்வாறு இவர் தமது குருவைத் தரிசித்ததும், அவர் தன்னுடைய ஆழ்ந்த அன்பையும் ஆதரவையும் நல்கினார். இளந்துறவி பதிலுக்கு தமது நம்பிக்கையையும் பக்தியையும் கடவுளிடமும், குருவிடமும் சமர்ப்பித்தார்.

அடுத்து வந்த சில ஆண்டுகளுக்குள் சுவாமி நாராயணானந்தாவிடம் கடவுளைத் தரிசிப்பதற்கான உள்ளுணர்வுடன் கூடிய உந்துதல் உத்வேகமடைந்தது. அவருடைய முழு வாழ்க்கையுமே இந்த ஒரே குறிக்கோளின் முனைப்பிலேயே ஈடுபட்டு, அதன் பயனாக ஒரு தனி இடத்தைத் தேடித் தீவிர சாதனையை (ஆன்மீகப் பயிற்சி) மேற்கொள்ள வேண்டுமென்ற தாபம் மேலிட்டது.

கடைசியாக அவருடைய குருவானவர் தனது அருள் நிலையில் சீடனை அழைத்து இமாலயத்திற்குச் சென்று தவம் (கடுந்தவம்) மேற்கொண்டு சமாதி நிலையில் (ஆழ்நிலைத் தியானம்) ஆழ்ந்து சித்தி பெறும்படிக் கட்டளையிட்டார்.

பிரம்மாண்டமான பனிச் சிகரங்கள் நிரம்பிய அதிசயானந்தத்தைத் தரக்கூடிய இமாலய மலைத் தொடர்களை நேருக்கு நேர் கண்டபோது சுவாமிஜி பரவசமடைந்து உண்மையான கடுந்தவத்தை உடனே தொடங்கி விட்டார்.

எந்தவித வசதிகளுமின்றி நடுக்காட்டில் ஒரு சிறிய குடிசையில் தங்கித் தளராத ஊக்கத்துடன் கடுமையாக உழைத்தார். வழக்கமாக அவர் நாளொன்றுக்கு சுமார் பன்னிரண்டு மணியிலிருந்து பதினாறு மணி நேர அளவுக்குத் தியானத்தில அமர்ந்து மந்திர ஜபம் செய்தார். இரவு பகலில்லாமல் நாள் கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றித் தொடர்ந்து தியானம் செய்தார். இது போன்ற

கடுமையான சாதனையின் பயனாக சுவாமி நாராயணானந்தா குறுகிய காலத்திலேயே மிக உயர்ந்த மேலான கதியான நிர்விகல்ப சமாதி நிலையை எய்தினார்.

1933 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிவராத்திரி தினத்தின் இரவு நேரத்தில், அதாவது இந்திய நாடெங்கணும் அனுஷ்டிக்கப்படும் சிவபெருமான் விழித்தெழும் கொண்டாட்ட தினத்தன்று சுவாமிஜீ வழக்கம்போல் அன்று நள்ளிரவில் தியானத்தில் அமர்ந்தார். மனம் ஆழ்ந்து ஒருமுகப்பட்டபோது குண்டலினி சக்தி முழுமையாகக் சிளம்பி சகஸ்ரா ரத்தை வந்தடைந்ததை உணர்ந்தார். அவருடைய இதயத் துடிப்பும் மூச்சும் தானாகவே நின்று போய்விட்டன (கேவல கும்பகம்).

உடலைப் பற்றிய உணர்வு அற்றுப் போய் விட்டது. மனம் பூரணத்துவத்தில் கலந்து விட்டது. தான் எனும் உணர்வு மரத்து உயிர்ச்சார சாகரத்தில் சங்கமித்தது. மனம், அகந்தை, புத்தி போன்றவற்றின் அறிகுறிகள் கிஞ்சித்தேனும் புலப்படவில்லை. இதுவே கடைசி அனுபவம். இதுவே கடவுளின் உருவமற்ற நிலையின் உணர்வு. இதுவே அகண்டாகாரமான ஆனந்த நிலையுமாகும்

சுவாமிஜீ இதே நிர்விகல்ப சமாதி நிலையில் நீண்ட காலம் இருந்தார். மிக மிக உயரத்தில் அவரது ஆன்மா இருந்தாலும் அவர் மனம் நிதானமாகவும் நிச்சயத்துடனும் உலக பந்தத்தின்

எல்லைக்குள் இறங்கி வந்தது. இந்த நிலையில் அவருடைய பார்வையின் கோணமே முற்றிலும் மாற்றம் பெற்றிருந்தது. பூரண ஞான ஒளி எய்திய காரணத்தால் அவர் மனத்தில் அறியாமையின் அறிகுறி கிஞ்சித்தேனும் இருக்கவில்லை.

அவர் எங்கணும் எல்லாப் பெயர்களுக்கும் உருவங்களுக்கும் பின்னால், ஒரே ஆத்மாவையே கண்டார். அகிலத்தின் பேதங்களில் தெய்வீக ஒற்றுமையை உணர்ந்து கொண்டார்.

இந்த அரிய சித்தியை அடைந்த பின்னரும் சுவாமி நாராயணானந்தா அதை விளம்பரப் படுத்திக் கொள்ளவில்லை, இமாலயத்தில் எளிய, தனிமை வாழ்க்கையையே தொடர்ந்து மேற் கொண்டார். அவர் சீடர்களைச் சேர்த்துக் கொள்ள வில்லை. பணத்துக்கோ வசதிகளுக்கோ ஆசைப் படவில்லை. அவை ஏதும் இல்லாத நிலையிலேயே அவர் வாழ்ந்தார்.

உலக ஆசாபாசங்களுக்கு ஆளாகாமல் மனத்தின் நுட்பமான இயக்கங்களின் நூதன கணிப் பிலேயே ஆழ்ந்து போனார். மறைந்திருக்கும் காரணங்களின் விளைவுகளால் எழும் சூக்கும இயக்கங்களைப் படம் பிடித்துக் கணிக்கத் தனது ஒருமுகப்பட்ட தூய மனத்தையே நிரந்தரமான ஆய்வுக் கூடமாக ஆக்கிக் கொண்டார்.

இவற்றைப் புத்தகங்களாகக் கொண்டு வர வேண்டுமென்ற யோசனையே இல்லாமல் மனோ

தத்துவத் துறையிலும், தத்துவ சாத்திரத் துறை யிலும் அவருடைய உன்னதமான கண்டுபிடிப்பு களைக் குறிப்புகளாக எழுதி வைத்துக் கொள்ளலா னார்.

முன் உதாரணமில்லாத, ஈடு இணையற்ற ஞானத்தை அளிக்கக் கூடிய ஒன்றன் பின் ஒன்றான தொகுப்புகளாக தனக்கே உரித்தான அற்புத ஆற்றலினால் எளிய லாகவத்துடன் எழுதிக் குவித்தார். இந்தக் கையெழுத்துப் பிரதிகளை உலகின் பார்வைக்குத் தெரியாமல் பாதுகாத்து வைக்கவே எண்ணினார்.

1947இல் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை யின் போது வெறி கொண்ட முஸ்லீம்களாலும் இந்து மதக் கும்பலாலும் கடவுள், மதம் போன்ற வற்றின் பெயரால் நிகழ்ந்த மனிதாபிமானமற்ற கோர இரத்தக் களறியை சுவாமிஜீ நேரில் கண்டார்.

கொள்ளை, கொலை, பிணக் குவியல்களின் கோரக் காட்சிகளைக் கண்டார். கன்னிப்பெண் களும், இளம்பெண்களும் கடத்தப்பட்டதையும் பார்த்தார். துன்பப்படும் மக்களைக் கண்டு இரக்கங் கொண்டார். உடனே மனித குலத்துக்கு உதவி புரியத் தீர்மானித்தார். தனிமையைத் துறந்து சீடர் களை ஏற்றுக் கொள்ளத் துவங்கினார்.

ஆரம்பத்தில் சுவாமிஜீயிடம் சரணடைந்த சீடர்களில் மேற்கூறிய படுகொலைக்குத் தப்பிப் பிழைத்து வந்த ஏழை, இளம் அனாதைகளும் இருந்தனர்.

அவர்கள் சுவாமிஜீயினுடைய குறிப்புகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் படித்துப் பார்த்தனர். அவற்றின் தனிப் பெருஞ் சிறப்பை உணர்ந்து அவற்றைப் புத்தகங்களாக வெளிக் கொணர விரும்பினர்.

சுவாமிஜீயிடம் அதற்கான பொருள் வசதி இல்லாமலிருந்தது. பாகிஸ்தானில் அனைத்தையும் இழந்து விட்டு வந்து சரண் புகுந்த சகோதர சகோதரிகளிடமும் நிதி வசதி இல்லை. புத்தகங்கள் வெளியிடுவதற்கான வாய்ப்பே இல்லாத நிலை.

அவர்களில் சில பெண்கள் தங்களிடம் எஞ்சி இருந்த ஓரிரு பொன் நகைகளை அதற்காக அளித்தனர். அதைக் கொண்டு புத்தகங்களை வெளியிடும் பணியைத் துவக்குவதற்கான வாய்ப்புக் கிட்டியது.

இந்த நேரத்தில் கெடுமதி கொண்ட சிலரிட மிருந்து கிளம்பிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி நேரிட்டது. அவர்கள் வெறும் பொச்சரிப்புக் காரண மாகவே இந்த மகத்தான பணியின் துவக்கத்தைத் தடுத்து நிறுத்த நினைத்தனர்.

எந்த ஒரு ஆதரவும், உதவியும் யாரிடமிருந்தும் பெறாத நிலையிலேயே பல சோம்பேறிகளால் அவர் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளையும், பழிபாவங்களையும் அவர் தனி ஒருவராகவே ஏற்றுக் கொண்டு வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதன் விளைவாகவே எல்லாராலும் அவர் இழிவாகக் கருதப்பட்டார். அதனால் தங்குவதற்கும் இடம் கிடைக்காத நிலை.

இதற்கெல்லாம் ஈடு கொடுத்து சுவாமிஜீ கிஞ்சித்தும் மனந்தளராமல் உறுதியுடன் இருந்தார். சில நாள்கள் சென்றதும் அவதூறுகள் ஓய்ந்து போயின. சோம்பேறிகள் தாங்கள் செய்த பாவங்களின் பலனைத் தாங்களே சுமந்து சென்றனர்.

புத்தகங்களின் பணி தொடர்ந்து, ஒன்றன் பின் ஒன்றாக அச்சேறி வெளி வந்தன. அவற்றைப் பற்றிய விளம்பரமோ பிரச்சாரமோ இல்லாமல் அவற்றின் உண்மையான உயர்ந்த மதிப்பினாலேயே உலகம் பூராவும் பரவுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

ஆரம்பத்தில் சுவாமி நாராயணானந்தா இதற்காக எந்த ஒரு நிறுவனத்தையோ அல்லது ஆசிரமத்தையோ அமைக்க விரும்பவில்லை.

அவருடைய துறவு வாழ்க்கையில் பொது மக்களிடமிருந்தோ, சீடர்களிடமிருந்தோ எந்தவித நன்கொடையையும் பெறவில்லை. (அவருக்கே

உரித்தான) எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். பொது வாழ்க்கையின் ஆடம்பரங்களை அவர் தவிர்க்கவே முயன்றார். நாள்கள் செல்லச் செல்ல சீடர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இது போன்று உருவாகிய இயக்கத்தை நெறிப் படுத்தி ஓர் ஒழுங்கான அமைப்பாக நிறுவ வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது.

பின்னர் - 1967 ஆம் ஆண்டில் 'நாராயணா னந்தா யூனிவர்சல் யோகா டிரஸ்ட்' என்ற மையங்கள் இந்தியா, ஜெர்மனி, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஆரம்பிக்கப் பட்டன. இந்த நேரத்தில் மேலை நாட்டு இளம் ஹிப்பிகள் பலர், குறிப்பாக, 'டென்மார்க்' தேசத் தவர் சுவாமி நாராயணானந்தாவிடம் வழிகாட்டி உதவும்படி வந்து சரணடைந்தனர்.

அவர்களில் பலர் போதை மருந்துக்கு அடிமை யானவர்கள்; மோசமான நாடோடிகள்; சரண்புகச் சென்ற பல இடங்களிலிருந்தும் விரட்டப்பட்டு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள்.

ஆனாலும் சுவாமிஜீ அவர்களைப் புரிந்து கொண்டு தமது சீடர்களாக ஏற்றுக் கொண்டார். விரைவிலேயே அவர்களைச் சரியான பாதைக்கு கொண்டு வந்து விட்டார்.

இதில் பல இளைஞர்களும், யுவதிகளும் டென் மார்க் தேசத்துக்குத் திரும்பி வந்து ஜில்லிங் என்ற இடத்தில் உள்ள என். யூ. யோக ஆசிரமத்தின் சந்நியாசிகளாகவும், சந்நியாசினிகளாகவும் மாறினார்கள். அந்த ஆசிரமம் புதிதாகத் தொடங்கப் பட்டிருந்த சமயம் அது.

ஜில்லிங் ஆசிரமம் எழுபது ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பழைய பண்ணையில் அமைக்கப்பட்டது. அந்த நிலத்தைப் பண்படுத்தி அங்கு ஒரு ஆசிரமத்தை உருவாக்க ஆசிரமவாசிகள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இந்த உழைப்புடன்கூடத் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காக அவர்கள் வெளியே சென்று தொழிற்சாலைகளில் பணிபுரிந்து சம்பாதிக்கவும் வேண்டிருந்தது.

சுவாமிஜி அவர்களுடைய உண்மையான உழைப்பைக் கண்டு, டென்மார்க் நாட்டிற்கு வருகை புரிந்தார். சுவாமிஜி ஜில்லிங் ஆசிரமத்தில் ஐந்து மாத காலம் தங்கித் தமது முதல் இலவச ஆன்மிகப் பயிற்சி முகாமை நடத்தினார்.

அந்த முகாமில் உண்மையான ஆன்மிகப் பயிற்சியாளர்கள் தங்களுக்கெனத் தனித்தனிக் கூடாரங்களை அமைத்துக் கொண்டு அவற்றில் தங்கி அடிக்கடி குருவை நேரில் பார்த்து சந்தேகங்களைக் கேட்டறிந்து தெரிந்தனர். தினசரிப் பயிற்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர்.

முகாம் மூன்று மாத காலம் நடந்தது. ஆயிரக் கணக்கானவர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

1971 ஆம் ஆண்டு முதல் சுவாமி நாராயணா னந்தா டென்மார்க் நாட்டிற்கும் மற்ற நாடுகளில் உள்ள மையங்களுக்கும் தவறாமல் ஒவ்வொரு ஆண்டும் சென்று வந்தார்.

ஜில்லிங்கில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் இலவச ஆன்மிகப் பயிற்சி முகாமை நடத்துகின்றனர், மெய்ஞ் ஞானத்தை நாடிவரும் அன்பர்களுக்கு உபதேசம் அளித்து அகில உலகத்திலுமுள்ள ஆயிரக் கணக் கான சீடர்களுக்கு அக்கறையுடன் வழிகாட்டி உதவி புரிகின்றனர்.

சுவாமிநாராயணானந்தா சீடர்களுடன் கொண் டுள்ள உறவுமுறை அந்தரங்கத் தொடர்புடையது. அவரது அருட்பார்வை சீடர்களுக்குள் மறைந்துள்ள ஆற்றல்களை விழிப்படையச் செய்து, அவர்களைத் தங்கள் சொந்த பலத்திலேயே நின்று செயலாற்றும் சக்தியைக் கொடுத்து விடுகிறது. அவருடைய ஆன்மிகப் போதனையிலுள்ள கருத்தாழமும் ஞானத் தெளிவும் பொழுது போக்காக விளம்பரப் படுத்தக் கூடியது அல்ல, அவர் தமது சீடர்களைப் பாதி வழி யில் கைவிடுபவரல்ல. முடிவான. உறுதியான மனக்கட்டுப்பாட்டை எய்தி அதன் மூலம் நற்கதிக்கு (மோட்சம்) போய்ச் சேரும்படிக் கட்டளை இடுகிறார்.

சுவாமி நாராயணானந்தாவின் சீடர்கள் உழைத்துச் சம்பாதித்து சமூகத்தில் ஒருவராகக் கலந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நல்லொழுக்க விதிமுறைகளைக் கண்டிப்புடன் கடைப் பிடித்துச் சுயநலமில்லாத, பற்றற்ற வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க முயல்கின்றனர்.

பெரும்பாலான ஆண்— பெண் சந்நியாசிகளும் ஆசிரமங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் பல சுயபலத்தில் இயங்கும் பண்ணைகளாக உள்ளன. அந்தப் பண்ணைகளிலேயே பட்டறைகளும் அதற்கான எல்லா வசதிகளும் உள்ளன. ஆசிரமங்களில் தங்கியுள்ள ஆசிரமவாசிகளுக்கு வேலை வாய்ப்பை அளிக்கத்தக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேசக் கூட்டமைப்பின் மையமாக உள்ள டென்மார்க்கிலுள்ள ஜில்லிங் ஆசிரமத்தில் விவசாயப் பண்ணைத் தொழிலுடன் இணைக்கப் பட்ட ஒரு பால் பண்ணையும் இருக்கிறது. இந்த ஆசிரமத்தில் மிகப் பெரிய அச்சுக் கூடமும் உள்ளது. இங்குதான் வெளியீட்டுத் துறைக்கான புத்தகங்களும் பத்திரிக்கைகளும் அச்சிடப்பட்டு வெளியாகின்றன.

இங்குள்ள வேறொரு அணியினருக்கு பல்வேறு ஆசிரமங்களிலும் மையங்களிலும் கட்டக்கூடிய புதிய கட்டங்களுக்கான கட்டுமானப் பணி தொடர்ந்து இருந்து வருகின்றது. இதுபோன்ற பணிகளுக்கு உதவும் வகையில் உலகம் பூராவிலுமுள்ள பல்வேறு மையங்களுக்கிடையே தங்களது

அங்கத்தினர்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் தீவிரமடைந்துள்ளது.


இத்தகைய நெருக்கமான கூட்டுறவினால் இந்த நிறுவனம் சர்வதேசப் பல் சமயச் சீடர்களுக் கிடையே நல்லுறவுக்கான ஒற்றுமையை நிலவச் செய்கிறது.

தாங்கள் செய்யும் தினசரித் தொழில்கள் போக ஆசிரமவாசிகள் காலை நேரங்களிலும், மாலை வேளைகளிலும் தியானத்தில் ஈடுபட்டு வருகின் றனர். ஞாயிற்றுக் கிழமைகளிலும், விழாக் காலங் களிலும் எல்லாரும் தியான மண்டபத்தில் பொது தியானத்திற்காக ஒன்றாகக் கூடுகின்றனர். அப் போது நிகழும் கூட்டு வழிபாட்டிலும் இசையிலும் சேர்ந்து கொள்கின்றனர்.

இந்தப் பேரழகு மிக்க இயக்கத்தின் வாயிற் கதவுகளுக்குப் பின்னாலிருந்து, இதன் கர்த்தாவின் பரமாத்ம உளப்பூர்வ வாழ்த்துகள் புரண்டோடி வருகின்றன.

அவருடைய மாபெரும் ஆன்மிகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக உள்ள அனைவருமே மற்று முள்ள ஞானவழியைத் தேடி வரும் மெய்யன்பர் களோடு சேர்ந்து தங்களுக்குக் கிடைத்துள்ள விலையில்லாப் பெரும் பரிசைப் பகிர்ந்து கொள்ளும் பணிவான விருப்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

சுவாமி நாராயணானந்தா தென்னகத்தின் கூர்க் பகுதியில் 1902-ல் அவதரித்தார். 1929-ல் அவர் துறவியானார். ஆன்மிக சாதனைக்காக இமயமலைக்குச் சென்றார். அங்கே பேரானந்தப் பேரறிவு நிலையான நிர்விகல்ப சமாதி நிலை 1933-ல் அவருக்குக் கிட்டியது. அதன் பின்னரும் பல ஆண்டுகள் இமயத்தில் ஏகாந்தமாகவே இருந்தார். மனம்-ஆன்மா உள்ளிட்ட அருள் உலகில் தாம் பெற்ற ஈடு இணையற்ற, புதுமையான அனுபவ உண்மைகளை எழுத்தில் வடித்தார்.யோகம், மனம் போன்ற தத்துவத் துறைகளில் இன்று ஆதார பூர்வமாக விளங்குவன அவரது நூல்களே. 1947-ல் பாகிஸ்தான் - இந்திய மத வெறியர் களின் படுகொலைகளைக் கண்டார்.மனித குலத்துக்கு உதவ முன் வந்தார். சீடர்களை ஏற்க முடிவெடுத்தார். சுவாமி நாராயணானந்தா 'அகண்டைக மதம்' என்னும் ஒரு புதிய மதத்தையே படைத்தார். இன்று உலகெலாம் பரவிய பொது சமயக் கொள்கையின் ஆன்மிக ஆசானாக விளங்குகிறார். பல நாடுகளில் ஆசிரமங்களும் மையங்களும் இயங்குகின்றன. 1988-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி மகாசமாதி எய்தினார்.



## சமயங்களின் சாரம்

[illegible] நாள் [illegible] அறிவு சக்தி [illegible] மனித இனத்தையே பூண்டோடு அழித்துவிடும் அபாயம் ஒரு புறம். அதே சமயம் உலகின் பல்வேறு நாடுகளிடையே அமைதியையும், நல்லுறவையும் நிலை செய்ய அரும்பாடுபட்டு வரும் சமரச துறவிகளின் இடையறா முயற்சி மற்றொரு புறம். இத்தகு நல்லதொரு நேரத்தில் இந்த நூல் நமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ளது. இந்த நூல் உலகிலுள்ள பல்வேறு மதங்களை எடுத்துக்காட்டி அம்மதங்களின் சாரத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் பதிய வைக்கிறது. சலனமற்ற மனத்துடன் இந்த புத்தகத்தைப் படித்தார்களாயின் போரிட்டு கொள்ளும் பல்வேறு இனத்தவரிடையே நிலவும் போட்டி பொறாமைகளை நீக்கி சகிப்புத் தன்மை கலந்த சமூக நல்லுறவைப் பதித்து விடும். தமக்கே உரித்தான லாவகத்துடன் எளிய நடையில் பல்வேறு மதங்களின் கோட்பாடுகளில் நிலவும் ஒன்றுடனொன்று பொருந்திப் போகும் மேலான அறநெறிகளை ஆசிரியர் நமக்கு எடுத்தளித்துள்ளார். இது விளக்கங்களை உதவும் நல்ல புத்தகமாகவும் [illegible] திகழும்.

சாதி, இன, மொழி, ஆண் பெண் பேதமற்ற பல்வேறு நாடுகளிலுள்ள பெருமக்களைப் பேரமைதி காண முனையும் உத்தம [illegible] இறுதிவரைக் காக்கும் நல்ல வழிகாட்டியாக இந்த புத்தகம் அமையுமென்பது உறுதி.

— பதிப்பகத்தார்

சுவாமி நாராயணானந்தாவின் படைப்புகள் தொகுதி - 1